வெளியீடு 30-9-2005

Issued 30-9-2005

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 1, 2005—தொகுதி 78—எண் 2

Friday, the 1st April, 2005 —Volume 78—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V.211,31'P05
P05-78.2
185239

562
21.2.06

1–4–2005

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 343-379

2. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் மீன்பிடித் தொழில் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளித்தல் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 380-382

3. **கவன ஈர்ப்பு—**

ஈரோடு நகராட்சியுடன் சில பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக்குதல் 382-385

4. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — கால்நடை பராமரிப்பு

(ஆ) கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — பால்வளம்

(இ) கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம்

— 385-469

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் 385,386,395, 411,415, 446-466

பக்கங்கள்

4. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் | 389,396, 400-403, 436-446 |
| மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் | 392,396, 426-436 |
| திரு. மு. அப்பாவு | 396-408 |
| திரு. ஜெக. வீரபாண்டியன் | 409-417 |
| திரு. என். ரெங்கநாதன் | 417-426 |

5. **பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்**— 469,470

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 19, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 1, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தமது குடியை உயர்த்துவதற்கான செயல்களைக் காலந்தாழ்த்தாமல், விரைந்து செய்ய முற்படுபவர்கள், அவற்றைச் செய்துமுடிக்கும் விதத்தினை ஆராய்வதற்கு முன்னரே, அந்தச் செயல்கள் நிறைவேறிவிடும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் – விடைகள். வினா எண் 261, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**261—**

### புதிய பாலம்

***31878—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு தொகுதி, ஈரோடு நகரில் நடராஜா தியேட்டர் அருகிலுள்ள மரப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்தின் மையப் பகுதியாகவுள்ள நடராஜா தியேட்டர் அருகிலுள்ள மரப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதன் பெயர்தான் மரப்பாலம். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கான்கிரீட் பாலம். இது மிகவும் குறுகியதாகவும், பழுதடைந்துள்ள காரணத்தாலும், போக்குவரத்துக்கு நெரிசலாக இருப்பதாலும், ஏழை எளிய குடிசைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக உள்ளதாலும்—2500-க்கு மேற்பட்ட பாலங்களை தமிழகத்தில் கட்டிக் கொடுத்த கருணைத் தாய், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு—ஏழை எளிய மக்களின் நலன் கருதி, நடப்பு நிதியாண்டில் இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாகக் கூறியமைக்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 262, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

தமிழ்நாடு ... கர் ... 185239. சென்னை-600 008 ...கம்





**262—**

**புதிய வட்டம்**

***42172—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

30 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட சோளிங்கர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒன்று சேர்த்து சோளிங்கர் வட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாராது வந்த மாமணியாய், வரலாற்று நன்கொடையாகத் தோன்றி, தமிழகத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே எங்கள் சோளிங்கர் தொகுதியிலுள்ள மலைக் கோயிலுக்கு Rope Car திட்டத்தை 4 கோடி ரூபாய் அளவிலே அறிவித்து அதைச் செயல்படுத்தவிருக்கின்ற அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய சோளிங்கர் தொகுதியிலே 86 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் இருந்தன. இப்பொழுது 2 சிறப்பு ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதிலே காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகளும், சோளிங்கர் ஒன்றியத்தில் 25 ஊராட்சிகளும், நெமிலி ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளும் ஆக 86 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் இருக்கின்றன. காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் மட்டும் காவேரிப்பாக்கம், பாணாவரம், பாராங்கி ஆகிய 3 பிர்க்காக்கள் உள்ளன. என்னுடைய தொகுதியின் Headquarter ஆன சோளிங்கரில் 1 பிர்க்கா உள்ளது. அரசினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு 4 பிர்க்காக்கள் இருந்தால் ஒரு வட்டம்

D V2:3' POS POS.78.2

அமைக்கலாம் என்ற விதியின்கீழ், என்னுடைய தொகுதியிலுள்ள சோளிங்கரை வட்டமாக ஆக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன். அப்படி அந்த 4 பிர்க்காக்கள் போதவில்லையென்று சொன்னால், சோளிங்கர் பகுதியைச் சுற்றியுள்ள வாலாஜா ஒன்றியம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், காட்பாடி ஒன்றியம் போன்ற ஒன்றியங்களிலிருந்து சில பிர்க்காக்களை எடுத்துக்கொண்டுகூட—600 சதுர கி.மீ. அளவுக்கு வருவாய் வரக்கூடிய நிலப்பரப்பு உள்ளது. மற்றும் TVS Company, Textiles, வரலாற்றுச் சிறப்புமிக்க வைணவத் திருக்கோயில் மற்றும் பல பஸ் கம்பெனிகள், நீதிமன்றம், தமிழ்நாட்டிலேயே முதன்மை பெற்ற அரசு மருத்துவமனை, Railway Station போன்ற பெரும் வசதிகளைக் கொண்ட சோளிங்கர் நகரத்திலே 30 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட சோளிங்கர் நகரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டத்தை ஏற்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லைகளை வரையறுப்பதற்காக நியமிக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் 15–2–2004 அன்று உள்ளவாறு புதிய ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் வட்டம் போன்ற நிருவாக அலகுகளின் எல்லைகளை எவ்வகையிலும் திருத்தி அமைக்கவோ, மாற்றி அமைக்கவோ கூடாது எனவும், புதிய நிருவாக அலகுகளை உருவாக்குதல், நிருவாக அலகுகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றிற்கு எல்லை வரையறைப் பணி முடியும் வரை தடை விதிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதால், சோளிங்கரை தலைமையிடமாகக் கொண்ட தாலுகா ஏற்படுத்தக் கோரும் கோரிக்கைமீது தற்போது நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துகொள்கின்றேன். இருப்பினும், எல்லை வரையறைப் பணி முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வார்த்தைக்கு நன்றியைக் கூறி, சோளிங்கரிலிருந்து அரக்கோணம் செல்வதாக இருந்தால் 30 கிலோ மீட்டரும், வாலாஜா செல்வதாக இருந்தால் 30 கிலோ மீட்டரும், காவேரிப்பாக்கத்திலிருந்து





அரக்கோணம் செல்வதாக இருந்தால் 40 கிலோ மீட்டரும் சென்று, அரசு தாலுகா அலுவலகங்களைச் சென்றடைய வேண்டியிருக்கிறது. சட்டம்-ஒழுங்கு மற்றும் நெசவாளர் பிரச்சினை, கூலித் தொழிலாளர்கள் பிரச்சினை ஏற்படுகிறபோது அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீண்ட நெடுந்தூரம் செல்ல வேண்டிய காரணத்தால், தற்போது அரக்கோணம் வட்டத்தில் 8 பிர்க்காக்களும், 145 கிராமங்களும் உள்ளன, அவற்றைப் பிரித்துக்கூட வருங்காலங்களில் புதிய வட்டம் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையினை வைத்து, நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திலே புதிதாக ஒரு வட்டத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், அரசு என்னென்ன விதிமுறைகளை வைத்திருக்கிறது என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்றால், குறைந்த அளவு அதனுடைய பரப்பளவு 250 சதுர கிலோ மீட்டர் முதல் அதிக அளவு 2,000 சதுர கிலோ மீட்டர் வரை இருக்க வேண்டும். மக்கள்தொகை குறைந்த அளவு ஒரு இலட்சம் முதல் அதிக அளவு 5,50,000 இருக்க வேண்டும். வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை, குறைந்த அளவு 30 வருவாய் கிராமங்கள் இருக்க வேண்டும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 263, டாக்டர் சி. விஜயபாஸ்கர், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**263—**

## தொழில்நுட்பப் பூங்கா

***42835—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2005 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. தனியார் தொழில்முனைவோர் முன்வந்தால் அரசு அதற்கு ஆவன செய்யும்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தகவல் தொழில்நுட்பத்திலே தமிழகம் முதலிடம் என்ற நிலையில் இன்றைக்கு கிராமத்தில் இருக்கக்கூடிய ஒரு பஞ்சாயத்து பெண் தலைவரிடம் அம்மா அவர்கள் Video Conferencing என்ற முறையிலே கோட்டையிலிருந்து குக்கிராமம் வரை computer–லே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, மிகப் பெரிய நகரங்கள் மட்டுமின்றி, மிகச் சிறிய கிராமங்களில்கூட இன்றைக்கு internet வசதி அவசியமான தேவையாகிவிட்டது. கம்ப்யூட்டருடைய தேவை அதிகமாகிவிட்டது. அந்தச் சூழ்நிலையிலே சென்னையிலும் சிறுசேரியிலும் மட்டுமல்லாமல், புதுக்கோட்டை போன்ற பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களிலும்கூட, இதுபோன்ற தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா? மிகப் பெரிய தொழில்முனைவோர் வருகின்றபோது, அரசு அவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி—பெரிய மாநகரங்களில் மட்டுமின்றி, புதுக்கோட்டை போன்ற பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களிலும், கணினி அறிவு படைத்தவர்கள் B.C.A., M.C.A., B.E., M.E., Computer Science படித்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். ஆக, அவர்களைப் போன்றவர்களை ஊக்கப்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் பல்வேறு கேள்விகளைத் தொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற பெரும் நடவடிக்கையின் காரணமாக, தமிழ்நாடு இன்றைக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் முதன்மையான ஒரு மாநிலமாகச் சிறந்து விளங்குகின்றது. நம்முடைய மாவட்டங்களை இணைக்கும்பொருட்டு, அதாவது Broadband – அகன்ற அலைவரிசை, அகன்ற அந்தப் பாதையின் வழியாக, அகன்ற அலைவரிசை வழியாக எல்லா மாவட்டங்களையும் இணைக்கும் ஒரு



2005 ஏப்ரல் 1]

செயற்குறிப்பு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதாவது, Tamil Nadu State Area Wide Network. So, அதை அமல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிலே எந்தக் கிராமங்களில் இருந்தும்கூட அவர்கள், காணொலி, Video Conferencing மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, கிராமத்தில் இருந்துகொண்டு எல்லாத் தகவல்களையும் நிச்சயமாகப் பெற முடியும். எனவே, பரீட்சார்த்த ரீதியாக மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், மதுரையிலே ஒரு கிராமத்தில் RASI – Rural Access Services through Internet என்கிற திட்டத்தின் மூலம் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அது இப்போது 13 மாவட்டங்களிலே வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, எல்லா மாவட்டங்களிலும் அது விரைவிலே அமல்படுத்தப்பட இருக்கிறது. எனவே, இப்படி இருக்கின்ற சூழ்நிலையில் விரைவான ஒரு வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. தமிழ்நாடு இன்றைக்கு அம்மா அவர்களுடைய நடவடிக்கையின் காரணமாக வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அதைத் தவிர Business Process Outsourcing என்று சொல்லக்கூடிய B.P.O., அதாவது வணிகச் செயல்பாட்டு சேவை. இந்தச் சேவையைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே அதிகமான அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால் முதல் அடுக்கு நகர மையமாக நம்முடைய சென்னை விளங்குகின்றது. இரண்டாவது நிலை நகரங்களாக திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகியவை விளங்குகின்றன. அதோடு மூன்றாம் நிலை நகரங்களாக வணிகச் செயல்பாட்டு சேவைக்கு ஓசூர், திருப்பூர் மேலும் சிவகாசி ஆகியவை தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த மூன்று Tiers, Tier I, Tier II, Tier III இந்த 3 அடுக்கு நிலைகள் நிச்சயமாக முதற்கட்டமாக அம்மாவினுடைய நடவடிக்கையின் காரணமாக விரைவிலே தகவல் தொழில்நுட்பம் வளர இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தவரையிலே இந்த ஆண்டு கிட்டத்தட்ட 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி ஆகும் என்கின்ற நிலைமை.

முற்பகல் 10–10

அதேபோன்று வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையிலே ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய அரசினுடைய எண்ணத்தைப் பொறுத்தவரையிலே எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, தனியார் அதற்கு முன்வந்தால் நிச்சயமாக அவர்களுக்கு முழுமையான அளவிற்கு அரசு எல்லாவிதமான உதவிகளையும் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறையிலே இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சாதனைகளை மிக அழகாக அடுக்கி வைத்த அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த Broadband system என்ற அந்த முறையிலும்கூட, அதற்குப் பின்னாலே அமைச்சர் அவர்கள் தெரிவித்த Tier I, Tier II, Tier III என்ற 3 அடுக்குகளிலே எந்தெந்த மாவட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்தார். அந்த Tier III-யிலே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதிலே அந்த மாவட்டத்தை இணைத்து, வரும் நிதியாண்டிலே அங்கே தொழில்நுட்பப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே RASI - அதாவது Rural Access Services through Internet அந்தத் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அத்தனை கிராமங்களையும் இணைக்கலாம். தலைமைச் செயலகத்தோடு இணைக்கலாம். மாவட்ட நிர்வாகத்தோடு இணைக்கலாம். வேறு எந்த மாவட்டத்தோடும்கூட புதுக்கோட்டையிலுள்ள அத்தனை கிராமங்களையும் இணைக்கின்ற அளவுக்கு வருங்காலத்திலே எல்லா வசதிகளும் வரும். அதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், அந்த இடத்திலே ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்று அமைக்கும்போது அதற்கு முதலீடு என்பது மிக மிக முக்கியமாக இருக்கிறது. எனவே, அரசே முதலீடு செய்ய வேண்டும் என்றால்–2000–2001 ஆம் ஆண்டு 124 நிறுவனங்கள் இருந்தன. ஆனால், அம்மா எடுத்த நடவடிக்கையின் காரணமாக இப்போது கிட்டத்தட்ட நிறுவனங்கள் என்று பார்த்தால் 1,200 நிறுவனங்கள் வந்திருக்கின்றன என்றால், இன்றைக்கு தகவல் தொழில்நுட்பக் கொள்கை தெளிவாக இருந்து முழுமையான அளவுக்கு முதலீட்டுதாரர்களை ஊக்கப்படுத்துகின்ற காரணத்தினால், முதலீட்டாளர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலீட்டுக்கு உகந்த மாநிலம், தமிழ்நாடுதான் அமைதியான மாநிலம் என்கிற வகையிலே இங்கே வருகின்றார்கள். முதலீடு செய்கின்றார்கள். அதிகமான அளவுக்கு நன்மை பெறுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் முதலீட்டாளர்கள் யாரையாவது அடையாளம் காண்பித்தால், நிச்சயமாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 264, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**264—**

## நியாயவிலைக் கடை

***9746—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாய்க்கன்பட்டியில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாய்க்கன்பட்டி நியாயவிலைக் கடை 154 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாயவிலைக் கடையாகச் செயல்படுகிறது. இந்த நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு தற்போதைய அரசின் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 265, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**265—**

## நியாயவிலைக் கடை

***22170—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டம் ஊராட்சி, அல்லிகுண்டம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி வட்டம், அல்லிகுண்டம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டப்பட்டு நவம்பர் 2004 முதல் செயல்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதற்கு முன்னால் தொடுக்கப்பட்ட கேள்வி. கட்டப்பட்டிருக்கிறது என்கின்ற செய்தி எனக்கும் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 266, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**266—**

## கோயில் பூஜை

***44845—திரு. எஸ். நடராஜன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், நத்தம் ஊராட்சியில் அறநிலையத் துறையின் பராமரிப்பிலுள்ள ஈஸ்வரன் கோயிலில் தினந்தோறும் பூஜைகள் நடைபெற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு நிலக் குத்தகை மற்றும் மரம் மேல் மகசூல் குத்தகை மூலம் வருமானம் கிடைக்கப்பெறுகிறது. இந்த வருமானத்திலிருந்து திருக்கோயில் பணியாளர் சம்பளம், மின்சாரக் கட்டணம், தீப எண்ணெய் ஆகிய செலவுகளுடன் திருக்கோயில் தினசரி பூஜைகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், வேலூர் மாவட்டம்,





திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் 5 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 5.64 ஏக்கர் நஞ்சை நிலமும், 34.33 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளன. நிலக் குத்தகையாக 16,550 ரூபாய் ஆலயத்திற்குப் பெறப்படுகிறது. மேலும் மர மகசூல் குத்தகையாக 2,375 ரூபாய் கிடைக்கப்பெறுகிறது. எனவே, இந்த ஆலயத்திற்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 267, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**267—**

## குடமுழுக்கு

***53431—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்தில், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலின் முகப்புக் கோபுரம் பழுதடைந்துள்ளதைச் சீர்செய்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், காமக்கூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் இராஜகோபுரம் உட்பட அனைத்துப் பகுதிகளையும் பழுதுபார்க்கும் பணிக்கென, ரூ. 12,85,000/- மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில், பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமக்கூர் கிராமத்திலுள்ள அக்கோயிலுக்கு 30 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் செய்யப்படாமல் உள்ளதால் பொது

மக்கள், அமைச்சரிடத்திலே மனு கொடுத்தார்கள். இப்போது, அந்த அனுமதி வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்காக, எனது ஆரணி தொகுதி மக்கள் சார்பாகவும், காமக்கூர் கிராமத்து மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், பையூர் கிராமத்திலுள்ள கோயிலுக்கும் குடமுழுக்கு செய்யப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பையூர் ஈஸ்வரன் கோயில், புகழ்பெற்ற ஆலயமாகும். அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துதர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காமக்கூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் — சந்திரசேகரசுவாமி திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக, 18 நபர்கள் அடங்கிய திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலமாக இன்றைக்கு அரசு மானியமாக, மூன்றில் ஒரு சதவிகிதம் கொடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்படுவதைப்போல, பையூர் கோயிலுக்கும், உறுப்பினர் முன்வந்து, அறங்காவலர் திருப்பணி Committee நியமித்து, அங்கே அந்தப் பொதுமக்களுடைய நிதியைப் பெறுவாரேயானால், அதற்குரிய estimate தொகையில், மூன்றில் ஒரு பங்கை அரசினுடைய மானியமாகக் கொடுத்து, பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பணி Committee அமைத்து, மனு கொடுத்தால், திருப்பணிகள் செய்ய ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரணியில், புகழ்பெற்ற கயிலாயநாதர் திருக்கோயில்—கயிலாயநாதர் ஈஸ்வரன் கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்குண்டான பணிகள் எல்லாம் நடந்து, தயார் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், மாண்புமிகு அம்மாவின் ஆணை பெற்று, விரைவில் அந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடப்பதற்கு ஆவன செய்ய முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று சொன்னால், 8–6–2005 — காலை 5–40 மணி முதல் 6–10 மணி வரை, 10–6–2005 — காலை 6–20 முதல் 7–00 மணி வரை, 17–6–2005 — காலை 10–00 முதல் 10–30 மணி வரை, 20–6–2005 — காலை 10–00



முதல் 11–00 மணி வரை, 24–6–2005, 13–7–2005, 5–9–2005, 8–9–2005, 14–9–2005 மற்றும் 15–9–2005 ஆகிய இந்தக் காலங்களில், அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து ஆலயங்களிலும் திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 268. திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**268—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***33399—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பிரதான அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஒன்றியத்திலே, பழனி வட்ட மருத்துவமனை செயல்படுவதால், இந்த ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொண்டு, எனது பழனி தொகுதிக்குட்பட்ட பாப்பம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுமார் 30 கிராமங்களின் மருத்துவத் தேவைக்காக, பாப்பம்பட்டியில், upgraded P.H.C. என்னும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி, அதில் 30 படுக்கை வசதிகளுடன், நவீன மருத்துவக் கருவிகள்

மற்றும் specialist doctor-கள் நியமிக்க, மறுபரிசீலனை செய்து, இந்த நிதியாண்டிலாவது நிறைவேற்றித் தர, மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே, நிதிநிலைமைக்கேற்ப, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிதனைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** உலகம் போற்றும் உத்தமத் தலைவியாம், தமிழகம் போற்றும் தங்கத் தலைவியாம், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

***(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)***

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம், ஆரியபட்டி, திருநகர் பேரூராட்சி, மூன்றையும் உள்ளடக்கிய சுமார் ஒரு இலட்சம் வாக்காளர்கள் இருக்கக்கூடிய பகுதியில், திருப்பரங்குன்றம் பகுதியிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களை அன்போடு கேட்க ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உலக வங்கி நிதியுதவியுடன், நூறு ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்துகின்ற அந்தப் பட்டியலில், செஞ்சி தொகுதி, திருவம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலக வங்கியினுடைய நிதியைப் பெற்றுத் தந்து, தமிழகத்திலே இருக்கக்கூடிய தாலுகா மற்றும் non-taluk மற்றும் மாவட்ட மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நிலையில், அங்கே கருவிகள், அதாவது மருத்துவமனைக்கான கருவிகள் மற்றும் அங்கே மருத்துவர் நியமிப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த அளவிலே, வருகின்ற நிதியாண்டிலே உங்களுடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிபந்தனைக்குட்பட்ட அனைத்துத் தகுதிகளும் வாய்ந்த எனது திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட மடப்பட்டு மற்றும் சேந்தநாடு பகுதி கிராம சுகாதார மையத்தை, துணை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித்தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதியிலுள்ள நக்கம்பாடி ஆரம்ப சுகாதார நிலையம், ஒன்றியத்தின் மையப் பகுதியிலே அமைந்துள்ளது. அந்த கிராம மக்கள் மருத்துவமனைக்காக ஒரு ஏக்கர் நிலத்தினை தானமாக வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும் என்ற திட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு வருடத்தில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துவாரா என்பதனைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலத்தை தானம் செய்ததாகக் கூறினார்கள். அங்கே, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் மூலமாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன். இருந்தபோதிலும், இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவரும் 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் வருகின்ற அடுத்த கேள்வியும் இது சம்பந்தமான கேள்வியாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்த மாமன்றத்தினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுக்கும், அனைவருக்கும் ஒரே பதில் என்னவென்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு இவற்றை எடுத்துச்சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 2001-லிருந்து 2005 வரை, இதுவரையிலும் கிட்டத்தட்ட 105 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இங்கே இருக்கக்கூடிய



மாமன்ற உறுப்பினர்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஒன்றன்பின் ஒன்றாக அத்தனை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்–ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அடிப்படையிலே தரம் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 269, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**269—**

## தரம் உயர்த்துதல்

***35924—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்தில் உள்ள அரிசிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(அ)* மற்றும் *(ஆ)* பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்திலுள்ள அரிசிப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் வணங்குகின்றேன். எனது தொகுதியான பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

மதுக்கரை ஒன்றியம் நமது தமிழகத்தினுடைய எல்லைப் பகுதியிலே அமைந்திருக்கின்றது. அதுவும் குறிப்பாக, என்னுடைய பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரே ஒன்றியமாக அந்த ஒன்றியம் திகழ்ந்துகொண்டிருக்கின்றது. அந்த ஒன்றியம், கோவையிலேயிருந்து 20 கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந்திருக்கின்றது. அந்த ஒன்றியத்தினுடைய ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை மருத்துவமனையாக மதுக்கரை ஒன்றியத்திலே செயல்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, அதனுடைய சுற்றுப்புறத்திலேயிருந்து ஏறத்தாழ 25-க்கும் மேற்பட்ட கிராமப்புறங்களிலேயிருந்து, அதுவும் குறிப்பாக, மேற்குத் தொடர்ச்சி மலை வருகின்ற மலைவாழ் மக்கள் வசிக்கின்ற, பெரும் பகுதிகளிலேயிருந்து ஏறத்தாழ தினந்தோறும் அந்த மருத்துவமனைக்கு 850-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து சிகிச்சை பெற்று வந்துகொண்டிருக்கின்றார்கள். அந்த மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்கான போதுமான கட்டட வசதிகளும் அங்கே அமைந்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையினுடைய வழியிலே அந்த மருத்துவமனை அமைந்திருக்கின்ற காரணத்தினால், இந்த நிதியாண்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த மக்களுடைய நீண்ட கால கோரிக்கையாக இருக்கின்ற, அரிசிப்பாளையத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, கிராமப் பகுதி மக்களுடைய நலன் கருதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்திலே இன்றையதினம் 105 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே பார்க்கும்போது இன்றையதினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகின்ற நோயாளிகள், அது வெளி நோயாளியாக இருந்தாலும் சரி, உள் நோயாளியாக இருந்தாலும் சரி, எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான, அரிசிப்பாளையத்தினுடைய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா





அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அம்மாவினுடைய ஆலோசனை பெற்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6.5 கோடி தமிழக மக்களுடைய பாதுகாவலராக விளங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே நிதிநிலைக்கேற்றவாறு என்னுடைய தொகுதிக்குட்பட்ட, நம்முடைய மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்ற அரிசிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதியிலேயிருக்கின்ற பொதுமக்களுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 270, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**270—**

### பேருந்துப் பணிமனை

***4289—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, கீரனூரில் அரசுப் பேருந்துப் பணிமனை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்து மக்களின் நலனுக்காகவே நாளெல்லாம் உழைத்துவரும் வாழ்நாள் சாதனையாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி எனது வினாவைத் தொடுக்கின்றேன். குளத்தூர் தொகுதியின் மைய இடமாக கீரனூர் விளங்குகின்றது. திருச்சி, புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் கீரனூர் அமைந்துள்ளது. கீரனூரிலிருந்து குன்றாண்டார்கோவில், அன்னவாசல், இலுப்பூர், விராலிமலை, கிள்ளுக்கோட்டை போன்ற முக்கிய ஊர்களுக்கும், அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கும் நகரப் பேருந்துகள் சென்று வருகின்றன. இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் ஏழைக் கூலித் தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், திருச்சி, புதுக்கோட்டை போன்ற நகரங்களுக்குச் சென்று தங்கள் தொழில்களை முடித்துக்கொண்டு வருகின்றபோது இரவு 9–30 மணிக்குள்ளேயே பேருந்துகள் எல்லாம் புதுக்கோட்டை பணிமனைக்குச் சென்றுவிடுகின்றன. இதனால் தங்களுடைய கிராமங்களுக்குச் செல்ல முடியாமல் மக்கள் துன்பப்படுகின்றார்கள். மையப் பகுதியான கீரனூரில் ஒரு பணிமனை அமைக்கப்படுவதற்கு உரிய இடமும் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளது. கீரனூர் பணிமனை கட்டப்படுமானால், கூடுதலாக ஒரு மணி நேரம் பேருந்துகளை இயக்க முடிவதோடு அரசுக்கு வருவாயும் அதிகரிக்கும் என்பதைச் சொல்லி, புதுக்கோட்டை பணிமனைக்கு பேருந்து சென்று வருகின்ற நேரமும் மிச்சப்படுவதோடு, பல ஆயிரம் லிட்டர் டீசலையும் சேமிக்க முடியும். எனவே, பேருந்து செல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கி, அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்கி சாதனை படைத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, கீரனூரில் ஒரு பணிமனை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூருக்கு அருகில் 29 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சியிலே ஒரு பணிமனையும், கீரனூரிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் புதுக்கோட்டையில் ஒரு பணிமனையும் இயங்கி வருகின்றன. பொதுவாக அரசாணை எண் D.No. 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி ஒரு புதிய பணிமனை அமைக்க





வேண்டுமென்று சொன்னால் ஏற்கெனவே இருக்கிற பணிமனைக்கும் புதிய பணிமனைக்கும் உள்ள இடைவெளி 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டுமென்று அரசாணை உள்ளது. ஆனால், கீரனூரிலிருந்து 29 கிலோ மீட்டர் பக்கத்தில் திருச்சியில் ஒரு பணிமனையும், கீரனூரிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் புதுக்கோட்டையில் ஒரு பணிமனையும் இருப்பதால் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப, கீரனூரில் ஒரு புதிய பணிமனை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான கிலோ மீட்டர் இடைவெளி இல்லாததால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிமனை கீரனூரில் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி இருக்கின்றார்கள். இருந்தாலும், இந்த ஆண்டில் அந்த கீரனூர் பகுதிகளிலே வாழக்கூடிய பொதுமக்களின் நலனைக் கருத்தில் எண்ணி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், கீரனூரில் பணிமனை கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணையை மாற்றுகின்ற சூழ்நிலை உருவானால், அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 271, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**271—**

## விரைவுப் பேருந்து வசதி

***53118—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து திருச்செந்தூருக்கு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. இரா விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து நாமக்கல் வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பயன்படுத்தி, திருச்செந்தூர் சென்று வர ஏதுவாக உள்ளதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாமக்கல்லிலிருந்து திருச்செந்தூருக்கு நேரடிப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 272, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**272—**

## புரோமின் தயாரித்தல்

***50851—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் உப்பு நிறுவனம் உப்பு தயாரிக்கும்போது ஏற்படும் கழிவான பிட்டன் என்ற கழிவுப் பொருளிலிருந்து புரோமின் என்ற இரசாயனப் பொருளைத் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பாதம் பணிந்து, உப்பு தயாரிக்கும்போது ஏற்படும் கழிவான பிட்டன் என்ற கழிவுப் பொருளிலிருந்து தயாரிக்கப்படும் புரோமின் என்ற இரசாயனப் பொருள், தனியார் நிறுவனங்களின் சார்பில் தயாரிக்கப்படுகிறதா அல்லது அரசின் சார்பில் தயாரிக்கப்படுகிறதா? இந்த புரோமின் என்ற இரசாயனப் பொருள் எந்தவிதமான உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு தயாரிக்கும்போது அந்தக் கழிவிலிருந்து வருகின்ற பிட்டன் என்கின்ற பொருளிலிருந்து புரோமின் தயாரிக்கின்ற தொழிற்சாலை--2 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, அது தனியார் துறையின் மூலம் தயாரிக்க அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த பிட்டனிலிருந்து வருகின்ற பொருளிலிருந்து, சோடியம் புரோமைட், பொட்டாஷியம் புரோமைட் போன்ற பொருட்கள், Photo processing நிறுவனத்திற்கும், மருந்துகள் தயாரிப்பதற்கும், இரசாயனத் தொழிற்சாலையில் ரசாயனக் கலவைகளுக்கும், Adhesive என்கின்ற ஒரு இரசாயனப் பசை தயாரிப்பதற்கும், air-conditioner தயாரிப்பதற்கு gas–ல் சேர்ப்பதற்கும் இந்தத் புரோமின் பயன்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புரோமின் என்ற இரசாயனப் பொருள் தனியார் நிறுவனங்களின் சார்பில் தயாரிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குக் கிடைக்கும் லாபம் என்ன? கடந்த காலங்களில் இந்த இரசாயனப் பொருள் தயாரிப்பால் அரசுக்குக் கிடைத்த லாபம் என்ன? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு புரோமின் இப்படித் தயாரிக்கப்படுகிறது? இதன் வாயிலாக எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிட்டன் தயாரிக்கின்ற தொழிற்சாலை நிறுவும் பணி வருகின்ற 30–6–2005 அன்றுதான் முடிவடைய இருக்கிறது. இதன் மூலம் சுமார் 100 பேருக்கு, கிட்டத்தட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகவும் வறட்சியான பகுதியாக இருக்கிற வாலிநோக்கம் பகுதியில் குறைந்தபட்சம் 100 பேருக்கு வேலைவாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் உப்பு தயாரிக்கப்படும்போது வரும் பிட்டன் கழிவானது கடலிலே சென்றுதான் சேர்ந்துகொண்டிருந்தது. முந்தைய காலங்களில் இதில் எந்தவிதமான லாபமும் அரசுக்கு இதுவரையிலும் கிடையாது. இனிமேல் இந்த பிட்டனை தனியார் துறை நம்மிடமிருந்து வாங்குகின்றபோது சுமார் 30 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு

[2005 ஏப்ரல் 1

நிச்சயமாக அரசுக்கு வருவாய் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 273, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**273—**

### ஒழுங்குமுறை விற்பனைக் குழு

***37739—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற்பனைக் குழுவிற்குத் தனியாக ஒரு கூடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் விற்பனைக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட புறம்போக்கு நிலத்தை நிலமாற்றம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய அனுமதி கிடைத்தவுடன், அந்நிலத்தைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 274, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**274—**

### வீட்டுமனைப் பட்டா

***34692—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகில் ராவணபுரம் ஊராட்சி மற்றும் மானுப்பட்டி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மக்களுக்கு குடியிருப்பு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடுமலை வட்டம், ராவணபுரம் ஊராட்சி, மானுப்பட்டியில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடம் கேட்டுள்ளார்கள். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள உன்னதமான திட்டமான ஏழைகளுக்கு இரண்டு இலட்சம் இலவச பட்டாக்கள் வழங்கக்கூடிய ரூபாய் 50 கோடி திட்டத்தில், இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, உடுமலை தொகுதிக்கு உட்பட்ட ராவணபுரம் ஊராட்சி மற்றும் மானுப்பட்டி ஊராட்சியில் அதிகமான பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்குள்ள ஏழை எளிய மக்கள் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாமல், வாடகை வீடுகளில் உள்ளார்கள். சில குடும்பங்கள் அங்கு அருகில் உள்ள தோட்டங்களிலும், தோட்டச் சாலைகளிலும், அந்த பட்டாதாரர்களை அண்டி குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் நீண்டகாலமாக இட வசதியின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கு நில ஆர்ஜிதம் செய்து பட்டா கிடைப்பதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும். அதுபோல பல்வேறு பகுதிகளிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, நடப்பு ஆண்டில் நில ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாத ஏழைகளுக்கு வழங்கக்கூடிய இலவச பட்டா திட்டத்தில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய அளவிலே அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உடுமலை தொகுதியில், உடுமலை நகரத்திலே ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். அங்குள்ள

ஆலைகள், பஞ்சாலைகள் எல்லாம் நசிந்து போய்விட்டன. அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் இட வசதியின்றி, வீட்டு மனைப் பட்டா இல்லாமல் உள்ளார்கள். அங்குள்ள பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் நீண்டகாலமாக இடங்கள் கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். அங்கு ஆதிதிராவிட மக்களுக்கு சில இடங்களில் நில ஆர்ஜிதம் செய்ததுபோல, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அங்கு எந்த இடத்திலும் எடுத்துத் தரப்படாமல் உள்ளது. இதைக் கருத்திலே எடுத்துக்கொண்டு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடப்பு நிதியாண்டிலாவது, உடுமலைப் பகுதியில், உடுமலை நகரத்திலே பிரசன்ன விநாயகர் கோயில் நிலம், 33 ஏக்கர் நிலம் உள்ளது. அதிலிருந்து கோயிலுக்கு வருமானம் இல்லாமல் உள்ளது. அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அவர்கள் முன்வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. அதைக் கருத்தில் எடுத்து, அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நடப்பு நிதி ஆண்டிலே எடுத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மகாலிங்கம்.

*முற்பகல் 10–40*

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்திரை போக்கி முத்திரை பதித்த, பத்தரை மாத்துத் தங்கமாம், தங்கத் தாரகை விருது பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். மனித நேயமான மகத்தான ஆட்சியில் அவினாசி தொகுதிக்கு அருகில் வளர்ந்துவரும் தொழில் நகரமாகிய திருப்பூர் உள்ளதால், தமிழ்நாட்டிலுள்ள ஈரோடு, சேலம், திண்டுக்கல், மதுரை, தேனி போன்ற பல்வேறு மாவட்டங்களிலிருந்து பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாகக் குடியேறி வருகின்றார்கள். எனவே, அவினாசி தொகுதியில் திருப்பூர் தொகுதிக்கு அருகிலுள்ள புதுப்பாளையம் ஊராட்சி மற்றும் கணியம்பூண்டி ஊராட்சியிலுள்ள பொதுமக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக நில எடுப்பு செய்யப்பட்டு, நடப்பு நிதியாண்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 2 இலட்சம் பேருக்கு 50 கோடி ரூபாயில் பட்டா வழங்கப்படும் என்ற திட்டத்தை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அதற்கான நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களிலே சமர்ப்பித்துக்கொள்கிறேன். செஞ்சி சிறப்பு ஊராட்சியில் பணிபுரிகின்ற துப்புரவுப் பணியாளர்கள், நீண்டகாலமாக புறம்போக்கு இடத்தில் குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கை, அவர்கள் வீடு கட்டியிருக்கின்ற அந்த இடத்திற்குப் பட்டா வேண்டுமென்பது. இந்தத் திட்டத்தில், அந்த செஞ்சி சிறப்பு ஊராட்சியில் பணிபுரிகின்ற துப்புரவுப் பணியாளர்களுக்கு பட்டா வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முந்தைய கால ஆட்சியில், 1 இலட்சத்து 93,000 இலவச பட்டாக்கள் வீடுகள் கட்டப்படாமல், வெறும் 5,000 வீடுகள் மட்டும்தான் கட்டிய நிலையில் இருந்தன—இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், உடனடியாக வீடு கட்டப்படாத இலவச பட்டாக்கள் இருக்கின்ற பகுதிகளில், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், அதன் மூலமாக வீடுகள் கட்டுவதற்கான உன்னதமான நிலையை உருவாக்கும் திட்டத்தை 4 ஆண்டுகாலமாக அறிவித்து, 10 கோடி ரூபாய்க்குமேல் அடிப்படை வசதிகளைச் செய்து, பட்டா இருக்கின்ற இடங்களிலே எல்லாம் வீடு கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கியிருக்கிறார்கள். மீண்டும் இன்றையதினம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுவரை தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, 50 கோடி ரூபாய் நிதி, ஒரே தடவையில் ஒதுக்கி, 2 இலட்சம் இலவச பட்டாக்கள் வழங்கக்கூடிய திட்டத்தில், அனைத்துத் தொகுதிகளிலும் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் பயன்பெறக்கூடிய அளவிலே அந்தத் திட்டம் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 275, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**275—**

**மாணவியர் விடுதி**

***36034—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலூர்பேட்டையில் மிகவும் பிற்பட்ட மாணவிகளுக்காக விடுதி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், முதலில் திரு. ஜி. கோதண்டராமன் கேட்கட்டும். கேட்டு முடித்துவிடட்டும், அப்புறம் கேட்கலாம்.

**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி என் கேள்வியைத் தொடுக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியில், தமிழகத்தை கல்வியில் முதல் மாநிலமாகக் கொண்டு வந்துள்ளார்கள். முகையூர் தொகுதி, மணலூர்பேட்டையைச் சுற்றியுள்ள கிராமங்கள், மிகவும் பின்தங்கிய கிராமங்களாகும். அந்தப் பகுதியில் பெண்கள் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அந்தப் பள்ளியில் 975 மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். மேலும், மணலூர்பேட்டை கிராமத்தைச் சுற்றியுள்ள மேலந்தல், காங்கியனூர், பள்ளக்காலனி, மேட்டுச்சேரி, பள்ளிச்சந்தல், ஜம்பை, கே.சி. தாங்கல், செல்லங்குப்பம், தேவரடியார் குப்பம், அத்தியந்தல், முருக்கம்பாடி, கொங்கனாமூர், சித்தப்பட்டினம், வடக்குத்தாங்கல், பிள்ளையார் குப்பம், சாங்கியம், சுரையப்பட்டு, கமுமரம், கொழுந்திசாம்பட்டு, நெடுங்கம்பட்டு, அத்திப்பாக்கம், திருவரங்கம், சிறுவானூர், தக்கா, சிவானந்தல், தகடி, முடியனூர் போன்ற கிராமங்களிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து மாணவிகள் தினமும் வந்து பயின்று செல்கின்றார்கள். மழைக் காலங்களில் அவர்கள் வந்து படித்துச் செல்வது மிகவும் கடினமாக இருக்கிறது. போதுமான பேருந்து வசதியில்லை. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறத்து பெண்களின் கல்வியிலும், முன்னேற்றத்திலும் மிகவும் அக்கறை கொண்டுள்ளார்கள். ஆகவே, மணலூர்பேட்டையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் இல்லம் ஒன்று ஆரம்பிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய மாணவச் செல்வங்களின் பொற்காலமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி விளங்கிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வெறும் 36 விடுதிகள் மட்டும்தான் கட்டியிருந்தார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மொத்தம் 972 விடுதிகளில்—770 தனியார் விடுதிகளில் அடிப்படை வசதி இல்லாமல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய மாணவச் செல்வங்கள் எல்லாம் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமையை மனதில் வைத்துக் கொண்டு—மனித நேயமிக்க மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிப் பற்றாக்குறை இருந்தாலும்கூட--இந்த மாணவச் செல்வங்களுடைய நலன் கருதி,

[2005 ஏப்ரல் 1

இன்றையதினம் 630 விடுதிகளை தமிழக வரலாற்றிலேயே அதிகமாகக் கட்டி வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற விடுதிகளை புனரமைக்க வேண்டும் என்ற உன்னதமான திட்டத்தை இன்றையதினம் மனதில் வைத்துக் கொண்டு, செயலாற்றிக் கொண்டிருக்கின்றார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புதிய விடுதிகளை ஆரம்பிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து, வருகின்ற ஆண்டில் மணலூர்பேட்டையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக விடுதி ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று அவர் அளித்த பதிலால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 2005–2006 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர்களுக்கு எவ்வளவு விடுதிகள் கட்டுவதற்கு எவ்வளவு நிதி இந்த அரசின் மூலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? மேலும், ஒரு விடுதிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது? அது எத்தனை சதுர அடி பரப்பளவிலே கட்டப்படுகிறது என்பதையும் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரத்தால் 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 318 புதிய மாணவர் விடுதிக்கு, கடந்த 24–3–2005 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விடுதிக்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். 465.39 சதுர மீட்டருக்கு ரூ.31.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் சுற்றுச் சுவர் 3 இலட்சமும் உள்ளடங்கும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 5 ஆண்டு காலமாக வெறும் 36 விடுதிகள் கட்டினது மட்டுமல்லாமல், அதில் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியை சற்று இந்த அவையில் கூறக் கடமைப்பட்டுள்ளேன். 506.17 சதுர மீட்டருக்கு கல்லூரி



2005 ஏப்ரல் 1]

விடுதிகளுக்கென்று 55 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாயும், அதே போன்று பள்ளி மாணவ மாணவியர்–மாணவியர் விடுதிக்கு ரூ.48.31 இலட்சமும், பள்ளி மாணவர் விடுதிக்கு ரூ.40.26 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில், சதுர மீட்டருக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தொடர்ந்து 4 ஆண்டு காலமாக ஒதுக்கிய ரூபாய் 28½ இலட்சம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடத்திற்கும், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவில் சுமார் 18 சதவிகிதம் முதல் 28 சதவிகிதம் வரை வித்தியாசம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆண்டு ஒன்றுக்கு 10 சதவிகிதம் ஏற்றாமலேயே இப்பொழுது கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்கும்போது கடந்த ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்துவிட்ட பின்னர், மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு இல்லாமல், வளர்ந்த மாநிலம் என்று கூறிக் கொண்டு, சுமார் ரூபாய் 450 கோடி கொடுக்க வேண்டிய மத்திய அரசு பங்கீட்டைக் கொடுக்காத நிலையிலும், வறட்சி ஒருபக்கம், 3 ஆண்டுகாலமாக வரியில்லாத பட்ஜெட், இத்தகைய சூழ்நிலையில்கூட, ஆளுகின்ற திறமையின் காரணமாக, மக்களாட்சி நடத்த முடியும், மக்களுக்குத் தேவையானதைச் செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டுவருவதற்கு ஒரு பானை சோற்றுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சோறு பதம், உதாரணம் மாண்புமிகு அம்மாவின் ஆட்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள், பெண் கல்வியிலே மிக அக்கறை எடுத்து, ஆதிதிராவிட மாணவியருக்கு, பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு எல்லாம் ஈருருளை சைக்கிள் வழங்கியிருக்கிறார்கள். பெண் கல்வியிலே மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள். பல்வேறு இடங்களில் பெண்களுக்கான விடுதிகள் தொடங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாலே வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு பெண்களுக்கான விடுதிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி முயற்சி எடுத்து ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் என்ன கேட்டீர்கள்? திரு. டி.பி. பொன்னம்பலம்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது தொகுதியான சமயநல்லூர் தொகுதியில், மேற்கு ஒன்றியத்தில் சத்திரப்பட்டியில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அதன் அருகில் காஞ்சிரம்பேட்டையில் நல்லமணி மேல்நிலைப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளிலும் கிட்டத்தட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டித்தர வேண்டுமென்றும், அதேபோல், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில், ஒத்தக்கடையில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது, அங்கும் இரண்டாயிரம் மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். அதற்கும் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவியர் இல்லம் கட்டித் தரப்படுமா என்றும் அன்புடன் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதநேயமிக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *276*, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**276—**

### நூலகம்

***40550—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதி, சேமபாளையம், ஏ. வாசுதேவனூர், பாலப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(அ)* மற்றும் *(ஆ)* சங்கராபுரம் தொகுதி, பாலப்பட்டு ஊராட்சியில், *10–11–2003* முதல் ஊர்ப்புற நூலகம் இயங்கி வருகின்றது. மேலும், சேமபாளையம் மற்றும் ஏ. வாசுதேவனூர் ஆகிய ஊராட்சிகளிலே ஒரு நூலகம் அமைப்பதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் அங்கு நூலகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *277*, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**277—**

### பின்னலாடைத் தொழில்

***8242—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழில் வாய்ப்பை மேம்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(அ)* திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழில் வாய்ப்பை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு சிறப்பான திட்டத்தைத் தீட்டியுள்ளது. *(ஆ)* திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை மேம்படுத்துவது குறித்து, திருப்பூரில் ஆயத்த ஆடைப் பூங்கா சுமார் *220* ஏக்கர் பரப்பளவில் மத்திய, மாநில அரசு மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் சேர்ந்து *17* கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழிலை மேம்படுத்த திருப்பூரில் ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க *220* ஏக்கர்

நிலம் ஒதுக்கித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்த ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதையும், இந்த ஆயத்த ஆடைப் பூங்காவில் பின்னலாடைத் தொழில் ஏற்றுமதி செய்வோர் எத்தனைபேர் மனு செய்திருக்கின்றார்கள் என்பதையும், இந்த ஆயத்த ஆடைப் பூங்காவில் தொழில்முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவை என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே இருக்கின்ற நேத்தாஜி ஆயத்த ஆடைப் பூங்கா, 17 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு, 9-1-2005 அன்று திறப்பு விழா செய்யப்பட்டு, அங்கே இப்பொழுது நெசவாளர்கள் மூலமாக, பின்னலாடை ஏற்றுமதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடிய சுமார் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு துறையாக இன்றைக்கு நம்முடைய நெசவாளர் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆண்டுக்கு 1,500 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யவும் வாய்ப்பு உள்ளது. மேலும், TEKIC என்னும் ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள 189 பின்னலாடை உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான மின் வசதியை குறைந்த செலவில் வழங்க, ரூபாய் 25 கோடி திட்ட மதிப்பீட்டில் காற்றாலை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும், திருப்பூர் நகரினுடைய ஜவுளித் தொழில் சார்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, மாவட்ட ஆட்சியர், கோவை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு மூலம் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, விரைவில் அந்தத் தொழிற்பேட்டைக்குத் தேவையான infrastructure development அனைத்தையும் செய்யவுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய தொழிற் போட்டியில் சிறந்து விளங்கும் திருப்பூர் பின்னலாடைத் தொழில் ஏற்றுமதியை ஊக்குவிக்க, தொழில்முனைவோருக்கு மேலும் சலுகைகள் வழங்க, மைய அரசை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வலியுறுத்துமா என்பதையும், தொழில்முனைவோரை ஊக்குவிக்க எந்தெந்தச் சலுகைகள் வழங்க, மைய அரசை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வலியுறுத்தும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலே வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியைப் பெற்று, தமிழகத்திலே அதிகமான தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், தமிழகத்தை, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே அம்மா அவர்கள் அத்தனை தொழிற்சாலைகளையும் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்கின்ற அமைப்பின் மூலமாக புதிய பின்னலாடைத் தொழிற்பூங்கா—அந்தத் தொழிற்சாலைகளினுடைய சாய, சலவைப்பட்டறைகளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்காக மூன்றாவது குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம்—பின்னலாடைத் தொழில் வளர்ச்சிக்காகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், இடையிலே வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டங்கள் எல்லாம் கிடப்பிலே போடப்பட்டன. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் அடிக்கல் நாட்டப்பட்டு, புதிய பின்னலாடைத் தொழிற்பூங்கா இன்றைக்கு துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்றாவது குடிநீர்த் திட்டத்தினுடைய பணி முடிவடைந்து, வருகின்ற மே மாதவாக்கில் அந்தக் குடிநீர் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் வர இருக்கிறது. இப்படி பல்வேறு நல்ல திட்டங்களை, பின்னலாடைத் தொழில் வளர்ச்சிக்காக திருப்பூர் நகருக்குக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பித்துக்கொள்கின்றேன். மேலும், மூன்றாவது குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைப்

[2005 ஏப்ரல் 1

பணிகளுக்காக, திருப்பூர் தொகுதி முழுவதும் கிட்டத்தட்ட சுமார் 200 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் எல்லாம் வெட்டப்பட்டு, சாலைகள் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. எனவே, திருப்பூர் நகரத்தினுடைய அடிப்படை வசதிகளை, சாலை வசதி, சாக்கடை வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றை மேம்படுத்துவதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றை போர்க்கால அடிப்படையிலே அமைத்துத்தர வேண்டுகிறேன். அந்தத் தொழிலை நம்பி அங்கே தொழில் செய்து கொண்டிருக்கக்கூடிய 9 இலட்சம் ஜனங்கள், தினசரியும் வந்து செல்கின்ற 2 இலட்சம் ஜனங்கள் உட்பட ஒட்டுமொத்தம் 11 இலட்சம் ஜனங்கள்—இவர்கள் திருப்பூர் தொகுதி மக்கள் மட்டுமல்ல, தென் மாவட்டங்களிலேயிருந்தும், பல்வேறு தொகுதிகளிலேயிருந்தும், திரு. மனோஜ் பாண்டியன் போன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளிலேயிருந்தும் இங்கே வருகை தந்து, தொழில் செய்துகொண்டிருக்கக்கூடிய, ஒட்டுமொத்தமாக உள்ள 11 இலட்சம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்திற்காக, இந்தத் தொழிலை மேம்படுத்துவதற்காக—இன்றைக்கும்கூட, திருப்பூரில் வேலை காலி, வேலைக்கு ஆட்கள் தேவை என்று வேலைவாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் தொழில் நகரத்தினுடைய அடிப்படை வசதிகளை பலப்படுத்துவதற்கு— சிறப்புத் திட்டம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர் பூட்டி, வெயிலில் காய்ந்த, ஏழை உழவுத் தொழிலாளர் வாழ்வில் ஏற்றம் தந்த ஏழைகளின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலேயே திருப்பூர்தான் பின்னலாடை ஏற்றுமதியை அதிகம் செய்து வருகிறது. மைய அரசு 10 per cent duty draw back கொடுத்து வந்தது. ஆனால், காங்கிரஸ் அரசு ஆட்சிக்கு வந்ததும், ஏழையின் வயிற்றில் அடிக்கும் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், திருப்பூர் ஏற்றுமதியாளர்களின் வயிற்றிலும் அடித்துவிட்டார்.



2005 ஏப்ரல் 1]

10 per cent–ஆக இருந்த duty draw back-ஐ 4 per cent–ஆகக் குறைத்துவிட்டார். இதனால் ஏற்றுமதியாளர்களிடம் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், சைனா, பங்களாதேஷ் போன்ற வெளிநாடுகள் இன்று 25 per cent duty draw back கொடுத்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறது. ஆகையால் பனியன் ஆடைகளை அவர்கள் குறைந்த விலையில் வியாபாரம் செய்து வருகிறார்கள். நாம் அவர்களோடு போட்டி போட முடியவில்லை. எனவே, திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மீண்டும் அந்த 10 per cent duty draw back –ஐ அதிகப்படுத்தித் தருவதற்கு, மத்திய அரசிடம் பேசி, பெற்றுத் தருமா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே மத்திய அமைச்சர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்தியிலே அமைச்சராக இருக்கக்கூடிய திரு. சிதம்பரம் அவர்கள் ஏற்றுமதி ஆடைகளுக்குக் கொடுக்கக்கூடிய duty draw back 10 சதவீதத்தை, இன்றையதினம் குறைத்திருக்கிறார்கள். அதனால் ஈரோடு, சோமனூர், பல்லடம் போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** ஏற்றுமதித் துணிகள் எல்லாம் தேங்கியிருக்கக்கூடிய ஒரு சூழல் உருவாகியிருக்கிறது. நெசவாளர்களுக்கு வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஏற்றுமதிக்கு உண்டான duty draw back 10 சதவிகிதம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் மீன்பிடி தொழில் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளித்தல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடற்கரையோர கிராமங்களை அண்மையில் சுனாமி அலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதில் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்த இலட்சக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர மறுவாழ்வு பெற்றிட தமிழக அரசு ஒல்லும் வகையெல்லாம் உதவிகளைச் செய்து வருகிறது. இதுவரை, 902 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வு திட்டங்களை நான் அறிவித்துள்ளேன். வீடு இழந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் நிரந்தரமான உறுதிவாய்ந்த வீட்டினைப் பெறும் வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகள் கட்டுமானக் கொள்கையினை இந்த அவையில் கடந்த 24–3–2005 அன்று நான் அறிவித்தேன் என்பதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் நினைவுகூர்வர். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவர்கள் மீது தனி அக்கறை கொண்டு அவர்களது குடும்பங்கள் சுனாமியின் பாதிப்பிலிருந்து மீண்டு இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்ற நோக்கத்துடன் 461.34 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. முழுவதும் பாதிப்படைந்த கட்டுமரத்திற்கு மாற்றாக மரத்தினால் ஆன புதிய கட்டுமரம் வாங்க 32,000 ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு அதன் மொத்த விலையும் மானியமாக வழங்கப்படுகிறது. உயர் அளவாக 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள முற்றிலுமாகச் சேதமடைந்த கண்ணாடி இழைக் கட்டுமரம் மற்றும் வள்ளங்களுக்குப் பதிலாக மாற்றுக் கலன்கள் வாங்கிடவும், இழந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக கண்ணாடி இழைக் கட்டுமரங்கள் வாங்கிடவும் 50 சதவிகிதம், அதாவது 75,000 ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. முழுமையாகச் சேதம் அடைந்த அல்லது காணாமல்போன இயந்திரப் 



படருகளுக்கு மாற்றாக புதிய இயந்திரப் படகுகள் வாங்கிக்கொள்ள 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியம், படகு ஒன்றுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் என்ற அளவில் வழங்கப்படுகிறது. அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாய் என்ற அளவில் பழுதுபட்ட இயந்திரப் படகுகளைச் செப்பனிட மதிப்பிடப்பட்ட சேதத்தில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. சுனாமிப் பேரழிவினால் கடுமையாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள வாழ்வாதாரங்களை மீண்டும் பெற்றிட அரசு வழங்கும் மானிய உதவிகளைக் கொண்டு புதிய கட்டுமரம், வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் வாங்கி வருகின்றனர். மேலும், பல தொண்டு நிறுவனங்களும், அரசு சாரா அமைப்புகளும் தனியார் நிறுவனங்களும் இத்தகைய வாழ்வாதாரங்களை மீனவர்களுக்கு வாங்கி வழங்க முன்வந்துள்ளன. பாதிக்கப்பட்ட மீனவர்கள் இந்த வாழ்வாதாரங்களைத் திரும்பப் பெற்றிட முழுத் தொகையும் மானியமாகவே வழங்கப்பட வேண்டுமென்று மைய அரசை எனது அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், மைய அரசோ மரக் கட்டுமரங்களை இழந்த மீனவர்களுக்கு மட்டுமே புதிய மரக் கட்டுமரங்களை வாங்குவதற்கு முழு மானியமாக நிவாரண உதவி அனுமதித்து உள்ளது. வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் ஆகியவற்றை இழந்தவர்களுக்கும், மரக் கட்டுமரத்திற்கு பதிலாக கண்ணாடி இழை கட்டு மரம் வாங்குவோருக்கும் இயந்திரப் படகுகளை செப்பனிடவும் மைய அரசு முழு மானியம் வழங்க இதுவரை முன்வரவில்லை. இந்தச் சூழ்நிலையில் மீனவர்கள் மீன்பிடிக் கலன்களை வாங்குவதற்கும், அவற்றைப் பழுதுபார்ப்பதற்கும் ஏற்படும் செலவைக் குறைக்கும் வகையில் முழு விற்பனை வரி விலக்கு அளிக்க நான் முடிவு செய்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளம், அனைத்து வகை இயந்திரப் படகுகள், வெளிப்பொருத்தும் மோட்டார் மற்றும் மீன் பிடிப்பதற்கு பயன்படும் இதர பொருட்கள் ஆகியவற்றிற்கு தற்போது 12 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பயன்பாட்டுக்காக இவை வாங்கப்படும்போது அவற்றிற்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கட்டுமரம் செய்வதற்கான மரத்திற்கு தற்போது 10 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதற்கும் முழு வரிவிலக்கு அளிக்க (மேசையைத் தட்டும் ஒலி) நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விற்பனை வரிவிலக்கு நடப்பு நிதியாண்டு, அதாவது 2005–2006 ஆம் ஆண்டு முழுவதும் அமலில் இருக்கும். நான் தற்போது

அறிவித்துள்ள இந்த விற்பனை வரிச் சலுகையின் காரணமாக மீன்பிடிக் கலன்களின் விலை கணிசமான அளவில் குறையும். சுனாமியால் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்துவிட்ட மக்களுக்கு மீன்பிடிக் கலன்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்கு ஏதுவாக 2001 ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வின்போது மைய அரசு வழங்கியவாறே தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் மைய அரசால் விதிக்கப்படும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே தமிழக அரசு மைய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது.

முற்பகல் 11–05

இந்த நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட விற்பனை வரிச் சலுகை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மைய அரசும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளித்து விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக (மேசையைத் தட்டும் ஒலி) மைய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### ஈரோடு நகராட்சியுடன் சில பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு நகராட்சியை அருகில் உள்ள மூன்றாம் நிலை நகராட்சிகள்





மற்றும் ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக ஆக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

ஈரோடு நகராட்சியுடன் காசிபாளையம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி, பெரியசேமூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளையும், B.P. அக்ரஹாரம், சூரியம்பாளையம், கங்காபுரம், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம் மற்றும் திண்டல் ஊராட்சிப் பகுதிகளை இணைத்து ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக்கக் கோரும் கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது என்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளை எல்லாம் ஊராட்சிகளாகவும், சிறப்பு நிலை ஊராட்சிகளாகவும் அறிவித்து, தமிழக மக்களின் வாழ்வை சிறக்கச் செய்தது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான். தமிழகத்திலுள்ள 6 மாநகராட்சிகளில், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய 3 மாநகராட்சிகளை 1–6–1994 ஆம் ஆண்டு உருவாக்கிய பெருமை தனிப் பெரும் கருணையாய் அருட்பெருஞ் ஜோதியாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களையே சாரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே 5 நகராட்சிகளைக் கொண்ட ஒரு தொகுதி ஈரோடு தொகுதிதான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஈரோடு நகராட்சி, காசிபாளையம் நகராட்சி, வீரப்பன்சத்திரம் நகராட்சி, சூரம்பட்டி நகராட்சி, பெரிய சேமூர் நகராட்சி ஆகிய 5 நகராட்சிகளோடும் அருகில் இருக்கின்ற B.P. அக்ரஹாரம் ஊராட்சி, சூரியம்பாளையம் ஊராட்சி, கங்காபுரம் ஊராட்சி, எல்லப்பாளையம் ஊராட்சி, வில்லரசம்பட்டி

[திரு. கே.எஸ். தென்னரசு] [2005 ஏப்ரல் 1

ஊராட்சி, முத்தம்பாளையம் ஊராட்சி, திண்டல் ஊராட்சி ஆகிய 7 ஊராட்சிகளையும் சேர்த்தால் மொத்தப் பரப்பளவு 110 சதுர கிலோ மீட்டர் வருகிறது. மொத்த மக்கள்தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி 4 இலட்சத்து 10 ஆயிரம் வருகிறது. 2004 ஆம் ஆண்டுக் கணக்கின்படி மொத்த வருவாய் 38 கோடியே 90 இலட்சம் ரூபாய் வருகிறது. நகராட்சிகளில் மட்டும்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு, ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள். என்ன கேட்க வேண்டுமோ, அந்தக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** நகராட்சிகளில் மட்டும்தான் காலி மனை நிலங்களுக்கு வரி வசூல் செய்யப்படுகிறது. ஊராட்சிகளில் அங்கீகரிக்கப்படாத காலி மனை நிலங்களுக்கு வரிவசூல் செய்யப்படுவதில்லை. மாநகராட்சியாக ஆகும் பட்சத்தில் வருவாய் அதிகரிக்கும், ரூபாய் 50 கோடியாகவும், 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி 4 இலட்சத்து 10 ஆயிரம் என்று உள்ள மக்கள்தொகை 2005–2006–ல் 5 இலட்சம் ஆகவும் உயரும். ஆக, மாநகராட்சி ஆவதற்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளதால், மாநகராட்சியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுள்ளார். இரண்டாவது மாநில நிதிக் கமிஷன் அறிக்கையில், ஒரு நகராட்சியினை மாநகராட்சியாக மாற்ற ஆண்டு வருமானம் ரூ.50 கோடிக்கு அதிகமாகவும், மக்கள்தொகை குறைந்தபட்சம் 5 இலட்சமாகவும் இருக்க வேண்டுமெனக் குறியீடு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஈரோடு நகராட்சி மற்றும் அவர் கூறியுள்ள மூன்றாம் நிலை நகராட்சி மற்றும் அருகில் உள்ள ஊராட்சிகள் அனைத்தையும் சேர்த்தாலும்கூட, அங்கே அந்த வருமானமானது ரூ.38 கோடியே 45 இலட்சம் மட்டும்தான் இருக்கின்றது. மொத்த மக்கள்தொகையும் 4.05 இலட்சமாக உள்ளதால், ஈரோடு நகராட்சியினை மாநகராட்சியாக மாற்ற வழிவகையில்லை. மேலும், தற்போது நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற எல்லைகள் வரையறுக்கும் பணியின் காரணமாக, உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மாற்றத் தடையாணை இருப்பதால், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை இணைத்து, ஈரோடு



2005 ஏப்ரல் 1] [திரு. கே.பி. அன்பழகன்]

நகராட்சியினை மாநகராட்சியாக நிலையுயர்த்த தற்போது சாத்தியமில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு, என்ன?

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா வளர்ந்த மண் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. தென்னரசு, எல்லாம் தெரியும். இப்போது தடையாணை இருக்கிறது, அதனாலே முடியாது என்கிறார்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு**

**(ஆ) கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம்**

**(இ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்**

– – –

### (அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ரூ.165,70,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.17,60,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2623, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3392, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4324, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4512, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4788, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6281, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5735, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6228, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6784, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7178, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7416, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2800, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3166, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 3298, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4002, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5620, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2998, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3278, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், செல்லம்பட்டி யூனியன் சக்கரப்பனாயக்கனூரில் புதிய கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,70,05,000/–மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,60,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3980, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4280, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5033, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6174, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6188, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரக்கோட்டை, அந்தானி ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.165,70,05,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,60,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6665, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6881, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7233, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5476, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4581, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4370, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6374, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2084, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1996, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 616, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4139, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6489, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1664, திரு. டி.என். சிவசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.12,13,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2610, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3410, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4049, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4317, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4540, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4806, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4939, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5760, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6553, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7177, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7457, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2798, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3235, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4014, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5600, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3970, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6371, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 614, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4181, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4461, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7231, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 5143, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6036, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3091, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6190, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம், நாகுடி, அத்தானி பூவைமாநகர் போன்ற இடங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,13,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5498, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3276, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் பால் வளத்தை மேம்படுத்த மானியத்தோடு கூடிய கறவை மாட்டுக் கடன்கள் அதிகப்படியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும், வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக மாட்டுத் தீவனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,13,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6878, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6909, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6672, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6744, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6171, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6229, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.75,89,21,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,01,97,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3402, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4320, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 4529, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4800, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4938, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5716, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5747, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7176, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7429, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2799, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3161, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3236, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5655, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6715, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2993, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4449, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5154, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6669, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6875, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6167, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7232, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4186, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3031, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4579, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6173, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3979, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6189, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில் உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,89,21,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,01,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2030, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2025, திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 3281, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3277, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி, நாகப்பட்டினம், குளச்சல் போன்ற இடங்களில் மீனவர்களின் நலன் கருதி புதிய மீனவர் படகுத் துறைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,89,21,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,01,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6908, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

---

@ 471 முதல் 533 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று முன்மொழியப்பெற்ற மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் தங்களுடைய கருத்துகளை ஒருங்கே தெரிவிக்கலாம். திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய

@ 534 முதல் 568 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 569 முதல் 599 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தொகுதி மக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, மறைந்த மரியாதைக்குரிய இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு அனுமதி அளித்து இருக்கின்றார்கள். செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரம் அவர்களுக்கு திருநெல்வேலியிலே மணிமண்டபம் கட்டுவதற்கு அனுமதி அளித்து, பணி முடிவடையும் நிலையில் இருக்கின்றது. உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் பிறந்து வளர்ந்த வீட்டை அவருடைய நினைவு இல்லமாக அறிவித்து இருக்கின்றார்கள். மறைந்த மரியாதைக்குரிய தேவர் திருமகன் பிறந்து வளர்ந்த மதுரையில், திருநகரில் இருக்கின்ற அவருடைய இல்லத்தை நினைவு இல்லமாக அறிவித்திருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பிறந்து வளர்ந்தது இல்லை. அவர் கடைசிக் காலத்தில் தங்கியிருந்தது.

*முற்பகல் 11-20*

**திரு. மு. அப்பாவு:** நன்றி. அவருடைய கடைசிக் காலத்தில் வாழ்ந்த திருநகரில் இருந்த இல்லத்தை நினைவு இல்லமாக இந்த அரசு அறிவித்ததை நான் வரவேற்கின்றேன். அதேபோன்று என்னுடைய தென் மாவட்டத்தில், பிரிக்கப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில், இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் காயாம்புளியில் 1905 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி பிறந்து, திருச்சியிலே பட்டப் படிப்பை முடித்து, சென்னையிலே வழக்கறிஞர் படிப்பை முடித்து, லண்டனிலே பாரிஸ்டர் படிப்பை முடித்து, தினத்தந்தி நாளிதழை சாதாரண ஏழையெளிய மக்கள் படிக்கின்றவண்ணம் தமிழுக்குத் தொண்டாற்றி, இதே அவையில் மேலவை உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, நம்முடைய பேரவைத் தலைவராகப் பணியாற்றி, இப்போது தமிழிலே நடைபெறுகின்ற இந்த விவாதத்தை, முதன்முதலாக ஆரம்பித்துத் தந்தவரும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், திருவள்ளுவர் குறள் ஒன்றை வாசித்து, ஆரம்பிக்கின்ற இந்த நடைமுறையையும் இந்த மன்றத்திற்கு அறிமுகப்படுத்திய, நம்முடைய தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த இல்லமான ஸ்ரீவைகுண்டத்தில், தாலுகா அலுவலகத்திற்கு எதிரே இருக்கின்ற அவருடைய இல்லத்தை நினைவு இல்லமாக இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதை அறிவித்தால் எங்களுடைய தென் மாவட்டங்களில் உள்ள மக்கள் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அத்தனை மக்களுமே தமிழர் தந்தைக்குக்

கொடுக்கின்ற கௌரவமாக எண்ணி நாங்கள் வரவேற்போம் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அவருடைய நினைவு இல்லமாக அறிவிக்கின்ற நேரத்தில்--அதே பகுதியில் நம்முடைய ஜனாதிபதி திரு. அப்துல் கலாம் அவர்கள் 2010–க்குள் ஒரு Digital Library-யை தமிழகத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு ஒத்துழைப்பாக நம்முடைய தென்காசி இராஜகோபுரத்தை பல கோடி ரூபாய் செலவு செய்து கட்டித் தந்தவரும், திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்திலே அருமையான பயணிகள் தங்கும் விடுதியை 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தந்தவரும், நம்முடைய திருச்சியிலே ஊனமுற்ற, மன வளர்ச்சிக் குன்றியவர்களுக்கு 60 இலட்ச ரூபாய் செலவில் தங்கும் விடுதி கட்டிக் கொடுத்தவரும், மனோன்மணியம் சுந்தரனார், பல்கலைக்கழகத்தில் நம்முடைய சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய நூற்றாண்டு கட்டடத்தை 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்தவரும், ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்கு பள்ளி வகுப்பறைகள் கட்டிக் கொடுத்தவரும், மிகப் பெரிய அளவில் நம்முடைய தமிழகத்தில் பல இடங்களில் திருமண மண்டபங்கள் போன்ற நல்ல பல பணிகளைச் செய்து கொண்டு இருக்கின்ற, மனித நேயம் உள்ள சின்னையா சிவந்தி ஆதித்தனார் அவர்கள் அந்த Digital Library ஆரம்பிப்பதற்கு நிதி வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார் என்பதையும் இந்த மன்றத்திலே தெரிவித்து, அதை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மறைந்த மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நூற்றாண்டு விழா 2002 ஆம் ஆண்டில் இந்த அரசால் நான்கு சுவர்களுக்குள் நடத்தி முடிக்கப்பட்டது. அவரை கௌரவிக்கும்வண்ணம் அவருடைய பிறந்த தினத்தை மாணவர்கள் தினமாக அறிவிக்க வேண்டுமென்று பல பகுதிகளிலிருந்து கோரிக்கை வைத்திருக்கிறோம். மத்திய அரசு அவருடைய நாணயத்தை மதிக்கும் வண்ணம் அவருடைய தலை பொருத்திய நாணயத்தை வெளியிட்டு பெருமை சேர்த்ததுபோன்று இந்த அரசும் அவருடைய பிறந்த தினத்தை மாணவர் தினமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நல்ல வேளையிலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. அப்பாவு, நான்கு சுவர்களுக்குள் நடத்தினோம் என்று சொல்வது தவறு. நாடு முழுவதும் நடத்தப்பட்டது. விருதுநகரில் நானும் அமைச்சர் பெருமக்கள் எல்லோருமே கலந்து கொண்டோம்.



***மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில் காமராஜர் நூற்றாண்டு பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக எட்டு அமைச்சர்களோடு மட்டுமல்லாமல் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் அரசு சார்பாக கலந்துகொண்டு, ஒரு பெரிய விழா விருதுநகர் மாநகரில் நடந்தது. அதுமட்டுமல்லாமல், காமராஜர் குடும்பத்திற்காக கவலைப்படக்கூடிய ஒரே தலைவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காமராஜர் குடும்பத்திற்காக, அவருடைய குடும்பத்தில் உள்ளவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஐந்து இலட்ச ரூபாய் பணமாகவும், அதுமட்டுமல்லாமல் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு போக்குவரத்துத் துறையில் ஒரு வேலைவாய்ப்பும் கொடுத்தது மட்டுமல்லாமல், காமராஜர் நினைவு ஸ்தூபி விருதுநகரில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 9 இலட்ச ரூபாயும், நினைவு மண்டபம் அமைப்பதற்கு 5 இலட்ச ரூபாயும் அளித்து 14 இலட்ச ரூபாய் செலவிலே விருதுநகரில் பணி நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—காமராஜருக்காக, காமராஜர் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல்—காமராஜரை நினைத்துக் கொண்டிருப்பவர் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தானே தவிர, காங்கிரஸ்காரர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு சரக்கு வைத்திருக்கிறார் பாருங்கள். (சிரிப்பு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே, பால் வளத் துறையிலே ஒரு கருத்தை நான் கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும். நம்முடைய திருநெல்வேலியில் கண்ணப்பன் என்ற ஒரு எஸ்.பி. அவர்கள் பணியாற்றினார்கள். அவர் பணியாற்றிய காலத்தில் அந்த ஊரில் கள்ளச்சாராய வியாபாரத்தை அடியோடு நிறுத்தி அந்தப் பகுதியில் இன்றுகூட அந்தக் கள்ளச்சாராயம் இல்லாத அளவுக்கு மாற்றிவிட்டார்கள்.

*முற்பகல் 11–25*

அதேபோன்று, 2002 ஆம் ஆண்டு வரை, இந்த பால் வளத் துறையிலே 17 இலட்சம் லிட்டர் பால் தினந்தோறும் எடுக்கப்பட்டு, முழுமையாக,

அந்தப் பாலைப் பெறுவதற்குக்கூட இல்லாமல், வாரத்தில் இரண்டு நாட்கள் அந்தப் பாலை எடுப்பதற்கு மறுப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில், அங்கே அந்த S.O.–வாக, Managing Director–ஆக பிரசாத் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, இன்று 23 இலட்சம் லிட்டர் பால், தினந்தோறும் உற்பத்தி செய்யப்பட்டு, அவ்வளவு பாலும் கொள்முதல் செய்யப்பட்டு, கல்கத்தா, டெல்லி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும் பால் பொருளான பால் பவுடர், நெய் போன்றவற்றை ஏற்றுமதி செய்து, மிகச் சிறப்பாக அவருடைய காலத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நான் இந்த அதிகாரியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனென்றால், இதே பணியில் பல பேர் இருந்திருக்கின்றார்கள். 12,000 பேர் பணியாற்றிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களையெல்லாம் ஒருமுகப்படுத்தி, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் நம்முடைய குஜராத்திலே, ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட் என்ற, அமுல் என்ற ஒரு நிறுவனம் சிறப்பாக அங்கே பால் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறது. எவ்வாறு என்றால், பால் மாடுகள், கறவை மாடுகளை இலவசமாக வழங்குகின்றார்கள். காலையிலே ஒரு மாட்டிற்கு உடல்நிலை சரியில்லை என்று தொலைபேசியிலே சொன்னால் போதும், உடனடியாக வாகனத்திலே வந்து, அந்த மாட்டிற்கு சிகிச்சை செய்து, அதைக் குணப்படுத்துகின்றார்கள். அதுவும் முடியாமல், அந்தக் கால்நடையானது தவறிவிட்டால், உடனடியாக அதே அளவிற்குப் பால் கொடுக்கக்கூடிய பால் மாட்டை, கறவை மாட்டை, மாலையிலேயே கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள், அந்த விவசாயிகளுக்கு. அதேபோன்ற ஒரு நிலையை, இப்போது நிர்வாக இயக்குநராக இருக்கின்றவர்களும், நல்ல திறமையாக...

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பால் வளத் துறையினுடைய நிர்வாக இயக்குநரைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இதற்கு முன்புகூட, பல்வேறு அரசுகள் இருந்த நிலையிலேகூட, நிர்வாக இயக்குநர்கள்தான் அந்தப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அப்பொழுது நிர்வாகத்திலே இருந்தவர்கள்--எந்த முடிவுகளையும் எடுப்பதற்கு முன்பாக, கலந்துபேசித்தான் முடிவெடுக்க முடியும் என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள்--இரண்டு தினங்கள், வாரத்திற்கு இரண்டு தினங்கள் விடுமுறை என்று சொல்லக்கூடிய நிலைமை எல்லாம், கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்தது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள்.



அது உண்மை. ஆனால், இன்று அந்த நிலைமை இல்லாத அளவிற்கு, தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்க, அதற்கு உடனுக்குடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு, உடனுக்குடன் அழைத்துப்பேசி, இந்தத் துறையிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதிலே என்ன நடவடிக்கை உடனுக்குடன் எடுத்தால் இதுபோன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும் என்கிற ஆணையை அவ்வப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையிலேதான், இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதே அதிகாரிகள்தான் கடந்த காலங்களிலும் நிர்வாகத்தில் இருந்தார்கள். ஆனால், அதிகாரிகள் மட்டுமே ஒரு நிர்வாகத்தைச் சரிசெய்துவிட முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் சிறந்த ஆலோசனைகளை, அந்தந்த நேரத்திற்குத் தேவையான ஆணைகளை, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தந்தத் துறைகளுக்கு இடுவதன் அடிப்படையிலேதான், இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இதிலே நான் ஒரு கருத்தைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலை நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கு இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதில் ஒரு அதிகாரி, தானே முடிவெடுத்துவிட முடியாது. பல்வேறு நாடுகளிலேயிருந்து அதுபோன்ற அனுமதிகளைக் கேட்கிறார்கள். அவ்வாறு அனுமதி கேட்கிறபொழுது, விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்த அனுமதியை வழங்கலாமா என்பதை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கேட்டுத்தான் அந்த அனுமதிகளெல்லாம் வழங்கப்படுகின்றன. கடந்த காலங்களிலே அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. அதனால், அந்த விடுமுறை விடுகிற நிலைமை, பால் கொள்முதல் செய்வதிலே தடுமாற்றம், அதனால் உற்பத்தியாளர்களுக்குப் பாதிப்பு போன்ற நிலைமையெல்லாம் கடந்த காலத்தில் இருந்தது. அதை, அம்மா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே, அழைத்துப்பேசி அதிலிருக்கிற சீர்கேடுகளைக் களைந்து நடவடிக்கை எடுக்க, அவ்வப்பொழுது அவர்கள் இட்ட உத்தரவின் அடிப்படையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதை இங்கே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, குஜராத்தில் இருப்பது போன்று—தமிழகத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக, கால்நடைகளை, பால் மாடுகளை, கறவை மாடுகளைக் கொடுத்து, அந்த அடிப்படையில்

ஒரு மாவட்டத்தைப் பரீட்சார்த்தமாக நீங்கள் தேர்வு செய்து, அதேமுறையில் தமிழகம் முழுவதும் இந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே அனைவருமே குடிநீரை விலை கொடுத்துத்தான் வாங்கிக் குடிக்கின்றோம். பாட்டிலிலே வருகின்ற நீரை—ஒரு லிட்டர் தண்ணீரானது 12 ரூபாய் வரை கொடுத்து வாங்குகின்றோம். பாலினுடைய விலை 8 ரூபாய் 50 காசாக விவசாயிகளிடம் கொள்முதல் பண்ணுகிறோம். தயவுசெய்து, அதை மனதிலே வைத்து விலையை...

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். இப்போது 4.5 கொழுப்பு சத்துக்கும், 8.5 இதர சத்துக்கள் உள்ள பாலுக்கு 10 ரூபாய் 50 காசு என்ற விலையில் வழங்கப்பட்டு வருகிறது. அதுவும், ஒரு ரூபாய் விலை உயர்த்திய பின்னாலும்கூட, பால் பணப் பட்டுவாடாவைப் பொறுத்தவரை தடையில்லாமல் நிலுவையின்றி வழங்கப்பட வேண்டுமென்ற கண்டிப்பான உத்தரவை மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மிகச் சிறப்பாக 10 ரூபாய் 50 காசு என்கின்ற அந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–30*

**திரு. மு. அப்பாவு:** நம்முடைய பால் உற்பத்தியாளர் சங்கத்தில் வாங்குவதை வைத்துத்தான் நான் சொன்னேன். சரி, பரவாயில்லை. இருந்தாலும் அந்தத் தண்ணீரினுடைய அளவிற்காவது, அந்தப் பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், இரண்டு முறை பாலின் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்கள் கடந்த காலத்திலே இருந்த ஒரு கருத்தை, உண்மையைச் சொன்னார்கள். கடந்த கால ஆட்சியில் பால் கொள்முதல் செய்வதிலே தடுமாற்றம் இருந்தது, சரியாக கொள்முதல்



செய்யவில்லை, கொள்முதல் செய்த பாலுக்குப் பணம் தரப்படவில்லை என்ற நிலைமையெல்லாம் இருந்தது என்று குறிப்பிட்டார்கள். அந்த நிலைமைகளையெல்லாம் சரி செய்ததனால்தான் ஒரு ரூபாய் விலை உயர்வு இப்போது கொடுத்திருக்கிறார்கள். ஒரு லிட்டருக்கு ரூ.10.50 என்ற ஒரு நல்ல விலை இப்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்த இடத்திலே நான் இன்னொரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அளவிலே, கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக அதிகப்படியான பால் கொள்முதல் செய்கிற மாநிலமான குஜராத்திலே சுமார் 54 இலட்சம் லிட்டர் நாளொன்றுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்குச் சொல்லிவிடுகிறேன். ஒரேயொரு நிமிடம்—(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய பதிலுரையிலே சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக அதிகப்படியான பால் கொள்முதல் செய்கிற மாநிலங்கள்—குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நான்காவது இடத்திலே தமிழகம் இருக்கிறது. இந்த நான்கு மாநிலங்களிலுள்ள கொள்முதல் விலையை ஒப்பிடுகிறபோதுகூட, ரூ.10.50 என்ற அதிகபட்சமான கொள்முதல் விலையைக் கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகிற தமிழகம்தான் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு இரண்டு மணித்துளிகளிலே பேசி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) (குறுக்கீடு) போகத்தான் சொல்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** கொஞ்சம் கருணை இருக்கட்டும்; நான் பேசி முடித்துவிடுகிறேன். கடகடவென பேசி முடித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மீன்வளத் துறையை எடுத்துக்கொண்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பல உதவிகளை இந்த அரசு செய்து வருகிறது. விருப்பம் உள்ள மீனவர்கள் மத்திய அரசு வழங்குகின்ற வங்கி லோன்களை வாங்குவதற்கும் நீங்கள் அவர்களுக்கு உதவி செய்தால் உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்கின்றேன். அதோடு உண்மையிலேயே இந்த மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றால், தூண்டில் வளைவு- Mini Fishing Harbour கட்டிக் கொடுக்க வேண்டும்.

கேரளாவிலே 400 லிட்டர் மண்ணெண்ணெய் ரேஷன் விலையிலே மாதந்தோறும் வழங்குகிறார்கள், ஒவ்வொரு மீனவருக்கும். அதேபோன்று, தமிழக மீனவர்களுக்கும் 400 லிட்டர் என்றில்லாவிட்டாலும் 300 லிட்டர் மண்ணெண்ணையாவது ரேஷன் விலையிலே வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு வீடுகள் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக்கொடுப்பதாக அறிவித்திருக்கின்றீர்கள். வரவேற்கிறேன். ஏற்கெனவே அவர்கள் குடியிருந்து வருகின்ற வீடுகளை அரசுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள். அதை மறுபரிசீலனை செய்து, அவர்கள் கடற்கரையோரங்களில் அந்த வீடுகளைக் கட்டியிருந்தால் மீன்பிடி உபகரணங்களை அந்தப் பழைய வீட்டில் வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து மிக முக்கியமானது. தென்மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சுமார் 15 அணைக்கட்டுகளினுடைய மொத்தக் கொள்ளளவு 15 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் ஆகும். ஆனால், தாமிரபரணி ஆற்றில் இந்த ஆண்டு மட்டும், கடலில் வீணாகக் கலந்த தண்ணீருடைய அளவு 45 ஆயிரம் மில்லியன் கன அடி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் நம்முடைய பொதுப் பணித் துறையின் அதிகாரிகளுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று—ஏற்கெனவே, 7–7–2001 அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அவர்களுடைய இல்லத்திலே சந்தித்து, அங்கே வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை நம்முடைய சேரன்மகாதேவிக்கு அருகே, கூனியூர் என்ற இடத்திலிருந்து ஆயிரம் கன அடி கொண்ட ஒரு வெள்ளப் பெருக்கு கால்வாயை வெட்டி, நம்முடைய சுவிசேஷபுரம், ஆயங்குளம் படுகை, ஆனைக்குடி படுகை, புத்தன்தருவை, வைரவன்தருவை, எம்.எஸ். தேரி பகுதிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை வைத்தேன். அதற்கு மதிப்பீடு தயார் செய்து, சாத்தான்குளம் இடைத் தேர்தலிலே வெற்றி பெற்றதும், என்னுடைய சின்னகுட்டிக்கு இந்த 167 கோடி ரூபாய் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அறிவித்த நிலையிலேதான் இருக்கிறது. தயவுசெய்து கடலிலே வீணாகக் கலக்கின்ற தண்ணீரை அந்த வறண்ட பகுதிக்குக் கொண்டுவருவதற்கு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்தாமிரபரணியிலும், பழையாற்றிலும் வீணாகச் சென்று ஆண்டுதோறும் 16 ஆயிரம் மில்லியன் கனஅடி தண்ணீர் கடலில் கலக்கிறது. நம்முடைய ராதாபுரம் பகுதிக்கு, தோவாளைக் கால்வாய்க்கு இடையில் வெள்ளப்பெருக்கு கால்வாய் ஒன்றும், சசீந்திரம் ஆற்றிலே, சுசீந்திரம் அருகேயிருந்து ஒரு lift irrigation மின் நீரேற்றி மூலம் 50 கனஅடி தண்ணீர் ராதாபுரம் கால்வாய்க்குத் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அவர்களுடைய இல்லத்திலே சந்தித்தபோது கொடுத்தேன். அந்த இரண்டிற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்த நிலையிலேதான் இருக்கின்றது. அவற்றையும் விரைவுபடுத்தித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். இன்னும் 2 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அதேபோன்று, காவலர்களுக்கு 1996 ஆம் ஆண்டு இந்த அரசு பட்டப் படிப்பு படித்து முடித்தவர்களுக்கு 20 சதவிகிதம் பேருக்கு உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கு தகுதி என்று அறிவித்தார்கள். அவற்றை அவர்களின் பணி மூப்பு அடிப்படையில் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர்களுக்கு இணையாக சிறைத் துறைக் காவலர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஆண்டுதோறும் 15 ஆயிரம் ரூபாய் இரயில் பயணப் படி தருகின்றீர்கள். எங்களைப்போன்ற தென் மாவட்டங்களில், தென் கோடியிலிருந்து வருகின்றவர்களுக்கு, நம்முடைய பேரவைத் தலைவர் உட்பட, அங்கேயிருந்து வருகின்றவர்களுக்கு இந்த 15 ஆயிரத்திலே மாதத்தில் 2 முறை, 3 முறை வந்து செல்கின்றோம். எவ்வளவு தடவை நாங்கள் வருகின்றோமோ அதற்குரிய பணத்தை எங்களுக்குத் தரவேண்டும். 15 ஆயிரம் ரூபாய் தேவையில்லை என்பதைக் கூறி, அதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் High Tech Park என்று இருந்தது. நம்முடைய ஆட்சியில்

ATMAC என்று பெயர் மாற்றம் செய்து அதே நிலையில் இருக்கின்றது. விரைவாக அதை அந்தப் பகுதியில் கொண்டுவர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் எங்களுடைய கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் 1987 ஆம் ஆண்டு முதல் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். புதுக்கோட்டை, திருவள்ளூர் போன்ற மாவட்டங்களில் 2003 ஆம் ஆண்டு படித்தவர்கள் பணியிலே இருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் கனிவோடு மனதிலே பதிந்து, இதைப் பரிசீலனை செய்து, நம்முடைய மாநில அளவில் அவர்களுடைய பதிவு மூப்பு அடிப்படையில் இந்தப் பணியில் அமர்த்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அது மட்டுமல்ல, விருப்பம் உள்ளவர்கள் எந்த மாவட்டத்தில் பதிவு செய்ய வந்தாலும், அவர்களை மிக சங்கடப்படுத்துகின்றார்கள். அவர்கள் தமிழர்கள்தானா, தமிழ்நாட்டில்தான் வாழ்கிறோமா என்று நினைக்கின்றார்கள். ஆகவே, எந்த மாவட்டத்தில் பதிவு செய்தவர்களுக்கும் நீங்கள் இடையூறு செய்யக்கூடாது. அதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதை எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் நீங்கள் சுற்றறிக்கை அனுப்ப வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று 1 முதல் 5 வகுப்புகளுக்கு, வகுப்புக்கு ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். கிராமப்புறப் பள்ளிகளில் எல்லாம் 30, 40 மாணவர்களுக்கு—75 மாணவர்கள் இருக்கிறார்கள்—இரு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 5 ஆண்டுகள் அவர்கள் படித்து முடித்து 6–வது வகுப்புக்குச் சென்றால், தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, வகுப்புக்கு ஒரு ஆசிரியர் நியமிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, 1 முதல் 12 வகுப்பு வரை அறிவியல், கணிதம், ஆங்கிலம் இந்த மூன்றையும் ஆங்கிலத்திலேயே சொல்லிக்கொடுங்கள். 12–வது வகுப்பு படித்து முடித்து வருகின்ற ஒரு மாணவன் சரளமாக ஆங்கிலம் பேச முடியவில்லை. அவனால் மற்ற ஆங்கில வழி போதனையிலே படித்துவருகின்ற மாணவனோடு போட்டியிட முடியவில்லை. அதை மனதிலே வைத்து செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.



**திரு. மு. அப்பாவு:** நான் இன்னும் தொகுதிக்கே வரவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிக்குப் போகலாம். சட்டசபை முடிந்ததும் தொகுதிக்குப் போகலாம்.

**திரு. மு. அப்பாவு:** சொல்லிவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** கொஞ்சம் கருணை காட்டுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** நான் சொல்லிவிடுகின்றேன். அதேபோல நம்முடைய கணினி மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். P.V.I. கைத்தொழில் படித்தவர்களுக்கு Carpenter-ம், விவசாயம் படித்தவர்களையும் நீங்கள் சேர்ப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். 1991–க்குப் பிறகு, தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு அங்கே இலவசப் புத்தகம், இலவச நோட்டு, எல்லாமே இலவசம்; ஆசிரியரும் இலவசம். தனியார் உதவிபெறும் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு 1991–க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளுக்கும் நீங்கள் தயவுசெய்து அந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

60 சதவிகிதம் பேர் விவசாயிகளாக இருக்கின்றார்கள். வெறும் 2,500 கோடி ரூபாய்தான் கடன் இருக்கிறது. அத்தனை கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று நம்முடைய சர்வோதய சங்கத்திற்கு தள்ளுபடி, rebate கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பணத்தை ஆண்டுதோறும் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். நம் மாண்புமிகு நிதி அமைச்சர் அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திசையன்விளை–கூடங்குளம் Primary Health Centre–ஐ 30 படுக்கைகள் கொண்டதாக ஆக்கித் தரவேண்டுமென்று — நம் பகுதிக்கு பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்தவர் அமைச்சராக இருக்கின்றார்கள்—அவரிடம் பல முறை சொல்லியாகிவிட்டது. முன்பு நம்முடைய மாண்புமிகு செம்மலை அவர்கள் அமைச்சராக இருந்தபோது, தருகிறேன் என்று சொன்னார்கள். நீங்கள் வந்த பிறகுதான் தர முடியாமல் இருக்கிறீர்களோ என்று நினைக்கிறோம். தயவுசெய்து அதைத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** திசையன்விளையை தனி தாலுக்காவாக மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, நம்முடைய தாமிரபரணி. நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே ஏற்கெனவே முன்பு போடப்பட்ட திட்டத்தில், குடிக்கிற தண்ணீர் ஒரு நபருக்கு 20 லிட்டர் வீதம் என்றிருப்பதை தயவுசெய்து மாற்றி, இப்போது இருக்கிற திட்டப்படி 40 லிட்டர் வீதம் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) திரு. ஜெக. வீரபாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னொரு சந்தர்ப்பத்திலே வாய்ப்பைக் கொடுக்கிறேன். திரு. ஜெக. வீரபாண்டியன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. மு. அப்பாவு:** ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். குடிதண்ணீர்தான். என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலுள்ள...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** நம்முடைய காவல்.. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். காவல்கிணறு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. மு. அப்பாவு:** நான் முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) வேறு உறுப்பினரைப் பேச கூப்பிடட்டுமா? (குறுக்கீடு) ஜெக. வீரபாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு, எழுதிக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட அனைத்தையும் பேசி இருக்கிறீர்கள். திரு. ஜெக. வீரபாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுத்துவிடுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு)



திரு. ஜெக. வீரபாண்டியன், வேறு உறுப்பினரைக் கூப்பிடட்டுமா? ரெங்கநாதனைத்தான் கூப்பிட வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள், அடுத்த முறை பேசுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே என்னைப் பேசப் பணித்தத் தங்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை முதற்கண் தெரிவித்து, மிகச் சுருக்கமாக சில விஷயங்களை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

நம் தமிழ்நாட்டில் கால்நடைச் செல்வங்கள் அழிந்து வருகின்றன என்பது எல்லோரும் அறிந்த கவலைக்குரிய ஒன்று. அதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், மிக முக்கியமான காரணம் கேரளாவிற்கு அடிமாடுகளாக நமது கால்நடைச் செல்வங்கள் கடத்தப்படுவது என்பதுதான் உண்மை. பெரும்பாலும் லாரிகளிலேயே இப்படிப்பட்ட மாடுகள் கடத்தப்படுகின்றன. இது முற்றிலும் சட்ட விரோதம் என்ற போதிலும், நம்மால் முழுமையாக அதைத் தடுக்க முடியவில்லை.

அகில இந்திய லாரி உரிமையாளர்கள் சங்கம்கூட, தமது உறுப்பினர்கள் இந்தச் சட்ட விரோத செயல்களில் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தியும்கூட, லாரி ஓட்டுநர்களும், உரிமையாளர்களும் இக்கொடுஞ்செயலைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். லாரி உரிமையாளர், ஓட்டுநர் ஆகியோரை சட்டத்தின் பார்வைக்குள் கொண்டுவர வேண்டும். இதற்கு உயர் நீதிமன்ற உத்தரவும் இருக்கிறது.

நமது கால்நடை பராமரிப்புத் துறை பெரும்பாலும், கால்நடை உற்பத்தியை மையமாக வைத்து அதாவது, production oriented–ஆகச் செயல்படுகிறது. கால்நடைகளும் ஓர் உயிர், அவற்றுக்கும் இங்கு வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. அவற்றின்மீது கருணையுடன் நடந்துகொள்வது நமது அடிப்படைக் கடமை என்பதை இந்திய அரசமைப்புச் சட்டம், Part IVA, Fundamental Duties, உட்பிரிவு 51A உறுதி செய்கிறது. They concentrate more on flesh than on life; உயிரைவிட உடலைத்தான் பிரதானமாகக் கருதுகிறார்கள்.

பிராணிகள் நலத்தைப் பற்றிய ஒரு துறை மைய அரசிடம் உள்ளது. அதன் பெயர் Animal Welfare Board of India. அதுபோன்ற ஒரு வாரியம் அல்லது துறை நமது மாநிலத்திலும் உருவானால்தான் இப்பிரச்சினைக்கு நாம் நிரந்தரத் தீர்வு காண முடியும். கால்நடைகளை

கால்நடைச் செல்வங்கள் என்றுதான் சொல்கிறார்கள். பொதுவாக, பசுவினத்தை பாலோடுதான் இணைத்து நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால், பசு நமக்கு 30 வகையான பொருட்களை வாரி வழங்குகிறது. அதனை நாம் உதாசீனப்படுத்துகிறோம். அதுதான் நமது அடிப்படைத் தவறு. ஒருசிலர் பசுவினத்தை தோல் மற்றும் இறைச்சியை மையமாக வைத்து பயன்படுத்துகிறார்கள். ஆனால், அதே பசு உயிர் வாழ்ந்தால் வருடாவருடம் நமக்கு அளிக்கின்ற பொருட்களின் மதிப்பு ரூபாய் 20 ஆயிரத்தைத் தாண்டுகிறது. மொத்தத்தில் பசுவினத்தின் கழிவுகள் மட்டுமே பூமியை உயிர்ப்பிக்கும்— Rejuvenate என்று சொல்வார்கள் என்பது நம்முடைய முன்னோர்களின் அனுபவ வாக்கு.

சாதாரண புல்லைத் தின்று வளர்கிறது நாட்டுப் பசு. அவற்றின் கழிவுகளால் நமக்கு இயற்கை உரம், உழவனின் தோழனான மண் புழு, சாண எரிவாயு, பசுவின் சிறுநீரால் பூச்சி விரட்டி, விஷமற்ற உணவு, சுலபமான உற்பத்தி, உயிர் உள்ள மண்வளம், விபூதி, பல்பொடி, குளியல்பொடி, பஞ்சகவ்யம் என்ற மனிதர்களே உட்கொள்ளும் மருந்துப் பொருள் மற்றும் சுகாதாரமான காய்கறிகள், கனிவகைகள், விதைகள் ஆகியவற்றை வழங்குகின்றன. மொத்தத்தில் இலாபகரமான விவசாயம் என்று பசுவினம் நமக்கு ஆசியளிக்கிறது.

முற்பகல் 11–45

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட,

'தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு
பூப்போல வைத்துன்னைக் காப்பதென் பாடு'

என்று பசுவிற்கே பூசை செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட புனிதமான பசுவினத்தை வெறும் சொற்பப் பணத்திற்கு அடிமாடுகளாக கேரளாவுக்குக் கடத்துவது மிகுந்த வேதனை அளிக்கிறது.

அரசாணை எண் 1715, தேதி 30–8–1976-ன்படி வேளாண்மைத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க அன்றே தமிழக அரசு பசுவதைத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால், அவ்வாணையைச் செயல்படுத்துகின்ற பொறுப்பு கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மெல்ல, மெல்ல அச்சட்டத்தின் செயல்பாடு



குறைந்துகொண்டு வருகிறது. ஆகையால்தான் இன்றும் பொள்ளாச்சி, தேனி, செங்கோட்டை, கன்னியாகுமரி, வேலூர் மற்றும் வாலாஜாபாத் வழியாக நூற்றுக்கணக்கான லாரிகளில் கேரளாவுக்கு வதைக்காகவே கால்நடைகளை கொலைக்களத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். சுமார் 50 மாடுகளை ஒரே லாரியில் சித்திரவதை செய்து ஏற்றிச் செல்வதை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் சொல்வதைப்போல, இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வந்த பின்னால் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. இருந்தாலும் அவர் கூறியதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள் புரட்சித் தலைவர் எப்படிப் பாடி இருந்தாரோ அந்தப் பாட்டை அவரே பாடி, கோமாதாவை நாங்கள் இந்த மாதிரி காத்து வருகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேரளா, ஆந்திரா போன்ற எந்த மாநிலங்களுக்கு மாடுகள் சென்றாலும் அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு உண்டான அனைத்து முயற்சிகளையும் எடுத்து, இப்போது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பா.ஜ.க. உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளையே மூடிவிடச் சொல்கிறாரா? வாணியம்பாடி, திண்டுக்கல், ஈரோடு, ஆம்பூர், பேரணாம்பட்டு ஆகிய பகுதிகளிலே இந்தத் தொழிலையே நம்பி ஆண்டு ஒன்றுக்கு 25 ஆயிரம் கோடிக்கு ஏற்றுமதி செய்கிற வகையிலே தொழில் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாட்டுத் தோல், ஆட்டுத் தோல் என்கிற இந்த அடிப்படையிலேயேதான் தோல் பதனிடும் தொழிற்சாலைகளே இருந்துகொண்டிருக்கின்றன. இதற்கு ஒரே ஒரு பதிலை மட்டும் அவர்கள் சொல்ல வேண்டும். உயிரோடு இருக்கிறவரைதான் மாடு புனிதமானதா? செத்துப் போனால் அதன் புனிதம் போய் விடுகிறதா? பி.ஜே.பி.யினுடைய கொள்கை அதுதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகளை மூட வேண்டுமென்பது எந்த அரசாங்கத்தினுடைய நோக்கமாகவும் இருக்கமுடியாது. இந்த மாடுகளை, விலங்கினங்களை இறந்ததற்குப் பின்னாலே உபயோகப்படுத்துவதிலே யாருக்கும் சங்கடம் இல்லை. ஆனால், உயிரோடு இருக்கிறபொழுது அதை வளர்க்க வேண்டும் என்று நாம் ஒரு சபதம் எடுத்துக்கொண்டு நடக்கிறபொழுது, அவற்றைத் துன்புறுத்துவது தவறு என்பதுதான் எங்களுடைய கொள்கை என்பதை அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) திரு. தமிழரசன், உட்காருங்கள். தொழில் துறையிலே பேசிக்கொள்ளலாம். திரு. ஜெக. வீரபாண்டியன், பேசுங்கள். திரு. தமிழரசன், controversy ஆகும். உட்காருங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** நான் கேட்பது என்னவென்றால், புனிதம் என்பது பசு மாடு உயிரோடு இருக்கிறவரைதானா? இறந்துபோனால் அதன் புனிதம், மற்றவையெல்லாம் போய்விடுகின்றனவா? அவற்றைக் குப்பையிலே போட வேண்டியதுதானா?

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சிக்காரனாக நான் பேசவில்லை. ஒரு சராசரி மானுடன், மனித நேயமுள்ள ஒரு மானுடனாகத்தான் நான் இங்கே அடையாளப்படுத்திக்கொள்கிறேன். பேச முடியாத, வாயில்லாத ஜீவனுக்காகத்தான் நான் இங்கே குரல் கொடுக்கிறேன். தொழில்ரீதியாக நீங்கள் பார்க்காதீர்கள். ஒரு மாட்டை வெறும் தோலும், சதையுமாக நீங்கள் பார்க்கிறீர்கள். நான் அதை ஓர் உயிராகப் பார்க்கிறேன். (குறுக்கீடு) மாடோ, ஆடோ, எதுவாக இருந்தாலும் சரி, நம் கண் முன்பாக, துடிக்கத் துடிக்க ஓர் உயிரினத்தைக் கொல்வது பாவம் என்பதுதான் என்னுடைய அடிப்படைக் கருத்தே தவிர, பி.ஜே.பி.யின் சார்பாக பசுவினத்திற்கு வக்காலத்து வாங்குவது என்னுடைய கடமையல்ல என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



இறந்த மாடுகளையோ, ஆடுகளையோ, தானாக இறக்கின்ற ஆடுகளையோ, அவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்துவதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதை நான் தெளிவுபடச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கருணைப் பார்வை கோயில் யானைகள்மீது பட்டது. ஒருமாத காலம் முதுமலைக் காட்டுக்கு உல்லாசமாகச் சென்று, உற்சாகத்தோடு ஊர் திரும்பி இருக்கின்றன. நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்வது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோபப் பார்வை – கருணைப் பார்வை யானைகள்மீது திரும்பியதால், யானைகள் உற்சாகத்தோடு திரும்பியதை நான் வெளிப்படையாகவே பார்க்கின்றேன். சந்தோஷத்தோடு மீண்டும் வந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வேண்டுகோள், செயல்திறன் மிக்க, துணிச்சல் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் கோபப் பார்வை, இந்த மாடு கடத்துபவர்கள்மீது, இரக்கமற்ற முறையிலே மாடுகளை, அடிமாடுகளைக் கொல்பவர்கள்மீது பாய வேண்டுமென்பது நான் சார்ந்திருக்கின்ற பி.ஜே.பி. சார்பாக மட்டுமல்ல, ஒவ்வொரு மானிட சமுதாயத்தினருடைய கருத்து என்பதை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மத்திய அமைச்சருடைய புண்ணியத்தால் கிட்டத்தட்ட வானத்தைத் தொடுகின்ற அளவுக்கு LP Gas மற்றும் Petrol விலையேற்றம் உயர்ந்து கொண்டிருக்கின்றது. இது எதிர்காலத்தில் மிகப் பெரிய பிரச்சினையை உருவாக்க இருக்கின்றது. இப்படிப்பட்ட பிரச்சினைகளில்கூட, நமது பசுவினம் மட்டுமே சரியான தீர்வைத் தர முடியும் என்பது என்னுடைய கணக்கு. பசுவின சாண எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கலாம். பல்வேறு பயன்பாடு அதன் மூலம் நமக்குக் கிடைக்கின்றது. ஆகையால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திற்கும் 250 மாடுகள் இருந்தால், அவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் அந்தக் கிராமத்திற்குத் தேவையான மின்சாரத்தை பெற்றுத் தரலாம் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் இருக்கின்றன. அதேபோல, மிகப் பெரிய மானியத்துடன் நாம் தயாரிக்கின்ற இரசாயன உரம், நமது ஆரோக்கியம், சுற்றுப்புறச் சூழலையும், ஏன் பொருளாதாரத்தையும்கூட பாதிக்கின்றது. 200 அடி ஆழத்திலுள்ள தண்ணீரில்கூட விஷத் தன்மை வந்திருக்கின்றது. பஞ்சாப், கேரளா, மராட்டியம் போன்ற மாநிலங்களில் தாய்மார்களின்

தாய்ப்பாலில்கூட இந்த விஷம் கலந்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தியைப் படித்திருக்கின்றோம். அப்படியிருக்க, தரை மட்டத்திலே பயிரிடும் காய்கறிகள், கீரைகள், மூலிகைகள் நிலை பற்றி யார் அறிவார்கள்? அவற்றிலும் நச்சுத்தன்மை கலந்திருக்கிறது. பிற்காலத்தில் சமூக நலத்திற்காக நாம் பெருந்தொகையை செலவழிக்க வேண்டிவருமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதை நாம் எச்சரிக்கையாகக் கருத வேண்டும்.

அத்திபூத்தாற்போல, கால்நடை பராமரிப்புத் துறையிலே, தன் பங்காக அரசாணை 186, நாள் 11–12–2001 – பொருள்: மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களைப் பாதுகாப்பது பற்றி அரசாணை போடப்பட்டிருக்கிறது. ஆனால், மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை சரியான முறையில் பாதுகாக்க முடியவில்லை. இந்த மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை தற்போது கட்டுமானப் பணிகளுக்காகவும், குடிசைகள் மேம்பாட்டுக்காகவும், தொழிற்சாலைகளுக்காகவும் நாம் பயன்படுத்துகின்றோம். அரசு மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களைப் பாதுகாக்கவேண்டும். மேலும் மேலும் கால்நடைச் செல்வங்களுக்கான மேய்ச்சல் நிலங்களை அரசு உருவாக்கித் தரவேண்டும்.

அதேபோல அரசாணை எண் 58, நாள் 12–3–2001–ல் அறநிலையத் துறை, அறிவுறுத்தும்பொருட்டு, திருக்கோயில்களுக்குத் தானமாக விடப்படுகின்ற பசுவினங்களை, அவற்றின் பாதுகாப்புக்காக தானமாக வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டும்கூட, இன்றுவரை சில கோயில்களில் கால்நடைகளை பொது ஏலத்தில் விடுகின்றார்கள். இப்படி ஏலத்தில் விடுகின்ற மாடுகள்கூட கேரளாவுக்குத்தான் அடிமாடாகச் செல்கின்றன. ஆகையால் அறநிலையத் துறையில் தானமாக விடப்படுகின்ற மாடுகளை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2 மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** 5 நிமிடங்களில் பேசி முடித்துவிடுகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இருக்கின்ற ஆலயங்களிலே விடப்படுகின்ற மாடுகளை அங்கே பாதுகாக்கப்படுகின்ற செலவுகள் அதிகமாகின்ற காரணத்தால், சிறிய ஆலயங்களிலே விடப்படுகின்ற மாடுகளெல்லாம் Goshalas-ல்தான் விடப்படுகின்றதே தவிர, ஏலத்தில் விடப்படவில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அப்படி ஏலத்தில் விட்டால் தயவுசெய்து அதைத் தடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். நோயில்லா வாழ்வு, நஞ்சில்லா உணவு, தூய்மையான காற்று, இவை கிடைக்க இயற்கை உரத்தை நாம் பயன்படுத்த வேண்டும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு மானியத்தோடு கூடிய மாடுகளை—சுய உதவிக் குழுக்களை நடத்துகின்ற பெண்களுக்குக்கூட நாம் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதேபோல தமிழகமெங்கும் கிட்டத்தட்ட கால்நடைத் துறையில் 1,200 கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** தமிழகம் முழுவதும் 1,200 கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சபைக்குத் தவறான தகவலைத் தருகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுமக்களை ஒரு கண்ணாகவும், வாயில்லாத ஜீவன்களான இந்தக் கால்நடைகளை இன்னொரு கண்ணாகவும், ஆக இரண்டு கண்களாக மாண்புமிகு அம்மா அவர்கள் காத்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்வதைப் போல தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள நிலங்களை, அந்த மேய்ச்சல் நிலங்களையெல்லாம், அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னால், எந்த ஒரு காரியத்திற்காகவும் ஒரு பிடி மண்கூட எடுக்காமல் பாதுகாத்து வருகிறார்கள் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, OXYTOCIN என்ற ஒரு injection 50 காசுக்கு எல்லா தீவனக் கடைகளிலும் கிடைக்கிறது. அந்த injection போட்டால் கன்று இருக்க வேண்டும் என்ற அவசியமே கிடையாது. சாதாரணமாக கிடாரிக் கன்று பிறந்தால் அதைப் பாதுகாக்கிறார்கள். ஆனால், சீமைப் பசு

காளைக் கன்று ஈன்றால் அதைக்கூட இப்படி கேரளா வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. இரண்டு நாட்கள் ஆன கன்றைக்கூட அவர்கள் இறைச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். அதை நேரடியாகக்கூட நம்முடைய செ.கு. தமிழரசன் சொன்னார். கறி சாப்பிட்டால்கூட பரவாயில்லை. அதை ரூமிலே போட்டுப் பூட்டிவிடுகிறார்கள். 50 கன்றுகளை ஒரு சின்ன ரூமிலே போட்டுப் பூட்டிவிடுகிறார்கள். தானாகவே பத்து நாட்கள் பட்டினியாகக் கிடந்து, அதனுடைய இரும்புச் சத்து எல்லாம் குறைந்த பிறகுதான், அது இறந்த பிறகு ஆட்டுக் கறிக்கு நிகராக விற்பனை செய்கிறார்கள். இப்படிப்பட்ட கொடூரக் கொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இதை நமது அரசு மட்டுமே செய்ய முடியும். ஆகையால்தான் இந்த அவையிலே நான் சொல்கிறேன்.

நேரடியாக என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். மயிலாடுதுறையிலே கால்நடை மருத்துவமனை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள். கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அப்புறம் சுனாமியைப்பற்றி. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இப்போது 110 statement–லே கூட நிறைய வரிச் சலுகை தந்திருக்கிறார்கள். நான் நாகை மாவட்டத்திற்குச் சொந்தக்காரன் என்ற முறையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமியின்போது, மீனவர்கள் வைத்திருந்த கால்நடைச் செல்வங்கள் நிறைய அழிந்து போயிருக்கின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்டவுடன் எல்லா மீனவர்களும் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூருக்கு வந்துவிட்டார்கள். அந்தக் கால்நடைச் செல்வங்களையெல்லாம் அங்கே இருக்கிற தீயணைப்புப் படை வீரர்கள், நகராட்சிப் பணியாளர்கள்தான் புதைத்துவிட்டார்கள். இப்போது அது கணக்கில் வரவில்லை. கணக்குக் கேட்கிறபோது எல்லாம் கால்நடைக் கணக்கைக் காட்டி, எங்கே புதைத்தீர்கள் என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்றி அவர்கள் தருகிற வாக்குமூலத்தை மையமாக வைத்து, அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறையில் பாலஞ்சேரி, ஆனந்ததாண்டவபுரம், மாப்படுகை கிராமங்களிலே கால்நடைத் துணை மருத்துவமனையை உருவாக்கித்



தர வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை வைத்து, இந்த அளவிற்குப் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் இன்றைய மானியக் கோரிக்கைகளான கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை ஆகிய துறைகளின் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவதற்கு வாய்ப்பளித்த, ஆறரை கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தங்கத் தாரகை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தினை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

கொடைத் தன்மை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசருக்கெல்லாம் அரசன் போன்றவன் என்ற வள்ளுவப் பெருமானின் கூற்றுப்படி, தமிழக மக்களுக்குத் தேவையான நேரத்தில், தேவையான திட்டங்களை அறிவித்து, வாழ்க்கையின் அடித்தளத்திலே உள்ள ஏழை, எளிய உழைக்கும் வர்க்கத்தின் குறைகளைப் போக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களின் குறைகளைக் களைந்து, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் எனச் சூளுரைத்து, செயலாக்கியும் வருகின்ற இந்தியாவின் இரும்புப் பெண்மணி மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலின் பேரில் இவ்வாண்டுக்கான புதிய வரியில்லா நிதிநிலை அறிக்கையில் கால்நடை வளர்ச்சிக்கும், பால் பண்ணை வளர்ச்சிக்கும் ரூ. 178.01 கோடியை ஒதுக்கியுள்ளது, மாண்புமிகு அம்மாவின் அரசு கால்நடை மற்றும் பால்வளத்தின்மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. மேலும், கால்நடை தீவனத் தயாரிப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவற்றிற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வங்கிக் கடன் வசதி ஏற்படுத்தி, அதன்மூலம் கிராமப்புற வேலைவாய்ப்புக்கு வித்திட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை

உயர்த்துதல் என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ள சிறப்புமிகு திட்டமாகும்.

நண்பகல் 12—00

கடந்த தி.மு.க.—வின் ஐந்தாண்டுகால ஆட்சியில் தமிழகத்தில் புதியதாக தொடங்கப்பட்ட கால்நடை கிளை நிலையங்களின் எண்ணிக்கை 174 ஆகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் நான்காண்டுகால ஆட்சியில் புதியதாக துவங்கப்பட்ட கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கை 317 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, 2004—2005 ஆம் ஆண்டில் மட்டும் 234 கால்நடை நிலையங்கள் துவக்கப்பட்டிருப்பது கால்நடை வரலாற்றில் மாண்புமிகு அம்மா அவர்களின் இமாலயச் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்செயலால் தமிழகத்தில், மொத்த கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கை 1,156 ஆக உயர்ந்துள்ளது. மனிதர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் அடுத்தவர் உதவியுடன் மருத்துவமனை சென்று நோயைத் தீர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், வாய் பேச முடியாத கால்நடை ஜீவனங்களின் நோயைத் தீர்ப்பதற்காக கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின் பேரில் தமிழகமெங்கும் 5,005 கால்நடை மருத்துவ முகாம்களை நிறுவி ரூபாய் 1.85 கோடி செலவில் ஏற்பாடு செய்து கால்நடைகளின் நோய்களைத் தீர்த்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களை மட்டுமே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பாலின் தினசரிக் கொள்முதல் அளவு அதாவது 2000—2001—ல் 16.94 இலட்சம் லிட்டராக இருந்தது. ஆனால், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் 4 ஆண்டு கால ஆட்சியில் தினசரி பால் கொள்முதல் அளவு இன்றைக்கு 23.86 இலட்சமாக உயர்ந்துள்ளது. நான்கு ஆண்டுகளில் பாலின் கொள்முதல் அளவு 6.92 இலட்சம் லிட்டர் உயர்ந்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆண்டு பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாயும், எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 6 காசும் உயர்த்தியதன் காரணமாக பாலின் கொள்முதல் அளவு சுமார் 35 சதவிகிதம் உயர்ந்துள்ளது. பாலின் கொள்முதல் விலையை உயர்த்தினோமே ஒழிய, பாலின் விற்பனை விலையை ஒரு பைசாகூட கூட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும், நம் நாட்டின் தலைநகர் டெல்லிக்கும், விஞ்ஞானத்தில் பெருவளர்ச்சி பெற்று வரும் சிங்கப்பூர் போன்ற நாட்டுக்கும் நமது ஆவின் பாலை ஏற்றுமதி செய்வதிலிருந்து



நாம் பால் உற்பத்தியில் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளோம் என்பதுடன், பால் உற்பத்தியில் இந்தியாவில் முதல் மூன்று இடங்களில் நமது தமிழகமும் இடம்பெற்றுள்ளது என்பதே நாம் பால் உற்பத்தியில் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளோம் என்பதைக் காட்டுகிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனையாகும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதுடன், பால் உற்பத்தியைப் பெருக்க 2005—2006 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 12.72 கோடி ஒதுக்கியுள்ளதையும், மாண்புமிகு அம்மா அவர்களின் 4 ஆண்டு கால ஆட்சியில் கால்நடை வளர்ச்சி பெரிதும் உயர்ந்துள்ளதையும், கால்நடை மருத்துவத்தை விரிவுபடுத்தியதன் காரணமாக கால்நடை நோய் முற்றிலுமாக தடுக்கப்பட்டதுடன், பால் உற்பத்தி வெகுவாக உயர்ந்துள்ளது என்பதையும் நாம் கண்கூடாகக் காண முடிகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26—12—2004 அன்று சுனாமி என்ற அலை அரக்கனால் ஏற்பட்ட துயரச் சம்பவத்தின் காரணமாக 1,076 கிலோ மீட்டர் தொலைவுள்ள 13 மாவட்டங்கள், 25 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய தமிழகக் கடற்கரையோர மீனவ கிராமங்களில் பல கிராமங்கள் முற்றிலுமாகவும், சில கிராமங்கள் பகுதியான அளவுக்கும் பாதிக்கப்பட்டன. இக்கோரச் சம்பவத்தினால் தமிழ்நாட்டில் மட்டும் 8,018 பேர் இறந்துள்ளனர். 26—12—2004 அன்று காலை 9—00 மணியளவில் இதைக் கேள்வியுற்ற தமிழகத்தின் தாய், மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக பட்டினப்பாக்கம் உள்ளிட்ட சென்னையில் பாதிக்கப்பட்ட மீனவ சமுதாய மக்கள் வாழ்கின்ற அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்குவதற்குத் தேவையான அனைத்து உணவு, உடை, உறைவிட வசதிகளுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி ஆணை பிறப்பித்து, அன்று மாலைக்குள்ளாகவே நாகப்பட்டினம் மாவட்டம் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும் சென்று, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து உங்களைக் காப்பாற்ற நான் இருக்கின்றேன், நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம் எனச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத் தேவையான அனைத்து உடனடித் தேவைகளைச் செய்ததோடு மட்டுமல்லாமல், 27—12—2004 மற்றும் 30—12—2004 ஆகிய தேதிகளில் மேற்கண்ட இடங்களுக்கு மீண்டும் நேரில் சென்று அவசரகால நிவாரண உதவிகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், உங்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்பைத் தவிர ஏனைய அனைத்து உதவிகளையும் செய்து தருகின்றேன் எனச் சொல்லி, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு

நிவாரணப் பணிகளை 3 கட்டமாகப் பிரித்து முதற்கட்ட நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும், முகாம்கள் அமைத்து அவர்களுக்குத் தேவையான உணவு, உடை வசதிகளை ஏற்படுத்திடச் செய்வது மற்றும் இறந்தவர்களின் சடலங்களை எரிக்க அல்லது புதைக்க ஏற்பாடு செய்வது, காணாமல் போனவர்களைத் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளச் செய்வது போன்றவற்றில் அதிவேக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

*பிற்பகல் 12–05*

இரண்டாவது கட்டமாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கி தற்காலிகக் குடியிருப்புகள் அமைத்து, அதில் தங்க வைத்து, மீண்டும் அவர்களுக்கு தொழில்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் ஆகும். மூன்றாவதாக, அவர்களுக்கு நிரந்தர வீடு கட்டிக்கொடுத்து, தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தல் போன்றவையாக பிரிக்கப்பட்டன. முதற்கட்ட நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் ரூ.4,000 பணமும், 60 கிலோ எடைகொண்ட ஒரு மூட்டை அரிசியும், வேட்டி, புடவை, இரண்டு போர்வை, 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. சுனாமி அலைகளால் உப்பு நீர் புகுந்து விவசாயம் பாதிக்கப்பட்டு, அவர்களது நிலங்கள் முற்றிலுமாக அழிந்துபோனவர்களுக்கு, ரூ.2,000 பணமும், 1 மூட்டை அரிசி, வேட்டி, சேலை, போர்வை இரண்டு, 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றையும் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளது என்றைக்கும் மறக்க முடியாததாகும்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தில் எத்தனை நபர்கள் இறந்தாலும், ஒரு நபருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதமும், ஒரே குடும்பத்தில் தாய், தந்தை இருவரும் இறந்து அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு, ரூபாய் ஐந்து இலட்சம் நிவாரணமாகவும், மேலும் தாய், தந்தை இருவருமே இறந்துபோய் திருமண வயதில் உள்ள பெண்களுக்கு ரூபாய் 3 இலட்சமும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். 30–12–2004–க்குள்ளாகவே, மின்சாரம், குடிநீர் வசதி, சாலை வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டன. மேலும், 1–1–2005–க்குள்ளாக இறந்துபோன அனைத்து உடல்களும் முற்றிலுமாகக் கண்டுபிடிக்கப்பட்டு எரிக்கவோ அல்லது புதைக்கவோ ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு உதவியாக தமிழகக் காவல் துறையினர், தீயணைப்புத் துறை மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டுதான் அனைத்து உடல்களும் அகற்றப்பட்டன என்பதை நெகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பணிகள் அனைத்துமே போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்கப்பட்டன. போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்றன என்பதை நாம் பத்திரிகை வாயிலாகவும், வானொலி வாயிலாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் அறிந்திருக்கிறோம். என்னைப்போன்ற சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் கண்கூடாகக் காண முடிந்தது. உதாரணமாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர், ஒரு மாவட்ட வருவாய் அலுவலர், ஒரு காவல் துறை கண்காணிப்பாளர், ஒரு திட்ட அலுவலர், ஒரு நெடுஞ்சாலைத் துறை D.E., ஒரு P.W.D. S.E., ஒரு குடிநீர் வடிகால் வாரிய E.E., மின்சார வாரியத்திற்கு ஒரு S.E., சுகாதாரத் துறைக்கு ஒரு D.D. எனவும், மேலும் அனைத்து துறைகளுக்கும் ஒரு மாவட்ட தலைமை அலுவலர்கள் இருப்பது மரபு. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட எங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 57 கடற்கரை மீனவ கிராமங்களை 11 குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவுக்கு 5 கிராமங்கள் வீதம் ஒதுக்கி, ஒரு குழுவிற்கு அதாவது 5 சிறிய கிராமங்களுக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர், அதாவது ஒரு I.A.S., ஒரு D.R.O., ஒரு R.D.O., ஒரு திட்ட அலுவலர், ஒரு காவல் துறை S.P., ஒரு நெடுஞ்சாலைத் துறை D.E., ஒரு P.W.D. S.E., குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒரு E.E., மின்வாரியத்தில் ஒரு S.E., ஒரு சுகாதாரத் துறை D.D. என 10 தலைமை அலுவலர்களை எங்கள் மாவட்டத்திற்கு அனுப்பியதோடு மட்டுமல்லாமல், அமைச்சர் பெருமக்களில் ஒருவர், ஒரு வாரியத் தலைவர், ஒரு ராஜ்யசபை M.P. என நியமித்து, இந்த ஐந்து சிறிய கிராமங்களுக்கு மட்டும், ஒரு குட்டி தலைமைச் செயலகத்தை உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் நிவாரணம் வழங்கிய பெருமை— குட்டி Secretariat–ஐ நிறுவி திறம்படச் செயலாற்றியதால்தான், ஒரு வார காலத்திற்குள்ளாக பாதிக்கப்பட்ட மீனவர்களை சராசரி வாழ்க்கைக்குத் திருப்பிய இச்செயலுக்குப் பெயர்தான் போர்க்கால அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கை எனப் பெயர்— இப்படிப்பட்ட செயலை திட்டமிட்டு, திறம்பட, விரைவாகச் செய்கின்ற ஆற்றல் என்றைக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகை மாவட்டத்தைப் பொறுத்தவரை சுனாமி தாக்கப்பட்ட பகுதிகளின் இடிபாடுகள் 5-1-2005-க்குள்ளாகவே அகற்றப்பட்டன. அதற்கு உதவியாக 69 J.C.B.-க்கள், 30 Poclain-கள், 64 டிப்பர் லாரிகள், 14 புல்டோசர்கள், 13 கிரேன்கள் பயன்படுத்தியதன் விளைவாக மீட்புப் பணிகளைச் சீரமைக்க முடிந்தது. இப்படி போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டதால்தான் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகள் சுனாமி நிவாரணப் பணிகளுக்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதல்போல், இனி எதிர் காலத்தில் செய்ய வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். சமீபத்தில்கூட, எங்களுடைய நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவரையும், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரையும், இலங்கைக்கு அனுப்புங்கள் என இலங்கை அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கண்ட இருவரையும் இலங்கைக்கு அனுப்பி, இலங்கையின் நிவாரணப் பணிகளை விரைவாக முடிக்க ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் சொல்லி அனுப்பி, அவர்களும் இலங்கைக்குச் சென்று அங்குள்ள நிவாரணக் குழுவினையும், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் விரைவாகவும், சிறப்பாகவும் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு சொல்லி அனுப்பிய ஆலோசனைகளைச் சொல்லி வந்துள்ளனர். இலங்கை அரசும் அதையே பின்பற்றச் சொல்லியிருக்கிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுக்கூர்மைக்கும், ஆளுகைத் திறனுக்கும் சான்றாகும்.

பிற்பகல் 12-10

இறந்துபோன சடலங்களை எரிக்கவும், புதைக்கவும், இடிபாடுகளை அகற்றவும் உதவிய துப்புரவுப் பணியாளர்களுக்குப் பரிசாக மாண்புமிகு அம்மா அவர்கள் தலா ரூபாய் 2,500 வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் மனிதாபிமானத்தைக் காட்டுகிறது. சுனாமி நிவாரணப் பணியில் துப்புரவுப் பணியாளர்கள், காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினரின் செயல்பாட்டை என்றைக்கும் மறக்க முடியாது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் படகோட்டி திரைப்படத்தில் மீனவச் சமுதாய மக்களுக்காகப் பாடிய



"தரைமேல் பிறக்க வைத்தான்
எங்களைத் தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரைமேல் இருக்க வைத்தான்
பெண்களைக் கண்ணீரில் குளிக்க வைத்தான்"

என்ற பாடல் மூலம் மீனவச் சமுதாய மக்களின் வாழ்க்கை நிலை குறித்துப் பாடினார். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ, சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவச் சமுதாய மக்களுக்கு இதுவரை ரூ.902 கோடி அளவுக்கு நிவாரணத் தொகை வழங்கியுள்ளார்கள். மேலும், வள்ளத்திற்கு ரூபாய் 20,000 வீதமும், வலை மற்றும் கட்டுமரத்திற்கு ரூ.10,000 + ரூ.22,000, ஆக 32,000 ரூபாயும் வழங்கியுள்ளார்கள். சிறிய, பெரிய மீன் படகுகளுக்கு 50 ஆயிரம் முதல் 5 இலட்சம் வரை இழப்பீடும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் நடப்பாண்டு வரவு செலவுத் திட்டத்தில் மீனவர்களுக்கு நிரந்தர வீடு கட்டுவதற்கும், ஏனைய கட்டுமானப் பணிகளுக்குமாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், சேதமடைந்த வீடுகளைப் பழுதுபார்க்க 2.5 ஆயிரம் முதல் 7.5 ஆயிரம் ரூபாய் வரை வீட்டின் சேதத்தின் மதிப்பு அளவுக்கு தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட 1.30 இலட்சம் மீனவச் சமுதாய மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு வீடு ஒன்றுக்கு தலா ரூ.1.50 இலட்சம் செலவில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவச் சமுதாய மக்களுக்கு அவர்கள் நிரந்தரமாகத் தொழிலுக்குச் செல்லும் வரை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 வீதமும், ரூபாய் 526 அளவுக்கு குடும்பத்திற்குத் தேவையான மளிகை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக்கொள்வதற்காக பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்கியுள்ளதும் இதுவரை எந்த ஓர் அரசும் செய்யாத சாதனையாகும். சுனாமி நிவாரணத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிடம் ரூபாய் 4,800 கோடி கேட்டார்கள். ஆனால், மத்திய அரசோ இன்று வரை ரூபாய் 617 கோடி மட்டுமே கொடுத்துள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எவரையும் எதிர்பாராமல் சுனாமி நிவாரணத்திற்கு ரூ.902 கோடி செலவிட்டுள்ளதும், ரூபாய் 1,000 கோடி அளவுக்கு புதிய வீடுகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக ஒதுக்கியுள்ளதும் மாண்புமிகு

அம்மா அவர்களின் ஆளுகைத் திறனுக்குச் சான்றாகும். இது போன்ற சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே செய்ய முடியும்.

மேலும், நாட்டில் 5 முறை பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியபோதும், மீனவச் சமுதாய மக்களின் படகுகளுக்கு உபயோகப்படுத்தும் டீசல் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 5.70 பைசா மானியம் வழங்குவதால் படகு வைத்திருக்கும் ஒவ்வொரு மீனவ நண்பனுக்கும் மாதம் ஒன்றுக்கு 1,000 லிட்டர் வழங்கப்படுகிறது. ஒரு வருடத்திற்கு 10,000 லிட்டர் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு டீசல் மானியம் மூலம் கிடைக்கக்கூடிய தொகை மட்டும் ரூபாய் 5,700. ஒரு வருடத்திற்கு சுமார் 57,000 ஆகும். ஒரு மீன் படகுக்கு டீசல் மூலம் மட்டும் ஒரு மீனவ நண்பனுக்குக் கிடைக்கின்ற தொகை ரூபாய் 57,000 ஆகும். மக்களின் நல்விரும்பி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே இதைச் செய்வார்கள் என்பதைக் காட்டுகிறது. மீனவச் சமுதாய மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கண்ட அனைத்தையும் மீனவச் சமுதாய மக்கள் எவரும் கேட்டுச் செய்யவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் மனதில் தோன்றியது, அதனால் செய்தார்கள். ஆனால், சுனாமி நேரமானாலும் சரி, சாதாரண நேரமானாலும் சரி, மீனவச் சமுதாய மக்களுக்குச் சலுகைகளை வழங்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்த்து வாய்கிழிய வக்கணை பேசும் அறிக்கைப் பேர்வழிகள், சுனாமி நேரத்தில் மட்டுமல்ல, இன்று வரை தன் தொகுதி மீனவ மக்களைச் சென்று பார்க்காதவர்கள் எல்லாம், மாண்புமிகு அம்மா அவர்களின் சுனாமி செயல்பாடுகள் குறித்து ஏளனம் பேசி வருகின்றனர். இவற்றையெல்லாம் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். காலம் வரும்போது கண்டிப்பாகத் தீர்ப்பளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி பேரலையின் தாக்குதலால் விலைமதிக்க முடியாத 8,018 உயிர்கள் பலியானது. 1,126 பேர் காணாமல் போனார்கள். அடையாளம் தெரியாத பிணங்களின் எண்ணிக்கை 1,769. ஆடு, மாடுகளின் இறப்பு 17,404. காயம்பட்டவர்கள் 3,446. மொத்தம் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 4.70 இலட்சமாகும். இப்படிப்பட்ட பேரிழப்பு, உயிர் இழப்பு ஏற்பட்டபோதும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் எங்குமே தொற்று நோய் எதுவுமே வராமல் தமிழகத்தைக் காத்திட்ட பெருமைக்குக் காரணம் தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12–15

எங்கள் மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையின் பேரில் தொற்றுநோய் வராமல் தடுக்க 421 டாக்டர்களும், 175 Staff Nurse-களும், 587 Para Medical பணியாளர்களும், ஒரு மருத்துவத் துறை J.D மற்றும் D.D–யின் மேற்பார்வையில் சுகாதாரக் குழுவினர் சிறப்பாகப் பணியாற்றியதன் காரணமாக, அனைத்து நிவாரண முகாம்களிலும், அனைத்து மீனவ கிராமங்களிலும் தினசரி மருத்துவ சிகிச்சை அளித்ததன் காரணமாக தொற்றுநோய் வராமல் காக்க முடிந்தது. அதைப்போலவே பாதிக்கப்பட்ட அனைத்து மீனவ கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கும், கால்நடை மருத்துவ முகாம்களை நடத்தி நோய் வராமல் தடுக்க முடிந்தது. மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து மாட்டுக்கு ஊசி போட்டு முகாமைத் துவக்கி வைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட பணிகளைச் சிறப்பாகச் செய்ததன் காரணமாகவும், பாதிக்கப்பட்ட அனைத்து மீனவச் சமுதாயப் பெருமக்களை சராசரி வாழ்க்கை முறைக்குத் திருப்பி, அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்ததால், அவர்கள் தினசரி மீன்பிடிக்கச் சென்று வருகின்றனர். மேற்கண்ட செயல்களினால்தான் உலக வங்கி, ஆசியன் வளர்ச்சி வங்கி போன்ற வங்கிகளின் நிவாரணக் குழுவினர் பாதிக்கப்பட்ட உலக நாடுகளைச் சுற்றிப் பார்த்து நிவாரணப் பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும், நன்றாகவும் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டுமே எனவும்—(மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் மட்டுமே எனவும்—எதிர்காலத்தில் சுனாமி ஏற்படுமேயானால், நிவாரணத்திற்கு இனி எதிர்வரும் காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசையே பின்பற்ற வேண்டுமெனச் `சொல்லியுள்ளனர். இக்கூற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுத் திறனுக்கும், ஆளுகைத் திறனுக்கும் சான்றாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் "அன்பே வா" திரைப்படத்தில் ஒரு காட்சியில் "மனிதன் ஏழையாக இருக்கலாம். ஆனால், இயந்திரமாக உழைக்க முடியாது" எனச் சொல்வார். ஆனால், நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களோ, தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் நலனுக்காகவும், நாளொன்றுக்கு 20 மணி நேரம், அதாவது காலை 6 மணி முதல்

மறுநாள் அதிகாலை 2.00 மணி வரை கண் துஞ்சாது, இயந்திரமாக உழைப்பது உலக அரசியல் தலைவர்களிலேயே மாண்புமிகு அம்மா ஒருவர் மட்டுமே (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஒருவர் மட்டுமே என்பது நாடறிந்த உண்மை எனச் சொல்லி அம்மா!

காலத்தை வென்றவர் நீங்கள்,
காவியம் ஆனவர் நீங்கள்,
தமிழக மக்களின் குறைகளைத் தீர்த்தவர் நீங்கள்,
தமிழக மீனவ மக்களின் வேதனையைத் தீர்த்தவர் நீங்கள்,
6½ கோடி தமிழ் மக்களின் விழிகளில் நிறைந்தவர் நீங்கள்,
1½ கோடி கழகத் தொண்டர்களின் இதய தெய்வமாக விளங்குபவர் நீங்கள்,
சோதனைகளை சாதனைகளாக்கும் வெற்றித் திருமகள் நீங்கள்,

என்று சொல்லி மானியக் கோரிக்கையை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால கயமையாளர்களின் கண் மூடித்தனமான ஆட்சியினால், நிதியிழந்து, நிம்மதியற்ற வாழ்க்கையினால் மக்கள் நித்தம் நித்தம் வேதனைக் கொடுமையிலே துவண்டது கண்டு மனம் துவண்டுவிடாது துணிவுடன், ஓய்வை மறந்து உறக்கத்தைத் துறந்து, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்று ஒரு நொடியும் வீணின்றி ஓயாமல் உழைத்திட்ட உலகத் தமிழினத்தின் ஒப்பற்றத் தாயே! 1½ கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாம் எங்கள் அன்னையே! நாடு காக்கும் போர்வையிலே கேடு செய்யும் கும்பலை வேரறுத்து விரட்டி வென்ற வீரத்தின் புகழிடமே!

தியாகம் செய்தவரோ பலர் இருக்க மகள், மகன், பேரன் என குடும்ப உயர்வு ஒன்றே உறுதியான கொள்கை என உடும்பைப்போல் பிடித்திருக்கும் சிலரைப் போல் இருந்திடாமல், இயக்கத் தொண்டர்கள், எம்மைப் போன்ற எளியோருக்கும் வாழ்வு தந்து ஏற்றமாக உயர்வு தந்து, இந்நிலத்து மக்களோடு எந்நிலத்து மக்களுமே இதயமுற வாழ்த்தும் வண்ணம் இத்தமிழினத்தை ஆள்பவரே! (மேசையைத் தட்டும் ஒலி)



எங்கள் இதயத்தின் தெய்வம் என எந்நாளும் வாழ்பவரே எங்கள் அம்மா! மீன்வளத் துறையின் நோக்கம், கடற்கரைப் பகுதி மற்றும் உள்நாட்டுப் பகுதியில் உள்ள மீன்வளத்தைப் பெருக்குதலும், அதனைச் சார்ந்துள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துதலும் ஆகும். இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மீனவருக்கென பல்வேறு சமுதாய நலத் திட்டங்களை ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தி வருகின்றது. அந்தத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டும், சென்ற நூற்றாண்டும் ஆழிப் பேரலை என்றோ, சுனாமி என்ற சொல்லையோ கண்டும், கேட்டும் இல்லாத நிலையிலிருந்த தமிழகத்தில், எங்கிருந்தோ வந்த திடீர் தாக்குதலில் உயிரிழந்து, உற்றாரை இழந்து, பெற்றோரை இழந்து, பிள்ளைகளை இழந்து, பொருட்களையும் இழந்து, என அனைத்தையும் இழந்து கண்ணீரோடு நின்ற தம் மக்களைக் காண, அடுத்து ஒரு சுனாமி வரவிருக்கின்றது என்ற அச்சம் ஒலிபரப்பாய் பரப்பிக் கொண்டிருந்தபோதும் தம் மக்களைக் காப்பது ஒன்றே தம் வாழ்வின் தலையாயக் கடமை என்று விரைந்து சென்று (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரண நடவடிக்கைகளை எடுத்து, ஒரு சுனாமி அல்ல, எத்தனை ஆபத்து வந்தாலும் மக்களைக் காத்திட அன்னையாய் நான் இருக்கிறேன் என்று துன்பம் களைந்து, மீனவர் இல்லங்களிலே இன்பத்தைக் கண்டிட்ட ஏழையரின் ஏந்தலே எங்கள் அம்மா, உங்கள் உழைப்பும், துணிவான போக்கும் எல்லைகளைக் கடந்து இருக்கிற அரசுகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு அம்மா.

மாண்புமிகு அம்மா அவர்கள் சுனாமிப் பேரழிவின்போது மீனவப் பெருமக்களுக்கு வழங்கிய நிவாரணம் குறித்து மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்போது எடுத்துக் கூறுவது என் கடமையாகும். சுனாமி ஆழிப் பேரலையின்போது அம்மா அவர்கள் எடுத்த நிவாரண நடவடிக்கைகளை அவைக் குறிப்பிலே எத்தனை தடவை பதிய வைத்தாலும், அதை யாராலும் ஈடு செய்ய முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையிலே ஒன்றை மட்டும் நான் அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். சுனாமிப் பேரழிவின்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யார் ஒருவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்திருந்தாலும் சுனாமி நிவாரண நடவடிக்கைகள் இவ்வளவு துரிதமாக நடைபெற்றிருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி துயரம் நிகழ்ந்த டிசம்பர் 26 மற்றும் டிசம்பர் 27 தேதிகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்னுயிர்களை இழந்த குடும்பத்தினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியும், சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட கடும் சேதத்தை நேரடியாகப் பார்வையிட்டும், துயர்துடைப்புப் பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

சுனாமியால் இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் இறந்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வீடுகளை இழந்த 1,18,350 குடும்பங்களுக்கு தலா ஒரு வேட்டி, ஒரு சேலை, 2 போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்க ஆயிரம் ரூபாயும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாயும், தற்காலிக குடிசை அமைக்க இரண்டாயிரம் ரூபாயும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

இதைப்போல வீடுகள் பாதிக்கப்படாத 1,74,764 பேருக்கு தலா ஒரு வேட்டி, ஒரு சேலை, 2 போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்க ஆயிரம் ரூபாயும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாயும் வழங்க அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

உடைமைகளைப் பாதுகாக்க ஒரு இரும்புப் பெட்டி, சமைக்க ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ், குடிநீர் வைத்துக்கொள்ள ஒரு எவர்சில்வர் குடம் ஆகியவை சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு 14-1-2005 அன்று, பொங்கல் திருநாள் அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி ஆரம்பித்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், மீனவர்கள் உடனடியாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்காக தாயுள்ளத்தோடு, வள்ளத்திற்கு கில்வலை மாற்றியமைக்க வலைக்கு 20,000 ரூபாய் வீதம் 10,000 வலைகளுக்கு 20 கோடி ரூபாயும், கட்டுமரங்களுக்கு கில்வலை மாற்றியமைக்க தலா 10,000 ரூபாய் வீதம் 20,000 கட்டுமரங்களுக்கு 20 கோடி ரூபாயும், வள்ளம் சரி செய்யவும் அல்லது மாற்றி அமைக்கவும் 15,000 ரூபாய் வீதம் 10,000 படகுகளுக்கு 15 கோடி ரூபாயும், கட்டுமரம் சரிசெய்ய அல்லது மாற்றியமைக்க தலா 5,000 ரூபாய் வீதம் ரூபாய் 10 கோடியும், படகுகளில் பொருத்தப்பட்டிருந்த பாதிப்படைந்த இயந்திரம் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் 1,560 இயந்திரங்களுக்கு 78 இலட்சம் ரூபாயும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

13 கடலோர மாவட்டங்களில் வீடுகளை இழந்து பாதுகாப்பு மையங்களில் வாழும் ஒரு இலட்சம் குடும்பங்களில், 50,000 குடும்பங்களுக்கு அரசும், 50,000 குடும்பங்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் தற்காலிக இருப்பிடங்கள் கட்டித்தர முடிவு செய்து, அரசு 50,000 குடும்பங்களுக்கு தற்காலிக இருப்பு வீடுகள் கட்டித்தர ஒரு தற்காலிக இருப்பிடத்திற்கு ரூபாய் 8,000 வீதம் ரூபாய் 40 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி ஆழிப் பேரலையால் அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோருக்கு, அவர்களது எதிர்கால நலன் கருதி அவர்கள் ஒவ்வொருவர் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய்க்கான வைப்பீடு ஏற்படுத்த, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத அனாதைகள் ஆகிவிட்ட பெண்களுக்கு, தலா 3 இலட்சம் ரூபாய் அவர்களது பெயரில் வைப்பீடு ஏற்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீண்டும் அவர்தம் தொழிலை நன்முறையில் தொடங்கிச் செய்யும்வண்ணம், மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு, முழுவதும் சேதமடைந்த 26,943 கட்டுமரங்களை மாற்றியமைக்க, ஒரு இனத்திற்கு 32,000 ரூபாய் மானியம் வீதம், மொத்தம் 141.45 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும்.

முழுவதும் சேதமடைந்த 4,440 கண்ணாடி இழைக் கட்டுமரங்களை மாற்றியமைக்க, இனம் ஒன்றுக்கு 75,000 ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 23.31 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், பழுதடைந்த 1,775 விசைப் படகுகளைச் சரிசெய்ய, இனம் ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 53.25 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், முழுவதும் பாதிப்படைந்த 2,655 விசைப் படகுகளுக்கு இனம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 132.75 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், 4,147 கட்டுமரங்களுக்குக் கூடுதலாக, செலவினமாக இனம் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் நிதி உதவியாக 2.07 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வில் மீண்டும் மறுமலர்ச்சியை உருவாக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் 395.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி கருணை உள்ளத்தோடு வழங்கினார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமிப் பேரலையால் ஏற்பட்ட துயரத்தினால் பாதிப்படைந்த குடும்பத்தினருக்கு, இன்னும் அவர்கள் வாழ்வாதாரங்களை நடத்த காலதாமதம் ஆகும் என்ற நிலையில், சமையல் பொருட்கள் உட்பட 1,000 ரூபாய் பணத்துடன், ஒரு குடும்பத்திற்கு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1,526 ரூபாய் வீதம் மொத்தம் 122 கோடி ரூபாய் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி தாக்குதலால் பாதிப்புக்குள்ளான மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி மையங்களைப் பழுதுபார்த்தல், நதி முகத்துவாரங்களில் தூர்வாருதல் போன்ற வகையில் மீன்பிடித் தொழிலை மீண்டும் மேற்கொள்ள ஏதுவாக, நடவடிக்கை மேற்கொள்வதற்கென 9.94 கோடி ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி நிவாரண நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துரிதமாக எடுத்ததைக் கவனித்த இலங்கை அரசு, அங்குள்ள நிவாரணப் பணிகளைப் பற்றி ஆலோசனை மேற்கொள்ள, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோரிக்கை வைத்ததன் பேரில், தமிழக அரசின் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருவரை மாண்புமிகு அம்மா அவர்கள் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்து, ஆலோசனை கொடுத்துள்ளதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாய்மால வார்த்தைகளைப் பேசி, உண்மைக்குப் புறம்பான சொற்களை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, மக்களை ஏமாற்றி அரசியல் நடத்தும் சிலர், மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தவுடன், வாக்களித்து டெல்லிக்கு அனுப்பிய அந்த மக்களுக்கு மரியாதை செய்வதைவிட, தாங்கொணா வகையில் பெட்ரோல், டீசலுக்கு விலையை உயர்த்தினார்கள். அப்படி உயர்த்தப்பட்ட விலையினால், டீசல் விலை உயர்ந்து, மீன்பிடித் தொழிலைச் செய்த மீனவக் குடும்பங்கள் கண்ணீரோடு நிற்கக்கூடிய நிலை வந்துவிடுமோ என்பதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரிக்கை வைத்தாலும், கொடுக்க மனமில்லாத தலைவர் இருக்கின்ற இந்தக் காலத்தில், மீனவப் பெருமக்கள் கோரிக்கை வைக்காமலே, டீசலுக்கு உள்ள விற்பனை வரியை இரத்து செய்து, மத்திய அரசு உயர்த்திய (மேசையைத் தட்டும் ஒலி) விலையினால் மீனவர்களுக்குச் சுமை ஏற்படாமல், இந்தச் சுமையை அரசே ஏற்றுக்கொள்ளும் வகையில் விற்பனை வரியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்துள்ளார்கள். இதைக்கூட சில பேர் கேட்கலாம். மீனவப் பிரதிநிதிகள்தான் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டார்களே என்று சொல்லலாம். மீனவப் பிரதிநிதிகள் விற்பனை வரியில் 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் குறைத்தால் போதும் என்று நினைத்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு விற்பனை வரி முழுவதையும் குறைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, இன்றைய நிலையில் 1 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி 5 ரூபாய் 70 காசுகளை இரத்து செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 50 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரி மூலம் கிடைக்கக் கூடிய வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதனால் சுமார் 5,000 விசைப் படகுகள் மற்றும் 15,200 நாட்டுப் படகுகளை உபயோகித்து மீன்பிடித் தொழில் செய்யும் மீனவக் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

பிற்பகல் 12–30

அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில், ஒரு வருடத்திற்கு விசைப் படகுகளுக்கு மட்டும் 50,000 கிலோ லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி தள்ளுபடி செய்துள்ளார்கள். ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கர்நாடகத்தைப் போன்று விசைப் படகுகளுக்கு மட்டும் 50,000 கிலோ லிட்டர் டீசல்

விற்பனை வரி தள்ளுபடி செய்யாமல், நாட்டுப் படகுகளுக்கும் 45,600 கிலோ லிட்டர் டீசலுக்கு விற்பனை வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்துள்ளார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியிலே, ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ. 1.75 விற்பனை வரி தள்ளுபடி செய்துள்ளது. அண்டை மாநிலமாக இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே, ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ. 4.08 பைசா மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்த அளவிலே மொத்தமாக விற்பனை வரியைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள் என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், உழைக்கின்ற மக்களுக்கும், என்றென்றும் உறுதுணையாக இருக்கின்ற இயக்கம்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அதன் அடிப்படையில்தான், புரட்சித் தலைவர் அவர்களுக்கு அன்பும், ஆதரவும் காட்டிய மீனவச் சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக 1982–ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், மீனவர் மீன்பிடிக்கச் செல்லாத காலத்தில், முதல் முறையாக சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கி உள்ளம் மகிழ்ந்தார்கள். அதற்குப் பின்னால் வந்த ஆட்சியாளர்களால் கண்டுகொள்ளப்படாதிருந்த நிலையில், அந்த மீனவர் சமுதாயம் மேம்பாடு அடைவதற்கு கருணை உள்ளத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்களும் நலமோடு இருந்தால்தான், எதிர்கால சமுதாயம் நன்றாக இருக்கும் என்பதை உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவப் பெண்கள் இத்திட்டத்தில் பயனடைய வகை செய்துள்ளார்கள்.

*2003–2004* ஆம் ஆண்டில் *42,992* மீனவ மகளிர் பயன்பெற்றனர். பின்பு, மத்திய அரசு விதித்த முழுநேர கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவ மகளிருக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும் என்ற நிலையில் *25,307* மீனவ மகளிர் மட்டும்தான் பயன்பெற முடிந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே பயன்பெற்று, நடப்பு ஆண்டில் விடுபட்ட *24,069* மீனவ மகளிரும் பயன்பெறும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசே பொறுப்பேற்று இத்திட்டத்தினைச் செயல்படுத்த வகை செய்தார்கள். ஏன் இதை குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் *1982*–ல் ஆண்களுக்கென்று, மீனவ ஆண்களுக்கென்று,



சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள், *2003*–லே மீனவ மகளிருக்கு இத்திட்டத்தை முதன்முதலாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான் மீனவர் நலன் காக்கும் அரசு என்பது இதன் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள், குறிப்பாக இராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மாவட்ட மீனவர்கள் தமிழக கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும்போது, சில தருணங்களில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, இலங்கையில் காவலில் வைக்கப்படுகின்றனர். அவ்வாறான நிகழ்வுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சிகளின் காரணமாக, மீனவர்கள் இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தமிழகத்திற்கு உடனுக்குடன் அழைத்து வரப்படுகின்றனர்.

*முற்பகல் 12–35*

*24–11–2004* ஆம் தேதியில் தமிழக மீனவர்கள் *12* பேர் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இவர்களும் இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். இறுதியாக, *18–2–2005* அன்று இலங்கையில் காவலில் இருந்த *10* மீனவர்கள் விடுவிக்கப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர். அதன்படி, கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர் எவரும் இலங்கையில் நாளது தேதியில் சிறையில் இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்து விடுதலையாக *5* அல்லது *6* மாதங்களுக்கு மேல் ஆகும். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் உடனுக்குடன் மத்திய அரசையும், இலங்கைத் தூதரகத்தையும் முறையான வழியில் தொடர்பு கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) உடனடி நடவடிக்கை

எடுத்து மீனவர்களை உடனுக்குடன் விடுவிக்கச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பங்களாதேஷிலிருந்து தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்ட விவரம். கடந்த 26-7-2004 அன்று சென்னை, இராயபுரம் திருமதி ஜி. நிர்மலா, கணவர் பெயர் திரு. ஆர். குணதாசன் என்பவருக்குச் சொந்தமான எம்.டி.எஸ். 967 என்ற விசைப்படகில் சென்னை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆறு தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். இவர்கள் சென்ற படகு காணாமல் போனதாக 9-8-2004 அன்று தகவல் கிடைத்ததன் பேரில், தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் படகுடன் வங்காள தேசத்தில் கரை ஒதுங்கி, பின்னர் அங்கே கைது செய்யப்பட்டு "காக்ஸ்பஜார்" என்ற இடத்தில் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்றது. இவர்களை விடுவித்து தமிழகத்திற்கு அனுப்பி வைக்க, 21-3-2005 நாளிட்ட நேர்முகக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் வங்காள தேசத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவித்துள்ளதாக 29-3-2005 தேதியில் (மேசையைத் தட்டும் ஒலி) வங்காள தேசத்து இந்திய தூதரகத்திலிருந்து பெறப்பட்ட செய்தியை இந்த நேரத்தில் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மீனவர்களைப் பாதுகாக்க, உயிர்காப்புக் கவச உடைகள் வழங்குவது அத்தியாவசியமாகிறது. பாரம்பரிய மீனவர்களுக்கு முதன்முறையாக 10,000 உயிர்காப்புக் கவச உடைகள் 90 விழுக்காடு மானியத்தில் வழங்க ரூபாய் 90 இலட்சத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். நடப்பு நிதியாண்டில் இந்த உயிர்காப்புக் கவச உடைகள் கொள்முதல் செய்யப்பட்டு மீனவர்களுக்கு விநியோகிக்கப்படும். மீனவர்களின் உயிர்பாதுகாப்பின் அவசியம் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 100 விழுக்காடு மானிய விலையில் உயிர்காப்புக் கவச உடைகள் மீனவர்களுக்கு வழங்க வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி. வாழும்போது வாழ்த்துப் பாடுவதும், மறைந்த பின்னால் மறந்து போவதும்தான் சிலருக்கு பிறவிக்குணமாக இருக்கின்ற இந்தக் காலத்தில், வாழும்போதும் வாரி வழங்கி மீனவச் சமுதாயத்தைக் காத்திடும் மாண்புமிகு அம்மா அவர்கள், அம்மீனவச் சமுதாயத்தில் இறந்த பின்னரும் அவர்களது இறுதிச் சடங்குகளை எந்தச் சிரமமுமின்றி நடத்துகிற அடிப்படையில் தாயுள்ளத்தோடு, தமிழகத்தை இதுவரை ஆட்சி செய்தவர்கள் யாருக்கும் இல்லாத உணர்வோடு, மீனவர்கள் இறந்தால், அவர்கள் ஈமச்சடங்கிற்கு ரூபாய் 500 வழங்க 2004 ஆம் ஆண்டு முதல் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இதுவரைக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமே ஈமச்சடங்கிற்கான பணம் வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் மீனவர்களுக்கென்று ஈமச்சடங்கிற்கான பணம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்திடும்பொருட்டும், பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், மாநிலங்களுக்கான ஏற்றுமதி உட்கட்டமைப்பு மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கான உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ்-ASIDE—ரூபாய் 12.42 கோடியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒப்பளித்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவ மக்களுக்கு ஒரு இனிப்பான செய்தியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குக் கடற்கரை 68 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தக் கடற்கரைப் பகுதியில் மீன்பிடி விசைப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வசதி எதுவும் இல்லை. இதனால் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கேரளாவில் கொல்லம் பகுதியில் தங்கி மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொள்ளும் நிலை உள்ளது.

இதனால் சில சமயங்களில் தமிழக மீனவர்களை, கேரள மீனவர்கள் தாக்கி பொருட்சேதம் ஏற்படுவதுடன், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தாயுள்ளத்தோடு மீனவர்களின் நலன் கருதி மேற்குக் கடற்கரை முட்டம் பகுதியில் தனியார் முதலீட்டில் BOOT திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது என்று கொள்கை முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக மக்கள் எண்ணங்களை ஈடேற்றுகின்ற அரசுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையினுடைய மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். எனது பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி அளிக்கும் எனக் கருதுகிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளையும், கருத்துகளையும் கவனத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையைப் பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்று, மீன்வளத் துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

பிறரால் செய்ய முடியாத செயற்கரிய செயல்களைப் பெருமை உடையவர்கள் திறம்படச் செய்துவிடுவார்கள் என்ற குறள்நெறிக்கேற்ப தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல



புரிந்துவருவதுபோல், பால் வளத் துறையிலும் கொள்முதல், விற்பனை மற்றும் இலாபம் ஈட்டுவதில் வரலாறு காணாத அளவிற்கு சாதனைகள் பல நிகழ்த்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்று திருவள்ளுவர் கூறியதுபோல, முந்தைய ஆட்சியாளர்கள் செய்யக் கூடாதவற்றைச் செய்தும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாமலிருந்தும், தமிழக மக்களுக்கு தீங்கு இழைத்தார்கள். 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திறமையற்ற நிருவாகம், திசைதெரியாத வியாபார முடிவுகள் எடுத்து நட்டத்தை ஏற்படுத்தியதன் விளைவாக, பால் உற்பத்தியாளர்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார்கள். பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பால் முழுவதையும் கொள்முதல் செய்யாமலும், கொள்முதல் செய்த பாலுக்கு பணம் கொடுக்காமலும், பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குத் தர வேண்டிய 94 கோடி ரூபாயைப் பட்டுவாடா செய்யாமலும், நிலுவை வைத்ததுடன், உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய பால் பணப் பட்டுவாடா நிலுவையாக 35 கோடி ரூபாய் என்ற அளவில் விட்டுச் சென்றார்கள். அந்த நிலையில் பொறுப்பேற்றுக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 65 கோடி ரூபாயை வழங்கி, பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப் பட்டுவாடா முழுவதையும் வழங்கியதுடன், தொடர்ந்து நிலுவையின்றி பணப் பட்டுவாடா செய்யப்பட்டு வரும் ஒரு நல்ல சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப, செலவும், இழப்பும் பெருகாமல் இருந்தாலே எந்த ஒரு துறையும் வளர்ச்சி காணும். வீண் செலவு, இழப்பு, தவறு இழைத்தல் ஆகியவற்றால் நேர்ந்த பொருள் இழப்பைப் போக்கிவிட்டு, பால் உற்பத்தியாளர்கள் நலம் பெறவும், வளம் பெறவும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனாக, தற்போது அடைந்துள்ள சிறப்பு

நிலையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்து பால் பணப் பட்டுவாடா நிலுவையின்றி வழங்கப்பட்ட காரணத்தினால் நாளொன்றுக்கு 20 இலட்சத்து 60 ஆயிரமாக இருந்த சங்கங்களின் பால் கொள்முதல் 23 இலட்சத்து 76 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதாவது, நாளொன்றுக்கு சுமார் 3 இலட்சத்து 16 ஆயிரம் லிட்டர் கூடுதலாக கொள்முதல் செய்து அம்மாவினுடைய அரசு சாதனையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்ற நல்ல தகவலை இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

அதேபோல, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 13,198 டன் பால் பவுடர் 87 கோடி ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. அதாவது, ஆண்டொன்றுக்கு 2,639 டன் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, 4 ஆண்டுகளில் 39,189 டன் பால் பவுடரை 277 கோடி ரூபாய் மதிப்பில் விற்பனை செய்து, இந்தப் பவுடர் விற்பனையில் மட்டும் 19 கோடி ரூபாய் கூடுதல் இலாபம் ஈட்டி அம்மா அவர்களுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 16,847 டன் நெய் 168 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி எடுத்த பொருத்தமான நடவடிக்கைகளின் காரணமாக 4 ஆண்டுகளில் 23,468 டன் நெய் அதிகப்படியாக உற்பத்தி செய்து விற்கப்பட்டதால் 249 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்த வகையில் 15 கோடி ரூபாய் அதிக இலாபம் ஈட்டி சாதனை படைத்திருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

அதைப்போலவே வெண்ணெய் உற்பத்தியிலும் 7 கோடியே 26 இலட்சம் ரூபாய் அதிக இலாபம் 4 ஆண்டுகளில் ஈட்டப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, முந்தைய ஆட்சியில் சென்னை நகரில் இயங்கிவரும் ஆவின் பாலகங்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மூலமாக பால் உப பொருட்கள் 124 கோடி ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் 4 ஆண்டுகளில் 156 கோடி ரூபாய்க்கு பால் உப பொருட்கள் அதிகப்படியாக விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்



தட்டும் ஒலி) இந்த வகையில் பால் பவுடர், நெய் மற்றும் வெண்ணெய் ஆகியவற்றை இந்த 4 ஆண்டுகளில் அதிகப்படியாக உற்பத்தி செய்து நல்ல விலைக்கு விற்ற காரணத்தால் 40 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டி இதுவரை இல்லாத அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல ஆவின். சென்னை ஆவின் போக்குவரத்துப் பிரிவு வாகனங்கள் கடந்த தி.மு.க. ஆட்சியில் சரிவர பராமரிக்கப்படாமல் இருந்ததாலும், பணியாளர்களுடைய ஒத்துழைப்பைப் பெறாததாலும் 1 லிட்டர் டீசலில் 3.9 கி.மீ. தூரம் மட்டுமே ஓடின. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் மிகத் திறமையான நிர்வாகத்தில் அதே வாகனங்கள் 1 லிட்டர் டீசலுக்கு 4.4 கி.மீ. என்ற அளவில் இயக்கப்படுவதன் மூலம் வருடம் ஒன்றுக்கு 63 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் ஆவின் நிறுவனங்கள் சேமித்துள்ளன என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைக்கு பால் கொண்டுவரும் வாகனங்களுக்கான டெண்டர் விதிமுறைகளில் கடந்த ஆட்சிக் காலத்திலிருந்த நடைமுறையை மாற்றி டெண்டர் நடத்தியதன் மூலம் மட்டும் ஆண்டிற்கு 28 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் ஆவின் நிறுவனங்கள் சேமித்துள்ளன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல சென்னையிலுள்ள பால் விநியோக வழித்தடங்கள் மறுசீரமைக்கப்பட்டதன் மூலமாக இணையம் ஆண்டுக்கு 54 இலட்சம் ரூபாய் சேமித்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆவின் போக்குவரத்துப் பிரிவில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னால் அந்த பால் வழித்தடங்களை மறு சீரமைப்பது, அதிலே எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைகள் மூலமாக மட்டும் ஆண்டொன்றுக்கு 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது என்பதைப் பணிவோடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கூட்டுறவு அமைப்புகளின் மூலம் அதிகப்படியாக பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் குஜராத் மாநிலம் நாளொன்றுக்கு 54 இலட்சம் லிட்டரும், கர்நாடகம் 26 இலட்சம் லிட்டரும், மகாராஷ்டிரா 25 இலட்சம் லிட்டரும், தமிழகம், சங்கங்கள் அளவில் 24 இலட்சம் லிட்டரும் கொள்முதல் செய்து வருகிறது. குஜராத்

10 ரூபாய 23 பைசாவும், கர்நாடகா 8 ரூபாய் 41 பைசாவும், மகாராஷ்டிரா 8 ரூபாய் 38 பைசாவும் பால் கொள்முதல் விலையாக வழங்குகின்றன. ஆனால், 'பயிர் போன்றார் உழவர்க்கு, பால் போன்றார் குழந்தைகட்கு, தாய் போன்றார் ஏழையர்க்கு' என்ற புரட்சிக் கவிஞரின் கவிதைக்கு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பால் உற்பத்தித் தொழிலில் அதிகமாக ஈடுபட்டுவரும் கிராமப்புற மக்களின் நலனில் அக்கறை கொண்டு, எல்லையில்லாத பரிவு காட்டி அதிக அளவில் பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் 10 ரூபாய் 50 பைசா என்ற உயர்ந்தபட்ச கொள்முதல் விலையை வழங்கும்—மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள—ஒரே மாநிலம், தமிழகம் என்பதை நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு ரூபாய் விலை உயர்வின் மூலமாக பால் உற்பத்தியாளர்கள் பெறுகிற பயனை இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமை. நாள் ஒன்றுக்கு 23 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாயும், மாதம் ஒன்றுக்கு 7 கோடியே 16 இலட்சம் ரூபாயும், ஆண்டொன்றுக்கு 85 கோடியே 90 இலட்சம் ரூபாயும் கூடுதலாகப் பெறுவதன் மூலம், தினசரி 5 லிட்டர் பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுடைய தனி நபர் ஆண்டு வருமானம் 1,800 ரூபாய் உயர்ந்துள்ளது என்ற தகவலையும் இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த டிசம்பர் 26 ஆம் தேதி தெற்கு ஆசியாவே சுனாமிப் பேரலையால் தாக்கப்பட்டு பேரழிவுக்கு உள்ளாகியபோது இந்தியாவில் தமிழகக் கடலோரப் பகுதிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகிய நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில், சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3 இலட்சத்து 62 ஆயிரம் லிட்டர் பால் பவுடர், Tetra milk முதலியனவும் பச்சிளம் குழந்தைகளுக்கு 3,122 பால் புட்டிகளும் வழங்கப்பட்டன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி' என்று அனைத்துத் துறைகளிலும் முதலிடம் நோக்கிச் செயலாற்றுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பால் வளத் துறை பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. அவற்றில் சிலவற்றை இம்மாமன்றத்தின்முன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். பால் வளத் துறை வரலாற்றில் இதுவரை மிக அதிகபட்சமாக பால் கொள்முதல், நாள் ஒன்றுக்கு 24 இலட்சம் லிட்டர் என்ற உன்னத நிலையை அடைந்திருப்பது இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)



தனியார்கள் போட்டியின்றி ஆவின் மட்டுமே பால் விற்பனை செய்துகொண்டிருந்த காலகட்டத்தில் தினந்தோறும் அதிகபட்சமாக 14 இலட்சத்து 66 ஆயிரம் லிட்டர் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. தற்போது தனியார் நிறுவனங்களின் கடும் போட்டிக்கு இடையிலும், நாள் ஒன்றுக்கு 18 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து சாதனை படைத்திருப்பதும் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பால் பவுடர் விற்பனை ஆண்டுக்கு சராசரியாக 2,639 மெட்ரிக் டன் மட்டுமே. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 12,000 மெட்ரிக் டன் பால் பவுடர் விற்பனை செய்து சாதனை படைத்திருப்பதும் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய பால் வள வாரிய ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளடக்கிய தென்மாநிலங்களில் உள்ள 45 மாவட்ட ஒன்றியங்களில் காஞ்சிபுரம், திருவள்ளூர் ஒன்றியங்கள் பால் விற்பனையில் முதல் இடத்தைப் பெற்றிருப்பதும் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அளவிலே மெட்ரோபாலிடன் நகரங்களில் உள்ள 12 பால் பண்ணைகளில், சென்னை ஆவின் பால், விற்பனையில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பதும் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த பால் பொருட்களைத் தயாரித்து, பல்வேறு நாடுகளின் கடும் போட்டிக்கு இடையே மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளுக்கு Tetra pack, பால் பவுடர் மற்றும் நெய் ஏற்றுமதி செய்திருப்பதும் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

நாள்தோறும் திருப்பதிக்கு வரும் இலட்சக்கணக்கான பக்தர்கள் பெற்றுச் செல்லும் லட்டு தயாரித்திட தேவையான தரமான நெய்யை வழங்கிட பல்வேறு மாநில இணையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கடுமையாகப் போட்டி போட்ட வேளையிலும், சரியான வியாபார யுக்தியால் திருப்பதிக்கு 2,000 டன் நெய் விற்பனை செய்திருப்பதும் ஆவின் வரலாற்றில் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர் குளிர்ச்சி நிலையிலேயே சென்னை நுகர்வோர்களுக்குப் பால் பாக்கெட்டுகள் வழங்கிட 65 insulated வாகனங்கள் பயன்படுத்தப்படுவதும் ஆவின் வரலாற்றில் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 38,000 பணியாளர்களுக்கு சுமார் 2 கோடியே 85 இலட்சம் ரூபாயில் சீருடை வழங்கப்பட்டிருப்பதும் ஆவின் வரலாற்றில் இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

புது டெல்லியில் உள்ள Mother Dairy -க்கு இரயில் மூலம் 84 இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்திருப்பதும் ஆவின் வரலாற்றில் இதுவே முதல் முறை. தொலைநோக்குப் பார்வையுடன் பொருத்தமான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கும் ஆற்றலும், எண்ணியபடி தெளிந்து செய்யக்கூடிய துணிவும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நிகழ்த்தப்பட்ட இத்தகைய முதல் முறை சாதனைகளால் தமிழக பால் வளத் துறை இந்திய அளவில் மிகப் பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் பால் உற்பத்தியாளர்கள் பட்ட கஷ்டங்கள் அதிகம். உற்பத்தி செய்த பால் முழுவதும் கொள்முதல் செய்யப்படவில்லை. கொள்முதல் செய்த பாலுக்கு உரிய பணமும் தரப்படவில்லை. பால் பொருட்கள் விற்பனையில் உரிய கவனத்தைச் செலுத்தாத திரு. கருணாநிதியினுடைய திறமையற்ற, தவறான நிர்வாகத்தால் ஆவின் நிறுவனம் அடைந்த நஷ்டம் மட்டும் 131 கோடி ரூபாய் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இங்கே திரு. அப்பாவு அவர்கள் குறிப்பிட்டார்கள், அதே அதிகாரிகள் மிகத் திறமையாகச் செயலாற்றுகிறார்கள் என்று. அப்படிப்பட்ட நிலையில் கடந்த காலத்திலே இருந்த அதே அதிகாரிகளை மிகச் சரியான வழியிலே வழிகாட்டி, அவர்களுக்கு உரிய நேரத்திலே உரிய உத்தரவுகளை வழங்கி, மிகச் சிறந்த நிர்வாகத்தை நடத்துகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையின்கீழ் அதே உற்பத்தியாளர்கள், அதே நிறுவனம், அதே பணியாளர்கள், அதே தொழிலாளர்களைக் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைசிறந்த நிர்வாகத்தால் இன்று பால் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பால் முழுவதும் கொள்முதல் ஆகிறது; உடனுக்குடன் பால் பணம் பட்டுவாடா ஆகிறது. பால் பொருட்கள் அதிகமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, நல்ல



விலைக்கு விற்பனை செய்ததால் 131 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிவந்த ஆவின் நிறுவனம் இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் நிர்வாகத் திறமையால் 22 கோடி ரூபாய் இலாபத்தில் இயங்கி வருகிறது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்திலிருந்த அந்த நிலைமையை மாற்றி, இந்த 4 ஆண்டுகளில் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதே அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் இன்றைக்கும் நிர்வாகம் நடத்தப்படுகிறது. ஆனால், அன்றைக்கு வழிகாட்டியவர், மோசமான நிர்வாகத்திற்குச் சொந்தக்காரர் திரு. கருணாநிதி. இன்றைக்கு வழிகாட்டுபவர் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அம்மா அவர்களால் மட்டும்தான் இந்தத் தமிழகத்தை ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கிடமுடியும் என்பதற்கு பால் வளத் துறையில் நடைபெற்றிருக்கிற இந்த நிகழ்வை ஒரு உதாரணமாக நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–55*

நாட்டின் ஜீவநாடியாக உள்ள உழவர்கள், தொழிலாளர்கள், குறிப்பாகப் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்தி, மாபெரும் புரட்சியைச் செய்து வருபவர் நமது மாண்புமிகு அம்மா அவர்கள். புரட்சி என்ற சொல்லை தமிழில் முதன்முதலில் உருவாக்கியவர் பாரதியார். புரட்சி என்ற அந்தப் புனிதச் சொல்லுக்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு விளங்குபவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மன உறுதியில் சிங்கம் போன்றும், தீமை வராமல் காப்பதில் தாயைப் போலவும், மிகுந்த நூலறிவும், கற்றோர் பாராட்டும் நுண்ணறிவும், சிறந்த ஆளும் திறமையும் நீக்கமறப் பெற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான நன்றியை காணிக்கையாக்கி, வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

2005–2006 ஆம் நிதியாண்டில், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும்பொருட்டு, கீழ்க்காணும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்:

தூய்மையான பால் உற்பத்திக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கிட திருச்சி, சேலம், விழுப்புரம் மற்றும் தருமபுரி

ஆகிய ஒன்றியங்களில் 22,008 பால் உற்பத்தியாளர்களுக்கு தூய்மையான பால் உற்பத்தி குறித்த சிறப்புப் பயிற்சி மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் அளித்திடவும், பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் 36 பால் குளிரூட்டும் இயந்திரங்கள் அமைத்திடவும், 7 பால் பரிசோதனைக் கூடங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், 5 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றியங்களிலிருந்து சென்னையில் உள்ள பால் பண்ணைகளுக்கு பால் கொண்டுவர, 9,000 லிட்டர் கொள்ளளவு உள்ள 10 பால் டேங்கர்கள் 120 இலட்சம் ரூபாய் செலவில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். சென்னையில் பால் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு, 4,500 லிட்டர் கொள்ளளவு உள்ள 4 பால் டேங்கர்கள் 40 இலட்சம் ரூபாய் செலவில் வாங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாதவரம் பால் பண்ணையில் பால் சமச்சீர்படுத்தும் வசதியை அதிகரிக்க 105 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால் சமச்சீர்படுத்தும் இயந்திரம் நிறுவவும், 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு புதிய பால் கொள்கலன் 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவவும், பால் பதனிடும் வசதியை அதிகப்படுத்த மணிக்கு 20 ஆயிரம் லிட்டர் பாலைப் பதனிடும் திறன் உள்ள பால் பதப்படுத்தும் இயந்திரம் ரூ.20 இலட்சம் மதிப்பில் வாங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்பத்தூர் பால் பண்ணையில் 39 இலட்சம் ரூபாய் செலவில், பால் இயந்திரங்களைச் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவவும், 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்பதன அறை விரிவாக்கம் செய்யவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் ரூ.50 இலட்சம் மதிப்பில் குளிரூட்டும் வசதியை மேம்படுத்த ஒரு புதிய உயர்நிலை கம்ப்ரசர் இயந்திரம் வாங்கவும், 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்பதன அறை விரிவாக்கம் செய்யவும், 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு 'மின்னாக்கி' வாங்கவும், 25 இலட்சம் ரூபாய் செலவில் சூரிய சக்தியினால் தண்ணீரை வெப்பப்படுத்தும் அமைப்பினை நிறுவவும், 23 இலட்சம் ரூபாய் செலவில் காற்றழுத்த திறப்பான்கள் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலுள்ள பால் பொருட்கள் பண்ணையில் 20 இலட்சம் ரூபாய் செலவில் தானியங்கி ஐஸ்கிரீம் நிரப்பி மூடியிடும் இயந்திரம்



நிறுவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பல்வேறு அரிய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனமாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு பால் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்போடும், பணிவோடும் கேட்டு உரையை நிறைவு செய்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். தற்சமயம் பால் வளத் துறையிலே பணியாற்றுகின்ற விரிவாக்க உதவியாளர்கள், தங்களை 'விரிவாக்க அலுவலர்கள்' என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை பல ஆண்டுகளாக வைத்திருக்கிறார்கள். Extension Assistants should be renamed as Extension Officers. அந்தப் பெயர் மாற்றத்தினால் எந்த நிதிச் சுமையும் இல்லை. பணி மாறுதலோ, எந்தவிதமான இடர்பாடும் இல்லாத நிலையில், அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு அந்தஸ்து வேண்டும் என்கின்ற நிலையை அமைச்சர் அவர்களது கவனத்திற்கு வைக்க விரும்புகிறார்கள். என் மூலமாக வைக்க வேண்டும் என்கின்ற அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்களுக்கு, நான் இதை ஒரு கோரிக்கையாக வைக்கிறேன். இதிலே அரசுக்கு எந்தவிதமான இழப்பீடும் இல்லையென்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஏற்கெனவே மாண்புமிகு

அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதை மாண்புமிகு அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்த ஒரு நிலையில் மட்டுமல்ல, பல்வேறு நிலையிலே கிட்டத்தட்ட அந்தச் சம்பளத்தை எட்டிவிட்ட அலுவலர்கள், அந்தப் பணிப் பெயர் மாற்றம் தேவை என்கின்ற கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் ஆய்விலே இருக்கிறது. அதை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுத்து, அதற்குத் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, அவர்களின் நல்லாசியுடன், எனது உரையைத் தொடங்குகிறேன்.

"கோமாதா எங்கள் குலமாதா,
குலமாதர் நலன்காக்கும் எங்கள் கோமாதா"

என்று ஒரு பாடல் உண்டு.

கால்நடைகளில் செல்வமாகக் கருதப்படுவது—கோமாதாதான். கணக்கற்ற மக்களின் வாழ்க்கைப் பாதையைச் சுணக்கமில்லாமல் கொண்டு செல்லும். எத்தனை சோதனைகள் வந்தாலும், அத்தனையையும் சுக்குநூறாக்கிவிட்டு, ராஜ தர்பாரில் வெற்றி நடைபோட்டு அம்மா போல் அன்பு கொள்ளும். காலமெனும் சுழற்சியில், கால்நடைகளின் சிறப்பான வளர்ச்சி—எங்கள் அம்மா ஆட்சி.

கால்நடை வளர்ப்போரெல்லாம் காண்பது, காசு பணத்தைத்தான். வான் மழை கானல் நீரானபோதும், ஏழைகளுக்கு உணவளித்தது கால்நடைகள்தான். கால்நடைகளை எப்போதும் நம்பலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடையாக பயணம் செய்பவர்களை நம்பக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எங்கள் அம்மா, ஜெகத்தை ஆளவந்த மகத்தின் மாதரசியே! விருதுகள் பல பெற்று இச்சபையில் வீற்றிருக்கும் வீரத் தாயே!

சிலிர்த்துவரும் சிங்கத்தைக்கூட தாள் பணியவைக்கும் சிம்ம ராசிக்காரரே! பகையால் சீறிவரும் காளையைக்கூட தலைவணங்க வைக்கும் தங்கத் தலைவியே!



பரிபோல வேகத்திலும், பாரிபோல வள்ளலிலும், தமிழகத்தை இட்டுச் செல்லும் தங்கத் தாரகையே! பரிவோடு கால்நடைகளை பக்குவமாக காத்துவரும் கருணைத் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்கள், அஞ்சாத நெஞ்சம் கொண்டு, அயராத உழைப்பும் கொண்டு, மிஞ்சிவரும் புலியைக் கூட மிதித்துக் கொல்லும் துணிவும் உண்டு. கள்ளமில்லா நெஞ்சமொடு கண்டு வணங்கும் தொண்டர்களின் உளமறிந்து உதவுகின்ற உத்தமத் தாய்; எங்கள் தாயின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது பதில் உரையைத் தொடங்குகிறேன்.

பச்சார்பாளையம் என்னும் பட்டிக்காட்டில் பிறந்த நான் ஆற்றும் உரையில் பிழையேதும் இருந்தால் மன்னித்தருள வேண்டுகிறேன் தாயே!

தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் இந்த நல்லாட்சியில், தமிழகத்திலுள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதியை அளித்து தரத்தினை அதிகரித்து, உற்பத்தித் திறனையும், கால்நடை வளர்க்கும் வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்து, எல்லோரும் வளம் பெற்று வாழ, அரிய பல திட்டங்கள் தீட்டி, கால்நடை பராமரிப்புத் துறையானது பாரதத்திலேயே முதன்மையானது என சுட்டுவிரல் காட்டிச் சொல்லும் அளவிற்கு சுடர்விட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது எவ்வளவு முக்கியமோ, அதைப்போல கால்நடை கணக்கெடுப்பும் முக்கியம் எனக் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, 17-வது கால்நடை கணக்கெடுப்பினை 8 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தி, அந்தப் பணி செவ்வனே செய்து முடிக்கப்பட்டது என்பதையும், இதன் சிறப்பு அம்சங்களையும் இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விளக்கமாக அல்ல, நேரத்தின் அருமை கருதி சுருக்கமாக. அதே நேரத்தில், கடந்த கால ஆட்சியில் இருந்த நிலை மாறி, இப்பொழுது கால்நடை வளர்ச்சியில் இமாலய சாதனையைப் படைத்துள்ளோம்.

தமிழ்நாட்டில் மொத்தம் 250 இலட்சம் கால்நடைகள் மற்றும் 866 இலட்சம் கோழிகள் உள்ளன. 1997 ஆம் ஆண்டில் 29 சதவீதமாக இருந்த கலப்பினப் பசுக்களின் எண்ணிக்கை 63 சதவீதமாகவும், 64 இலட்சமாக இருந்த வெள்ளாடுகள் தற்போது 82 இலட்சமாகவும், செம்மறியாடுகள் 53 இலட்சத்திலிருந்து 56 இலட்சமாகவும், 365 இலட்சமாக இருந்த கோழிகள், தற்போது 866 இலட்சமாகவும் அதிகரித்துள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் 1–05

''உண்ண உணவில்லாமல், உடுக்க உடையில்லாமல், இருக்க இடமில்லாமல்'' தவித்த மக்களுக்கு காவல் தெய்வமாக எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருந்து வருகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக,

"கடல் தாயே, கடல் தாயே,
நீ கரையேறி ஏன் வந்தாய் ஆழிப்பேரலையாக!
நீ செய்த பாவத்திற்கு,
எங்கள் தாய் பரிகாரம் செய்தார்கள்.
கன்று போல் கதறிவந்த மக்கள் துன்பம்
களைவதுதான் என் பணி என்று,
அன்றே நிவாரணப் பணிகளைச் செய்தார்–நன்று
நன்றே என பார்போற்றும் வண்ணம்
இடர்பல கண்டும் சரியாத குணக்குன்று,
பொருளாதார மேடு பள்ளம்
சரி செய்ய சலியாமல் உழைத்த உள்ளம்–எங்கள் தாய் உள்ளம்!"

அந்த "சுனாமி", தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களைக் கபளீகரம் செய்து, மனிதர்களையும், கால்நடைகளையும் அழித்து, பெருத்த பொருட்சேதத்தை கண்மூடி கண் திறக்கும் நேரத்தில் ஏற்படுத்தியது. இதற்கு என்ன செய்யப்பட்டது என சிலர் பேசினார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க முதலுதவிப் பணிகளும் இடர் உதவிப் பணிகளும் உடனே மேற்கொள்ளப்பட்டன. 125 மெட்ரிக் டன்கள் பசுந்தீவனம் விநியோகம் செய்யப்பட்டது. 81 ஆயிரத்து 102 கால்நடைகளுக்கு



தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை வளர்ப்போருக்கு ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. ஆனால் சிலர், "மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லுவார், தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்." (மேசையைத் தட்டும் ஒலி) பெரும் இழப்புகள் உண்டாகும்போது மக்களுக்கு, எப்படி நிவாரணம் அளிப்பது? அந்த மக்களை எப்படிக் காப்பது என்பதில் கூட நம் அம்மாதான் அண்டை நாடுகளுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையில் நான் பதிலுரை அளித்த நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படும் என்று கூறினேன். அதன்படி இத்துறையின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 317 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மொத்தம் 6 பன்முக மருத்துவமனைகள், 22 முதன்மை மருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 1,156 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இதன்மூலம் கால்நடைச் சேவைகள் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய ஆட்சியாளர்கள் 24 மணி நேரமும் சுயநலத்திலேயே பொழுதைப் போக்கினார்கள். ஆனால், 24 மணி நேரமும் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில் பன்முக மருத்துவமனைகள் துவங்கியது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் என்பதைக் கூறிக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கால்நடை பராமரிப்புத் துறை வரலாற்றிலேயே கண்டிராத அளவில் ஒன்றல்ல இரண்டல்ல, 234 கால்நடை கிளை நிலையங்களை ஒரு சொட்டு மையில் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தகைய மருந்தகங்கள் புதிதாகத் துவக்கப்பட்டால் மட்டும் போதாது. அதற்குக் கால்நடை மருத்துவர்கள் வேண்டும் எனக் கருதி, இத்துறைக்கு 342 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை 2004–2005 ஆம் ஆண்டில் உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய கால்நடைகளின் மீது மட்டுமல்ல. யானை போன்ற பெரிய விலங்குகளின் மீதும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கருணை காட்டியது உங்களுக்கெல்லாம் தெரியும். தமிழ்நாட்டு மக்களும் மறந்திருக்க மாட்டார்கள். கோயில் யானைகள் மற்றும் தனியார் யானைகளை உதகமண்டலம் முதுமலையில் உள்ள புத்துணர்ச்சி முகாமுக்கு அழைத்துச் சென்று, கடந்த ஆண்டு 30 நாட்கள் நடைபெற்ற முகாம், இந்த ஆண்டு 45 நாட்கள் நடைபெற்றது. கால்நடை மருத்துவ அலுவலர்களால் அவை சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, பாதுகாப்பாக திருப்பி அனுப்பப்பட்டன. அனைத்து உயிர்களின் நலனுக்காக அயராது பாடுபடும் மாண்புமிகு எங்கள் அம்மாவின் நல்லாட்சியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு பகலாக ஒரு வானொலியில்—ஒரு ரேடியோவில், ''கேளுங்க, கேளுங்க, கேட்டுக்கிட்டே..... இருங்க'' என்று சொல்லிகிட்டே இருக்காங்க. ஆனால், கேட்டீங்களா, கேட்டீங்களா, எதிர்க்கட்சியினரைக் கேட்டீங்களா? எதற்கெடுத்தாலும் வெளிநடப்பு ஏன் என்று கேட்டீங்களா? (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கு சாலை மறியல் என்று கேட்டீங்களா? குடும்ப அரசியல் நடத்தும் சுயநலவாதிகளைக் கேட்டீங்களா? (மேசையைத் தட்டும் ஒலி) மாமன்றத்தில் தகாத வார்த்தைகள் பேசியவர்களைக் கேட்டீங்களா? வீராணம் வீண் என்று சொன்னவர்களைக் கேட்டீங்களா? மத்தியில் 12 மந்திரிகள் இருந்தும், ஓட்டுப் போட்ட மக்களுக்கு ஒன்றும் செய்யாதவர்களைக் கேட்டீங்களா? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக நலத் திட்டங்களுக்குத் தடையாக இருப்பவர்களைக் கேட்டீங்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் பார்த்தீங்களா! பார்த்தீங்களா! தமிழகத்தைத் தலைநிமிரச் செய்யும் எங்கள் தங்கத் தாரகையைப் பார்த்தீங்களா! (மேசையைத் தட்டும் ஒலி) அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தை ஆட்சி செய்யும் எங்கள் அம்மா ஆட்சியைப் பார்த்தீங்களா! (மேசையைத் தட்டும் ஒலி) வீராணம் தந்த வீரத் தலைவியைப் பார்த்தீங்களா! (மேசையைத் தட்டும் ஒலி) வீரப்பனை ஒழித்த வெற்றித் தலைவியைப் பார்த்தீங்களா! (மேசையைத் தட்டும் ஒலி) விருதுகள் பலபெற்ற எங்கள் அம்மாவைப் பார்த்தீங்களா! (மேசையைத் தட்டும் ஒலி) பார்க்க மாட்டீங்க, பார்க்க மாட்டீங்க. இனி எங்கள் அம்மாவைப் போல் யாரையும் பார்க்க மாட்டீங்க! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனால், இங்கு மஞ்சள் துண்டு போட்டவர்களை எப்பவும் பார்க்க மாட்டீங்க! (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-10

கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள், தங்கள் வீட்டில்தான் கணினியை வைத்துக் கொண்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, இத்துறையிலுள்ள 25 மண்டல அலுவலகங்கள் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, நடப்பு ஆண்டில் 65 கோட்ட அலுவலகங்கள் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளன என்பதையும், 65 கால்நடை மருத்துவ நிலையங்களில் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைத் துறை சிறந்து விளங்க, மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புகளினால் மட்டுமே, சிறப்பான கால்நடை மருத்துவ சேவையை கிராமப்புறங்களில் அளிக்கமுடியும். கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவற்றின் நோய்களைக் கட்டுப்படுத்தி, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இதுவரை வரலாறு கண்டிராத அளவில் 60 கோடி ரூபாயை கட்டடம் மற்றும் உபகரணங்களுக்காக, நபார்டு வங்கியின் "ஊரகக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதி" உதவியுடன் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதியினைக் கொண்டு 90 கால்நடை மருந்தகங்கள், 13 மருத்துவமனைகள், 9 உறைவிந்து வங்கிகள், 10 நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், 96 சிகிச்சைக் கூடங்கள், 152 உட்பிரிவு சிகிச்சைக் கூடங்கள், 27 கள கண்காணிப்பு நிலையங்கள் புதிதாக இந்த ஆண்டு கட்டப்படும். எல்லா கால்நடை நிலையங்களுக்கும் தேவையான அனைத்து உபகரணங்களும் புதிதாக வாங்கப்படும். மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் 75 பொலிகாளைகளுக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் இருப்பிடம் புதிதாகக் கட்டப்படும். ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் உதகமண்டலத்திலுள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களில், தலா ஒரு தரக்கட்டுப்பாடு ஆய்வகம் புதிதாகக் கட்டப்படும். மேலும், பன்னாட்டு தரக்கட்டுப்பாட்டுக்கு நிகராக, புதிய மத்திய நோய் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் கட்டப்படும். இத்துடன் ஊடுகதிர் வசதியில்லாத மாவட்டத் தலைநகர கால்நடை நிலையங்களில் ஊடுகதிர் வசதி ஏற்படுத்தப்படும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையின் வரலாற்றிலேயே

ரூபாய் 60 கோடி அளவிற்குக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆட்சியில்தான் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வண்டி யிழுக்கும்நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா"

என்று பாரதியார் பாடினார். அண்டிப் பிழைக்கும் ஆடுகளுக்கு தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நீல நாக்கு நோய் உள்ளிட்ட சில நோய்கள், பருவகால மாற்றங்களால் ஏற்பட்டபோது உடனடி சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. இராசேந்திரன் அவர்கள் இதுகுறித்து, கடந்த 24 ஆம் தேதி கவன ஈர்ப்பு கொண்டு வந்தார்கள். பல்வேறு உறுப்பினர்கள் இன்றும் பேசினார்கள். நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் இல்லை. இதற்குத் தடுப்பு ஊசியே கிடையாது என்ற நிலைமாறி, மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த ஆலோசனையின்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் நீல நாக்கு நோய்க்குப் புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது, களப் பரிசோதனையில் உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 1–15

எட்டயபுரம் வட்டத்தில் அயன்வடமலாபுரம், விருத்தாசலம் ஆகிய இடங்களில், ஆடுகள் நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டு, உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல், மாண்புமிகு ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சிவபெருமாள் அவர்கள் அளித்த தகவலின் பேரிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான ஆடுகள் காப்பாற்றப்பட்டன. அதே நேரத்தில் நோய்த் தடுப்புப் பணிகளும் மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டன. அப்பகுதி மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உடனடியாக நன்றி தெரிவித்து இருக்கிறார்கள். இதுபோன்ற உடனடி நடவடிக்கைகளை எடுத்தும், ஒருசில தொலைக்காட்சிகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாட்டுக்கு ஒரு தொலைக்காட்சி! படத்துக்கு ஒரு தொலைக்காட்சி! தவறான செய்திக்கு ஒரு தொலைக்காட்சி! ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தொலைக்காட்சி!" எத்தனை தொலைக்காட்சிகள் இருந்தாலும்— "தமிழக மக்கள் நம்புவது, அம்மா தொலைக்காட்சி ஒன்றை மட்டும் தான்!" *(மேசையைத் தட்டும் ஒலி )*

எங்களது தொகுதியான பொங்கலூரிலும், இந்தப் பிரச்சினை வந்தது. அங்கும் மண்டல இணை இயக்குநர் தலைமையில் மருத்துவக் குழு உடனடியாகச் சென்று சிகிச்சை அளித்து, அப்பகுதி ஆடுகள் காப்பாற்றப்பட்டன. 19–2–2005 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் தென்னாலக்குடி மற்றும் கருங்குடி கிராமங்களில் ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி 5 ஆடுகள் இறந்ததாக தகவல் பெறப்பட்டதும், துறை மருத்துவர்கள் அங்கு விரைந்து, நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியை உடன் மேற்கொண்டார்கள். அந்நோய் மேலும் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது. இப்படி எல்லா இடங்களிலும் கால்நடைகளுக்குப் பாதிப்பு ஏற்படும்போது, தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அவற்றின் இரத்த மாதிரிகள் உடனுக்குடன் சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு அதற்கு ஏற்றார்போல் மருத்துவ உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9–3–2005 அன்று, தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சகோதரி சிவகாமி வின்சென்ட் அவர்கள் பேசும்போது, தாராபுரம் நகராட்சியில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் கட்டித்தர வேண்டும் என்றார்கள். அவரது கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் அருமை அண்ணன் மாண்புமிகு திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசும்போது இப்போது, மேய்ச்சல் நிலங்களாக இருக்கின்றவற்றையெல்லாம் மாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வந்தபின்னால் இந்த நான்கு ஆண்டுகளில், ஒரு பிடி மண்ணைக் கூட எந்த ஒரு உபயோகத்திற்கும் கால்நடைத் துறைக்குச் சொந்தமான இடத்தை எடுக்கக்கூடாது என்ற

ஆணையையிட்டு காப்பாற்றிக் கொண்டு வருபவர் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-3-2005 அன்று அரூர் சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது கிருஷ்ணகிரி, அரூர் பகுதிகளில் கால்நடைத் துறை அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பழைய அலுவலகக் கட்டடங்கள் இற்றுப்போய் இடிந்துவிழும் நிலையில் உள்ளன என்றும், அவற்றைப் புதுப்பித்துத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையுடன், நிச்சயமாக நிதிநிலைக்கேற்ப அக்கட்டடங்கள் பழுதுபார்க்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சுயநலக்காரர்களுக்குப் பொறாமை எப்போதும் அதிகம்". பொறாமை மட்டுமல்ல, முன்கோபமும் கொஞ்சம் அதிகம். அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுக்கு தமிழகத்தில் பஞ்சமே இல்லை. அவர்களிடத்தில் பொறாமைக்கும் பஞ்சமில்லை. 40-ம் வென்று விட்டோம் என்ற இறுமாப்பில் இருக்க வேண்டாம். வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள் புரியும். "விழுவது என்பது எழுவதற்கே, (மேசையைத் தட்டும் ஒலி)— விடுவது என்பது மீண்டும் பெறுவதற்கே." இதைச் சாதிப்பவர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை தடைகள், எத்தனை வழக்குகள், எத்தனை சோதனைகள், எத்தனை எதிர்ப்புகள், எத்தனை இகழ்வுகள், எத்தனை துன்பங்கள் வந்தாலும் அத்தனையும் சிறு பனித்துளிகள் போல் உத்தம உணர்வுடன், புன்னகை தவழ்ந்திட, சந்தித்து சாதனை படைத்தவர்தான் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

*11-3-2005* அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது—திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே இல்லை. இருந்தாலும் நான் சொல்லக் கடமைப்பட்டவன். இன்றுகூட காலை செய்தித்தாளிலே வந்த செய்தி. அருமை அண்ணன் பி.சி.ஆர். அவர்கள் சொல்கிறார்கள். எங்கள் ஊர்தான். எனக்கு உறவினர்தான். இல்லையென்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் கொஞ்சம் முன்கோபக்காரர் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எதற்கெடுத்தாலும்—இங்கே எல்லா மாடுகளும் ஒன்றாக உழவிலே



நன்றாகப் போகின்றன. ஏனென்றால், கால்நடைத் துறை, அதனாலே நான் சொல்கிறேன். எல்லா மாடுகளும் ஒழுங்காக உழவிலே போய்க்கொண்டிருக்கின்றன. ஆனால், குறுக்கு உழவிலே ஓட்டுவதற்கென்றே பிறந்தவர் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய உழவு மட்டும் சரியாக நேராகப் போகாது. அது குறுக்கிலேயேதான் போகும். இருந்திருந்தால் தெரியும். இன்றைக்குக் காலையிலே செய்தியிலே போட்டிருக்கிறார்கள். திரு. கருணாநிதியோடு போனால் காரிலே ஏறிக்கொண்டு போகலாம், மாண்புமிகு அம்மாவோடு போனால் பின்னாலேதான் போகலாம் என்று. கடந்த வாரத்திலே அம்மாவே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். கடைசியாக வந்து ஒரே ஒரு இடத்திலேயாவது பேசுங்கள் அம்மா, அப்போதுதான் நான் ஜெயிக்க முடியும் என்று சொன்னார்கள். அதேபோல அம்மா அவர்களால், அம்மா அவர்களின் உதவியினால் இங்கே வந்த அந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்கள் அம்மா மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், உங்கள் 30 பேருக்கும் இங்கே முகவரி கிடைத்திருக்குமா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது இந்தச் சட்டமன்றத்திற்குத்தான் நீங்கள் வந்திருப்பீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் வெளியே இருந்தாலும் தெரிந்துகொள்ளட்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்தால், அம்மா அவர்கள் சம்மதித்தால், அம்மா அவர்களின் ஆணையின்பேரில் நான், நாளையே பொங்கலூர் சட்டமன்ற உறுப்பினர் பதவியை அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு ராஜினாமா செய்கிறேன். தொண்டாமுத்தூரிலே, அம்மா அவர்களின் ஆதரவோடு வெற்றி பெற்ற எஸ்.ஆர்.பி. அவர்களே, தைரியம் இருந்தால், தெம்பு இருந்தால், திராணி இருந்தால் நீங்கள் உங்களுடைய தொண்டாமுத்தூர் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வாருங்கள். பொங்கலூர் தொகுதியிலே ஒன்றரை கோடி அண்ணா தி.மு.க. தொண்டர்களிலே ஒரு கடைக்கோடி தொண்டனை அம்மா அவர்கள் நிறுத்துகிறார்கள், நீங்கள் சொந்தத் தொகுதியான பொங்கலூரிலே நின்று வெற்றி பெற்றுவிட்டால் நான் எந்தத் தண்டனையைக் கொடுத்தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்திலே சவாலாகச் சொல்கிறேன், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா இல்லாமல் இருந்திருந்தால், அம்மா உங்களுக்கு உதவியாக இல்லாமல் இருந்திருந்தால், நீங்கள் மட்டுமல்ல, பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக்

கட்சிக்காரர்களுக்குமே address இருக்காது, முகவரி இருக்காது. ஊரிலே ஒரு பழமொழி சொல்வார்கள். "மேயற மாட்டை...." பாக்கி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். அதை நான் சொல்ல விரும்பவில்லை. அந்த மாதிரி எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இன்றைக்கு வெளியிலே போய்விட்டீர்கள். திங்கள்கிழமை அன்றைக்கு வருகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல *11-3-2005* அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது, கால்நடை வளர்ப்பு இலாபகரமாக இல்லை என்று தெரிவித்து, நகரங்களை நோக்கி கிராம மக்கள் இடம்பெயர்ந்து செல்வதாகக் குறிப்பிட்டார்கள். எல்லா கிராமங்களிலும் அந்த நிலை இல்லை. கிராமங்களை விட மேலும் வசதிகளை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு சில கிராம மக்கள் செல்லலாம். கால்நடை வளர்ப்பு மட்டுமல்ல, பல்வேறு சுயஉதவி பொருளாதாரக் குழுக்களெல்லாம் கிராமங்களில்தான் செயல்படுகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால், கிராம வளர்ச்சிக்காக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை, வடமாநிலங்களிலிருந்து வரும் பாராளுமன்ற மற்றும் சட்டப் பேரவைக் குழு உறுப்பினர்கள் இங்கே வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள் என எண்ணுகிறேன். கிராம மக்கள் தங்கள் குடும்பங்களை சீரிய முறையில் நடத்திட கறவை மாடுகள் வளர்ப்பும், ஆடு வளர்ப்பும், கோழி வளர்ப்பும் உறுதுணை புரிகின்றன. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, கிராம மக்கள் அனைவரும் நகரத்தை நோக்கிச் சென்றுவிடவில்லை என்பதையும், கால்நடை வளர்ப்பும் இலாபகரமாகத்தான் உள்ளது என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவ முகாம்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கிணத்துக்கடவு தாமோதரன் பேசுவார்கள் என்று இருந்தேன். ஆனால், நம்முடைய அருமைச் சகோதரர் ரெங்கநாதன் அவர்கள் பேசி விட்டார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ரெங்கநாதன் அவர்கள், துறையின் சிறப்பான பணிகளை எடுத்துக்கூறி, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இதர துறைகளும் சுனாமி நிவாரணப் பணிகளில் எவ்வாறு சிறப்பாக ஈடுபட்டன என்பதை எடுத்துக்கூறி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கால்நடைகளின்பால் எத்தனை ஈடுபாடு கொண்டுள்ளார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவித்தார்கள். இதன்மூலம் நான் இங்கே எடுத்து வைக்கவேண்டிய



பதிலுரையின் சுமையையும் குறைத்துள்ளார்கள். அவர்களுக்கு என் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த தாமோதரன் பேசா விட்டாலும், இந்த தாமோதரன் அவருக்குப் பதில் சொல்கிறேன். அண்ணே, கால்நடை மருத்துவ வசதிகள் சென்றடைய இயலாத குக்கிராமங்களில் ஏழை எளிய மக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் முழுப் பாதுகாப்பு இலவசமாக அளிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 8 கோடியே 8 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் 19 ஆயிரத்து 242 முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 220 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற 2005–2006 ஆம் ஆண்டிலும் சுமார் 60 இலட்சம் கால்நடைகள் பயனடையும் வகையில் மேலும் 5 ஆயிரத்து 5 முகாம்கள் நடத்திட, 1 கோடியே 85 இலட்சம் ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 1–25

மாநிலத்தில் இந்த ஆண்டில் 44 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு, இப்பணியில் தமிழகம் நாட்டிலேயே முதலாவதாகத் திகழ்கிறது. பசு மற்றும் எருமைகளின் இனவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தும் நோக்கத்துடன் மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2005 –2006 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கிவரும் 3 உறைவிந்து உற்பத்தி நிலையங்களை சர்வதேச தரக் கட்டுப்பாட்டு சான்று (I.S.O. Certificate) பெறும் வகையில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்முகமை மூலம் 2005–2006 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று, 250 புதிய நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற மாநிலங்களுக்கு கால்நடைகளை லாரியில் ஏற்றிச் செல்லும்போது–நம்முடைய அருமைச் சகோதரர் ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்–அதில் கால்நடைகள் நகர முடியாத நிலையில் கட்டப்பட்டு கஷ்டப்படுகின்றன என்று. இவ்வாறு கால்நடைகளுக்கு ஏற்படும் துன்பத்தைத் தடுக்க, மாண்புமிகு இதய

தெய்வம் அம்மா அவர்களின் ஆணை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் துறை எடுத்த நடவடிக்கையால், கால்நடைகள் கண்ணீர் சிந்தவில்லை. தாகத்திற்கு தண்ணீர் ஆனாலும் சரி, நோய்க்கு சிகிச்சை ஆனாலும் சரி, பசிக்கு பசும்புல் ஆனாலும் சரி, வைக்கோல் போரானாலும் சரி, கால்நடைகளுக்கு எங்கள் அம்மாவின் சீரிய நடவடிக்கையால் தாராளமாகக் கிடைக்கின்றன.

ஆலயங்களில் அன்னதானம் வழங்கி பக்தர்களின் பசியைப் போக்கும் எங்கள் மாண்புமிகு அம்மா, வாயில்லாத ஜீவன்களின் வாட்டத்தைப் போக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் பசுந்தீவன உற்பத்திக்காக, மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாக்க ஆணையிட்டதும் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்கள் மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகை நிலமாகவும் மாற்றக் கூடாது எனவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இத்துடன் எல்லா மாவட்டங்களிலும் மேய்ச்சல் நிலங்களை அதிகரிக்க இதர துறைகளுடன் சேர்ந்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்ற, மாண்புமிகு அம்மா அவர்கள் சீரிய ஆலோசனையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளாக பருவமழை பொய்த்த போதிலும், ஏழை எளிய மக்கள் பெரும்பாலானோர் கால்நடைகள் மூலம்தான் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். தொலைநோக்கு சிந்தனை கொண்ட எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனைகளால், வறட்சிக் காலத்திலும் பசுந்தீவன பற்றாக்குறை இல்லாத நிலையையும், பால் உற்பத்தி பாதிக்கப்படாத நிலையையும் எய்த முடிந்தது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஓசூர் கால்நடைப் பண்ணையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, நேரில் சென்று ஆய்வு செய்தேன். கடந்த ஆட்சியில் ஆண்டுக்கு 44 ஆயிரம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி என்ற நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தற்போது ஆண்டுக்கு 5 இலட்சமாக உயர்த்தி முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டு இருப்பதை, இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய டானிடா கால்நடை வளர்ச்சித் திட்டம், மாநிலத்தின் 6,473 ஊராட்சிகளில்



செயலாக்கப்பட்டு, 6,410 தொடர்பு தம்பதிகள் கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் முறைசாரா கால்நடை மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

"நலமான கால்நடைகள் வளமான நாட்டை உருவாக்கும்" என்ற வாய்மொழிக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைகளை மிகுந்த கருணை உள்ளத்தோடு காப்பாற்றி வருகிறார்கள். ஔவைக்கு கனி தந்த அதியமானையும், அமணனுக்கு தலை கொடுத்த குமணனையும் அறிந்திருக்கிறோம்! கண்ணனுக்கு கவசத்தை ஈந்த கர்ணனையும், முல்லைக்குத் தேர் தந்த பாரியையும் அறிந்திருக்கிறோம்! மயிலுக்குப் போர்வை தந்த பேகனையும், கடை ஏழு வள்ளல்களையும் அறிந்திருக்கிறோம். ஆனால், இவர்களையெல்லாம் மிஞ்சிய மனிதநேயம் மிக்க ஒரு ஒப்பற்ற தலைவியாய், எங்கள் புரட்சித் தலைவி அம்மாவை மட்டுமே பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, நோய் வருமுன் காத்தல், குணப்படுத்துதலைவிட சாலச் சிறந்தது என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையுடன் இத்துறை பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடைகள் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தை, 2 கோடி ரூபாய் செலவிலும், சைதாப்பேட்டை மத்திய நோய் ஆராய்ச்சிக் கூடம் மற்றும் கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மண்டல ஆய்வுக் கூடங்களை 80 இலட்சம் ரூபாய் செலவிலும், சர்வதேச தரத்திற்கு நிகராக மாற்றிட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அலை மோதும் சில அரசியல்வாதிகளால் பயனில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலை மோதும் சில அரசியல்வாதிகளால் பயனில்லை. ஆங்கிலம் படித்து டாக்டர் ஆகி, டாக்டர் என்று கூறியவர், திடீரென மருத்துவராக மாறிவிட்டார். மொழிப்போர், மொழிப்போர் என்று சொல்லி, மூன்றாவது மொழிப்போர் பயணமும் செய்தார். ஓட்டுப்போட்டு கோட்டைக்கு அனுப்பினால், மக்கள் கோரிக்கைகளைக் கேட்காமல், ரோட்டுக்கு

ஓடும் ஓடப்பர்களே, ஓட்டம் பிடித்து கூட்டம் போட்டு, கொட்டம் அடிக்கும் குருமதியாளர்களே, நீங்கள் வேஷம் போட்டு ஆடும் ஆட்டத்தை வேடிக்கை பார்க்கும் மக்கள் ... (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** வேஷம் போட்டு ஆடும் ஆட்டத்தை வேடிக்கை பார்க்கும் மக்கள், கோஷம் போட்டுத் துரத்தும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கோஷம் போட்டுத் துரத்தும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை.

கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ் சுமார் பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டில், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கோமாரி நோய்த் தடுப்பூசியும், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் தொண்டை அடைப்பான் தடுப்பூசியும், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் சப்பை நோய் தடுப்பூசியும், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் உயிர்க்கொல்லி நோயான ஆந்த்ராக்ஸ் நோய்த் தடுப்பூசியும், பி.பி.ஆர். என்னும் ஆட்டுக் கொல்லி தடுப்பூசி அனைத்து தென் மாவட்டங்களிலும் உள்ள வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி போடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையால் மாநிலத்தில் கால்நடைகளைத் தாக்கும் வெக்கை நோயை ஒழிக்க, தடுப்பூசிப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச நிறுவனத்தால் கால்நடைகள் பரிசோதிக்கப்பட்டு, அந்நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என 2004 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக இச்சோதனை நடந்து வந்திருந்தும், மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் எடுத்த நடவடிக்கையால், அவர்களது நல்லாட்சியில் நமது மாநிலம் வெக்கை நோய் இல்லாத மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*கோழியே, கோழியே!*
*கொக்கரக்கோ கோழியே!*
*முட்டையிடும் கோழியே!*
*நீ இடும் முட்டையில் இத்தனை பிரச்சினையா?*
*கரு, குஞ்சாகி வெளியே வர வேண்டாம் என்று*
*முட்டை ஓடு நினைக்கிறது.*
*கரு, குஞ்சாகி வெளியே வர வேண்டாம் என்று*
*முட்டை ஓடு நினைக்கிறது.*
*முட்டைக்குள் இருக்கும் கருவோ,*
*குஞ்சாகி, ஓட்டை உடைப்பேன் என்கிறது.*
*முட்டைக்குள் இருக்கும் கருவோ,*
*குஞ்சாகி, ஓட்டை உடைப்பேன் என்கிறது.*
*ஓட்டை உடைப்பேன் என்கிறது.*
*உங்களுக்குள் ஏன் வாரிசுச் சண்டை?*

கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் முந்தைய ஆட்சிக் காலத்தைவிட முன்னேறி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது. இதற்குக் காரணம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு கோழிகள் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டு, கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பினை அதிகரித்து, பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகின் பல பகுதிகளில் கோழிக் காய்ச்சல் என்ற கொடிய நோய் பரவியபோதும்கூட மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி கால்நடைத் துறை எடுத்த நடவடிக்கையால் இங்கு அந்த நோயின் தாக்கம் சிறிதளவுகூட இல்லை என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், 4 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் கோழி வளர்ப்பு போல வான்கோழி வளர்ப்பைப் பற்றியும், அதிலிருந்து கிடைக்கும் வருவாய் குறித்தும் கிராமப்புற மக்களுக்கு

விழிப்புணர்வு ஏற்படுத்த, ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் திட்டம் நிறைவேற்றிட உத்தரவிட்டுள்ளார்கள். இந்தத் திட்டமானது, நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அண்ணன் அவர்களுடைய மாவட்டமான தேனி மாவட்டத்தில் மட்டும் புறக்கடை—(குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் மாவட்டமும் அதுதான் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் மாவட்டமும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டமுமான தேனி மாவட்டத்தில் மட்டும்—புறக்கடை வான்கோழி வளர்ப்புக்காக, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 10 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இதை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதையும், இத்திட்டமானது மேலும் பல மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வான்கோழி வளர்ப்பு போல ஒரு முட்டையின் விலையே ஆயிரம் ரூபாய் என்ற விலை மதிப்புள்ள "ஈமு" கோழி வளர்ப்புக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

அன்பிற் சிறந்த பண்புடைய அம்மா!
அறிவில் உயர்ந்த இமயமாம் அம்மா!
அங்கும் இங்கும் எங்கும் அம்மா!
தங்கு புகழில் பொதிகையாம் அம்மா!
(மேசையைத் தட்டும் ஒலி)
சிங்கமாம் வீராங்கனை நம் அம்மா!
தங்க மனத்தார் எங்கள் அம்மா!
எங்கும் உள்ளோர் பின்பற்றும் அம்மா!
காவியத் தலைவியாம் எங்கள் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமஸ்கிருதத்தில் ஒரு ஸ்லோகம் சொல்ல அனுமதிக்க வேண்டுகிறேன்.

"பவித்ரம் சநிதம் யஸ்யா; பவித்ரம் ஜீவனம் ததா!
பவித்ரதா ஸ்வரூபிண்யை தஸ்யை குக்மோ நமோ நம!"

எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை, எந்த மொழியில் புகழ்ந்தாலும், அதற்கு ஈடு இணை இல்லை. அவருக்கு நிகர் அவரேதான்.



அம்மா! பவித்ரம்–புனிதம், புனிதம் உங்களது பண்பு! புனிதம் உங்களது வாழ்வு! புனிதம் உருவாக அவதரித்தவரே! மீண்டும் மீண்டும் உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–35*

மாமன்றத்தினரே, நீங்கள் எத்தனையோ பல்கலைக்கழகங்களைப் பார்த்திருக்கலாம். எங்கள் அம்மா போல் ஒரு நடமாடும் பல்கலைக்கழகத்தைப் பார்த்திருக்கமாட்டீர்கள். இருப்பினும், எங்கள் துறையைச் சார்ந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் குறித்து ஓரிரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியலுக்கென முதன்முதலில் உருவாக்கப்பட்டதாகும். சென்னை மற்றும் நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகள், தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படுகின்றன.

இப்பல்கலைக்கழகம் குறுகிய காலத்திலேயே சிறப்புகள் பல பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த, சென்னை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கு தர மேலாண்மைக்காக "I.S.O.9001" தரச் சான்றிதழ் அளிக்கப்பட்டது. சென்னை மருத்துவக் கல்லூரி, இந்தியாவிலேயே சிறந்த கால்நடை மருத்துவக் கல்லூரி 2003 என்ற விருதைப் பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில், இப்பல்கலைக்கழகம் "Vision 2020" என்ற தொலைநோக்கு திட்ட அறிக்கையைத் தயார் செய்து, எதிர்வரும் காலங்களில் வர்த்தக ரீதியாக கால்நடை வளர்ப்போர் சந்திக்க வேண்டிய சவால்களை மனதில் கொண்டு செயல்படுத்த உள்ளது. மேலும் இப்பல்கலைக்கழகத்தில் அதிக மாணவர்கள் தேர்ச்சி அடைந்தமைக்காக "அகில இந்திய செயல் நிறைவேற்ற விருதை" 2004 ஆம் ஆண்டில் மத்திய விவசாயத் துறை அமைச்சகத்திலிருந்து பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க சமீபத்தில், ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் மிருகக்காட்சி சாலையில் சிங்கங்களுக்கு கண்களில் ஏற்பட்ட புரையை நீக்க, தமிழகக் கால்நடை மருத்துவர்கள் அங்கு சென்று, அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்து, நமது சிங்கநிகர் தலைவி அம்மா அவர்களுக்கு மேலும் ஒரு மகுடம் சூட்டினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இப்பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையின் பேரில், இதுவரை தடுப்பூசியே இல்லாத ஆட்டுக்கொல்லி மற்றும் நீல நாக்கு நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, களப் பரிசோதனையில் உள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணை பெற்று, கால்நடை பராமரிப்புத் துறையில் 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள கீழ்க்கண்ட புதிய அறிவிப்புகளை அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்:

கால்நடைகளை பல்வேறு நோய்களிலிருந்து காப்பாற்றும்பொருட்டு 100 இலட்சம் ரூபாய் செலவில் "விரிவான தொற்றுநோய்கள் கட்டுப்படுத்தும் திட்டம்" இவ்வாண்டு தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

இவ்வாண்டு 10 கால்நடை நிலையங்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 10 தொலைபேசி இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

வெறிநாய்க்கடி நோயை வெகுவாகக் குறைக்க இவ்வாண்டும் அரசுசாரா அமைப்புகளை ஈடுபடுத்தி, 10 இலட்சம் ரூபாய் செலவில் 25 ஆயிரம் நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படும். சந்தைகளுக்குக் கொண்டுவரப்படும் கால்நடைகளை கருணையுடன் கையாளும்பொருட்டு, 20 இலட்சம் ரூபாய் செலவில் 10 கால்நடைச் சந்தைகளில் "கால்நடை முதலுதவி நிலையங்கள்" கட்டப்படும்.

நோயினால் இறக்க நேரிடும் கால்நடைகள்மூலம் நோய்க் கிருமிகள் பரவாவண்ணம் தடுக்க இறந்த கால்நடைகளை அகற்றுவதற்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் 2 கால்நடைப் பண்ணைகளில் 2 எரி உலைகள் நிறுவப்படும்.

ஆடுகளைத் தாக்கும் நோய்களில் அடைப்பான் நோயிலிருந்து ஆடுகளைக் காக்க, 20 இலட்சம் ரூபாய் செலவில், பாதுகாப்பான வீரியம் மிக்க அடைப்பான் தடுப்பூசி தயாரிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.



கிராமப்புறங்களில் பன்றி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், 52 இலட்சம் ரூபாய் செலவில், வீரிய ரகப் பன்றிகள் உருவாக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

மீனவ மகளிரிடையே வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க, 18 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில், "ஆயத்த மறு வடிவூட்டப்பட்ட மீன் உணவு ஆய்வுக்கூடம்" அமைத்து மீனவ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில்நுட்பப் பரிமாற்றம் அளிக்கப்படும்.

இத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப 250 கால்நடை உதவி மருத்துவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் பணியமர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆடு வளர்ப்போர் பயனடையும் வகையில், இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த குடற்புழு நீக்கக் கட்டணம் உடனடியாக அம்மா அவர்களின் ஆணையின் பேரில் இரத்து செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் சேவைக்கு இணையான சேவை இல்லை! அவர் சுற்றிப் பேசாத சிற்றூர் இல்லை! அவர் பேச்சிற்கு இணையான தமிழ்ப் பேச்சில்லை! அவர் பேச்சில் திருந்தாத தொண்டன் இல்லை! அவர் சொல்லிற்கு இணையாகச் சொற்கள் இல்லை! அவர் சொல்லி விளக்காத செய்தி இல்லை! அவருக்கு இங்கே இணையாக, எவரும் இல்லை! (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சாதிக்காத சாதனைகள் ஏதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஆட்சியில் இல்லை, இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உங்களின் புகழ் என்றென்றும் வான் எல்லை! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் ஏழை எளிய மக்கள் குறிப்பாக, கிராமப்புற விவசாயப் பெருமக்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில், இத்துறையின் மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்து அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. திட்டப் பயன்கள் கிராம மக்களை விரைவாகச் சென்றடையும் வகையிலும் நிறைவேற்றப்பட உள்ளன. மாண்புமிகு

உறுப்பினர்கள் தெரிவித்துள்ள அரிய கருத்துகளையும் வெட்டுத் தீர்மானங்களில் கேட்டுள்ள கோரிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–40*

நேரத்தின் அருமை கருதி திரு. ஜெக. வீரபாண்டியனுக்கு இன்னும் கொஞ்சம் பதில் இருக்கிறது, சொல்லலாம் என்று நினைத்தேன். கொள்கை பற்றியும் பல்வேறு பொருள்கள் பற்றிய வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் போதிய அளவிற்கு பதில் அளித்திருப்பதாகக் கருதுகிறேன். இதுவரை நான் அளித்துள்ள விளக்கங்களை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையினை முழு மனதோடு நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்ற அனைத்து உறுப்பினர் பெருமக்களையும் அன்போடும், பண்போடும், பணிவோடும் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 17,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 165,70,05,000/–, ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8— கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 12,13,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 75,89,21,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 4,01,97,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 4–4–2005 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

– ஏதும் இல்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

171. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

172. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

173. மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

174. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

175. கால்நடை பராமரிப்புத் துறையின் "மக்கள் சாசனம்", 2005. (தமிழ், ஆங்கிலம்)

176. மானியக் கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை– பால்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

177. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பற்றிய "மக்கள் சாசனம்", 2005. (தமிழ், ஆங்கிலம்)

178. மானியக் கோரிக்கை எண் 7– கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

179. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

180. மீன்வளத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2005. (தமிழ், ஆங்கிலம்)





# இணைப்பு I

*(395 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 6

## கால்நடை பராமரிப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முன்னுரை:**

கால்நடைகள் கிராமப்புற வாழ்க்கை மற்றும் பொருளாதார மேன்மைக்கு இன்றும் முக்கிய அங்கமாக விளங்குகின்றன. கிராமப்புற வீடுகளில் பழங்காலந்தொட்டே கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் ஒன்றை ஒன்று சார்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 70 சதவீதத்திற்கும் மேலான கிராமப்புற மக்கள் கால்நடை பராமரிப்புத் தொழிலையே நம்பியுள்ளதால், அவர்களுடைய வாழ்க்கையோடு இணைந்தும் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகவும் விளங்குகிறது. கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண் உற்பத்தி ஒருசேர கடைப்பிடிக்கப்படுவதால் பண்ணை உப பொருட்களை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும், வீட்டின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவுகின்றது. மேலும், கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான நிலமற்ற, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு குறிப்பாக, சுய வேலைவாய்ப்பு அளிப்பதுடன், மதிப்புமிக்க துணை வருவாயை அளிக்கின்றது.

கால்நடைகள் சத்தான புரதச்சத்து அதிகம் கொண்ட சமச்சீரான உணவான, பால், முட்டை, இறைச்சி மற்றும் ஊட்டம் மிக்க பொருட்கள் ஆகிய வடிவில் மக்களுக்கு அளிக்கின்றது. பால் மற்றும் பால் பொருட்கள், மரக்கறி உண்ணும் மக்களுக்கு பெரும் புரதச்சத்தை அளிக்கும் ஆதாரமாகவும் உள்ளது. கிராமப்புறங்களில் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் சாணம் மற்றும் இழுவைத்திறன் சக்தி முக்கிய ஆற்றல் ஆதாரமாகவும், இயற்கை உரம் பயிர் உற்பத்திக்கு முக்கிய இடுபொருளாகவும் உள்ளது. கால்நடைகள் அப்பகுதிகளில் நிலவும் சமூக, கலாச்சார மற்றும் பாரம்பரிய மதிப்புகளில் பின்னிப் பிணைந்து காணப்படுவதுடன், கிராமப்புற ஏழை வீடுகளில் துயரக் காலத்தின்போது அவற்றை வைத்து பணம் பெற உதவுவதால், அது

[2005 ஏப்ரல் 1

காப்பீடு மாற்றாகவும் உள்ளது. கால்நடைகள் பெரும் வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதித் திறம் வாய்ந்த தோல் தொழிலுக்கு அடிப்படை மூலப்பொருட்களான பண்படாத தோலைத் தருகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கால்நடைப் பிரிவின் பங்கு இன்றியமையாதது. 1980–81-லிருந்து 2002–03-க்கு இடையில், கால்நடைப் பிரிவின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.82 சதவீதத்திலிருந்து 5.37 சதவீதமாகவும், வேளாண்மைப் பிரிவுக்கு 13.88 சதவீதத்திலிருந்து 26.51 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இக்குறிப்பிட்ட வளர்ச்சிக்கு பால் பண்ணை மற்றும் கோழிப் பிரிவுகள் முக்கிய பங்கு வகித்தன. ஆண்டுக்கு பால் பண்ணை மற்றும் கோழிப் பிரிவு முறையே 4.08 சதவீதம் மற்றும் 7.09 சதவீதமாக வளர்ந்து வருகின்றது. இது கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு பெருந்துணையாக உள்ளது. கால்நடைப் பிரிவில் முக்கிய வகைகளுள் பால் மட்டுமே விலை மதிக்கத்தக்க மொத்த விளைவில் மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதி மற்றும் மரபியல் ரீதியாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது. இத்துடன், இத்துறை ஏழை, எளிய அடித்தள மற்றும் நலிவுற்ற சமுதாயப் பிரிவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நலனிற்கும் பயன்தரும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுமட்டுமின்றி, இத்துறை பல்வேறு விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றது. இத்துறை மேற்கூறிய நடவடிக்கைகளை அயராது நிறைவேற்றியதாலும், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் இயற்கை ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்தியதாலும், மாநிலத்தில் கால்நடைப் பிரிவு துடிப்பான வர்த்தகமாக வளர்ந்து வருகிறது.

கால்நடைப் பொருட்கள் உற்பத்தி அதிகமாகியுள்ளதிலிருந்தே இத்துறை குறிப்பிடும் வகையில் பங்காற்றியுள்ளது என்பதை உணர முடியும். 1993–94-ல் 35.24 இலட்சம் மெட்ரிக் டன்னாக மதிப்பிடப்பட்டிருந்த பால் உற்பத்தி, 2003–04-ல் 47.53 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இது 35 சதவீதம் அதிகமாகும்.



2005 ஏப்ரல் 1]

இதே போல், இதே காலகட்டத்தில் மதிப்பிடப்பட்டிருந்த முட்டை உற்பத்தி 2,919 மில்லியனிலிருந்து 3,784 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது 30 சதவீதம் அதிகமாகும். இதே காலகட்டத்தில், ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு 173 கிராமிலிருந்து 209 கிராமாகவும், ஒரு ஆண்டுக்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 52-லிருந்து 61 ஆகவும் அதிகரித்துள்ளது.

மக்கள் தொகைப் பெருக்கம், அதிகரித்து வரும் நகரமயமாக்கல், பெருகிவரும் உள்நாட்டு வருவாய் மற்றும் மாறிவரும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றால் கால்நடைப் பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. ஆகவே, கால்நடை பராமரிப்புப் பிரிவு மேலும் வளர்ச்சி அடைவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இதனால் கிராமப்புற ஏழைகள் மற்றும் இளைஞர்களுக்கு மிகவும் அவசியமான இலாபகரமான வேலைவாய்ப்பு அளிப்பதுடன், கிராமிய பொருளாதாரத்திற்குப் புத்துயிர் ஊட்டவும், நிலையான வளர்ச்சி அடையவும் ஏதுவாக அமையும். ஆகையால், கால்நடை பராமரிப்புப் பிரிவை வலிமை அடையச் செய்வது அவசியமாகும். மேலும், இது பல சமுதாய மாற்றங்களான, மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடி பெயர்வதைக் குறைத்தல், பெண்களுக்கு அதிகாரம் கிடைத்தல், சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் போன்றவற்றை அடைய முடியும். சுருக்கமாக நூற்றாண்டு முன்னேற்ற குறிக்கோள்களான உச்ச நிலை வறுமை மற்றும் பசியை அறவே ஒழிக்க, கால்நடைகளின் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் அமையும்.

**பொது நிர்வாகம்:**

விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ உதவி அளிக்கும் நோக்குடன் இத்துறை 1892-ல் பொதுமக்களின் கால்நடைத் துறையாக தொடங்கப்பட்டது. தொடர்ந்து கால்நடை நோய்களுக்கான சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முக்கிய நோக்குடன் இத்துறை 1948-ல் கால்நடை பராமரிப்புத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதிலிருந்து இத்துறை பல்வேறு நடவடிக்கைகளில் அதன் செயல்பாடுகளையும் விரிவுபடுத்தியுள்ளது.

தற்போது கால்நடை பராமரிப்புத் துறை, ஆணையர் மற்றும் இயக்குநர், கால்நடை மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை

பராமரிப்பு இயக்குநர் ஆகியவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வெவ்வேறு பொருட்கள் ஒதுக்கீட்டுடன் இயங்கி வருகிறது. மாநிலம் 25 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் கட்டுப்பாட்டிலும் மற்றும் 65 கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன. பெருகள கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனைகள், பெரு மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் மண்டல இணை இயக்குநர்களின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், கால்நடை மருந்தகங்கள் உதவி இயக்குநர்களின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பல்வகை தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. நோய் பற்றிய ஆய்வு செய்யவும், அதனை உறுதிப்படுத்துவதுடன், கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தொடர்பு ஆய்வுக் கூடம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ள உதவி இயக்குநர் தலைமையில் இயங்கிவரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணியை ஒருங்கிணைத்து வருகிறது.

இத்துறை எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், இருபது கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களை நிர்வகித்து வருகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் திட்டச் செலவினங்களுக்கு ரூ.28.88 கோடியும், திட்டமில்லாச் செலவினங்களுக்கு ரூ.135.60 கோடியும், ஆக மொத்தம் ரூ.164.48 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. திருத்திய நிதி ஒதுக்கீட்டில் திட்டச் செலவினங்களுக்கு ரூ.36.33 கோடியும், திட்டமில்லாச் செலவினங்களுக்கு ரூ.115.89 கோடியும் உள்ளடக்கி, மொத்தம் ரூ.152.22 கோடி ஒதுக்கப்பட்டது. 2004–2005 மற்றும் 2005–2006-ல் இனவாரியாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு கீழ்வருமாறு:





| வ. எண் | இனம் | முதலீடு (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | 2004–2005 | 2005–2006 |
| 1 | இயக்குதலும் மேற்பார்வையிடுதலும் | 1,684.60 | 1,753.57 |
| 2 | கால்நடை அபிவிருத்தி | 1,815.84 | 1,785.27 |
| 3 | கோழியின அபிவிருத்தி | 138.01 | 133.51 |
| 4 | செம்மறியாட்டின அபிவிருத்தி | 205.86 | 214.24 |
| 5 | பன்றியின அபிவிருத்தி | 35.47 | 40.02 |
| 6 | தீவன அபிவிருத்தி | 146.39 | 48.53 |
| 7 | விரிவாக்கமும் பயிற்சியும் | 7.68 | 8.54 |
| 8 | கால்நடை மருத்துவ சேவை மற்றும் உடல்நலன் | 8,491.45 | 8,641.80 |
| 9 | சிறப்பு மத்திய உதவித் திட்டம் | 57.48 | 55.90 |
| 10 | டேனிடா (கால்நடை அபிவிருத்தி) | 39.99 | 0.02 |
| 11 | மலைப்பகுதி மேம்பாடு | 112.93 | 22.71 |
| 12 | வேளாண்மை ஆராய்ச்சி கல்வி மற்றும் பயிற்சி | 3,389.77 | 3,548.04 |
| 13 | கால்நடை பராமரிப்பு மீதான முதலீடு | 17.50 | 17.59 |
| 14 | தலைமைச் செயலகம் | 185.24 | 197.95 |
| 15 | பொதுப் பணிகள் | 120.41 | 120.95 |
| | **மொத்தம்** | **16,448.62** | **16,587.64** |

2005–06 நிதிநிலை அறிக்கையில், கால்நடை பராமரிப்புத் துறைக்கு மொத்தம் ரூ.165.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


**17–வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பு:**

கால்நடைகள் குறைந்த ஆண்டுகளே உயிர் வாழ்வதைக் கருத்திற்கொண்டு, கால்நடைகள், கோழிகள், வேளாண் கருவிகள் மற்றும்

[2005 ஏப்ரல் 1

மீன்பிடி உபகரணங்கள் மீதான கணக்கெடுப்பு 1951 முதல் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது. கடந்த கணக்கெடுப்பு, அதாவது 1997–ல் எடுக்கப்பட்ட 16-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பு வரை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையினரால் எடுக்கப்பட்டது. 17-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பு கால்நடை பராமரிப்புத் துறையால் 2003–2004–ல் எடுக்கப்பட்டது. இக்கணக்கெடுப்புப் பணி ரூ.8.64 கோடி நிதி ஒதுக்கீட்டில் 15-10-2004–ஐ பார்வை நாளாகக் கொண்டு எடுக்கப்பட்டது. 17-வது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பின்படி, (தற்காலிகம்) மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் இனவாரியான எண்ணிக்கை விவரங்களும், மொத்த கால்நடை மற்றும் கோழியின எண்ணிக்கையில் அவற்றின் விழுக்காடு மற்றும் அடர்த்தி பற்றிய விவரமும் கீழ்வருமாறு:

**கால்நடைகள் எண்ணிக்கை**







2005 ஏப்ரல் 1]

| இனம் | எண்ணிக்கை | அடர்த்தி (ஒரு சதுர கி.மீ-க்கு) |
|---|---|---|
| பசுவினம் | 91,41,043 | 70 |
| எருமையினம் | 16,58,415 | 13 |
| செம்மறியாடுகள் | 55,93,485 | 43 |
| வெள்ளாடுகள் | 81,77,420 | 63 |
| பன்றிகள் | 3,20,868 | 2 |
| கழுதைகள் | 25,779 | 1 |
| குதிரைகள் மற்றும் மட்டக் குதிரைகள் | 24,988 | |
| ஒட்டகங்கள் | 31 | |
| **மொத்த கால்நடைகள்** | **2,49,42,029** | **192** |
| *நாய்கள்* | 27,16,631 | 21 |
| *முயல்கள்* | 66,878 | 1 |

**கோழியினங்கள் எண்ணிக்கை**



[2005 ஏப்ரல் 1

| இனம் | எண்ணிக்கை | அடர்த்தி ஒரு சதுர கிமீ-க்கு |
|---|---|---|
| கோழிகள் | 8,61,19,929 | 662 |
| வாத்துகள் | 2,46,960 | 2 |
| வான்கோழிகள் | 51,014 | 1 |
| மற்றவை (காடைகள், கினி கோழிகள்) | 1,73,370 | 1 |
| **மொத்த கோழியினங்கள்** | **8,65,91,273** | **666** |

**2003–2004 கால்நடை கணக்கெடுப்பின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:**

- கால்நடைகளின் எண்ணிக்கை *1997*-ல் *241.26* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *3.38* சதவீதம் அதிகரித்து *249.42* இலட்சத்தை எட்டியுள்ளது.
- கோழி இனங்களின் எண்ணிக்கை *1997*-ல் *365.11* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *137.16* சதவீதம் என்ற கணிசமான அளவு அதிகரித்து *865.91* இலட்சத்தை எட்டியுள்ளது.
- மொத்த கறவைப் பசுக்களின் எண்ணிக்கையில் *1997*-ல் *28.67* சதவீதமாக இருந்த கலப்பின கறவைப் பசுக்களின் பங்கு *2004*-ல் *63.15* சதவீதமாக அதிகரித்துள்ளது.
- செம்மறியாடுகளின் எண்ணிக்கை *1997*-ல் *52.59* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *6.35* சதவீதம் அதிகரித்து *55.93* இலட்சத்தை எட்டியுள்ளது.
- வெள்ளாடுகளின் எண்ணிக்கை *1997*-ல் *64.16* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *27.45* சதவீதம் அதிகரித்து *81.77* இலட்சத்தை எட்டியுள்ளது.
- எருமைகளின் எண்ணிக்கை *1997*-ல் *27.41* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *16.58* இலட்சமாகக் குறைந்துள்ளது.
- பன்றிகளின் எண்ணிக்கை *1997*-ல் *6.09* இலட்சமாக இருந்தது. இது *2004*-ல் *3.21* இலட்சமாகக் குறைந்துள்ளது. இது *47.29* சதவீதம் குறைவாகும்.



2005 ஏப்ரல் 1]

**மாநிலத்திலுள்ள கலப்பின கறவை பசுக்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட கறவை எருமைகளின் மாவட்ட வாரியான எண்ணிக்கை**

| வ. எண் | மாவட்டங்கள். | கலப்பின கறவை பசுக்கள். | தரம் உயர்த்தப்பட்ட கறவை எருமைகள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 689 | 336 | 1,025 |
| 2 | கோயம்புத்தூர் | 1,59,403 | 9,788 | 1,69,191 |
| 3 | கடலூர் | 85,134 | 9,185 | 94,319 |
| 4 | தருமபுரி | 88,575 | 11,560 | 1,00,135 |
| 5 | திண்டுக்கல் | 78,932 | 18,381 | 97,313 |
| 6 | ஈரோடு | 1,03,577 | 36,595 | 1,40,172 |
| 7 | காஞ்சிபுரம் | 29,037 | 8,693 | 37,730 |
| 8 | கன்னியாகுமரி | 43,642 | 562 | 44,204 |
| 9 | கரூர் | 30,534 | 16,707 | 47,241 |
| 10 | கிருட்டிணகிரி | 72,759 | 947 | 73,706 |
| 11 | மதுரை | 77,362 | 3,553 | 80,915 |
| 12 | நாகப்பட்டினம் | 53,303 | 8,895 | 62,198 |
| 13 | நாமக்கல் | 79,991 | 36,651 | 1,16,642 |
| 14 | பெரம்பலூர் | 77,969 | 2,825 | 80,794 |
| 15 | புதுக்கோட்டை | 25,542 | 492 | 26,034 |
| 16 | இராமநாதபுரம் | 25,437 | 373 | 25,810 |
| 17 | சேலம் | 2,08,016 | 27,482 | 2,35,498 |
| 18 | சிவகங்கை | 27,346 | 705 | 28,051 |
| 19 | தஞ்சாவூர் | 1,04,148 | 6,471 | 1,10,619 |
| 20 | நீலகிரி | 23,335 | 159 | 23,494 |
| 21 | தேனி | 37,146 | 2,972 | 40,118 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 1,13,430 | 10,247 | 1,23,677 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | திருவள்ளூர் | 33,435 | 13,576 | 47,011 |
| 24 | திருவண்ணாமலை | 1,08,059 | 619 | 1,08,678 |
| 25 | திருவாரூர் | 70,176 | 2,842 | 73,018 |
| 26 | தூத்துக்குடி | 47,409 | 3,049 | 50,458 |
| 27 | திருநெல்வேலி | 1,36,870 | 8,581 | 1,45,451 |
| 28 | வேலூர் | 1,63,357 | 2,340 | 1,65,697 |
| 29 | விழுப்புரம் | 1,35,766 | 4,539 | 1,40,305 |
| 30 | விருதுநகர் | 92,052 | 6,815 | 98,867 |
| | **மொத்தம்** | **23,32,431** | **2,55,940** | **25,88,371** |

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்:**

கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம் உலர்தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனமாகும். இத்தீவனங்களில் உலர் தீவனம் அதிக அளவில் உட்கொள்ளப்படுகிறது. பசுந்தீவன உற்பத்தி உணவு சங்கிலியில் அத்தியாவசிய இணைப்பாக இருந்தபோதிலும், இன்றும் வேளாண்மை உற்பத்திக்கு துணையானதாகவே கருதப்படுகிறது. கால்நடை வளர்ப்பு மனிதனுக்குத் தேவைப்படாத வைக்கோல், கதிர், அரிசி தவிடு, சிறுசிறு தானியக் குறுணைகள், எண்ணெய் வித்துக்கள்மூலம் கிடைக்கும் பிண்ணாக்கு மற்றும் பருத்திக்கொட்டை போன்றவற்றைச் சார்ந்துள்ளது. ஊட்டச்சத்து குறைவாக உள்ள, அறுவடைக் கழிவுகளான சோளம் மற்றும் வைக்கோல் கதிர்களே பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு பெரும்பான்மை உணவாக அமைந்துள்ளது. அதிக விளைச்சலைப் பெறுவதற்காக உயர்ரக நெற்பயிர்கள் பயிரிடப்படுவதால் தானியக் கதிர்களின் விகிதம் மனிதர்களுக்கு சாதகமாகி வைக்கோல் உற்பத்தி மற்றும் கிடைக்கும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதுதவிர வறட்சி மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவும் நெல் பயிரிடுவது குறைந்துள்ளதால், வைக்கோல் கிடைக்கும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம், புல்வெளிகள் மற்றும் புல் தரைகளில் மேய்வதாலும், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் வளரும் பசுந்தீவன பயிர்கள், களைகள், வரப்பிலுள்ள புற்கள், மர இலைகள் மற்றும் கலப்படத் தீவனப் பயிர்கள் மூலமாகவும் கிடைக்கின்றன. பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றது. பண்ணையில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் பெரும் பங்கு





வகிக்கிறது. கால்நடை பராமரிப்பு பொருளாதார ரீதியாக வெற்றி பெறுவதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் ஆகியவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது. ஏனெனில், கால்நடைப் பண்ணையின் மொத்தச் செலவினத்தில் தீவனச் செலவு 65–70 சதவீதமாக அமைகிறது. மேலும் கால்நடைகளின் திறனை மேம்படுத்த போதிய தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்குவது இன்றியமையாததாகும். மாநிலத்தில் உள்ள மொத்த மாட்டினத்திற்கு ஒரு வருடத்திற்கு 157.67 இலட்சம் மெட்ரிக் டன்கள் உலர்தீவனமும், 591.27 இலட்சம் மெட்ரிக் டன்கள் பசுந்தீவனமும் தேவைப்படுகிறது. பொதுச் சொத்து ஆதாரங்களில் 16.99 இலட்சம் ஹெக்டேரும், திறந்தவெளிக் காடுகளாக 16.20 இலட்சம் ஹெக்டேரும் மேய்ச்சலுக்குக் கிடைக்கின்றன.

மாநிலத்தில் தற்போதுள்ள மேய்ச்சல் நிலம் மற்றும் இதர புல்வெளிகளின் பரப்பளவு 1.13 இலட்சம் ஹெக்டேர் ஆகும். இது மாநிலத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 0.91 சதவீதமாகும். நிலத்தின் தாக்குபிடிக்கும் தன்மைக்கும் அதிகமாக கால்நடைகளை மேயவிடுவதால், நிலத்தின் வளம் ஆண்டாண்டு குறைந்து கொண்டே வருகிறது. மேய்ச்சல் நிலங்களை எந்தவித வேற்றுமையுமின்றி வேறு வகையான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதால், அவை தரங்குறைந்து போவதுடன், ஒன்றுமில்லாமற் போவதைத் தவிர்க்கும் பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்தவகையான பயன்பாட்டிற்கும் மாற்றக் கூடாது என்றும், அவ்வாறு மாற்ற வேண்டுமெனில், அதே மாவட்டத்தில், மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்குச் சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்தி ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக் கூடாது என்ற நிபந்தனையை அரசு விதித்துள்ளது. மாற்று நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்துவதற்காகும் செலவினமாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/–, அதாவது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/– உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வைப்பு நிதியாக செலுத்தப்பட வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் மேய்ச்சல் நில வசதிகளை அதிகரிக்க இத்துறை இதர துறைகளுடன் சேர்ந்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கீழ்க்காணும் பசுந்தீவன அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

❖ நிலமற்ற மற்றும் ஏழை விவசாயக் குடும்பங்களை கால்நடை பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த, சமுதாய தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுயஉதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி தீவன வசதிகளைப் பெருக்க ஊக்குவித்தல்;

- நீண்ட கால பசுந்தீவன வகையைச் சார்ந்ததும் அதிக மகசூல் அளிக்கக்கூடியதுமான நேப்பியர், உயர் ரக கோ.1, கோ.3, பாராபுல் மற்றும் கினியா புல் வகை ஆகியவற்றைப் பயிரிட ஊக்குவித்தல்;
- காராமணிப் பயறு வகை, ஸ்டைலோ சாந்தஸ், கோ.3 புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடுபயிராக விளைவிக்க ஊக்குவித்தல்;
- தீவன விதைகள் அடங்கிய சிறு பைகளை இலவசமாக வழங்குதல்;
- அதிக அளவிலான இரும்பு மற்றும் புரதச் சத்து கொண்டுள்ள அகத்தி மரக்கன்றுகளை விநியோகித்தல்;
- புரதச் சத்து மிக்கதும் அதிக அளவில் வறட்சித் தன்மையைத் தாங்கக் கூடியதுமான சூபாபுல் மரக்கன்றுகளை விநியோகிப்பதுடன், சூபாபுல் மரக்கன்றுகளை கால்நடை நிலையங்களில் வளர்த்தல்;
- கால்நடை நிலையங்களில் கத்தாழையை பயிர் செய்யவும் விநியோகிக்கவும் ஊக்குவித்தல்;
- வறட்சி நிவாரண பணியின்கீழ், பசுந்தீவன பற்றாக்குறையை எதிர்கொள்ள 8 கால்நடை பண்ணைகளில் உள்ள 500 ஏக்கர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. இத்துடன் கிராமங்களில் உள்ள 2,725 ஏக்கர் மேய்ச்சல் நிலங்கள் மேம்படுத்தப்பட்டன;
- ரூ.24.00 இலட்சம் செலவில் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடுவதற்காக 120 மெட்ரிக் டன் சோளம் மற்றும் மக்காச்சோள விதைகள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது; மற்றும்
- ரூ.180.00 இலட்சம் செலவில் 75,000 கால்நடைகளுக்குத் தேவையான 2,250 மெட்ரிக் டன் அடர் தீவனம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு 50 சதவீதம் மானியத்துடன் வழங்கப்பட்டது.

## கால்நடை அபிவிருத்தி

**கால்நடைப் பண்ணைகள்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல்பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட இன கால்நடைகளை உற்பத்தி செய்யும்பொருட்டு



கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் செயல்விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 ஆட்டுப் பண்ணைகளாகும். இத்துடன், கோழி இனப்பெருக்கம் மேற்கொள்ள பிரத்தியேகமாக ஒரு பண்ணை உள்ளது. பண்ணைகள் அமைந்துள்ள இடம் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடைகள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணையின் பெயர். | பராமரிக்கப்படும் கால்நடைகள். |
|---|---|---|
| 1 | அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | பசுவினம், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழியினம் மற்றும் குதிரைகள் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | எருமை, செம்மறியாடு, பன்றி மற்றும் கோழியினம் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | பசுவினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | பசுவினம், எருமையினம், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழியினம் |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) | எருமை மற்றும் பசுவினம் |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | பசுவினம், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழியினம் |


[2005 ஏப்ரல் 1

| | | |
|---|---|---|
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | பசுவினம் மற்றும் வெள்ளாடு |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்) | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு |
| 10 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறியாடு |
| 11 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு |
| 12 | கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | கோழியினம் மற்றும் வான்கோழி |

**பசுவின மற்றும் எருமையின அபிவிருத்தி:**

மாநிலத்தில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் பசுவினம் 84.64 சதவீதமாகும். இதில் அயலினம், கலப்பினம், நாட்டினம் மற்றும் உள்நாட்டு தூய்மை மரபினம் முறையே 0.44%, 55.79%, 6.01% மற்றும் 37.76 சதவீதமாகும். மாநிலத்தில் மொத்தமுள்ள மாட்டினங்களில் எருமையினம் 15.36 சதவீதமும், மொத்த கால்நடைகளில் 7 சதவீதமாகவும் உள்ளது. இனப்பெருக்கத்திற்கு உகந்த வயதுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் விழுக்காடு கீழ்வருமாறு:

**இனவாரியாக – இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டினம்**






2005 ஏப்ரல் 1]

| வ. எண் | இனம். | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை. | மொத்த இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை சதவீதம். |
|---|---|---|---|
| 1 | *பசுவினம்* | | |
| | அயலினம் | 23,067 | 0.46 |
| | கலப்பினம் | 25,65,876 | 51.21 |
| | உள்நாட்டு தூய்மை மரபுடையவை | 1,80,399 | 3.61 |
| | நாட்டினம் | 13,47,446 | 26.89 |
| | **மொத்தம்** | 41,16,788 | 82.17 |
| 2 | *எருமையினம்* | | |
| | முர்ரா | 62,543 | 1.25 |
| | தரம் உயர்த்தப்பட்டவை | 2,25,483 | 4.50 |
| | நாட்டினம் | 6,05,303 | 12.08 |
| | **மொத்தம்** | 8,93,329 | 17.83 |
| 3 | **மாட்டினங்கள்** | 50,10,117 | 100.00 |

நாட்டினங்கள் நோய் எதிர்ப்பு சக்தியுடன் அதிக வெப்ப நிலையைத் தாங்கக் கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாகவும், பால் கொடுக்கும் காலம் குறைவாகவும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மறு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட காலம் அதிகமாகவும் உள்ளனவாக இருக்கின்றன. ஆனால், அயலினங்கள் நீண்ட காலத்திற்கு பால் தருவனவாகவும், விரைவில் பருவமடைவதுடன் கூடுதலாக பால் தருவனவாகவும், குறுகிய வற்றுக் காலம் மற்றும் குறுகிய இடைவெளியில் கன்று ஈனும் காலம் உடையனவாகவும் விளங்குகின்றன. ஆனால், இவற்றிற்கு நோய் எதிர்ப்புத் திறனும் தட்ப வெப்ப நிலையைத் தாங்கும் தன்மையும்

குறைவாக உள்ளது. நாட்டினங்களில் காணப்படும் இப்பொருளாதார அம்சங்களை மேம்படுத்துவதுடன், அவற்றில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்பவெப்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களை குறுகிய காலத்தில் ஏற்கத்தக்க செலவில் பாதுகாப்பதற்கு நாம் கலப்பினப் பெருக்கம் செய்வது ஒன்றே சிறந்த வழியாகும். உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி, அதிக வெப்ப நிலையின் கடுமை, நோய்களைத் தாங்குதல், தீவனத்தைச் சிறப்பான பொருட்களாக மாற்றுதல் மற்றும் பழப்பிடங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளும் தன்மை ஆகியவற்றிற்கான அணுக்களைக் கொண்டுள்ளது.

1952–53 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இத்துறையால் கால்நடை உற்பத்தியைப் பெருக்க கேந்திர கிராமத் திட்டம் குறிப்பிட்ட இடங்களில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து அறிவியல்பூர்வமான கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களின் பலனாக சிறந்த கால்நடைகளின் இனப்பெருக்கம், தீவன முறை, நோய்க் கட்டுப்பாடு ஆகியவை செயலாக்கப்பட்டன. இது பின்னர் 1974-ல் தீவிர கால்நடை மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்தின் மூலமாக தீவிர கால்நடை கலப்பின இனவிருத்தி செய்யப்பட்டு பால் உற்பத்தி பெருக்கப்பட்டது.

நம் மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினப் பெருக்கத்திற்கு கீழ்க்காணும் கொள்கை பின்பற்றப்படுகிறது:


- ஜெர்சி மற்றும் ப்ரிசியன் போன்ற அயலின பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கத்திற்குத் தகுதியுள்ள நாட்டினப் பசுக்களில் கலப்பினப் பெருக்கம் செய்தல்;
- முர்ரா இனப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு நாட்டின எருமைகளை இனப்பெருக்கம் செய்தல்;
- கலப்பினப் பசுக்களை கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்தல்;
- காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களை அவை வளர்க்கப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

இனப்பெருக்கத்திற்கு மேற்கூறிய கொள்கையைக் கடைப்பிடிப்பதன் விளைவாக 1994 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 17.71 இலட்சமாக இருந்த கலப்பினப் பசுவினங்கள் எண்ணிக்கை, 2004 ஆம்



ஆண்டு கணக்கெடுப்பில் 50.99 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 188 சதவீதம் அதிகமாகும். இதே காலகட்டத்தில், உள்நாட்டினங்களின் எண்ணிக்கை 59.09 இலட்சத்திலிருந்து 34.52 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 42 சதவீதம் குறைவாகும். நாட்டினங்களின் எண்ணிக்கை குறைந்திருந்த போதிலும் கலப்பின பசுக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 18.79 ஆக இருந்துள்ளது. செயற்கை முறை கருவூட்டல் பணியை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் மாநிலத்தில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

பால் உற்பத்தி மதிப்பீடு மற்றும் தனி நபருக்கு கிடைக்கும் பால் அளவு




**செயற்கை முறை கருவூட்டல்:**

கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. மேலும், குறுகிய காலத்தில் குறைந்த செலவில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்களை மாட்டினங்களில் பரப்ப செயற்கை முறை கருவூட்டல் தொழில்நுட்பம்தான் வழி என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, பசு மற்றும் எருமைகளின் மரபுத் திறனை அதிகரிக்க அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்தைக் கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் பணி 1948 முதல் இத்துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு உறைவிந்தைக் கொண்டு செயற்கை முறை கருவூட்டல் பணி

அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 1993 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களிலும் உறைவிந்தை மட்டுமே பயன்படுத்தும் வகையில் திரவ விந்து பயன்படுத்துதல் படிப்படியாக குறைந்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இன்று, நமது மாநிலம் ஆண்டுக்கு 44 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் பணியை மேற்கொண்டு நாட்டிலேயே முதலாவதாக திகழ்கிறது.

மாநிலமெங்கும் பரவியிருக்கும் 3,176 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

- ஈச்சங்கோட்டை – தஞ்சாவூர் மாவட்டம்
- அபிசேகப்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்
- ஓசூர் – கிருட்டிணகிரி மாவட்டம்
- உதகமண்டலம் – நீலகிரி மாவட்டம்

உறைவிந்துக் குச்சிகளை உறைய வைக்கவும், சேமித்து வைக்கவும் திரவ நைட்ரஜன் அவசியமாகும். ஈச்சங்கோட்டை, அபிசேகப்பட்டி, ஓசூர் மற்றும் உதகமண்டலத்தில் தலா இரண்டும், சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றத்தில் (மதுரை) தலா ஒன்றும் ஆக பத்து திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யும் ஆலைகள் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகளை சேமித்து வைக்கவும், அவற்றை பல்வேறு கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியை நிறைவேற்றும்பொருட்டு வழங்கவும், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய பன்னிரண்டு இடங்களில் தலா ஒரு உறைவிந்து வங்கி செயல்பட்டு வருகின்றது.

2004–2005-ல் மாநிலத்தில் (பிப்ரவரி 2005 வரை), 23.34 இலட்சம் உறைவிந்துக் குச்சிகளும், 1.42 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும், உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் மற்றும் திரவ நைட்ரஜன் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

சினைபிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவீதத்தை அதிகரித்து விவசாயிகள் பயன்பெற *"மலட்டுத் தன்மை நீக்க முகாம்"* நடத்தப்பட்டு



வருகிறது. இந்த முகாம்களில் எல்லா கால்நடைகளும் முழுமையாக பரிசோதிக்கப்பட்டு, குறைகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கு உகந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் இன வாரியான மாட்டினங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் மாட்டினம் |
|---|---|---|
| 1 | அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை | ஜெர்சி, ஹோல்ஸ்டியன் பிரிசியன், ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி, ஹோல்ஸ்டியன் பிரிசியன் கலப்பினம், முர்ரா |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | ஜெர்சி, கலப்பினம், சிந்தி, காங்கேயம் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | முர்ரா, ஜெர்சி, கலப்பினம் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | ஜெர்சி, ஹோல்ஸ்டியன் பிரிசியன், கலப்பினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | கலப்பினம் |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கலப்பினம், தார்பார்க்கர் |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | முர்ரா |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை | உம்பளாச்சேரி |

கருமாற்றல் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த இத்துறை முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. கருமாற்று தொழில்நுட்பப் பிரிவுகள், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை மற்றும் கிருட்டிணகிரி மாவட்டம் ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 1

**செம்மறியாடு அபிவிருத்தி:**

மாநிலத்தில் வளர்க்கப்படும் மொத்த ஆடுகளில் செம்மறியாடுகள் எண்ணிக்கை, 41 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. அவற்றுள் கலப்பினம் மற்றும் நாட்டினம் முறையே 14 மற்றும் 86 சதவீதமாக உள்ளது. மாநிலத்தில் செம்மறியாடு வளர்ப்பு ஒரு முக்கிய துணை வருவாயைத் தரக்கூடிய கால்நடை பராமரிப்புத் தொழிலாக விளங்குகிறது. இது குறைந்த அளவு தொழில்நுட்பத்தையே பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. செம்மறியாடு வளர்ப்பு பெரும்பாலான நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு முதன்மையான தொழிலாகவும், சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் உதவுகிறது. இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர, வயல்களுக்கு உரமிடுவதற்காக செம்மறியாடுகளை "கிடை" அடைப்பதன் மூலமும் வருவாய் கிடைக்கிறது.

துறையிலுள்ள பண்ணைகளில் பராமரிக்கப்படும் செம்மறியாடு இனங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | கீழக்கரிசல் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கீழக்கரிசல் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | இராமநாதபுரம் வெள்ளை |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | மாண்டியா, கோரிடேல் கலப்பினம் |
| 5 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | வேம்பூர் |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | மேச்சேரி |
| 7 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் | சென்னை சிவப்பு |

இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு உள்ளூர் செம்மறியாடுகளின் ஈற்றின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இனப் பெருக்கத்திற்காகவும் செம்மறியாடுகள் விற்கப்படுகின்றன.



2005 ஏப்ரல் 1]

**வெள்ளாடு அபிவிருத்தி:**

ஏழைகளின் பசுவான வெள்ளாடுகள், மாநிலத்தின் மொத்த செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளில் 59 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இதில் ஆண் மற்றும் பெண் முறையே 29 மற்றும் 71 சதவீதம் ஆகும். விரைவில் இனப்பெருக்கம் ஆகும் தன்மை, கூடுதல் வளர்ச்சி விகிதம் மற்றும் எளிதில் சந்தையில் விலை போகுதல் ஆகியவையே வெள்ளாடு வளர்ப்பிற்கு முக்கிய காரணங்களாகும். செம்மறியாடுகள் மற்றும் மாடுகள் உயிர் வாழ முடியாத இடங்களில் கூட வாழ்ந்து பெருகக்கூடிய தன்மை வெள்ளாடுகளுக்கு உண்டு. இவை செம்மறியாடுகளை விட அதிக செரிமானம் ஆகும் தன்மையைக் கொண்டிருப்பதோடு பயிர்க் கழிவுகளை சிறந்த முறையில் உட்கொள்ளும் தன்மை வாய்ந்தனவாகவும் உள்ளன. மேலும், மாடு மற்றும் செம்மறி ஆடுகளை விட வெள்ளாடுகள் குறிப்பிடத்தக்க அளவு உயிர் எடைக்கு அதிக இறைச்சி மற்றும் பாலைக் கொடுக்கும் தன்மையைப் பெற்றுள்ளன. மாநிலத்தில் வெட்டப்படும் கால்நடைகளில், வெள்ளாடுகள் வெட்டப்படும் சதவீதம் அதிகமாகும். இதற்கு இவ்விறைச்சி அதிகம் விரும்பி உண்ணப்படுவதும், சந்தையில் அதிக விலை கிடைப்பதும் முக்கிய காரணங்களாகும்.

புன்செய் சாகுபடி மண்டலங்களில் பண்ணை மேலாண்மையை வெள்ளாடு வளர்ப்புடன் ஒருங்கிணைக்கும் நோக்குடன் முன்னோடித் திட்டம் ஒன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையுடன் இணைந்து தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, பெண்ணாகரம், நல்லாம்பள்ளி, பாலக்கோடு, மொரப்பூர் மற்றும் அரூர் ஆகிய பகுதிகளில் ரூ.22.81 இலட்சம் செலவில் மூன்று ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

துறையிலுள்ள பண்ணைகளில் கீழ்க்காணும் வெள்ளாட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | கொடிவள்ளி |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | ஜமுனாபாரி |

| | | |
|---|---|---|
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | தெல்லிசேரி, ஜமுனாபாரி |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | கொடிவள்ளி, ஜமுனாபாரி |
| 5 | கால்நடைப் பண்ணை, கொருக்கை | ஜமுனாபாரி |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | ஜமுனாபாரி |
| 7 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | கன்னி வெள்ளாடு, ஜமுனாபாரி |

உள்ளூரிலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை அதிகரிக்கும்பொருட்டு இந்த ஆடுகள் ஈன்ற குட்டிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**தீவிர உடல் நல பாதுகாப்புத் திட்டம்:** செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பெரும்பாலும் மேய்ச்சலை நம்பியே வளர்க்கப்படுவதால் இவைகளுக்கு ஒட்டுண்ணிகள் தாக்கம் ஏற்பட்டு பல தொல்லைகள் வர வாய்ப்புள்ளது. அதன் காரணமாக உடல் எடை குறைவு, இனவிருத்திக்கு காலம் கடந்து அதிக அளவிலான இறப்பு சதவீதம், குறைவான இனப்பெருக்க சதவீதம் போன்ற பல உடல் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இதனால் இறைச்சியின் தன்மை, தோல் தன்மை மற்றும் இறைச்சி எடைக் குறைவும் ஏற்படுகின்றன.

குடற்புழுவினால் மேற்கூறிய இன்னல்களிலிருந்து செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைக் காப்பாற்ற, அவை காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு இத்துறை 1982-83 முதல் தீவிர உடல் நல பாதுகாப்பு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளால் வளர்க்கப்படும் செம்மறியாடுகளுக்கு ஒட்டுண்ணியால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2004-05-ல் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

**இதர கால்நடை அபிவிருத்தி:**

**பன்றி அபிவிருத்தி:** பன்றிகள் தீவனத்தை அதிக இறைச்சியாக மாற்றுவது, சந்ததிகளுக்கிடையே மிகக் குறைந்த இடைவெளி,



விரைவாய் வளர்வது, அதிக குட்டிகள் ஈனுவது போன்ற தன்மைகளைக் கொண்டுள்ளதால், பன்றி வளர்ப்பு ஆடுகள் வளர்ப்பு போல சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வாழ்க்கை நடத்திட உதவும். மேலும் நலிந்த பிரிவினருக்கு பயனுள்ள சுய வேலை வாய்ப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் கூடுதல் வருவாயை ஈட்டித் தரவும் முடியும். ஆரம்ப காலங்களில் பன்றி வளர்ப்பு அறிவியல் பூர்வமாக மேற்கொள்ளப்படவில்லை என்றபோதிலும், சமீப காலங்களில் இது முன்னேற்றம் கண்டுள்ளது. பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இத்துறை பன்றி வளர்ப்பை ஊக்குவிக்கிறது.

இத்துறை பண்ணைகளில் பராமரிக்கப்படும் பன்றி இனங்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர். | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | லாண்ட்ரேஸ் மற்றும் லாண்ட்ரேஸ் கலப்பினம் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | லாண்ட்ரேஸ், டியூரக் மற்றும் பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 7 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |

[2005 ஏப்ரல் 1

உள்ளினச் சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசின் உதவியுடன் வெளி மாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கப்பட்டு மேற்கண்ட பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

**குதிரை வளர்ப்பு:** ஓசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடை பண்ணையைச் சுற்றிப் பார்த்து கண்காணிப்பதற்கு குதிரைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. குதிரைகளின் இனப் பெருக்கத்தை புனரூட்டவும் அவற்றைப் பாதுகாக்கவும் குதிரை வளர்ப்பு பிரிவு ஒன்று ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் இயங்கி வருகிறது. இப்பிரிவில் கத்தியவார் மற்றும் தாரோ இன குதிரைகள் பராமரிக்கப்படுகின்றன. தாரோ இன மற்றும் கத்தியவார் ஆண் குதிரைகள் ஒரு சேர்க்கைக்கு முறையே ரூ.2,000/– மற்றும் ரூ.500/– என்ற விகிதத்தில் இயற்கை முறை கருவூட்டலுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

**நாய் வளர்ப்பு:** நமது மாநிலத்தில் தலை சிறந்த நாய் இனங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை ஆகியவை உள்ளன. இந்த உள்ளூர் இன நாய்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மற்ற இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கும் நல்ல தேவை இருந்ததால் லாப்ரடார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் 1997–98 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன. இந்நாய்க் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டின நாயினங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை நாய்ப்பிரியர்கள் வளர்க்க ஊக்குவிக்கும் நோக்குடன் இத்துறை சென்னையில் நடைபெற்ற நாய் கண்காட்சியில் கலந்து கொண்டது.

**கோழியின அபிவிருத்தி**


"கோழியினம்" என்ற சொல் பொருளாதார நோக்கத்திற்காக வளர்க்கப்படும் கோழிகள், வாத்துகள், வான்கோழிகள், கூஸ் வாத்துகள், காடைகள், அன்னங்கள், நெருப்புக்கோழிகள் மற்றும் கினி கோழிகளை உள்ளடக்கியதாகும். மாநிலத்தில் வளர்க்கப்படும் மொத்த கோழியினங்களில் 99 சதவீதம் கோழிகளே ஆகும். மாநிலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் 2-வது இடத்தை வகிக்கிறது. புறக்கடை கோழி வளர்ப்பாக மட்டும் இருந்த கோழி வளர்ப்பு கடந்த முப்பது ஆண்டுகளில் சுறுசுறுப்பான, உயிர்த்துடிப்புள்ள, நன்கு செயல்படக்கூடிய தொழிலாக முன்னேறியுள்ளது. தற்போது



2005 ஏப்ரல் 1]

இப்பிரிவு ஒரு ஆற்றல் வாய்ந்த தொழிலாக மாற்றம் அடைந்து ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு மிகப் பெரிய வாய்ப்பாக உள்ளது.

கோழி விரிவாக்க நிலையங்கள் இச்செயல்முறையை விரைவு படுத்தியதுடன் அவை செயல்விளக்கப் பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, கோழிப் பண்ணைத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையமாகவும் விளங்கின. மேலும், தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் தோற்றுவிப்பு, கோழி வளர்ச்சிக் கூடங்களைத் தோற்றுவிக்க அரசின் உதவி, வெள்ளைக்கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல், தரமான தீவனம் எளிதில் கிடைத்தல் ஆகியவை கோழி வளர்ப்பிற்கு பெரும் பங்காற்றி இது ஒரு தொழிலாக மேன்மையடையச் செய்தது. கோழி வளர்ப்பு தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய வர்த்தகரீதியான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. நாமக்கல் பகுதி மாநிலத்தின் முட்டை கூடை மையமாக உருவெடுத்து, மொத்த முட்டை உற்பத்தியில் 65 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.




கோழி வளர்ப்பு ஒரு பெருந்தொழிலாக முன்னேற்றம் அடைந்த போதிலும், மாநிலத்தில் பண்டைக் காலம் தொட்டே சுற்றுச்சூழலை

[2005 ஏப்ரல் 1

பாதிக்காத புறக்கடை கோழி வளர்ப்பு இலாபகரமான தொழிலாக கடைப்பிடிக்கப்படுகிறது. இது கிராமப்புறங்களிலுள்ள பல ஏழை விவசாயிகளின் வாழ்க்கை பிழைப்பை நடத்திட ஆதாரமாக இருப்பதுடன், மாநிலத்தின் மொத்த முட்டை உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கொண்டுள்ளது. புறக்கடை கோழி வளர்ப்பானது ஒரு குடும்பத்திற்கு 5 முதல் 10 கோழிகள் என்ற சிறிய முதலீட்டில் நடத்தப்படுகிறது. குடும்பத்திற்குத் தேவையான இறைச்சி மற்றும் முட்டைகள் இக்கோழிகளிலிருந்து கிடைக்கின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் கோழிகள் பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டை மற்றும் இறைச்சியாக மாற்றித் தருகின்றன. இந்தக் கோழிகள் இறப்பை உண்டு பண்ணக்கூடிய வெள்ளைக்கழிச்சல் என்ற நோய் தாக்குதலுக்கு ஆளாகி இறக்க நேரிடுகின்றது. கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாப்பதற்கு இத்துறையால் அனைத்து கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களில் தடுப்பூசி போடப்படுகின்றன. மேலும் இந்நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டு இத்துறையால் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான வெள்ளைக்கழிச்சல் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வான்கோழி வளர்ப்பு:** விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்பு பற்றி பிரபலப்படுத்த வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புறக்கடை வான்கோழி வளர்ப்பு ஒரு இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், வான்கோழிப் பிரிவு ஒன்று ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.4.24 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன், இத்துறையில் ஏற்கெனவே உள்ள உள்ளிருப்பு வசதிகளைப் பயன்படுத்தி மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, அபிசேகப்பட்டி, ஒரத்தநாடு மற்றும் கோழி விரிவாக்க நிலையம், போலிவாக்கம் ஆகிய இடங்களில் தலா ஒரு வான்கோழி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வான்கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள உள்ளூர் விவசாயிகளுக்கு வான்கோழி குஞ்சுகள் விற்கப்படும்.

மேலும், வான்கோழி வளர்ப்பு கிராமப்புறங்களில் பிரபலபடுத்தவும், சுயவேலைவாய்ப்பை உருவாக்கி பெண்கள் தன்னிறைவு பெறவும்,



2005 ஏப்ரல் 1]

இத்துறை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் சுயஉதவி குழுக்களுடன் ஒருங்கிணைந்து “பண்ணை கூட்டு வான்கோழி வளர்ப்பின் மூலம் பெண்களை தன்னிறைவு அடைய ஊக்குவித்தல்” என்ற திட்டத்தினை தேனி மாவட்டத்திலுள்ள எல்லா வட்டங்களிலும் ரூ.10.195 இலட்சம் செலவில் மூன்று ஆண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.

**சிறப்புத் திட்டங்கள்:**

கால்நடை பராமரிப்பு இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கை ஆதாரமாகவும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நிலமற்ற ஏழை எளியோர்களுக்கும் முதன்மை தொழிலாகவும் உள்ளது. வேலை பெருக்கு திட்டங்களை நன்கு தெரிவு செய்து ஒழுங்காக செயல்படுத்தினால் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் துணையாக இருப்பதுடன் நிரந்தர கிராமப்புற வளர்ச்சியை காண வழிவகுக்கும். இதனைக் கருத்தில்கொண்டு, ஏழை எளிய மற்றும் நலிவுற்ற மக்களின் நலன் மற்றும் பொருளாதாரத்தினை மேம்படுத்த, இத்துறை பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

**அ. கால்நடை பாதுகாப்புத் திட்டம்:**

இத்திட்டம் கால்நடை மருத்துவ வசதிகளைப் பெற பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கும் முழுமையான கால்நடை மருத்துவ வசதி அளிக்கும் நோக்குடன் சிறப்பு முகாம்கள் அங்கேயே நடத்தப்படுகின்றன. இவ்வகை முகாம்களில் உடல் நலம் பேணுதல், நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, குடற்புழு நீக்குதல், ஆண்மை நீக்கம் செய்தல், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலட்டுத் தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள், தீவன உற்பத்தி முறைகள் மற்றும் கன்றுகள் பேரணி போன்றவை செயல்விளக்கத்துடன் நடத்தப்பட்டு கிராம மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது. ஆண்டுவாரியாக நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை, பயனடைந்த கால்நடைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு கீழ்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை | பயனடைந்த கால்நடைகள் (இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2001–2002 | 4,613 | 55.57 | 231.00 |
| 2 | 2002–2003 | 4,812 | 56.13 | 214.00 |
| 3 | 2003–2004 | 4,812 | 55.63 | 178.04 |
| 4 | 2004–2005 (18-3-2005 நாளில்) | 4,594 | 53.46 | – |

2004–05–ல், ரூ.185.19 இலட்சம் மொத்த செலவில் 5,005 முகாம்கள் நடத்தப்படும்.

**ஆ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையமும், ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும், கோத்தகிரி மற்றும் கூடலூரில் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2004-05-ல் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் பசுந்தீவன உற்பத்தியை வலுப்படுத்த, ரூ.4.00 இலட்சம் செலவில் சொட்டு நீர்ப் பாசன சாதனங்கள் மற்றும் பண்ணையில் உள்ள குட்டை தூர்வாரி ஆழப்படுத்த வழங்கப்பட்டது. மேலும், மேற்கூறிய இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கான ஊதியத்திற்காக ரூ.2.50 இலட்சம், ஆக மொத்தம் ரூ.6.50 இலட்சம் வழங்கப்பட்டது.

**இ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின் மூலம் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில் தற்போது இயங்கி வரும் உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம்,



வேட்டைக்காரன்புதூரிலும், தேனி மாவட்டம், உத்தமபாளையத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளும், திண்டுக்கல்லில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

2004–05-ல் மேற்கூறிய இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவை பராமரிக்கவும், அதிலுள்ள பணியாளர்களின் ஊதியத்திற்கு ரூ.9.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் இத்திட்டப் பகுதியில் உள்ள 300 விவசாயிகளுக்கு, பயிற்சியளிக்க ரூ.5.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவையன்றி இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட வாகனங்களை பராமரிப்பதற்கு ரூ.1.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.16.00 இலட்சம் மேற்காண் திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

**டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 01-08-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசல், குன்றாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.6.42 கோடி ஒதுக்கீட்டில் முதல் கட்டமாக 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்த தொடர்பு பணி தம்பதிகள் மற்றும் இலக்கு விவசாயிகளுக்கு பல்வேறு கால்நடை பராமரிப்பு மற்றும் பசுந்தீவன அபிவிருத்தி முறைகளைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் மற்றும் முறைசாரா கால்நடை மருத்துவ சேவையை அளிக்கும் நோக்குடனும் செயல்படுத்தப்பட்டது. இரண்டாவது கட்டமாக புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 1997 முதல் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் 31-01-2004 உடன் முடிவடைந்தது.

இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு, இதன் பிரதிபலிப்புத் திட்டம், மதுரை, தேனி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர், திண்டுக்கல், நாமக்கல், கரூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், தருமபுரி, கிருட்டிணகிரி, நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 2001–02-லிருந்து 2004–05 வரை ரூ.221.79 இலட்சம் மொத்த செலவில் செயல்படுத்தப்பட்டது.

[2005 ஏப்ரல் 1

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஊராட்சிகள் மற்றும் பயிற்சி பெற்ற தொடர்பு பணி தம்பதிகள் மற்றும் இலக்கு விவசாயிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| திட்டம் | செயல்படுத்தப் பட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற தொடர்பு பணி தம்பதிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற இலக்கு விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிலை–1 மற்றும் 2 | 1,111 | 1,088 | 41,460 |
| திட்டப் பகுதிகளில் பிரதிபலிப்பு | 201 | 161 | 3,220 |
| திட்டமில்லா பகுதிகளில் பிரதிபலிப்பு | 5,161 | 5,161 | 1,03,220 |
| **மொத்தம்** | **6,473** | **6,410** | **1,47,900** |

**மாதிரி வரைவுத் திட்டம்:**

ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 1977–78 ஆம் ஆண்டு முதல் கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, இறைச்சி ஆகியவை பற்றி நம்பகமான புள்ளிவிவரங்களை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்கிறது. மேலும் இது கால்நடை மேலாண்மை முறைகளை ஆண்டுதோறும் மற்றும் பருவம்வாரியாக தொடர்ந்தாற்போல் விவரங்களைப் பெற்று ஆய்வு செய்து வருகிறது. இவ்வாறு களத்திலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் பால் உற்பத்தி மற்றும் இதர கால்நடை பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்கிறது. இது இத்துறையினால் தொடங்கப்பெற்று செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு கால்நடை மேம்பாடு பற்றிய செயல்பாடுகளின் தாக்கத்தை கணக்கிடவும், கண்காணிக்கவும் உதவுகின்றது. இந்த ஆய்வு அளிக்கும் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் திட்டமிட உதவுகின்றது.

2004–05-ல் குளிர்காலம் நீங்கலாக முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு பின்வருமாறு:



2005 ஏப்ரல் 1]

| இனம் | கோடைக் காலம் | மழைக் காலம் | மொத்தம் |
|---|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | 15.13 | 16.96 | **32.09** |
| முட்டை (மில்லியன்களில்) | 21.04 | 23.05 | **44.09** |
| இறைச்சி (மில்லியன் கிலோ) | 14.75 | 13.31 | **28.06** |

கால்நடை கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. இரு கணக்கெடுப்புக்குட்பட்ட காலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வதற்கு கால்நடை இடைக்கால கணக்கெடுப்புப் பிரிவு ஒன்று 1981 ஆம் ஆண்டு முதல் இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுச் சங்கங்கள்:**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல் முறைப் பதிவாளராக கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரை சங்கத்தின் உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே சங்கங்களின் நோக்கமாகும். 2004-05-ல், இத்துறையில் மொத்தம் 696 சங்கங்கள் இருந்தன. இதில் 269 சங்கங்கள் செயல்படுபவை மற்றும் 427 சங்கங்கள் செயல்படாதவை. பெரும்பாலான செயலற்ற சங்கங்கள் வெள்ளாடு சங்கங்கள் ஆகும். தற்போது நிலவிவரும் வறட்சி மற்றும் மேய்ச்சல் நிலம் பற்றாக்குறையினால் பெரும்பாலான செயலற்ற சங்கங்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்க இயலவில்லை. இதனால் இதுவரை 156 செயலற்ற சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளன.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

சிறப்பான மருத்துவப் பாதுகாப்பு, மருத்துவ சேவை மற்றும் பொருளாதார மேன்மைக்கு ஏற்ற ஆரோக்கியமான உற்பத்தி சுழற்சி போன்றவை சிறந்த கால்நடை உற்பத்தி முன்னேற்றம் அடைவதற்கு திறவுகோலாக அமையும். இவற்றை வழங்குவதில் கால்நடை பராமரிப்புத் துறை பெரும் பங்காற்றுகிறது. இத்துறையால் தொழில்நுட்ப அறிஞர்கள் மாநிலம் முழுமையும் பரவியுள்ள [illegible] நிலையங்கள் மூலமாக இப்பணியினை வழங்குகிறார்கள்.



18529. சென்னை-600 008 லகம்

**கால்நடை உடல் நலம் பேணுதல்:**

**(அ) கால்நடை நிலையங்கள்:**

1959–60-களில் ஆரம்ப காலத்திலிருந்த 120 கால்நடை நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு 2004–05-ல் 1,323 என்ற அளவில் உயர்ந்துள்ளது. தற்போது கால்நடை நிலையங்களான உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 6 பன்முக மருத்துவமனைகள், முதன்மை மருத்துவர் (உதவி இயக்குநர்) கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 22 முதன்மை மருத்துவமனைகள், கால்நடை மருத்துவர் (உதவி இயக்குநர்) கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 139 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 1,156 கால்நடை உதவி மருத்துவர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக உடல் நலம் பேணும் பணிகள் வழங்கப்படுகின்றன.

பன்முக மருத்துவமனைகள் சென்னையில் சைதாப்பேட்டை, மதுரையில் தல்லாகுளம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாநகராட்சிகளில் செயல்பட்டு வருகின்றன. இவை உள் நோயாளி வசதிகள், ஈனியல் மருத்துவச் சிகிச்சை, மருத்துவம், எக்ஸ்-ரே வசதி போன்ற சிறப்பான மருத்துவ வசதிகளை அளித்து வருகின்றன. இந்த 6 நிலையங்கள் மட்டுமின்றி பொள்ளாச்சி, வேலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை நிலையங்களும் எக்ஸ்-ரே வசதிகளைக் கொண்டுள்ளன. கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதுடன் நாட்டின பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின் தரத்தை உயர்த்தும் பொருட்டு செயற்கை முறை கருவூட்டல் பணியையும், தடுப்பூசி, குடற் புழு நீக்கம் ஆகியவற்றின் மூலம் உடல்நலம் பேணும் பணியையும் ஆற்றி வருகின்றன. இந்நிலையங்களில் மலட்டுத் தன்மை நீக்கப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு முழுமையான சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு 2000 ஆண்டு வாக்கில் ஒவ்வொரு 5,000 கால்நடைகள் கொண்ட அலகுகளுக்கு ஒரு கால்நடை மருத்துவ நிலையம் இருத்தல் வேண்டும் என்று தேசிய வேளாண் குழுமம் பரிந்துரைத்துள்ளது. சமீபத்திய கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 131.57 இலட்சம் கால்நடை அலகுகள் உள்ளன. தேசிய வேளாண் குழுமம் பரிந்துரைத்துள்ள அளவினை நிறைவேற்றுவதற்கு தமிழ்நாட்டிற்கு 2,631 கால்நடை நிலையங்கள் தேவைப்படுகின்றன. 2004–05 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் குழுமத்தின் பரிந்துரைகளின்படி கால்நடை மருத்துவப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக



234 கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தற்போது 1,323 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு கால்நடை மருத்துவ நிலையமும் சுமார் 9,945 கால்நடை அலகுகளுக்கு மருத்துவம் அளிக்கிறது. சராசரியாக ஒரு கால்நடை நிலையம் 10 கிராமங்களுக்குச் சேவை செய்கிறது. கடந்த 10 ஆண்டுகளில், ஆண்டு வாரியாகக் கால்நடை நிலையங்களின் வளர்ச்சி கீழ்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | நிலையங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பன்முக மருத்துவ மனை | முதன்மை மருத்துவ மனை | கால்நடை மருத்துவ மனை | கால்நடை மருந்த கம் | மொத்தம் |
| 1 | 1995-96 | 3 | 21 | 94 | 765 | **883** |
| 2 | 1996-97 | 3 | 21 | 104 | 765 | **893** |
| 3 | 1997-98 | 3 | 24 | 121 | 807 | **955** |
| 4 | 1998-99 | 3 | 24 | 141 | 828 | **996** |
| 5 | 1999-00 | 3 | 24 | 141 | 838 | **1,006** |
| 6 | 2000-01 | 3 | 25 | 139 | 839 | **1,006** |
| 7 | 2001-02 | 3 | 25 | 139 | 849 | **1,016** |
| 8 | 2002-03 | 3 | 25 | 139 | 849 | **1,016** |
| 9 | 2003-04 | 6 | 22 | 139 | 922 | **1,089** |
| 10 | 2004-05 | 6 | 22 | 139 | 1,156 | **1,323** |

தற்போதைய மின்னணு காலத்தில் தொடர்பு சாதனமான தொலைபேசி, திறமையாக மேலாண்மை மற்றும் வழிகாட்டுதல், திடீரென ஏற்படும் நோய்க்கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பேரழிவு மற்றும் இயற்கைச் சீற்றங்களின்போது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவைப்படுகிறது. தொலைபேசி வசதிகள் தற்சமயம் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் உள்ளதால் கால்நடை மருத்துவப் பணிகள் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் பணிகளை கால்நடை வளர்ப்போரின் வீடுகளுக்கே சென்று வழங்க தொலைபேசி வசதி கூடுதல் சேவையாக அமையும். எல்லா கால்நடை நிலையங்களுக்கும் படிப்படியாகத் தொலைபேசி வசதி ஏற்படுத்துவது என்ற நோக்குடன் முதல் கட்டமாக 2003–04 ஆம் ஆண்டில் தொலைபேசி வசதி இல்லாத 15 மாவட்ட தலைமையிடங்களில் உள்ள

கால்நடை நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக 2004–05–ல், வட்ட தலைமையிடங்களில் உள்ள 50 கால்நடை நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

தண்ணீர் உயிர் வாழ்வதற்குத் தேவையான அமிர்தமாகும். வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் கடந்த இரண்டாண்டுகளில், 1,024 ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலைத் தொட்டி, மின் இணைப்பு, மோட்டார் மற்றும் நீர்த் தொட்டிகள் ஆகியவை தேவையான கால்நடை நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இவ்வசதிகளை அப்பகுதிகளில் பராமரிக்கப்படும் கால்நடைகள் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் உபயோகித்துப் பயனடையும்.

நல்ல மற்றும் ஒருக்கம் செய்யப்பட்ட உள்ளிருப்புகள் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய திறவுகோலாக உள்ளது. மேம்படுத்தப்பட்ட உள்ளிருப்புகளினால் சிறப்பான கால்நடை சேவையை கிராமப்புறங்களில் அளித்து, கால்நடை நோய் நிகழ்வுகளைக் குறைத்து, ஒட்டுமொத்த உற்பத்தியை அதிகரித்து, குறிப்பிடும்படியான கிராம வளர்ச்சிக்கு உதவும். கிராமப்புற வளர்ச்சியை முடிவான இலக்காகக் கொண்டு, இத்துறையின் உள்ளிருப்புகளான கட்டடம் மற்றும் உபகரணங்கள் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன் மேம்படுத்தப்படவுள்ளன.

**(ஆ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்:**

குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி, குடற் புழு நீக்கம், இனவிருத்திக்காக செயற்கை முறை கருவூட்டல் போன்ற மருத்துவ உதவிகள் பெற கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாததால், கால்நடை மருத்துவப் பணிகளை வழங்க 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்கள் இருப்பிடத்திலேயே கிடைப்பதால், பொதுமக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளன.



**(இ) கிளை நிலையங்கள்:**

கால்நடை ஆய்வாளர்களின் தலைமையில் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவியையும், பசுவினம் மற்றும் எருமையினங்களுக்குச் செயற்கை முறை கருவூட்டல் பணியையும் அளித்து வருகின்றன.' மேலும் இவை சினைப் பரிசோதனையையும் கிளை நிலையப் பகுதியில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திரக் கணக்கெடுப்புப் பணியினையும் மேற்கொண்டுள்ளன. கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி தடுப்பூசிப் பணி மற்றும் குடற் புழு நீக்கப் பணிகளைச் செய்வதற்கும் இவர்களின் பணி பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. தற்சமயம் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 1,798 கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2004–05 (பிப்ரவரி 2005 வரை) கால்நடை நிலையங்களில் இனவாரியாகச் செய்யப்பட்ட பணிகளின் விவரம் கீழ்வருமாறு:

| இனம் | சிகிச்சை செய்யப் பட்டவை | ஆண்மை நீக்கம் | தடுப்பூசி | குடற் புழு நீக்கம் | செயற்கை முறை கருவூட்டல் |
|---|---|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | | | |
| பசு மற்றும் எருமையினம் | 92.45 | 1.96 | 64.67 | 24.90 | 26.01 |
| செம்மறி யாடுகள் மற்றும் வெள்ளாடுகள் | 55.24 | 3.72 | 36.85 | 41.46 | — |
| நாய்கள் | 2.88 | 0.06 | 0.29 | 2.15 | — |
| கோழியினம் | 8.75 | — | 207.49 | 1.98 | — |
| மற்றவை | 2.93 | 0.11 | 0.20 | 0.93 | — |
| **மொத்தம்** | **162.25** | **5.85** | **309.50** | **71.42** | **26.01** |

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மற்றும் வனத் துறையினால் முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைகளுக்காக நடத்தப்பட்ட இரண்டாவது ஓய்வு மற்றும் புத்துணர்ச்சி முகாம்களில்,

மருத்துவ உதவி செய்ய இத்துறை பங்கு கொண்டது. 18-12-2004 முதல் 04-01-2005 வரை நடைபெற்ற 48 நாட்கள் முகாமில், 112 யானைகள் பங்கு கொண்டன. இத்துறை அவற்றிற்கு கால்நடை மருத்துவ சேவையை அளித்தது.

**சுனாமிப் பேரழிவு:**

முன் நிகழ்ந்திராத ஆழிப்பேரலைகள் எனப்படும் "சுனாமி அலைகள்" தமிழக 13 கடலோர மாவட்டங்களை 26-12-2004-ல் தாக்கி மனித மற்றும் கால்நடைகளுக்குப் பேரழிவையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இச் சுனாமியினால் மீனவக் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டது மட்டுமல்லாமல், கால்நடைகளுக்கும் பெரும் சேதாரம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் கோழிகளைக் காப்பாற்ற முன் நிகழ்ந்திராத முயற்சியில், இத்துறை இடர் உதவிப் பணிகளை உடனே மேற்கொண்டது. மருத்துவ உதவி, தற்காலிக பாதுகாப்பு இடம், தீவனம் மற்றும் பசுந்தீவனம் மற்றும் மீட்கப்பட்ட கால்நடைகளுக்குத் தண்ணீர் வழங்குதல் போன்றவை இடர் உதவிப் பணிகளில் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பணிக்காக, சிறப்பு கால்நடை மீட்புகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவை பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மீட்புப் பணி, இடர் உதவிப் பணி மற்றும் இறந்த கால்நடைகளை புதைப்பதிலும் ஈடுபட்டன. இத்துடன் கால்நடைகளுக்குத் தடுப்பூசி மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டன.

மாவட்ட வாரியாக இறந்த கால்நடைகள் மற்றும் கோழிகளின் விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | இறப்பு | | அமைக்கப் பட்ட கால்நடை மீட்பு குழுக்கள் | ஏற்பாடு செய்யப் பட்ட முகாம்கள் |
|---|---|---|---|---|---|
| | | கால்நடைகள் | கோழிகள் | | |
| 1. | நாகப்பட்டினம் | 10,945 | 329 | 12 | 4 |
| 2. | கடலூர் | 1,068 | – | 3 | 4 |
| 3. | கன்னியாகுமரி | 263 | 3,053 | 8 | 32 |
| 4. | திருநெல்வேலி | 257 | 642 | 11 | 8 |
| 5. | காஞ்சிபுரம் | 118 | 103 | 2 | 2 |
| 6. | திருவள்ளூர் | 117 | 103 | 2 | 6 |
| 7. | சென்னை | 1 | – | 1 | 1 |
| 8. | புதுக்கோட்டை | 2 | – | – | – |
| 9. | தஞ்சாவூர் | 2 | – | 3 | – |
| 10 | திருவாரூர் | – | – | 3 | 1 |
| 11. | விழுப்புரம் | – | – | 5 | – |
| 12. | தூத்துக்குடி | – | – | 6 | – |
| 13. | இராமநாதபுரம் | – | – | 3 | – |
| | **மொத்தம்** | 12,773 | 4,230 | 59 | 58 |





கால்நடை வளர்ப்போருக்கு நிவாரணம் அளிக்க, இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து ரூ.2.80 கோடியை அரசு விடுவித்துள்ளது. அரசினால் இனவாரியாக அங்கீரிக்கப்பட்ட நிதியுதவிகளான ஒரு பசு/எருமைக்கு ரூ.10,000/–, வேலை மாடு/கன்றுக்குட்டிக்கு ரூ.5,000/–, செம்மறியாடு/வெள்ளாட்டுக்கு ரூ.1,000/– மற்றும் கோழிக்கு ரூ.50/– என்ற விகிதத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**நோய்த் தடுப்பு, கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்:**

"நலமான கால்நடைகள் நலமான நாட்டை உருவாக்கும்". பல்வேறு கால்நடை நோய்கள், உற்பத்திக் குறைவு மற்றும் இறப்பை ஏற்படுத்துவதால், தீவனப் பாதுகாப்பு மற்றும் கிராமியப் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கின்றன. நுண்ணுயிர் மற்றும் நச்சுயிரி நோய்கள், பெரும் நோய் இறப்பு மற்றும் பாதிப்பையும், ஓரணு மற்றும் குடல்–இரைப்பை ஒட்டுண்ணிகளால் உற்பத்தித் திறனும் குறைகின்றது. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி நமது கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்வதற்கும் அத்தியாவசியமாகும். மேலும் நோய்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இறுதியாக அவற்றை அறவே

ஒழிக்கப்படும் நிலை உண்டாக வழி வகுக்கிறது. மாநிலத்தில் கால்நடை நோய்களை எதிர்த்துப் போராட கால்நடைகளில் நிலவிவரும் நோய்த்தாக்கம் மற்றும் பரவியல் நிலவரம் பற்றிய தகவல் அவசியமாகும். இது நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளைத் திட்டமிடவும், நிதி, கால்நடை மருத்துவ ஆதாரங்கள் மற்றும் மனித சக்தியை முழுமையான அளவில் பயன்படுத்திடவும் அடித்தளமாக அமையும்.

**(அ) நோய்த் தடுப்பு:** "நோய் வரும் முன் காத்தல்" என்ற சொல்லுக்கு இணங்க இத்துறையால் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு முக்கியத்துவம் தந்து நோய்த் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில் உள்ள இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 8 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும் 9 வகையான நச்சுயிரி தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன. 2004-05-ல் (பிப்ரவரி 2005 வரை) 80.12 இலட்சம் டோஸ்கள் நுண்ணுயிர் தடுப்பூசியும், 595.18 இலட்சம் டோஸ்கள் நச்சுயிரி தடுப்பூசியும் இந்நிலையத்தில் தயாரிக்கப்பட்டன.

**(ஆ) நோய் கண்டறிதல்:** நோய்க் கிளர்வுகள் பற்றி முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை அளிக்க ஓர் நோய் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகும். அதே வேளையில் நோய்த் தொற்று அறிவியல் முறையாக நோய்கள் பற்றிய பகிர்வு மற்றும் உடல் நலக் கேட்டிற்கான பிரச்சினைகள் எவற்றில் உண்டாகின்றன என்பதை உறுதி செய்திட உதவுகிறது. இதன் பொருட்டு மாநிலத்தில் 15 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன. இவை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்கள் எப்படித் தாக்குகின்றன என்பதைக் கண்காணிக்கவும், கடுங்கண்காணிக்கவும் ஒரு சீரிய முறையைக் கடைப்பிடித்து, மாவட்ட அளவில் தடுப்பு நடவடிக்கைகளைத் தேர்வு செய்ய முக்கிய பங்கு ஆற்றுகின்றன. ஏற்கெனவே, நிகழ்ந்த நோய்க் கிளர்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதன் மூலம் அவை உண்டாகக் கூடிய இடங்கள் கண்டறியப்படுகின்றன. இவை கள கால்நடைப் பணியாளர்களுக்கு நோய் பற்றி அறிவிக்கவும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் உதவுகின்றன. இத்துடன், நோய்க் கிளர்ச்சி ஏற்படும்போது, நோய்களைக் கண்டறிய மற்றும் கட்டுப்படுத்த களப் பணியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி செய்து வருகின்றது. 2004–05-ல் (பிப்ரவரி 2005 வரை), இக்கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், நோய்களைக் கண்டறிய 252 நோய்க் கிளர்ச்சிகளில் உடனிருந்து, 2.18 இலட்சம் மாதிரிகளைப் பரிசோதனை செய்துள்ளன.





விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று நோய்களைக் கண்டறிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுடன் இணைக்கப்பட்ட நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர் கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை, பிரேதப் பரிசோதனை செய்வது, மலம், இரத்தம் மற்றும் இதர மாதிரிகளைப் பரிசோதனை செய்து நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளன. இத்துடன் நோய்த் தடுப்பு, நோய் கண்டறிவது மற்றும் பல்வேறு தொற்று நோய்கள் மற்றும் ஒட்டுண்ணி நோய்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதை விவசாயிகள் அறிய தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகின்றன. 2004–05-ல் (பிப்ரவரி 2005 வரை) 1,263 கோழிப் பண்ணைகளும், 1,094 கிராமங்களும் பார்வையிடப்பட்டு, 8,026 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப் பணியாளர்களுக்கு நோய் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும், ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகின்றது. நீல நாக்கு நோய் பற்றி முன்னதாக விரைந்து துல்லியமாகக் கண்டறிய நீல நாக்கு ஆய்வுப் பிரிவு இவ்வாய்வுக் கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்துடன் தேசிய வெக்கை நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ், வெக்கை நோய் பிணி சார்ந்த கடுங்கண்காணிப்பு மற்றும் ஊநீரில் கடுங்கண்காணிப்பு ஆகியவற்றில் ஈடுப்பட்டுள்ளது. இதில் மூக்கு மற்றும் கண் சார்ந்த மற்றும் பஞ்சு உருட்டு ஊநீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு வெக்கை நோய்க் கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்பது கண்டறியப்படுகிறது.

**(இ) நோய்க் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்:**

தொற்று நோய்களால் பன்னாட்டு ஏற்றுமதிச் சந்தையை நமது நாடு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஏனெனில் இந்தியக் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள், ஏற்றுமதியை

பெருக்க "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்யும்போதுதான் அவை உலகச் சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும். மேலும், பெரும்பாலான கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவது உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும். அதாவது, தற்போதைய உற்பத்தி மற்றும் உண்மையான உற்பத்தித் திறனுக்கான இடைவெளியைக் குறைத்து, கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட உதவும்.

பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இத்துறை குறிப்பிடத் தக்க சாதனையை எய்தியுள்ளது. மாடுகள் மற்றும் ஆடுகள் மிகப் பெரிய அளவில் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்து, அடையாளம் கண்டுகொள்ளத்தக்க மிக முக்கியமானதாகவும், பெரும் திருப்பு முனையாகவும் அமைந்தது. 1993-94 ஆம் ஆண்டு முதல் தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தியதன் விளைவாகவே இச்சாதனையை அடைய முடிந்தது. 2004 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோய் இல்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நோயைத் திறமையுடன் கட்டுப்படுத்த இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளன. 1998-99 ஆம் ஆண்டு முதல் பிணி சார்ந்த கடுங்கண்காணிப்பு மற்றும் ஊநீரில் கடுங்கண்காணிப்பு சோதனைகளை மேற்கொள்வதன் மூலம் வெக்கை நோய்க் கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்றும், வெக்கை நோய் எதிர்ப்புத் திறன் வாய்ந்த நோய் எதிர்ப்பான்கள் காணப்படுகிறதா போன்ற சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறது.

கால்நடைகளைத் தாக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு உதவியுடன் "கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவி" என்ற திட்டத்தினை பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதில், பயிற்சி/கருத்தரங்குகளுக்கு மட்டும் 100 சதவீதம் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்படவுள்ள முக்கிய நோய்கள் கீழ்வருமாறு:

❖ **கோமாரி நோய்:** கோமாரி நோய் நச்சுயிரிக் கிருமிகளினால் ஏற்படும் தொற்று நோய் ஆகும். இந்நோய் மாட்டினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கி அதிக நோயுற்ற விகிதத்தை ஏற்படுத்துகிறது. இதனால்



பால் உற்பத்திக் குறைவு, மலட்டுத் தன்மை மற்றும் இளங் கன்றுகள் இறப்பு போன்றவை ஏற்படுகின்றன. கோமாரி நோயின் தாக்கத்தினைக் குறைக்க, முறையாக அதிக அளவில் தடுப்பூசிப் பணி மேற்கொள்வதே சிறந்த வழியாகும். இந்த கோமாரி நோயின் தாக்குதலிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு 2004-05-ல் கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 15.00 இலட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இலட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இத்துடன் வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் 16.50 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் மண்டல நிலையம் ஒன்று இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் கோமாரி நோய் பற்றிய தொற்று நோய் மற்றும் நச்சுயிர் வகைகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

❖ **தொண்டை அடைப்பான்:** கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொண்டை அடைப்பான் நோய்க் கிளர்ச்சியில், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் மட்டும் 86 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. ஆகையால், இம் மாவட்டங்களில் கிளர்ச்சியைத் தடுக்க, 2004-05-ல் இம்மாவட்டங்களில் உள்ள 20 இலட்சம் கால்நடைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

❖ **சப்பை நோய்:** பொதுவாக சப்பை நோய்க் கிளர்ச்சி காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது. ஆகையால், இம்மாவட்டங்களில் கிளர்ச்சியைத் தடுக்க 2004-05-ல் இம்மாவட்டங்களில் உள்ள 20 இலட்சம் கால்நடைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

❖ **அடைப்பான்:** மனித விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்களுள் அடைப்பான் முக்கிய நோயாகும். அடைப்பான்

வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் அதிக அளவில் காணப்படுகின்றது. ஆகையால் 2004-05-ல் இவ்விரு மாவட்டங்களில் உள்ள 10 இலட்சம் கால்நடைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

❖ **ஆட்டுக் கொல்லி நோய்:** வெக்கை நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டபோதிலும், வெக்கை நோய் போன்றே ஒரு புதிய நோயான ஆட்டுக் கொல்லி நோய் விவசாயிகளுக்குப் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நோயைத் திறம்படக் கட்டுப்படுத்த, மாநிலத்தில் உள்ள எல்லா செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்குத் தடுப்பூசிப் பணி படிப்படியாக மேற்கொள்ள திட்டச் செயல்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2004-05-ல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 33.25 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நோய் அதிகம் தாக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய கால்நடைகளுக்குத் தடுப்பு நடவடிக்கையாக தடுப்பூசிப் பணி காலமுறைப்படி மேற்கொள்ளப்படுவதால் துள்ளுமாரி, ஆட்டம்மை மற்றும் வெள்ளைக் கழிச்சல் போன்ற மற்ற நோய்களின் கிளர்ச்சியும் குறைக்கப்பட்டுள்ளது. வெக்கை நோய் அறவே ஒழிப்பு, நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர் நோய்கள் கட்டுப்படுத்தல் மற்றும் பல்வேறு இதர நடவடிக்கைகளால், நமது மாநிலம் பெரும்பாலான கால்நடை நோய்களிலிருந்து விடுதலை பெற்று முன்னேறிக் கொண்டுள்ளது.

**விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொதுச் சுகாதாரம்**

விரிவாக்கப் பணியும் பிரச்சாரப் பணியும் அடிப்படை மற்றும் தற்கால கால்நடைப் பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் கண்டறிதலை அறிந்துகொள்ள முக்கியக் கருவியாக உள்ளது. இதனால், விவசாயிகள் தினம் தினம் எதிர்கொள்ளும் பல்வேறு கள பிரச்சினைகளில் தீர்வு காணவும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தவும் வழி வகுக்கும். மேலும், இத்துறையின் திட்டங்களும், செயல்முறைகளும் பற்றி பொதுமக்கள் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளவும் இயலுகிறது.



**"காண்பதே கற்றல்"** என்ற கொள்கையின்படி, பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் கண்டறிதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க இத்துறை, கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இத்துறை, உள்ளூர் விழாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் கண்காட்சிகளை நடத்தி கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில்நுட்பங்களும் கால்நடை பொதுச் சுகாதாரம் குறித்த அணுகுமுறைகளும் பொது மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சியிலும் மற்றும் கூட்டுறவு வார விழாவிலும் இத்துறை கலந்துகொள்கிறது. பலவகையான மக்கள் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ்கள் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தேவையான தற்கால தகவல்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதுமட்டுமின்றி, மாநிலமெங்கும் நடைபெறும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள், கண்காட்சிகள், திருவிழாக்கள் மற்றும் உள்ளூர்ச் சந்தைகளில் கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய நோய்கள் பற்றிய துண்டு பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம் மூலமாக கால்நடை பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பப்படுகிறது. 2004–05 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் தொடர்பான 32 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணிகளான துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுவரொட்டிகள், புத்தகக் குறிப்புகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை அச்சடிக்க சென்னை சைதாப்பேட்டையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது.

மனிதன் மற்றும் கால்நடைகள் தொன்று தொட்டே சார்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். இதனால் அவர்களிடையே பல நோய்கள் பரிமாற்றம் அடைகின்றன. இவை மனித-விலங்கினத்திற்கிடையே நோய் பரவுதல் எனப்படும். 70–80 சதவீத மக்கள் கிராமபுறங்களில் வசிப்பதாலும், அவர்களின் விவசாயம் செய்யும் முறை கால்நடைகளை நம்பி இருப்பதாலும் இப்பிரச்சினை நமது நாட்டில் முக்கியத்துவம் அடைகின்றது. விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களைக்

[2005 ஏப்ரல் 1

கண்காணித்து, தடுத்து, கட்டுப்படுத்தி மற்றும் முடிந்தால் அறவே ஒழித்தலுக்கு, கால்நடை பராமரிப்புத் துறை, முக்கியப் பங்காற்றுகிறது. இது சம்பந்தமாக நடைபெறும் சில பணிகள் பின்வருமாறு:

**(அ) வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புத் திட்டம்:**

தமிழ்நாட்டில் 27.17 இலட்சம் நாய்கள் உள்ளன. இதில் வீட்டு நாய்கள் மற்றும் தெரு நாய்கள் முறையே 73 சதவீதம் மற்றும் 27 சதவீதமாகும். நாட்டிலுள்ள மனித-விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்களுள் வெறிநாய்க் கடி நோய் இன்றும் முக்கியமானதாகும். இது ஆண்டுக்கு 30,000 – 35,000 இறப்பை ஏற்படுத்துகிறது. சமீபத்திய கணக்கீட்டின்படி, இதற்கு முக்கிய கடிக்கும் விலங்கு நாய் (91.5 சதவீதம்) ஆகும். இதில் 62.9 சதவீதம் தெரு நாய்கள் மற்றும் 37.1 சதவீதம் வீட்டு நாய்கள் ஆகும். மேலும், கால்நடைகளுக்கு இந்நோயைப் பரப்புவதில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆகையால் வெறிநாய்க் கடியை ஒழிப்பதின் மூலம் மனிதர்கள் மற்றும் இதர கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் சிறந்த வழியாகும். இக் குறிக்கோளுடன், வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புப் பிரிவு, மதுரை மற்றும் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றன.

இத்திட்டப் பிரிவுகளின் முக்கிய பணிகள்:

* முறையான மற்றும் காலமுறைப்படி வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு உரிய கட்டணம் வசூலிப்பதன் பேரில் வெறி நாய்த் தடுப்பூசி போடுதல்;
* நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடுதல்; மற்றும்
* பொதுமக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் விநியோகித்தல் மற்றும் நாய்க் கண்காட்சி நடத்துதல் மூலமாகத் தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

2004–05ல், இந்நிலையங்களில் மொத்தம் 5,884 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இத்துடன், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள 11,328 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவை தவிர, ஈரோடு, சேலம், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்ட நகர்ப்புறங்களில் உள்ள 18,180 நாய்களுக்கு அரசு சாரா அமைப்புக்களின் உதவியோடு ரூ.10.00 இலட்சம் செலவில் வெறிநாய்க் கடி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஆக மொத்தம், 35,392 தடுப்பூசி இப்பகுதிகளில் போடப்பட்டுள்ளதால், மனிதர்கள் மற்றும் நாய்களைத் தாக்கக்கூடிய வெறிநாய்க் கடி நோய் இந்நிலையங்களின் அருகில் உள்ள இடங்களில் கணிசமான அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 1]

**(ஆ) தடுப்பூசி போடுதல் மற்றும் குடற் புழு நீக்கம்:**

மாநிலமெங்கிலும் இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற் புழு நீக்கம் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு மற்றும் நாடாப் புழு, ஸ்ட்ராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis), ஒட்டுண்ணிகள் (Hydatidosis) போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகின்றன. முறையான குடற் புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் குடற் புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

**(இ) இறைச்சி ஆய்வு:**

மாநிலமெங்கிலும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 119 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சியை உண்ணும் பொதுமக்கள் நாடாப் புழு மற்றும் தசைப் பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

2004-05-ல் இறைச்சிக் கூடங்களில், 0.77 இலட்சம் மாடுகள், 16.33 இலட்சம் ஆடுகள் மற்றும் 0.07 இலட்சம் பன்றிகள் வெட்டப்பட்டு, 89.41 இலட்சம் கிலோ மாட்டிறைச்சி, 188.84 இலட்சம் கிலோ ஆட்டிறைச்சி மற்றும் 2.41 இலட்சம் கிலோ பன்றி இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டது.

**பிராணி நலத் திட்டங்கள்**

"ஒரு நாட்டின் பெருமிதம் மற்றும் ஒழுக்கத்தின் முன்னேற்றம், அங்கு விலங்குகளைக் கையாளுவதை கொண்டு எடை போட முடியும்" என்று காந்திஜி சரியாகவே கூறியுள்ளார். கால்நடைகள் கொடூரமான

[2005 ஏப்ரல் 1

முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து கீழ்க்காணும் மூன்று வழிகளில் இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகிறது:

- ⊗ சந்தை இடங்களில்
- ⊗ பயணத்தின்போது
- ⊗ இறைச்சிக் கூடங்களில்

பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960 பிரிவு 38–ன்படி, திருத்திய பிராணிகள் வதைத் தடுப்பு விதிகள் 2001–ன்படி, தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் கீழ்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது:

- ➔ மாவட்டத்திலுள்ள' பாதிக்கப்படும் விலங்குகளை மீட்டல், பாதுகாத்தல் மற்றும் பிராணிகள் வதைச் சட்டம் 1960–ஐ அமல்படுத்துதல்.
- ➔ விலங்குகளை வதைப்பவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து தண்டனை பெறும் பொருட்டு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துதல்.

தமிழ்நாட்டில் இந்திய பிராணிகள் நல வாரிய அங்கீகாரத்துடன் 92 பிராணிகள் நல அமைப்புகள் பல்வேறு பிராணிகள் நல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்க அரசு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது.

**சந்தை இடங்களில்**

மாநிலத்திலுள்ள 263 கால்நடைச் சந்தைகள் வாயிலாக பெரும்பாலான கால்நடை வர்த்தகம் நடைபெறுகிறது. தற்சமயம், இச்சந்தைகளில் அடிப்படை வசதிகளான தண்ணீர், நிழல் மற்றும் முதலுதவி ஆகியவை குறைவாகவே உள்ளன. மேலும், கால்நடைகளைப் பத்திரமாக ஏற்றுவதற்கு மற்றும் இறக்குவதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆகையால் இப்பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், கால்நடைகளைக் கையாளும் வர்த்தகர்களிடம் கால்நடைகளைக் கையாளும் மற்றும் போக்குவரத்தின்போது மனிதாபிமான முறையில் நடத்துவது குறித்து எடுத்துரைக்கவும், 10 சந்தைகளில் "கால்நடை



2005 ஏப்ரல் 1]

முதலுதவி நிலையங்கள்" ரூ.20.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | துடியலூர் |
| 2 | தருமபுரி | காவேரிப்பட்டினம் |
| 3 | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி |
| 4 | ஈரோடு | பெருந்துறை |
| 5 | திருநெல்வேலி | சாரனூர் |
| 6. | திருச்சிராப்பள்ளி | எஸ். கண்ணனூர் |
| 7. | தஞ்சாவூர் | புதுக்கோட்டை |
| 8. | சேலம் | மேச்சேரி |
| 9. | மதுரை | செக்கனூரணி |
| 10. | கரூர் | உப்பிடாமங்கலம் |

**பயணத்தின்போது**

கால்நடைகளை ஏற்றிச் செல்லும்பொழுது மனிதாபிமான முறையில் அவற்றை நடத்திட, இது பற்றிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் பற்றி கால்நடைகளை ஏற்றிச் செல்லும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமை ஊர்தி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், வேலையாட்கள் மற்றும் சுமை ஊர்தி உரிமையாளர்கள் இணையம் போன்றோர் அறிவுறுத்தப்பட்டனர். அவர்களும் அவற்றைக் கடைப்பிடிப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

பிராணிகள் வதைத் தடுப்புச் சங்க அலுவலர்கள் உதவியுடன் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள், வணிக சோதனைச் சாவடிகளில் உள்ள அலுவலர்கள் கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களைச் சோதிக்கின்றனர். குற்றம் புரியும் ஊர்திகளிலிருந்து கைப்பற்றப்படும் கால்நடைகள், அவற்றைப் பராமரிப்பதற்காக கால்நடை நல அமைப்பு மற்றும் பசு மடங்களில் ஒப்படைக்கப்படுகின்றன.

**இறைச்சிக் கூடங்களில்**

கால்நடைகள் வெட்டப்படும்போது மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும். உண்பதற்கு விநியோகம் செய்யப்படும் இறைச்சி

[2005 ஏப்ரல் 1

மற்றும் இறைச்சிப் பொருட்கள் சுகாதார முறையில் தயார் செய்யப்பட வேண்டும். கீழ்க்கண்ட 5 மாநகராட்சிகளில் உள்ள இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்த மொத்தம் ரூ.50.00 இலட்சம் வழங்கக் கோரி மத்திய அரசுக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது:

| வ. எண் | நகரத்தின் பெயர் | இறைச்சிக்கூடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | சென்னை | பெரம்பூர் |
| 2. | திருச்சிராப்பள்ளி | காந்தி சந்தை |
| 3. | மதுரை | வெத்திலைப்பேட்டை |
| 4. | சேலம் | சேலம் |
| 5. | கோயம்புத்தூர் | உக்கடம் |

இவ்விறைச்சிக் கூடங்களில் சாய்வு மேடை, வெட்டுவதற்கு முன் அவற்றைப் பார்வையிட இடம், நீர் வசதி, தண்ணீர் ஊடுருவ முடியாத தரை மற்றும் சுவர்கள், மின்சார வசதி, ஒரு கால்நடை வெட்டப்படும்போது மற்றவை அதனைப் பாராவண்ணம் தனியான இடம் மற்றும் குளிர்சாதனம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**முடிவுரை:**

இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளான கால்நடைகளில் மரபியல் முன்னேற்றம், சிறந்த கால்நடை மருத்துவச் சேவை, நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, கலப்பின கால்நடைகள் மற்றும் இனக் கலப்பு கோழிகள் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகளைப் பரப்புதல் போன்றவற்றால் கால்நடை பராமரிப்புத் தொழில் மேம்பட்டு, பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி அதிகரித்துள்ளது. சராசரியாக ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு கலப்பினம் மற்றும் எருமையினத்திற்கு முறையே 4.8 கிலோவிலிருந்து 6.2 கிலோவாகவும், 3.4 கிலோவிலிருந்து 4.1 கிலோவாகவும் அதிகரித்துள்ளது. இதனால் கிராமப்புற மக்களின் கையில் அதிகப் பணம் புழங்க வழிவகை செய்யப்பட்டு, அவர்கள் மேம்பட்ட வாழ்க்கையை வாழ்ந்திட உறுதியாக்கப்பட்டுள்ளது. மேலும், இது வலிமையான வேலைவாய்ப்பு அளிப்பதுடன், ஊட்டத்தர



2005 ஏப்ரல் 1]

அளவை அதிகரிக்கச் செய்து, பொருளாதார மற்றும் சமுதாய மேன்மைக்கு வழிவகுக்கின்றது. மாநிலத்தில் கால்நடைப் பிரிவின் சாதனைகள் ஊக்கமளிப்பதுடன், கிராமப்புற வளமை மற்றும் தேசிய வளமைக்கு வழி நடத்திட பிரகாசமான வாய்ப்பாக உள்ளது.

## 2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

(1) விரிவான தொற்று நோய்கள் கட்டுப்படுத்தும் திட்டம் ரூ.100.00 இலட்சம் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) 10 கால்நடை நிலையங்களில் ரூ.1.50 இலட்சம் செலவில் தகவல் தொடர்பு வசதி (தொலைபேசி) ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) அரசு சாரா அமைப்புகளின் உதவியோடு நகர்ப்புறங்களில் உள்ள 25,000 நாய்களுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் தடுப்பூசி போட்டு வெறிநாய்க் கடி நோயைக் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) உள்ளாட்சி அமைப்புகளின் ஆலோசனையுடன் 10 கால்நடைச் சந்தைகளில் ரூ.20.00 இலட்சம் செலவில் கால்நடை முதலுதவி நிலையங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) 2 கால்நடைப் பண்ணைகளில் 2 எரி உலைகள் ரூ.20.00 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தமிழ்நாடு கால்நடைப் அபிவிருத்தி முகமையானது, மத்திய அரசின் “தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தின்”கீழ் மாநில அளவில் கறவை மாடுகளின் இனப்பெருக்கத்தை வலுப்படுத்த 2003 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சுய செயல்பாடு கொண்ட நிறுவனமாகும்.

**இம்முகமையின் முக்கிய நோக்கங்களாவன:**

- ➢ விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ள தேவையான வழிமுறைகளை வகுத்தல்.
- ➢ உள்நாட்டு மாட்டினங்களைப் பாதுகாத்தல்.

[2005 ஏப்ரல் 1

- நிலையான செயற்கை முறை கருவூட்டல் மையங்களை நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் மையங்களாக மாற்றுதல்.
- உறைவிந்து தயாரிக்கும் நிலையங்களின் உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல்.
- நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொண்டு, திட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல்.

**திட்டப் பணி செயல்பாடுகள்:**

1. இந்த நிதி ஆண்டில், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கிவரும் 3 உறைவிந்து உற்பத்தி நிலையங்களை சர்வதேச தரக் கட்டுப்பாட்டு சான்று (ISO Certificate) பெறும் வகையில் மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்துவதன் மூலம் கால்நடை வளர்ப்போருக்கு உயர்தரமான உறைவிந்துக் குச்சிகள் மற்றும் உயர்தரக் கலப்பினக் கன்றுகள் கிடைக்கவும், பால் உற்பத்தி அதிகரிக்கவும், கிராமப் பொருளாதாரம் மேம்படவும் வாய்ப்புள்ளது.

2. உள்நாட்டு இனங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, 60 உம்பளாச்சேரி கிடேரிகள் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் விவசாயிகளுக்கு கடந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளன. 2005–06 ஆம் நிதியாண்டில் காங்கேயம் இனக் கால்நடைகளை இத்திட்டத்தின்கீழ் பாதுகாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது

3. கிராமப்புறங்களில் செயற்கை முறை கருவூட்டல் எண்ணிக்கையை அதிகரிக்கும்பொருட்டு கால்நடை வளர்ப்போர் வீடுகளுக்கே சென்று செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்கு ஏதுவாக சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 2004–05 ஆம் நிதியாண்டில் 200 புதிய நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் கிராமப்புற இளைஞர்களை கொண்டு தொடங்கப்பட உள்ளன. 2005–06 ஆம் நிதியாண்டில் மேலும் 250 புதிய நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. 2005–06-ல் கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நிலையான 250 செயற்கை முறை கருவூட்டல்



2005 ஏப்ரல் 1]

நிலையங்கள் நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றப்பட உள்ளன.

5. பால் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு 2004–05 ஆம் ஆண்டில் அதிக அளவில் பால் தரும் 1,600 கறவை மாடுகளை கண்டறிந்து அவற்றின் உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6. 2004–05 ஆம் ஆண்டில் 300 கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த கால்நடை ஆய்வாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி இம்முகமையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தைச் சார்ந்த 300 செயற்கை முறை கருவூட்டல் பணியாளர்களுக்கு மறு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

7. 2004–05 ஆம் ஆண்டில் உயர்தர தொழில்நுட்பப் பயிற்சியினை வெளி மாநிலங்களில் உள்ள பண்ணைகளின் மூலம் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

இந்தியா போன்ற வேளாண் நாடுகளில், உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதில் கால்நடை, கோழி மற்றும் மீன் சார்ந்த துறைகளே பெரும் பங்கு வகிக்கின்றன. நீர்ப் பற்றாக்குறையின் காரணமாக வேளாண் துறையின் வளர்ச்சியில் சரிவு ஏற்படுகின்ற சூழலில், கால்நடை பராமரிப்பு மற்றும் தீவன உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் ஏழை மக்களின் வருவாய் தரத்தைச் சீர்படுத்த இயலும். ஒட்டு மொத்த இந்திய வேளாண் வருவாயில் கால்நடை சார்ந்த தொழில்கள் மட்டுமே சீரான வளர்ச்சி பெற்று வளர்ந்து தற்சமயம் 26 சதவிகிதத்தை எட்டியுள்ளன. மாறிவரும் உலக வர்த்தக சூழலில், உலக வர்த்தக நிறுவனத்தின் நவீன வழிமுறைகளுக்கேற்ப சர்வதேசச் சந்தையில் ஈடு கொடுக்கும் வகையில் நமது உள்நாட்டு உற்பத்திப் பெருக்கம், தர மேம்பாடு, வர்த்தக முறை மற்றும் தொழில்நுட்பக் காப்பீடு போன்றவற்றில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் 20-09-1989-இல் உருவாக்கப்பட்டுள்ளது:

[2005 ஏப்ரல் 1

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கின மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்
- கால்நடை மற்றும் மீன் வள உற்பத்தி ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும்
- தொழில் நுட்பக் கல்வியை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புற பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்வி மூலம் பரப்புதல்

கடந்த வருடங்களில், இப்பல்கலைக்கழகம் கால்நடை, கோழியின மற்றும் மீன்வள மேம்பாட்டில் கிராமப்புற பண்ணையாளர்களின் பங்களிப்போடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கால்நடை உற்பத்தி, இலாப நோக்கு மற்றும் ஸ்திரத்தன்மை, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குறைந்த அளவில் வளத்தைப் பயன்படுத்தி அதிக அளவில் பயனீட்டும் பொருட்டு நிகழ்த்தியுள்ளது. அவையாவன: இன மேம்பாடு, அயல்நாட்டின் கலப்பின மேம்பாடு, உற்பத்தி முறை ஆய்வு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவினை அதிகரித்தல், தொடர்ந்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பயனாக கால்நடை மற்றும் கோழிகளுக்கான தடுப்பு மருந்துகளில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்களைக் கண்டறிய நோயறி சாதனங்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதைப் போன்றே நுண்ணுயிரிகளால் மீன்களுக்கு ஏற்படும் நோயையும் கண்டறிய சாதனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வளர்ந்துவரும் நிறுவனங்களுக்கு மனித வளம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். அவர்களின் தனித் திறமையை முன்னேற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் திறமையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் திட்டம் மற்றும் ஆராய்ச்சிக் கருவியினை மாற்றவும் குறுகிய கால திட்டங்கள் வரையறுக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களின் பணிகளும் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன.



2005 ஏப்ரல் 1]

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தில் 2004–2005 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:

| பாடப் பிரிவு | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி., | 135 | 73 | – | 208 |
| பி.எஃப்.எஸ்சி., | – | – | 33 | 33 |
| எம்.வி.எஸ்சி., | 51 | 14 | – | 65 |
| எம்.எஃப்.எஸ்சி., | – | – | 18 | 18 |
| பி.எச்டி. (கால்நடை) | 9 | – | – | 9 |
| பி.எச்டி. (மீன்வளம்) | – | – | – | – |
| வர்த்தக மேலாண்மையியல் முதுகலைப் பட்டயப் படிப்பு | – | – | – | – |
| உயிர்த் தகவல் நுட்பவியலில் முதுகலைப் பட்டயப் படிப்பு | 6 | – | – | 6 |
| உயிர்த்தொழில் நுட்பவியலில் எம்.ஃபில் படிப்பு | 6 | – | – | 6 |
| மொத்தம் | 207 | 87 | 51 | 345 |

தமிழக அரசு, இந்திய அரசு, இந்திய வேளாண் அறிவியல் கழகம் மற்றும் இதர முகமைகள் உதவியுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு உதவித்தொகைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 1

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் வளாக வசதியை வலுப்படுத்தவும், உயர்கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 94 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர 2004-2005-இல் தமிழக அரசு, ரூபாய் 66.33 இலட்சம் மதிப்பீட்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் நான்கு திட்டங்கள் மற்றும் ரூபாய் 52.509 இலட்சம் மதிப்பீட்டில் ஆளுநர் அறிக்கை 2001 திட்டத்தின்கீழ் மூன்று திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**பகுதி–2 திட்டங்கள்**

(1) செம்மறி ஆட்டம்மைக்கு திசு வளர்ப்பு முறை சார்ந்த தடுப்பூசி உருவாக்குதல்

(2) புதிய உத்திகளைப் பயன்படுத்தி கோழிப் பண்ணைகளில் ஈக்களை கட்டுப்படுத்துதல்

(3) கால்நடை உற்பத்திக் கல்வி மையத்தில் ஈமூ ஆராய்ச்சித் துறையை நிறுவுதல்

(4) இந்திய கெண்டை மீன்களின் மீன் குஞ்சு உற்பத்தியை பெருக்குவதற்காக மீன் விந்தணுக்கள் குளிர்பதனிடும் ஆய்வுக்கூடம் அமைத்தல்

**ஆளுநர் அறிக்கை, 2001**

(1) தேனி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக வீட்டு வான்கோழி வளர்ப்பின் மூலம் மகளிர் மேம்பாடு

(2) தருமபுரி மாவட்டத்தில் தரிசு நில மற்றும் வெள்ளாடு ஒருங்கிணைந்த பண்ணை முறையில் பொருளியல் ஆய்வு

(3) தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கிராம மக்களுக்கு மீன் வளர்ப்பு மூலம் உபரி வருமானம் பெறச் செய்தல்

இப்பல்கலைக்கழகத்தில் 76 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூபாய் 1,448.08 இலட்சம் மதிப்பீட்டில் செயல்பட்டு வருகின்றன.



2005 ஏப்ரல் 1]

**கால்நடை அறிவியலில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி சாதனைகள்**

- சொர்க்கம் (சி.ஆர்–I), கம்பு (சி.ஆர்–II), கம்பு (சி.ஆர்–III) ஆகியவற்றுடன் சர்க்கரை ஆலைக் கழிவுகளை சேர்த்து ஏழு வகை கலப்புத் தீவனங்களைத் தயாரித்து வெள்ளாடுகளுக்கு அளித்து மதிப்பீடு செய்யப்பட்டது. அனைத்து வகை தீவனங்களும் தமிழகத்தின் வடகிழக்கு மண்டலத்திலுள்ள கால்நடைகளுக்குத் தீவனமாக அளிக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

- காராமணி கோ 5 தீவனப் புல். வெள்ளாடுகளில் எவ்வாறு தீவனச் சத்தாக உதவுகிறது என்பதைப்பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட விலங்கினத்திற்கு மேற்கூறிய தீவனம் அளிக்கப்பட்டதில் சராசரியாக வெள்ளாடுகளின் எடை நாளொன்றுக்கு 44.29 கிராம் அதிகரித்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகைத் தீவனத்தை அளிப்பதால் வெள்ளாடுகளின் உற்பத்திக்காகும் செலவு 8 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

- மாடுகளுக்கு 50 சதவிகிதம் கரும்புத் தோகை மற்றும் 50 சதவிகிதம் பச்சைப் புல்லும் சேர்த்து அளித்தல், 100 சதவிகிதம் கரும்புத் தோகை மட்டும் அளிப்பதை விடச் சிறந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

- செயற்கை முறை இனவிருத்தி விந்து உற்பத்திச் செலவு, செயற்கை முறை விந்து செலுத்துதலுக்கான செலவு, கருத்தரிக்கும் விகிதம், செயற்கை முறை இனவிருத்தியில் ஏற்படும் இடர்பாடுகள் ஆகியன பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் ஒருமுறை செயற்கை முறையில் விந்து செலுத்துவதற்கு ரூ.22.65 செலவாகிறது. அதில் ரூ.6.73 விந்து உற்பத்திக்கும் ரூ.11.20 விந்துவை எடுத்துச் செல்வதற்கும், ரூ.4.62 விந்து மையத்திலும் செலவிடப்படுகிறது. கருத்தரித்தல் பசுக்களில் 34.53 சதவிகிதமும், எருமைகளில் 25.52 சதவிகிதமும் உள்ளது. சராசரியாக கருத்தரிக்க பசுக்கள் 2.9 முறையும், எருமைகள் 3.92 முறையும் செயற்கை முறை இனவிருத்தி செய்யப்பட வேண்டும். பண்ணையாளர்களுக்கு கருத்தரியாமையால் ஹோல்ஸ்டெயின் ஃபிரிசியன் இனத்தில் ரூ.1,143.68, ஹோல்ஸ்டெயின் ஃபிரிசியன் கலப்பினத்தில் ரூ.981.27, ஜெர்சி இனத்தில் ரூ.1,137.62, ஜெர்சி கலப்பினத்தில் ரூ.835.11, நாட்டினப் பசுவில் ரூ.264.73 பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

[2005 ஏப்ரல் 1

- கிராமப்புறத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும் கால்நடை ஓர் ஆதாரம் என்ற ஆய்வில், கால்நடை வளர்ப்பு, அதனைத் தொடர்ந்து ஏனைய பண்ணைசாரா தொழில்கள் மற்றும் பயிர்த் தொழில்களில் விவசாயிகளின் குடும்பத்தாரின் உழைப்பு பயன்படுத்தப்படுகிறது. பால் உற்பத்திக்கு பாலின் குறைந்த விலை, அதிக தீவன விலை ஆகியவை இடர்பாடுகளாக உள்ளன. ஆடு வளர்ப்பில் தீவனப் புல் இல்லாமை ஒரு பெரிய தடைக் கல்லாக உள்ளது.
- ஒருங்கிணைந்த வாத்து மற்றும் நெல்வயல் சாகுபடி செய்தபோது, அரிசி உற்பத்தியுடன் இணைந்தபோது 1.16 மடங்கு அதிக உற்பத்தியும், பாரம்பரிய நெல் வயலுடன் பார்க்கும்போது ரூ. 4,488.67 மற்றும் ரூ. 3,879.45 அதாவது ரூ.609.22 அளவு அதிக இலாபம் பெறப்பட்டுள்ளது.
- தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் சீர்படுத்துதல்-கிழக்குப்பகுதி கடற்பகுதி கிராம சுற்றப்புறச் சூழலில் செய்த ஓர் ஆய்வில் உற்பத்தியை சரிசெய்ய எருக்களைப் பயன்படுத்துவதாலும், கால்நடைகளுக்கு ஊட்டச் சத்துள்ள சமச்சீர் தீவனம் அளிப்பதும் உதவுகிறது. இது பண்ணையாளர்களின் நிலங்களிலேயே சரிசெய்து காணப்படுகிறது.

**தடுப்பூசி / நோயறி சாதனம் உற்பத்தி செய்தல்**

- பர்சா நோய் கிருமியைக் கண்டறிய மேப் சார்ந்த பொட்டு எலிசா முறை
- பர்சா நோயைக் கண்டறிய சிங்கிள் சீரம் டைல்யூசன் எலிசா சாதனம்
- பர்சா நோய்க்கான விபி2 மரபணுவை களத்திலே கண்டறிய ஆர்டிபிசிஆர் சாதனம்
- சிறுமூச்சுக்குழல் நோயைக் கண்டறிய மேப் சார்ந்த பொட்டு எலிசா முறை
- சிறுமூச்சுக்குழல் நோயைக் கண்டறிய மேப் சார்ந்த இம்யூனோ பெராக்சிடைஸ் சோதனை முறை
- சிறுமூச்சுக்குழல் நோயைக் கண்டறிய சிங்கிள் சீரம் டைல்யூசன் எலிசா சாதனம்



2005 ஏப்ரல் 1]

- சிறுமூச்சுக்குழல் நோய்க்கான எஸ்1 மரபணுவைக் களத்திலே கண்டறிய ஆர்டிபிசிஆர் சாதனம்
- சிறுமூச்சுக்குழல் நோய்க்கான ஹீம் அக்லூட்டினேசன் இன்ஹிபிசன் சோதனை முறை — வர்த்தக ரீதியாக செயல்படுத்த மெடாக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாடுகளில் காச நோயினை எளிதில் அறிய பாலிமரேஸ் சங்கிலி பரிசோதனை, ஒரு முறை தோல் ஊசி பரிசோதனையிலும் அமில எதிர்ப்பு சாய முறையிலும் சேர்ந்து நோய்களின் முடிவுகளை அறிதல்.
- செயலிழக்கப்பட்ட இருவகை நீலநாக்கு ஸ்ட்ரெயின் கொண்ட நோய்க் கிருமி தடுப்பு மருந்து களப்பணியிலும், பாதுகாப்பு மற்றும் ஆற்றலுடையது என அறியப்பட்டது.
- லெப்டோஸ்பைரா நோயினைக் கண்டறிய லிப் 32 ரீக்காம்பினென்ட் ஆண்டிஜென் லேடக்ஸ் அக்லூட்டினேசன் டெஸ்ட் சாதனம் கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியல் துறையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சிறுமூச்சுக்குழல் நோயைக் கண்டறிய சிங்கிள் ரேடியல் இம்யூனோ டிப்யூசன் சோதனை சாதனம், தேசிய வேளாண் தொழில்நுட்பத் திட்டத்தின் வாயிலாக கால்நடை உயிர்தொழில்நுட்பவியல் துறையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கால்நடை அறிவியலில் விரிவாக்கம்**

**பயிற்சித் திட்டங்கள்**

- கறவை மாடு வளர்ப்பு, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி, வான்கோழி, கறிக்கோழி, முயல் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, மற்றும் காடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளான் உற்பத்தி, ஒருங்கிணைந்த அலங்கார மீன் வளர்ப்பு, பண்ணை முறை, தீவன உற்பத்தி போன்றவற்றில் உள் மற்றும் வெளிப்புறப் பயிற்சிகள் இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பிரிவுகளான வேளாண் கல்வி மையம் (Krishi Vigyan Kendra) மற்றும் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மையம், ஆராய்ச்சி மையங்கள் வாயிலாக 56,163 மனித நாட்களுக்கு கால்நடைப் பண்ணையாளர்களின் நன்மைக்காக அளிக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சிகளின் வாயிலாக இவ்வாண்டு

பயனடைந்தோர் எண்ணிக்கை 31,282 ஆகும். இதில் 12,296 ஆண்களும், 18,986 பெண்களும் அடங்குவர். பல்கலைக்கழகத்தின் இத்தகைய விரிவாக்கப் பணியின் மூலம் 6,756 ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட பழங்குடியின மக்களும் பயன்பெற்றனர்.

**மீன்வள அறிவியலில் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்**

- உவர்நீர் இறால் வளர்ப்பில் தனியின மீதமுறை மற்றும் மிதத் தீவிர வளர்ப்பு முறையில் முறையே 48.4 கிலோ/ 0.1 ஹெக்டேர் /117 நாட்கள், 141.45 கிலோ / 0.1 ஹெக்டேர் / 125 நாட்கள் பெறப்பட்டது.
- மீன் வளர்ப்பில் மிதமான மற்றும் மிதத் தீவிர வளர்ப்பின் மூலம் முறையே 0.1 ஹெக்டேருக்கு 120.47 கிலோவும், 242.74 கிலோவும் பெறப்பட்டது.
- இறாலின் நோய்த் தடுப்பூக்கத்தை' அளவிட புதிய எதிர்ப்புயிரி நடைமுறைத் திட்டம் வரைவு செய்யப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புப் பண்ணைக்கான பொருளாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- தூத்துக்குடியிலுள்ள விவசாயிகள் தொழில்முனைவோர் ஆகியோர் அடங்கிய 40 பேர் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.
- இறால் நோய் ஆய்வகம், இறால் பண்ணையாளர்களுக்கு சேவை செய்து வருகிறது. இந்த ஆய்வகம் இவ்வாண்டில், 555 இறால் மாதிரிப் பொருட்களை சோதனை செய்து, பாலிமரேஸ் சங்கிலித் தொடர் சோதனை மூலமாக வெள்ளைப் பன்றி நோய், நுண் பெருக்கி உதவியாக மேனாடான் பேகுலா நுண் கிருமி நோய் மற்றும் ஹெபடோபான்கிரியாடிக் பார்வோ நச்சுயிரி கண்டறியப்பட்டுள்ளது.
- மீன் நூடுல்ஸ் தயாரிக்கும் முறை, சுரிமி தர மேம்பாடு போன்றவை குறிப்பிடத்தக்க ஆய்வு சாதனைகளாக உள்ளன. மீன் நூடுல்ஸ் தயாரிக்கும் முறை மகளிர் சுய உதவிக் குழுவிற்கு மாற்றப்பட்டு வணிகரீதியாக பயன்பெற உதவப்பட்டுள்ளது.



- தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள புன்னக்காயல் கிராம மீனவ மகளிருக்கு மதிப்பூட்டிய மீன்பொருள் தயாரித்து சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி 2004 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதியன்று பத்து மீனவ மகளிருக்கு அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கிராம மீனவ மகளிர் சுயமாக மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கு பயிற்சி பெற்றனர்.

**2005–2006–க்கான எதிர்காலக் கொள்கைகள்**

**கால்நடை:**

- கிராமப்புற வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு பல்முனை வேளாண் உற்பத்தியைப் பெருக்க புதிய வகை தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து பயன்படுத்துதல்.
- தொழில் மேம்பாட்டு நிறுவனங்களின் உதவியுடன் பாரம்பரிய மற்றும் பன்முனை தகவல் பரிமாற்றம் வாயிலாக நவீன தொழில்நுட்பத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- கால்நடைகள் மற்றும் கோழிகளைத் தாக்கும் நோய்களைத் தடுக்க உயிர்த் தொழில்நுட்பம் சார்ந்த தடுப்பு மருந்தினை உருவாக்குதல்.
- கால்நடைப் பண்ணையாளர்கள் தன்னம்பிக்கை பெறவும், நிலையான மேம்பாட்டினை அடையவும் தேவையான அறிவைப் பெற தகுந்த மனித வள மேம்பாட்டினை அடைய வழிவகுத்தல்.
- வேலைவாய்ப்பினை அதிகரிக்க கால்நடை உற்பத்தியில் தொழில்நுட்பம் மற்றும் சிகிச்சையியல் துறையில் புதிய முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பினை உருவாக்குதல்.
- கால்நடை மற்றும் மீன் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க பதப்படுத்தும் பிரிவு, கிராமப்புற தொழில் பூங்கா மற்றும் உணவுப் பூங்கா அமைக்க ஆவன செய்தல்.
- தொழிற்சாலைகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் துணையுடன் கூட்டுத் தொழில் முறை உருவாக்குதல்.

**மீன்வளம்:**

- இறால் வளர்ப்பை ஊக்குவிக்க தடுப்பூசிகள் மற்றும் நோயறி சாதனங்களை உருவாக்குதல் மற்றும் மதிப்பூட்டிய இறால் பொருட்கள் தயாரித்தல்.
- தேசிய மற்றும் சர்வ தேச அளவில் மீன் விற்பனையை அதிகரிக்க மீன்பொருட்கள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைத்தல்.

**திட்டம்:**

இப்பல்கலைக்கழகத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களான வளாக வசதி மேம்பாடு, தரமான உயர்கல்வி அளித்தல், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதோடு கால்நடை உற்பத்தியை உயர்த்தி கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை உடனுக்குடன் வழங்குதல் போன்றவை ஆகும். பத்தாவது ஐந்தாண்டு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.22,908.16 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. அவற்றுள், இப்பல்கலைக்கழகத்தின் நடப்பிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்த ரூ.17,232.28 இலட்சமும், புதிய ஆராய்ச்சித் திட்டங்களை வகுக்க ரூ. 5,675.88 இலட்சமும் ஒதுக்கீடு செய்யவும் கோரப்பட்டுள்ளது.


## 2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளில் இறப்பினை ஏற்படுத்தும் அடைப்பான் நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அசைப் போடும் சிறு விலங்கினங்களுக்கான பாதுகாப்பான வீரியமிக்க அடைப்பான் தடுப்பூசி தயாரிக்க ரூ.20.00 இலட்சம் செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கிராமப்புறங்களில் பன்றி உற்பத்தியைப் பெருக்கி பொருளாதார மேம்பாட்டினை அடையும் பொருட்டு, வீரிய ரக பன்றிகளை உருவாக்க ரூ.52.00 இலட்சம் செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. மீனவ மகளிரிடையே வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கவும் வருவாயினைப் பெருக்கவும், ஆயத்த மறுவடிவூட்டப்பட்ட மீன் உணவு ஆய்வுக் கூடம் அமைத்தல், மேலும் மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம் செய்ய ரூ.18.77 இலட்சம் செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.




**இணைப்பு – 1**

**கால்நடை பண்ணைகளில் பராமரிக்கப்படும் இனங்கள்**



## இணைப்பு – 2


மாநிலத்தில் மாவட்டவாரியாக கலப்பின கறவை பசுக்களின் எண்ணிக்கை






## இணைப்பு – 3

மாநிலத்தில் மாவட்டவாரியாக தரம் உயர்த்தப்பட்ட கறவை எருமைகளின் எண்ணிக்கை



# இணைப்பு II

(396 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 8

## பால் வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

உலகிலுள்ள மொத்த கால்நடைகளில் 15 சதவிகித கால்நடைகள் இந்தியாவில் உள்ளன. பால் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழகம் பால் உற்பத்தியில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழகத்தின் அமைப்புசார்/அமைப்புசாரா நிறுவனங்கள் மூலம் நாளொன்றிற்கு 127 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதில் 50 சதவீத பால் உற்பத்தியாளர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்படுவதால், மீதமுள்ள 63.50 இலட்சம் லிட்டர் உபரிப் பால் தினந்தோறும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் தினசரி விற்பனைக்கு வருகின்ற 63.50 இலட்சம் லிட்டர் உபரிப் பாலில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நாளொன்றிற்கு 23.76 இலட்சம் லிட்டர் பாலும், தனியார் பால் நிறுவனங்கள் மூலமாக நாளொன்றிற்கு 12.85 இலட்சம் லிட்டர் பாலும், அமைப்புசாரா பிரிவுகள் மூலமாக மீதமுள்ள பாலும் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில் பால் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பால் கொள்முதல் செய்வதில், தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆற்றல் வாய்ந்த வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமாகவும், புதிய பால் பண்ணைகள் உருவாக்குவதன் மூலமாகவும், கூட்டுறவு அமைப்பின் மூலம் பால் கொள்முதலில் இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தை அடைய, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலம் அதிக அளவு கொள்முதல் செய்யப்படும் பாலைக் கையாளுவதற்கு ஏதுவாக உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**2. துறையின் வரலாறு**

1958 ஆம் வருடத்தில் தமிழ்நாட்டில் பால் வளத் துறை ஆரம்பிக்கப்பட்டது. 1–8–1965 அன்று பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள் அனைத்தும் பால் வளத் துறைக்கு மாற்றப்பட்டன. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் செயற்பதிவாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் “ஆனந்த்” பாணியில் சங்கங்கள் செயல்படத் தொடங்கியபோது 1–2–1981 ஆம் தேதியன்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது. அதுவரை தமிழ்நாடு பால் வள நிறுவனத்தால் செய்யப்பட்டு வந்த, வணிக நடவடிக்கைகளாகிய பால் கொள்முதல், பதப்படுத்துதல், குளிரூட்டுதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்துப் பணிகளும் “ஆவின்” என்று எல்லோராலும் அறியப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு மாற்றப்பட்டன.

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால், தனியார் பால் நிறுவனங்கள், பால் பண்ணைத் தொழிலில் நுழைந்துள்ளன. இதனால் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் பால் நிறுவனங்களுக்கும் வியாபாரத்தில், ஒரு ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டது. இதன் காரணமாக நுகர்வோருக்கு தரம் நிறைந்த பால் மற்றும் பால் உபபொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**3. பால் வளத் துறையின் இரண்டு முக்கிய நோக்கங்கள்**

(1) நிலையான, மாறாத மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனை முறைகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல்.

(2) நுகர்வோர்க்கு தரமான பாலும், பால் பொருட்களும் நியாயமான விலையில் விற்பனை செய்தல்.

மேற்கண்ட இரண்டு முக்கிய நோக்கங்களை எய்தும் பொருட்டு, பின்வரும் பல்வேறு நடவடிக்கைகள் பால் வளத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை

கருவூட்டல் செய்தல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்புப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தவும், நீண்டகாலத்திற்கு பால் அளிப்பதில் முன்னேற்றம் அடையச் செய்யவும், தூய்மையான பால் உற்பத்தி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகள் குறித்த பயிற்சி உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது.

நவீன பதனிடும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தும், புதிய குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் பால் குளிர்விப்பான்கள் அமைத்தும், தேவையான புதிய வசதிகளை ஏற்படுத்தியும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்க வகை செய்யப்படுகிறது.

## 4. பால் வளத் துறையின் அமைப்பு

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் பால் வளத் துறையின் தலைவராவார். பால் கூட்டுறவுகளின் செயற்பதிவாளராக ஆணையர் செயல்படுகிறார். இவர் தமிழ்நாடு மாநிலத்திற்கு பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992-ன்கீழ் மாநில பதிவுச் சான்றிதழ் அதிகாரியாகச் செயல்பட்டு வருகிறார். மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அலுவல்சார் நிர்வாக இயக்குநராகவும் இருந்து வருகிறார்.

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் கீழ் சட்டபூர்வப் பணிகளான கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை, ஆய்வு, விசாரணை, தகராறு தீர்த்து வைத்தல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறார். பால் வளத் துறை ஆணையர், கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகளின் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். மேற்கண்ட சட்டபூர்வப் பணிகளைச் செய்வதற்கு ஆணையருக்கு உதவியாக கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் நிலையில், ஒரு துணை பால் ஆணையர் (கூட்டுறவு), ஒரு துணைப் பதிவாளர் (தலைமையிடம்) தவிர, மாவட்ட அளவில் 23 சரக துணைப் பதிவாளர்கள் (பால் பதம்), பதிவாளரின் சட்டபூர்வ அதிகாரங்களைப் பெற்று செயல்படுகின்றனர்.



## 5. பால் வளத் துறையின் செயல்பாடுகள்

பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பதிவு செய்து அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்துதல் போன்றவை பால் வளத் துறையின் முக்கிய பணிகளில் அடங்கும். நுகர்வோர்க்கு தூய்மையான பால் வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன், அவர்களுக்குத் தேவையான அளவு பால் கிடைப்பதையும் உறுதி செய்து வருகிறது.

விசாரணை, ஆய்வு, தண்ட வசூல் நடவடிக்கை மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் நிர்வாகக் குழுவினைக் கலைத்து, தனி அலுவலர்கள் நியமனம் செய்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களின் செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகிய சட்டபூர்வ பணிகளை பால் வளத் துறை செய்து வருகிறது. நீதிமுறை சார்புடைய அதிகாரங்களான தகராறுகளைத் தீர்த்தல், மேல்முறையீடு, சீராய்வு, மறுஆய்வு போன்றவற்றை முடிவு செய்யும் அதிகாரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால் பதம்) ஆகியோர்க்கு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992–ன்கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், மாநில பதிவு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பாலை அல்லது வருடத்திற்கு 500 மெட்ரிக் டன்னுக்கும் மேலாக பால் பொருட்களைக் கையாளும் பால் பண்ணைகள், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணையின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/மாநில பதிவு அலுவலருக்கு நாளொன்றுக்கு 10,000 லிட்டர் முதல் 2,00,000 லிட்டர் வரை பால் கையாளும் பால் பண்ணைகளுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சரக துணை பதிவாளர் (பால் பதம்) ஆகியோர்க்கு பதிவு பெற்ற பால் பண்ணைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கவும்,

காலமுறை ஆய்வு மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்ற தரக் கட்டுப்பாடு ஆய்வகத்திற்கு பால் விற்பனை நிலையங்களிலிருந்து பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு, தரத்தைப் பரிசோதனை செய்து, பரிசோதனையின் அடிப்படையில் தவறிழைத்த பால் பண்ணைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**5.1 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டப் பிரிவு 11 –ன்கீழ் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி பெற்ற பால் மாடுகள் வைத்திருக்கும் 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை செயல் எல்லையாகக் கொண்டு, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள சரகத் துணைப் பதிவாளர் (பால் பதம்) அவர்களை அணுகி ஆலோசனை பெறலாம். பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சங்கத்திற்கு தரமான பாலை வழங்க வேண்டும். சங்கமானது தரத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்யும். உறுப்பினர்கள் பால் வழங்கியதற்காக 10/15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பெறுவர். சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல், சமன்படுத்தப்பட்ட கால்நடைத் தீவனங்கள் வழங்குதல் ஆகியவை செய்து தரப்படுகின்றன. விவசாயிகளுக்கு வழங்கும் கால்நடை பராமரிப்புப் பயிற்சி, கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தி அதன்மூலம் அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உறுப்பினர்கள் நீண்ட காலத்திற்குப் பயன்பெறுவதை உறுதி செய்கிறது.

**5.2 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

பால் பண்ணைத் தொழிலில் மகளிர் பங்கினை அதிகரிக்கும் முயற்சியாக மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, தமிழகத்தில் தற்பொழுது 1,462 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களில் முன்னுரிமை அடிப்படையில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள்.





**5.3 தனி அலுவலர்கள் நியமனம்**

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களின் பதவிக்காலம் ஏற்கெனவே முடிந்திருந்ததால் அவர்களுடைய நீட்டிக்கப்பட்ட பதவிக் காலத்தை 26-5-2001 ஆம் தேதி ரத்து செய்து 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 89 (1)ன் கீழ் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். 8,652 பால்வளத் துறை மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்கள் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 360 சங்கங்கள் நியமனம் செய்யப்பட்ட நிர்வாகக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், இணையத்தின் தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்கண்ட தனி அலுவலர்களின் பதவிக் காலம் 26-5-2005 தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**6. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

தமிழகத்தில், 30 மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. 16 பால் பதப்படுத்தும் பண்ணைகள், நாளொன்றுக்கு 18.92 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறனுடன் செயல்படுகின்றன. 39 பால் குளிரூட்டும் நிலையங்கள், நாளொன்றுக்கு 12.83 இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் திறனுடன் செயல்படுகின்றன.

ஒன்றியங்களின் முக்கியமான பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) பாலை சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து, நவீன பால் பண்ணைகளில் பதப்படுத்தி, தரத்தினை உறுதி செய்தல்.

(2) புதிய வழித்தடங்கள் அமைத்து சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் செய்தல்.

(3) கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலையை நிர்ணயம் செய்தல்.

(4) சென்னை மாநகரத்திற்குத் தேவைப்படும் பாலினை சுகாதார முறைப்படி அனுப்பிவைத்தல்.

(5) புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் குளிர்விப்பான்கள் அமைத்தல்.

(6) புதிய விற்பனை உத்திகளின் மூலம் ஒன்றியங்களின் பால் விற்பனையைப் பெருக்குதல்.

(7) இடுபொருட்களை சங்க உறுப்பினர்களுக்கு அளித்தல்.

(8) பிரதம சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் அவசரகால மருத்துவ வசதி வழங்குதல். உறுப்பினர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் கால்நடை முதலுதவிப் பயிற்சி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி வழங்குதல்.

(9) சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(10) சங்கங்களுக்கு பால் கொள்கலன்கள், பால் பரிசோதனைக் கருவி மற்றும் திரவ நைட்ரஜன் குடுவைகள் வழங்குதல்.

(11) சேலம், ஈரோடு, மதுரை, தருமபுரி ஒன்றியங்களில் உள்ள சமன்படுத்தும் பால் பண்ணைகளில் பால் பதனிடும் வசதியுடன், பால் பொருட்களை உற்பத்தி செய்யும் வசதிகளும் உள்ளன. ஒன்றியங்களின் உள்ளூர் விற்பனை நீங்கலாக உள்ள உபரி பால், அருகிலுள்ள சமன்படுத்தும் பால் பண்ணைகளுக்கு பால் உபபொருட்களாக மாற்ற எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பால்பண்ணைகளில், பால் உபபொருட்களாகிய வெண்ணெய், பால் பவுடர் மற்றும் நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

(12) மாதவரம், ஈரோடு மற்றும் கப்பலூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடைத் தீவன ஆலைகள் முறையே காஞ்சிபுரம் - திருவள்ளூர், ஈரோடு மற்றும் மதுரை ஒன்றியங்களால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் குச்சிவகை மற்றும் தூள்வகை சரிவிகித கால்நடைத் தீவனங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், கால்நடை





பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் கால்நடைப் பண்ணைகளுக்கும், ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

### 7. ஒன்றியத்தின் செயல்பாடுகள்

### 7.1 கொள்முதல் விலை உயர்வு

பெருவாரியான கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், கறவை மாடுகளை வைத்து, அது தரும் பாலை, கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்து அதன் மூலம் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டு, கிராமப் பொருளாதார மேம்பாடு மற்றும் தனி நபர் வருமானத்தை உயர்த்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பசும்பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 9.50-லிருந்து ரூ.10.50 என்ற அளவிலும், எருமைப்பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.11.44-லிருந்து ரூ.12.50 என்ற அளவிலும் 01-06-2004 முதல் உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். பால் உற்பத்தியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட கொள்முதல் விலையிலே தற்போது பால்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பால் கொள்முதல் விலை உயர்வினால், பால் உற்பத்தியாளர்கள் மாதமொன்றிற்கு ரூ.7.16 கோடியும், ஆண்டொன்றிற்கு ரூபாய் 85.90 கோடியும் ஏற்கெனவே பெற்றுவரும் பால் கொள்முதல் விலைக்கு மேல், கூடுதல் வருமானமாகப் பெற்று வருகின்றார்கள். கொள்முதல் விலையை உயர்த்துகின்றவேளையில், பாலின் விற்பனை விலையை உயர்த்தாமல் பால் நுகர்வோர்களின் நலனை அரசு பாதுகாத்துள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் பால் கொள்முதல் விலை 1-6-2004 முதல் கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| எருமைப் பால் | | பசும்பால் | |
|---|---|---|---|
| ஒரு லிட்டரின்விலை | | ஒரு லிட்டரின் விலை | |
| 7.0% கொழுப்பு / 8.8% இதர சத்துக்கள் | | 4.5% கொழுப்பு / 8.5% இதர சத்துக்கள் | |
| 1-6-2004க்கு முன்னர் | 1-6-2004 –ல் இருந்து | 1-6-2004க்கு முன்னர் | 1-6-2004–ல் இருந்து |
| ரூ.11.44 | ரூ.12.50 | ரூ.9.50 | ரூ10.50 |

### 7.2 கொள்முதல் அளவில் உயர்வு

2003–2004 ஆம் ஆண்டில் ஒன்றியங்களின் பால் கொள்முதல் நாளொன்றிற்கு 17.26 இலட்சம் லிட்டர். 2004 –2005–ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி வரை பால் கொள்முதல் 20.53 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டைவிட பால் கொள்முதல் இந்த ஆண்டு 18.95 சதவிகிதம் உயர்வடைந்துள்ளது. இதுவரை இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்ட ஆண்டு சராசரி நாளொன்றுக்கு இதுவே அதிகபட்ச அளவாகும். ஜூன் 2004 –ல் 'ஆவின்' வரலாற்றில் முதன் முறையாக ஒன்றிய அளவில் நாளொன்றிற்கு 22.28 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது மிகவும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டர் நாளொன்றிற்கு)

| ஆண்டு | கொள்முதல் |
|---|---|
| 1998–1999 | 15.10 |
| 1999–2000 | 16.63 |
| 2000–2001 | 16.94 |
| 2001–2002 | 17.49 |
| 2002–2003 | 15.79 |
| 2003–2004 | 17.26 |
| 2004–2005 (மார்ச் 15 ஆம் தேதி வரை) | 20.53 |

கடந்த ஆண்டுகளை ஒப்பிடும்பொழுது, நடப்பு நிதியாண்டில் செய்யப்பட்ட சராசரி பால் கொள்முதல் ஆவின் வரலாற்றிலேயே மிக அதிகபட்சமாகும்.

### 7.3 பால் உற்பத்தி மேம்பாடு

கூட்டுறவு அமைப்பின்கீழ் 12.54 இலட்சம் பசு மற்றும் 2.12 இலட்சம் எருமை கறவை இனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றுக்கு மருத்துவம் மற்றும் இனவிருத்திக்கான உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், கோமாரி





மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடைதீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. 2004 –2005 மார்ச் 15 ஆம் தேதி வரை, 16,757 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப இருப்பையும் சேர்த்து 16,902 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 7.4 1,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக தமிழகத்தில் மொத்தம் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கையை மேலும் 1,000 கறவை மாடுகள் என்ற அளவில் அதிகரிக்க வேண்டும் எனவும், மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க மேல்நடவடிக்கை எடுக்கும்படியும் ஆணையிட்டார்கள். அதன்படி அரசு ஆணை எண் 102, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை (பால் உற்பத்தி 1) நாள் 4-8-2004 வழியாக இத்திட்டச் செயலாக்கம் குறித்து அரசு ஆணையிட்டது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும் குழுக்கள் சங்கங்கள்வாரியாக மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாகக் கண்காணிக்கவும், திட்ட வளர்ச்சியை ஆய்வு செய்யவும் மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் மாவட்டவாரியாக கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்க 3,02,778 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அதில் 2,79,828 மனுக்கள் பயனாளிகள் தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் 11,773 பயனாளிகளுக்குக் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.5 செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகள்

செயற்கை முறை கருவூட்டல் வசதி 2,392 பால் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராம அளவில் பால்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு, கால்நடைகளுக்கு செயற்கை முறைக். கருவூட்டல் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 2004–2005 பிப்ரவரி வரை 11.52 இலட்சம் கால்நடைகளுக்கு உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. அதனால் 2.99 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. இவற்றில் 1.40 இலட்சம் கிடேரிக் கன்றுகள் ஆகும். அகில இந்திய அளவில் தமிழகம் மிகவும் அதிகபட்சமான செயற்கை முறைக் கருவூட்டல் செய்து, முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தேர்ச்சிபெற்ற மருத்துவர் மூலம் நடமாடும் கால்நடைப் பிரிவுகளை நடத்துகின்றன. 5,214 பால் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடை மருத்துவ நலத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 2004–2005 பிப்ரவரி வரை 5.16 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசரக் காலச் சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2004 –2005 பிப்ரவரி வரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் 65 முழுநேர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 21 அவசரக் கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

### 7.6 இனவிருத்தித் திட்டம்

உதகமண்டலம் பொலிகாளைப் பண்ணையில் 73 வகையான உயர்ரக காளைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை உதகமண்டலத்திலுள்ள பொலிகாளைப் பண்ணையில் 13.31 இலட்சம் பசுவின உறைவிந்துக் குச்சிகளும், ஈரோட்டிலுள்ள எருமை இனப் பொலிகாளை உறைவிந்து நிலையத்தில் 0.58 இலட்சம் எருமையின உறை விந்துக் குச்சிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உதகமண்டலம் பொலிகாளைப்பண்ணை பன்னாட்டுத் தரச் சான்றிதழ் (ISO) பெற்ற முதல் நிறுவனமாகும்.

## 8. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமாகும். இணையத்தின் நான்கு பால் பண்ணைகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால் பண்ணை



நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டரும், மாதவரத்தில் நாளொன்றுக்கு 4.00
2.00 இலட்சம் லிட்டரும், சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு
இலட்சம் லிட்டரும் பதனிடும் செயல்திறனுடன் இயங்கி வருகின்றன.
இப்பண்ணைகள், ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று, பதப்படுத்தி,
பால் பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர்ப்
பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றன. அம்பத்தூரில்
உள்ள பால் உபபொருட்கள் பண்ணை, பால் உபபொருட்களாகிய
யோகர்ட், ஐஸ்கிரீம், கோவா, குலோப்ஜாமூன், மோர், லஸ்ஸி, தயிர்
மற்றும் மைசூர்பா போன்றவற்றைத் தயாரித்து வருகின்றது.

இணையத்தின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன:–

1. பெருநகர் பால் விற்பனைப் பிரிவு
2. பெருநகர் பால் உபபொருட்கள் விற்பனைப் பிரிவு
3. பிற மாநிலங்களில் பால் உபபொருட்கள் விற்பனைப் பிரிவு

சென்னை பெருநகரிலும் மற்றும் புறநகர் பகுதிகளிலும் பால்
உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக நந்தனத்தில் உள்ள
பால்பொருள் விற்பனைப் பிரிவின்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.
பால் உபபொருட்கள், அம்பத்தூரில் உள்ள சேமிப்புக் கூடத்தில்
வைக்கப்பட்டு, விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.
நான்கு பால் வகைகள் சென்னை மாநகரத்தில் பாக்கெட்டுகளில்
கீழ்க்கண்டவாறு விற்கப்படுகின்றன:

| வ.எண் | பாலின் வகைகள் | சதவிகிதம் |
|---|---|---|
| i | இரு நிலை சமன்படுத்திய பால் | 2%கொழுப்புச்சத்து<br>9%இதரச்சத்து |
| ii | சமன்படுத்திய பால் | 3% கொழுப்புச்சத்து<br>8.5% இதரச்சத்து |
| iii | நிலைப்படுத்திய பால் | 4.5% கொழுப்புச்சத்து<br>8.5% இதரச்சத்து |
| iv | முழு கொழுப்பு செறிந்த பால் | 6% கொழுப்புச்சத்து<br>9% இதரச்சத்து |

[2005 ஏப்ரல் 1

24 வட்டார அலுவலகங்கள், 517 பால் டிப்போக்கள், 390 பால் விற்பனை மையங்கள், 40 மொத்த பால் விற்பனையாளர்கள், 88 சில்லறை பால் விற்பனையாளர்கள், 50 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் பைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பால் உபபொருட்கள் 42 ஆவின் பாலகங்கள், 154 சில்லறை உரிமம் பெற்றவர்கள், 12 மொத்த விற்பனையாளர்கள், 2,900 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனை மூலம் மேற்கொள்கிறது.

218 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் 165 கண்ணாடி இழைத் தொட்டிகள்மூலமாக நுகர்வோர்க்கு நிலைப்படுத்திய பால், எருமைப்பால், இருநிலை சமன்படுத்திய பால் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பால் பொருட்களும் விற்கப்படுகின்றன. தற்பொழுது, தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில், பாக்கெட் பாலும் விற்பனை செய்யப்படுகின்றது.

**பால் விற்பனை விலை (பால் பைகள்)**

சமன்படுத்திய / நிலைப்படுத்திய / முழுக் கொழுப்பு செறிந்த பால் பைகளிலும் மற்றும் தானியங்கி விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகின்ற விற்பனை விலை விவரம்:

| இரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Double Toned Milk | | ஒரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Toned Milk | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | | முழுக் கொழுப்பு செறிந்த பால் (லிட்டர் ஒன்றுக்கு) Full cream Milk | |
|---|---|---|---|---|---|---|---|
| 2.0% கொழுப்பு 9.0% இதரச் சத்து | | 3.0% கொழுப்பு 8.5% இதரச் சத்து | | 4.5% கொழுப்பு 8.5% இதரச் சத்து | | 6.0% கொழுப்பு 9.0% இதரச் சத்து | |
| பால் அட்டை ரூ. | ரொக்கம் ரூ. | பால் அட்டை ரூ. | ரொக்கம் ரூ. | பால் அட்டை ரூ. | ரொக்கம் ரூ. | பால் அட்டை ரூ. | ரொக்கம் ரூ. |
| 11.50 | 13.00 | 12.50 | 14.00 | 14.50 | 16.00 | 16.50 | 18.00 |



2005 ஏப்ரல் 1]

**பால் விற்பனை விலை (தானியங்கி பால் வழங்கும் நிலையம்)**

| இரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Double Toned Milk | | எருமைப் பால் (லிட்டர் ஒன்றுக்கு) Buffalo Milk | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | |
|---|---|---|---|---|---|
| 2.0%கொழுப்பு 9.0% இதரச் சத்து | | 7.0% கொழுப்பு 9.0% இதரச் சத்து | | 4.5% கொழுப்பு 8.5% இதரச் சத்து | |
| பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் |
| ரூ.10.50 | ரூ.11.00 | ரூ.14.50 | ரூ.15.00 | ரூ.14.00 | ரூ.14.50 |

ஒன்றியங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வழி நடத்தி, அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை இணையம் வழங்குகிறது. ஒன்றியங்கள் சார்பாகத் திட்டமிடல், பால் பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும், இயந்திர சாதனங்களை நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் "டர்ன்கீ" (Turnkey) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களான பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி ஆகியவற்றை தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் வழிவகை செய்கிறது.

**9. தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைக் கூடம்**

தரக்கட்டுப்பாட்டு பரிசோதனை கூடம் பால்வளத் துறை ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. பால் நுகர்வோருக்குத் தரமான பால் விநியோகம் செய்யும் நோக்குடன் விற்பனை மையம் மற்றும் கடைகளிலிருந்து மாதிரி பால் (Sample) சேகரிக்கப்பட்டு மேற்கூறிய பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்படுகிறது.

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை, 1992-ன் (Milk and Milk Product Order, 1992) கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த பால்பண்ணைகள்.

(அ) கூட்டுறவு பால் பண்ணைகள் – 16

(ஆ) தனியார் பால் பண்ணைகள் – 22

(இ) பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட மொத்த மாதிரிகள் – 199

(ஈ) ஆவின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட மொத்த பால் மாதிரிகள் – 114

(உ) தனியார் மாதிரிகள் பரிசோதனை – 85

**10. புனரமைப்புத் திட்டம்**

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் – மத்திய மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம் – கூட்டுறவுகளுக்கு உதவுதல்**

நட்டத்தில் இயங்கும் ஒன்றியங்களைச் சீரமைப்பதற்காகவும் மேலும் நட்டத்தை சரி செய்து இலாபகரமாகச் செயல்பட மத்திய அரசு, "கூட்டுறவுகளுக்கு உதவும் புனரமைப்புத் திட்டம்" ஒன்றினை உருவாக்கியது. ரொக்க இழப்பை சரிசெய்து, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் இலாபகரமாகச் செயல்பட வசதியாக, இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் மானியமாக வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ், தொடக்க மதிப்பீட்டிற்குப் பிறகு ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களை மேம்படுத்த தேசிய பால்வள வாரியம் தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசின் பங்கான ரூ.6.50 கோடியும், மத்திய அரசின் பங்கான ரூ.6.50 கோடியும் முழுமையாக வழங்கப்பட்டு விட்டன. மேற்குறிப்பிட்ட தொகைகளை இரண்டு ஒன்றியங்களும் பால் உற்பத்தியாளர்களின் பால்பணம் பட்டுவாடா செய்ய பயன்படுத்தியுள்ளது. திட்டம் தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலிருந்து இரண்டு ஒன்றியங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

நடப்பு நிதியாண்டில், தேசிய பால்வள வாரியம் தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தெரிவு செய்து, இது சம்பந்தமான பிரேரணையை மத்திய அரசிற்கு அனுப்ப ஏதுவாக தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**11. பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி**

பால்பண்ணை தொழிலில் ஆர்வம் உடைய சொத்துக்கள் இல்லாத கிராமப்புறப் பெண்கள், தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் இனத்தைச்



சார்ந்த பெண்கள், சுயஉதவிக் குழு அங்கத்தினர்கள் ஆகியோர்களை அடையாளம் கண்டு அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், 2002–2003 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரு.649.463 இலட்சம் ஆகும். இத்திட்டம் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. திட்டக்கால இறுதியில் 10,000 பெண்களுக்கு கூட்டுறவுக் கொள்கைகள் குறித்த சட்ட அறிவு, கால்நடைகளுக்கான செயற்கை முறை கருத்தரிப்பு, முதலுதவி, விவசாய பயிற்சித் திட்டம், கறவை மாடுகள் பராமரிப்பு, பால் சோதனைக் கருவி உபயோகித்தல், பால் கலப்படம் கண்டுபிடிப்பு ஆகிய பயிற்சிகள் வழங்கப்படும். இதுதவிர உள் கட்டமைப்பு வசதிகளான துருவுறா எஃகு கேன்கள், செயற்கை முறை கருவூட்டலுக்குப் பயன்படும் திரவ நைட்ரஜன் குடுவை, டிரவிஸ், ஒவ்வொரு பயனாளியும் சங்கத்திற்கு பால் எடுத்து வர 5 லிட்டர் கொள்ளளவு உள்ள எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பால்குவளை ஆகியவை ஒவ்வொரு மகளிர் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது. மேலும் இச்சங்கங்களுக்கு நிர்வாக ஊக்குவிப்புத்தொகை, பால் குளிர்விக்கும் செலவு, பால் ஊக்கத்தொகை மற்றும் கறவை மாட்டுக் கடன் வாங்க மானியம் ஆகியவை வழங்கப்படுகின்றன. இத்திட்டம் மைய அரசின் 90 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு திட்டத் தொகையை பயனாளிகளுக்காக, மாவட்ட ஒன்றியங்கள் ஏற்றுள்ளன.

மத்திய அரசிடமிருந்து முதல் வருடத்தின் முதல் தவணையாக ரூ.132.480 இலட்சம் பெறப்பட்டு பயனாளி ஒன்றியங்களின் பங்கையும் சேர்த்து இந்நாள்வரை ரூ.159.942 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.452.036 இலட்சம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு வரையிலான குறியீடான 145 அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் 10,000 உறுப்பினர்கள் சேர்க்கை ஆகியவற்றில் இதுவரை 131 மகளிர் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவப்பட்டு 9,158 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். நாள் ஒன்றிற்கு சராசரியாக 22,592 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு ரூ.46/– வருமானமாகக் கிடைக்கிறது.

மீதமுள்ள ரூ.452.036 இலட்சத்தை முழுவதுமாக வழங்கவும் ஏற்பளிக்கப்பட்ட திட்டத்தில் கூறப்பட்டுள்ள பயிற்சிகளை நிறைவு செய்திட திட்டக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும் பால்வளத் துறை ஆணையர் மூலமாக மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**12. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை, 1-10-1987 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையிடம் கிராம அளவில் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சட்டப்படியான தணிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில், கூட்டுறவுத் துறை போன்ற மற்ற துறைகளிலிருந்து பணிக்கடனாகப் பெற்ற 370 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

**தணிக்கை முன்னேற்றம்**

**பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை**

2003–2004-ல் மொத்தம் உள்ள 7,145 சங்கங்களின் தணிக்கை செய்யத் திட்டமிட்டு, மார்ச் 2005 வரை 4,213 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2932 சங்கங்களின் தணிக்கை முன்னேற்றம் அடைந்து வருகிறது.

**மாவட்ட ஒன்றியங்களின் தணிக்கை**

1998-99 ஆம் ஆண்டு இறுதி தணிக்கைச் சான்றிதழ் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது.

**1999–2000 இறுதி தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் 16 ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள திருநெல்வேலி ஒன்றியத்தின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2000–2001 இறுதி தணிக்கை**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 14 ஒன்றியங்களுக்கான தணிக்கை முடிக்கப்பட்டு



தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய ஒன்றியங்களுக்கான தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2001–2002 ஆம் ஆண்டிற்கான தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில், 14 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு, 12 ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தஞ்சாவூர் மற்றும் மதுரை ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படும் நிலையில் உள்ளது. திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஒன்றியங்களின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2002–2003 ஆம் ஆண்டிற்கான தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் 10 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு 9 ஒன்றியங்களின் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள சேலம் ஒன்றியத்திற்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படும் நிலையில் உள்ளது. 7 ஒன்றியங்களில் தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2003–2004 ஆம் ஆண்டிற்கான தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் நீலகிரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 13 ஒன்றியங்களில் தணிக்கை நடைபெற்று வருகிறது.

தணிக்கை நடைபெற்று வரும் எல்லா ஒன்றியங்களின் கணக்குகளும் தணிக்கைச் சான்றிதழ் வழங்க ஏதுவாக இணைய கணக்குகளுடன் ஒத்திசைவு செய்து உறுதியாக்கம் செய்ய சம்பந்தப்பட்ட ஒன்றியங்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

**தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் தணிக்கை**

2001–2002 ஆம் ஆண்டு வரை தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

2002–2003 ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டு இறுதி தணிக்கைச் சான்று (FAM) வழங்கப்படும் நிலையில் உள்ளது.

**அரசு வருவாய்**

2003 –2004 ஆம் தணிக்கை ஆண்டிற்குண்டான தணிக்கைக் கட்டணம் பிப்ரவரி 2005 மாதம் முடிய மொத்த கேட்புத் தொகையான ரூ.23.02 இலட்சத்தில், ரூ.20.66 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை 2004–2005 ஆண்டு இறுதிக்குள் வசூலிக்கப்படும்.

2003–2004 ஆம் ஆண்டு தணிக்கை ஆண்டில், பிப்ரவரி மாதம் 2005 முடிய அடிப்படை விதி கட்டணத்தின்கீழ் (Under FR Cost) மொத்தக் கேட்பு தொகையான ரூ.51.62 இலட்சத்தில், ரூ.46.37 இலட்சம் வசூலித்து அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை விரைவில் வசூலிக்கப்படும்.

## 13. 2004–2005 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள்

### அ. சங்க அளவில்

**(i) பால் கொள்முதல்**

சங்க அளவில் பால் கொள்முதல் 2003–2004-ல் நாளொன்றிற்கு 20.60 இலட்சம் லிட்டரிலிருந்து 23.86 இலட்சம் லிட்டராக 2004–2005-ல் உயர்ந்துள்ளது. இது சங்க அளவில் 15.83 சதவிகித வளர்ச்சியடைந்துள்ளது.

சங்க உறுப்பினர் தரும் தரமான பாலிற்கு உரிய விலை கிடைப்பதற்காக சங்கங்களில் பால் பரிசோதனை முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. தரமான பால் உற்பத்திக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. மேலும், சங்க உறுப்பினர்கள் உரிய பால் பணம் பெற்று வருகிறார்கள்.

**(ii) உறுப்பினர்களுக்கு பால் பணம் பட்டுவாடா**

பால்வளத் துறை இணையம் மற்றும் ஒன்றியங்கள் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக கடந்த நிதியாண்டில் பால் உற்பத்தியாளர்களுக்குத் தர வேண்டிய நிலுவைத்தொகை முழுவதும் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. இந்த நிலை நடப்பு ஆண்டிலும் தொடர்கின்றது. தற்பொழுது பால் உற்பத்தியாளர்களுக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை நிலுவையின்றி பால் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.



**(iii) புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்**

இந்த நிதியாண்டில் 28-02-2005 வரை பால்வளத் துறையில் 285 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(iv) தூய்மையான பால் உற்பத்தி – பால் குளிர்விப்பான்கள் (Bulk Milk Coolers) நிறுவுதல்**

பாலில் உள்ள நுண்ணிய கிருமிகளின் பெருக்கத்தை பால் சங்கங்கள் அளவிலேயே கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு கீழ்க்கண்ட ஒன்றியங்களில் பால் குளிர்விப்பான்கள் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

விழுப்புரம் ஒன்றியத்தில் சிறுவாங்கூர், நயினார்பாளையம், செஞ்சி, ஆலம்பூண்டி, அம்மையகரம் மற்றும் தச்சூர் ஆகிய பால் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது பால் குளிர்விப்பான்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

திருச்சி ஒன்றியத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் செந்துறை பால் கூட்டுறவுச் சங்கத்தில் மூன்று பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன..

வேலூர் ஒன்றியத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் படவேடு, கேட்டவரம்பாளையம் மற்றும் பேட்டை ஆகிய பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும் பெரியகரம் மற்றும் குப்பம் ஆகிய பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான இடங்களை கையகப்படுத்த வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆணை பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

மேற்கூறிய 14 பால் குளிர்விப்பான்கள் ரூ. 148 இலட்சம் மதிப்பிலும், அவற்றை நிறுவுவதற்கான கட்டடப் பணிகள் ரூ. 13 இலட்சம் மதிப்பிலும் நடைபெற்று வருகின்றன.

### ஆ. ஒன்றியம் மற்றும் இணைய அளவில்

#### (i) பால் உபபொருட்களின் விற்பனை

1996 முதல் 2001 வரையிலான காலத்தில் நெய் விற்பனை சராசரியாக ஆண்டொன்றுக்கு 3,411 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. அதே போல் கொழுப்பு நீக்கிய பால் பவுடர் விற்பனை 2,647 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. இணையம் மற்றும் ஒன்றியங்கள் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் பயனாக 2004 –2005 ஜனவரி 2005 வரை நெய் விற்பனை உயர்ந்து 6,044 மெட்ரிக் டன் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், கொழுப்பு நீக்கிய பால் பவுடர் விற்பனை உயர்ந்து 11,201 மெட்ரிக் டன் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், புதுடெல்லியில் உள்ள மதர் டெய்ரிக்கு, தொடர்ச்சியாக பால் பவுடர் மற்றும் வெண்ணெய் ஆண்டு முழுவதும் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 21-05-2004 முதல் 28-02-2005 வரை 75.88 இலட்சம் லிட்டர் அடர்த்திப்பால் (10 சதவிகிதம் கொழுப்புச் சத்து மற்றும் 18 சதவிகிதம் இதரச் சத்துக்கள் மொத்த சத்துக்கள் 28 சதவீதம்) $3^{\circ}$ சென்டிகிரேடு வெப்பநிலையில் ஈரோடு ஒன்றியத்திலிருந்து புதுடெல்லியில் உள்ள மதர் டெய்ரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த பாலின் மதிப்பு ரூ.904 இலட்சங்களாகும். இந்த ஆண்டில், வாரத்தில் இரண்டு நாட்களுக்கு பால் ஈரோடிலிருந்து புதுடெல்லிக்கு ரெயில் மூலம் அனுப்பப்படுகிறது.

#### (ii) உள்கட்டமைப்பு வசதிகள்

2004 –2005 ஆம் ஆண்டில் ஒன்றிய பால்பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் நிறுவப்பட்டுள்ளன.

(அ) உதகமண்டலம் பொலிகாளைப் பண்ணையில் சூரிய சக்தியால் இயங்கும் மின்சார வேலி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ.10.94 இலட்சம் செலவில் வேலூர் பால்பண்ணையில் 250 கிலோ வாட் திறனுள்ள ஜெனரேட்டர் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

(இ) சோளிங்கநல்லூர் பால்பண்ணையில் தானியங்கும் முறையில் செயல்படும் இயந்திர அமைப்பு (PLC) ரூ.46.38 இலட்சத்தில் நிறுவப்பட உள்ளது.



(ஈ) மாதவரம் பால்பண்ணையில், ரூ.3.5 இலட்சம் செலவில் பால் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(உ) ரூ. 84 இலட்சம் செலவில் 10,000 லிட்டர் திறனுள்ள இரண்டு சமச்சீர் இயந்திரங்கள், திருச்சியில் ஒரு இயந்திரமும், கோயம்புத்தூரில் மற்றொரு இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், ரூ.1.69 கோடி செலவில் மாதவரம் மற்றும் அம்பத்தூர் பால்பண்ணைகளில் 20,000 லிட்டர் திறனுள்ள சமச்சீர் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஊ) சோளிங்கநல்லூர் பால்பண்ணையில் ரூ.4.5 இலட்சம் மதிப்பில் 6 பால் பாக்கெட் அடைக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(எ) சின்ன சேலம் குளிரூட்டும் நிலையத்தை விரிவாக்கும் பொருட்டு, ஒரு பால் குளிரூட்டும் இயந்திரம், பால் தொட்டி, பனிக்கட்டி தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை ரூ.13 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

#### (iii) சென்னை மாநகரப் பால் விற்பனை

சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் இணையம் தினந்தோறும் சுமார் 8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகின்றது. தனியார் நிறுவனங்களின் போட்டிகளுக்கிடையே இணையத்தின் பால் விற்பனை பெருவளர்ச்சி கண்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பாக்கெட் பால் விற்பனை நாளொன்றிற்கு 6.54 இலட்சம் லிட்டர் ஆக இருந்தது. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாளொன்றுக்கு 8.06 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இணையம் பால் விற்பனையைப் பெருக்கிட தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தேசிய அளவில் மாநகர பால்பண்ணைகளில் சென்னை மாநகர பால்பண்ணை பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையில் 2–வது இடத்தைப் பெற்றுள்ளது.

#### (iv) இன்சுலேடட் வாகனங்கள் அறிமுகம் (Insulated Vehicles)

65 இன்சுலேடட் வாகனங்கள் மூலம் மூன்று மாநகர பால்பண்ணைகளிலிருந்து பாக்கெட் பால் விநியோகம் செய்யப்படுகிறது. மாநில அளவிலான இணையங்களில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்தான் அதிக அளவிலான

எண்ணிக்கையுடைய இன்சுலேடட் வாகனம் மற்றும் விற்பனை தொடர்புகள் (Net Work) கொண்டுள்ளது. இந்த வாகனங்கள் மூலம் பால் விநியோகம் செய்வதால் பாலின் குளிர்வுத்தன்மை விநியோகம் செய்து முடியும் வரை காக்கப்பட்டு உபயோகிப்பாளர்கள் கறந்த பாலின் (afresh) தரம் மாறாமல் பெற உறுதி செய்யப்படுகின்றது. இந்த வண்டிகள் மூலம் பால் விநியோகம் செய்வதால் பாலின் உபயோக நேரம் (Shelf life) உயர்வதுடன் உபயோகிப்பாளர்களின் நம்பிக்கையையும் 'ஆவின்' நிறுவனம் பெறமுடிகிறது.

**(v) உடனடி பணம் திருப்பித் தருதல்**

வாடிக்கையாளர்கள் பாலுக்காக முன்பணம் செலுத்தியபின் பால் தேவைப்படாவிட்டால் பால் நிறுத்தம் செய்ய விண்ணப்பிக்கும்போது, அதற்கான தொகை அடுத்த கார்டு வாங்கும்போது நேர்வு செய்ய சுமார் ஒரு மாதம் வரை காத்து இருக்க வேண்டியிருந்தது. வாடிக்கையாளர்கள் இவ்வாறு பணம் பெறுவதில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறியதால் உடனடியாக பணம் திருப்பித் தரும் வழிமுறை கொண்டுவரப்பட்டது. வாடிக்கையாளர்கள் தற்பொழுது இணையத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி பணம் திருப்பித் தரும் முறையினால் திருப்தி அடைந்துள்ளார்கள்.

**(vi) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சேவை மையம்**

பாலின் தரம் மற்றும் சேவை சம்பந்தமாக வாடிக்கையாளர்களின் புகார் குறித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 24 மணி நேரமும் இயங்கக் கூடிய வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவிற்கு கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1600–443300 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 24 மணி நேரமும் வாடிக்கையாளர்களின் புகாரைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், புகார்/ஆலோசனை வெப்சைட் (www.aavin.net) மற்றும் ஈமெயில் மூலமும் பெறப்படுகிறது. தொலைபேசி மூலம் மாதம் ஒன்றிற்கு சுமாராக 100 புகார்கள்/ஆலோசனைகள் பெறப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**(vii) வாடிக்கையாளர் சந்திப்பு**

வாடிக்கையாளரின் தேவையைத் தெரிந்துகொள்வதற்கு தொடர்ச்சியாக வாடிக்கையாளர் சந்திப்பு பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர்கள் தாங்கள் பால் பெறுவதிலும், தரம் தொடர்பாக விவரங்கள் தருவதற்கும், பால்



விற்பனையை உயர்த்துவதற்கும் நுகர்வோர்களின் ஆலோசனை கோரப்பட்டு வருகிறது. பாலின் தரம் சம்பந்தமான வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படுகிறது. மேலும், வாடிக்கையாளர்கள் ஆவின் பாலிலிருந்து தரமான தயிர் செய்வதற்குப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**(viii) புதிய வட்டார அலுவலகங்கள் திறப்பு**

ஆவின் பால் போதுமான அளவு கிடைத்திடவும், மேலும் ஆவின் வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவை அளித்திடவும் சென்னை மாநகரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளான வேளச்சேரி, பல்லாவரம், பாலவாக்கம், போரூர், பொன்னேரி, செங்குன்றம், ஆவடி ஆகிய பகுதிகளில் 7 வட்டார அலுவலகங்களை இணையம் புதிதாக திறந்துள்ளது. சமீபத்தில் மேலும் ஒரு வட்டார அலுவலகத்தைக் காஞ்சிபுரத்தில் திறந்துள்ளது. இதன்மூலம் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நுகர்வோர்கள் பயன் அடைந்து வருகிறார்கள்.

**(ix) தனியார் தொடர்பு மூலம் பால் விற்பனை செய்தல்**

பால் விற்பனையை உயர்த்தும்பொருட்டு, மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களை உற்சாகப்படுத்தி விற்பனையைப் பெருக்க இணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பால்பண்ணைகளில் குறித்த நேரத்தில் பால் அனுப்பி வைத்தல், மொத்த விற்பனையாளர்களுக்கு பால் விநியோகம் செய்ய ஒரே சீரான பால் "டப்" (Tub) அறிமுகம் செய்தது. ஊக்கத்தொகை வழங்குதல் ஆகியவற்றால் பால் விற்பனையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில் பால் விற்பனையைப் பெருக்கிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இணையம் திட்டமிட்டுள்ளது. அவை பின்வருமாறு.

- வட்டார அலுவலக அளவில், வீட்டிற்கு வீடு சென்று வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொண்டு பால் விற்பனையைப் பெருக்குதல்.
- பால் டிப்போ பணியாளர் அளவில் நட்சத்திர ஊழியரைக் கண்டுபிடித்து டெப்போவிலும் டெப்போவைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பால் விநியோகத்தை உயர்த்துவது.

- களத்தில் உள்ள டெப்போ ஊழியர் மற்றும் நுகர்வோர்களிடையே சுமூகமான உறவுக்கு வழிகாட்டுதல் மற்றும் உற்சாகப்படுத்துதல்.
- அதிக அளவில் வாடிக்கையாளர் கூட்டங்கள் நடத்தி அதன் வாயிலாக வாடிக்கையாளரிடையே, விழிப்புணர்வை ஏற்படுத்தி சேவையை அதிகரித்தல்.
- வட்டார அலுவலக அளவில் வாடிக்கையாளர் ஆலோசனைக் குழு (Customer's Advisory Committee) ஒன்று ஏற்படுத்தி வாடிக்கையாளரையும் களப் பணியாளர்களையும் ஈடுபடச் செய்தல்.
- பால் நுகர்வோர் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி அதன் மூலம் வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப தரமான சேவை உறுதி செய்தல்.

**(x) சிங்கப்பூருக்கு பால் ஏற்றுமதி**

2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 32,400 லிட்டர் டெட்ரா பேக் பால், 500 லிட்டர் நெய் மற்றும் 1,250 கிலோ பால் பவுடரை முன்பண உறுதிக் கடிதம் பெற்று சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்துள்ளது. சர்வதேச சந்தை தர மதிப்பீட்டின்படி, ஆவின் டெட்ரா பாக்கெட் பால் சிங்கப்பூர், மலேசியா வாடிக்கையாளர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி விற்பனை விரைவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**(xi) திருமலை – திருப்பதி நெய் விநியோகம்**

திருமலை – திருப்பதி தேவஸ்தானம் லட்டு தயாரிப்பிற்கான 2,000 மெட்ரிக் டன் நெய்யினை இணையங்களிடமிருந்து வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அதற்கான ஆணை பெற்று திருப்பதி தேவஸ்தானத்திற்கு நெய் அனுப்பி வருகிறது. இதுவரை மொத்தம் 1,300 மெட்ரிக் டன் நெய் வழங்கப்பட்டுள்ளது.



**14. பால்வளத் துறையின் பொதுவான புள்ளிவிவரங்கள்**

| வ. எண் | இனம் | | 28-02-2005 ஆம் நாள் நிலவரப்படி |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள் | | 9,012 |
| அ) | பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் | 8,949 | |
| ஆ) | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் | 1 | |
| இ) | பால் கூட்டுறவுப் பண்ணை | 1 | |
| ஈ) | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 60 | |
| உ) | பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியம் | 1 | |
| 2 | செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் | | 7,431 |
| 3 | பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் | | 22.60 இலட்சம் |
| 4 | சங்க அளவில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (மார்ச் 15) தேதிபடி | | 23.76 இலட்சம் லிட்டர் |
| 5 | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் எண்ணிக்கை | | 17 |
| 6 | மாநில அளவிலான இணையம் | | 1 |
| 7 | ஒன்றிய அளவில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | | 20.53 இலட்சம் லிட்டர் |
| 8 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு சராசரி) | | 7.60 இலட்சம் லிட்டர் |
| 9 | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் அளவில் பால் விற்பனை (நாளொன்றுக்கு சராசரி ) | | 8.08 இலட்சம் லிட்டர் |

[2005 ஏப்ரல் 1

| வ. எண் | இனம் | | 28-02-2005 ஆம் நாள் நிலவரப்படி |
|---|---|---|---|
| 10 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | | 16 |
| 11 | இணையத்தின் பால்பண்ணைகளின் எண்ணிக்கை (பால்பண்ணைகள் 3) (பால்பொருட்கள் பண்ணை 1) | | 4 |
| 12 | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | | 18.92 இலட்சம் லிட்டர் |
| 13 | இணையத்தின் பால்பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | | 10.00 இலட்சம் லிட்டர் |
| 14 | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | | 39 |
| 15 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | | 12.83 இலட்சம் லிட்டர் |
| 16 | தானியங்கி பால் விநியோக நிலையங்கள் எண்ணிக்கை | | 218 |

## 15. தொலைநோக்குத் திட்டம், 2005–2006

### (i) தூய்மையான பால் உற்பத்தி

கடந்த இரண்டு ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தூய்மையான பால் உற்பத்தி செய்வதில் இணையம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. பால் கூட்டுறவுச் சங்கங்களின் அளவில் தரமான பால் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், தூய்மையான பால் உற்பத்தி நடைமுறைகளை சங்க அளவில் அமல்படுத்துவதன் மூலம் தூய்மையான பாலின் தரத்தை ஆரம்ப



2005 ஏப்ரல் 1]

நிலையிலேயே உயர்த்த நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் அதிக தரம் வாய்ந்த பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி செய்ய இயலும்.

இந்த தூய்மையான பால் உற்பத்தி என்ற செயல்பாட்டின் வாயிலாக கால்நடை பேணுதல், தீவனம் மற்றும் பசுந்தீவனஉற்பத்தி, செயற்கை முறைக் கருவூட்டல், விவசாயிகள் மற்றும் சங்க ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல், பால் குளிர்விப்பான் நிறுவுதல், பால் கறக்கும் இடத்தை தூய்மையாக வைத்திருத்தல், எவர்சில்வர் பாத்திரங்கள் உபயோகித்தல் ஆகியவை குறித்து பயிற்சிகள் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

தூய்மையான பால் உற்பத்தி செய்ய கூட்டுறவு பால்பண்ணைகளில் கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- தேசிய பால்வள நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தில் பால் கொள்முதல் செய்யும் பணியாளருக்குத் தூய்மையான பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்படுகின்றது.
- பயிற்சி பெற்ற பால் கொள்முதல் பணியாளர்களால், கறவை மாடு பராமரிப்பு, சுத்தமான கறவை முறைகள் மற்றும் பால் கையாளும் விதம் தொடர்பான பயிற்சிகள் பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன.
- பால் சங்கப் பணியாளர்களுக்கு சுத்தமான பால் உற்பத்தி குறித்த பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாது அலுமினிய பால் கேன் மற்றும் பால் சேகரிக்கும் பாத்திரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டு அவை எவர்சில்வர் பொருட்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.
- பால் கறக்கும் முன்பும், கறந்த பின்பும் மடியை சுத்தம் செய்ய பால் உற்பத்தியாளருக்கு நோய் நுண்மத்தடை (ஆன்டிசெப்டிக்) திரவம் வழங்கப்படுகிறது.
- தூய்மையான பால் உற்பத்தி குறித்த விளம்பரங்கள் சங்கங்களில் வைக்கப்பட்டுள்ளன.
- பால் உற்பத்தியாளருக்கு, தூய்மையான பால் உற்பத்தி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சிறு புத்தகங்கள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன.

## 16. தரம் உயர்த்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதி அமைப்புகளை மேம்படுத்துதல்

சென்னை மாநகர பால்பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தில் இயங்கும் மூன்று பால்பண்ணைகளும் பிப்ரவரி 2004-ல் ஐ.எஸ்.ஓ. 9001 : 2000 சான்றிதழ் பெற்றுள்ளன. இது 3 ஆண்டுகளுக்கு செல்லதக்கதாகும். HACCP பாதுகாப்பான உணவுத் தயாரிப்பிற்குத் தரப்படும் தரச் சான்றாகும். HACCP தரச் சான்று, நுகர்வோர்க்கு பொருட்களின் தரத்தையும், ஆவின் சேவையையும் உறுதிப்படுத்துகிறது. HACCP சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2005-2006 ஆம் ஆண்டில் மாவட்ட ஒன்றியங்களின் உள்கட்டமைப்பை மேலும் விரிவாக்க கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது:

(1) ரூ. 25 இலட்சம் செலவில் மதுரை பால்பண்ணையில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கொதிகலன் நிறுவுதல்.

(2) ரூ. 42 இலட்சம் செலவில் திருநெல்வேலி பால்பண்ணையில் 10,000 கொள்ளளவு கொண்ட சமச்சீர் இயந்திரம் வாங்கி நிறுவுதல்.

(3) ரூ. 42 இலட்சம் செலவில் நீலகிரி ஒன்றியத்தில் நவீன வசதியுடன் கூடிய ஆய்வக இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.

(4) 19 பால் குளிரூட்டும் நிலையங்களில் கணினியுடன் கூடிய எடைமேடை ரூ. 30 இலட்சம் செலவில் நிறுவுதல்.

(5) ரூ. 81.66 இலட்சம் மதிப்பில் சேலம் ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையத்தில் கூடுதல் பால் கொள்முதல் தளம் அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

(6) சேலம், வேலூர், ஈரோடு, தருமபுரி மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களில் கொழுப்புச் சத்துக்கள் பிரித்தெடுக்கும் ஐந்து இயந்திரங்கள் ரூ. 80 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்தல்.



(7) திருவண்ணாமலை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் உற்பத்தி செய்கின்ற பால் பவுடர் ஆலை ரூ. 28 கோடி மதிப்பில் அமைத்தல்.

## 17. பகுதி–II திட்டம் 2005–2006

தமிழக அரசு பகுதி – II திட்டத்தின்கீழ் ரூ.99.00 இலட்சம் - 50 விழுக்காடு மானியம் கீழ்கண்டவாறு அனுமதித்துள்ளது:

1. ரூ.30 இலட்சம் செலவில் 1,363 துருவுறா எஃகு (Stainless Steel) பால் கொள்கலன்கள் 273 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு செலவை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள 50 விழுக்காடு செலவை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கும்.

2. ரூ.20 இலட்சம் செலவில் 3 லிட்டர் கொள்திறன் உடைய 235 திரவ நைட்ரஜன் குடுவைகள் 235 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு செலவை தமிழ்நாடு அரசு ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு செலவை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கும்.

3. ரூ.49 இலட்சம் செலவில் 2,000 லிட்டர் கொள்திறன் உடைய 7 பால் குளிர்விப்பான்கள் 7 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக சங்கங்களில் நிறுவப்படும். இதில் 50 விழுக்காடு செலவை தமிழ்நாடு அரசு ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு செலவை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கும்.

## 18. தொகுப்புரை


மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது சீரிய தலைமையில், தூய்மையான மற்றும் தரமான பால் உற்பத்தி, பால் பதப்படுத்துதல் மற்றும் புதுமையான, வலிமையான முறையில் விற்பனை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் இந்த அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொடர்ந்து நட்டத்தில்

இயங்கி வந்த "ஆவின்" நிதிநிலை முற்றிலும் மாற்றப்பட்டு, 2001–2002 ஆம் ஆண்டு முதல் இணையம் மிகை வருவாய் ஈட்டத் தொடங்கியுள்ளது. மேலும் பெரும்பான்மையான ஒன்றியங்களும், சங்கங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. சங்க உறுப்பினர்களுக்கு பால் பண பட்டுவாடா உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.


கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு ஆதாய விலை வழங்குவதோடு மட்டும் அல்லாமல், ஆவின் பால் தரத்தை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தவும், பால் நுகர்வோருக்கு தரமான பால் விநியோகிக்கவும், பால் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பால்வள மேம்பாட்டுத் துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.







நிர்வாக இயக்குநர் அலுவலக அமைப்பு – தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்





| | | |
|---|---|---|
| இ.நி.இ. | : | இணை நிர்வாக இயக்குநர் |
| மு.க.அ. | : | முதன்மை கண்காணிப்பு அதிகாரி |
| பொ.மே.(ப.வி) | : | பொது மேலாளர் (பணிக்குழு விற்பனை) |
| பொ.மே.(நி) | : | பொது மேலாளர் (நிதி) |
| பொ.மே.(நி.ஒ.) | : | பொது மேலாளர் (நிதி ஒருங்கிணைப்பு) |
| பொ.மே.(பொ.) | : | பொது மேலாளர் (பொறியியல்) |

| | | |
|---|---|---|
| து.பொ.மே. (ப.அ.) | : | துணை பொது மேலாளர் (பணி அமைப்பு) |
| து.பொ.மே.(மா.வி.) | : | துணை பொது மேலாளர் (மாநகர விற்பனை) |
| து.பொ.மே.(வெமாவி): | : | துணை பொது மேலாளர் (வெளி மாநில விற்பனை) |
| து.பொ.மே. (நு.பா.) | : | துணை பொது மேலாளர் (நுகர்வோர் பாதுகாப்பு) |
| து.பொ.மே. (பொறி.) | : | துணை பொது மேலாளர் (பொறியியல்) |
| து.பொ.மே.(தி.ஒ.) | : | துணை பொது மேலாளர் (திட்டம் ஒருங்கிணைப்பு) |
| து.பொ.மே.( பா.உ.) | : | துணை பொது மேலாளர் (பால் உற்பத்தி) |
| து.பொ.மே.(தி) | : | துணை பொது மேலாளர் (திட்டமிடல்) |
| து.பொ.மே.(த.க.) | : | துணை பொது மேலாளர் (தரக்கட்டுபாடு) |
| து.பொ.மே.(ஸ்டெப்) | : | துணை பொது மேலாளர் (ஸ்டெப்) |




இணை நிர்வாக இயக்குநர் அலுவலக அமைப்பு – இணையம்




| | |
|---|---|
| பொ.மே (போ.) | : பொது மேலாளர் (போக்குவரத்து) |
| து.பொ.மே.(த.க.) | : துணை பொது மேலாளர் (தரக்கட்டுப்பாடு) |
| து.பொ.மே.(ம.பொ.) | : துணை பொது மேலாளர் (மனிதவளம் / பொறியியல்) |
| து.பொ.மே. (பா.வி.) | : துணை பொது மேலாளர் (பால் விற்பனை) |
| து.பொ.மே. (மொ.வி.) | : துணை பொது மேலாளர் (மொத்த விற்பனை) |
| து.பொ.மே. (க) | : துணை பொது மேலாளர் (கணக்கு) |
| து.பொ.மே. (உ.) | : துணை பொது மேலாளர் (உற்பத்தி) |
| ப.து.மே. | : பகுதி துணை மேலாளர் |

நிர்வாக அமைப்பு
மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்






# இணைப்பு III

*(396 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 7

## மீன்வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முன்னுரை**

மீன்வளம் எண்ணற்ற துணைத் தொழில்களை பெருகச் செய்வதற்கு தூண்டுகோலாய் உள்ளதால் இது வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் மற்றும் வருவாய் ஈட்டுவதற்கும் மிகச் சக்தி வாய்ந்ததாக அங்கீகாரம் பெற்றுள்ளதுடன் எளிதாக அசைவ புரதச் சத்து கிடைக்கக் கூடிய மூல ஆதாரமாகவும் உள்ளது. மீன்வளம் நாட்டின் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெரும்பான்மை மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. மீன்வளம் மட்டுமே விலை குறைவான தரமான அசைவ புரதச் சத்தினை, குறிப்பாக சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மக்களுக்கு வழங்கச் செய்யும் ஒரே பிரிவு என்பதுடன் தேசிய உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பணியினையும் ஆற்றுகிறது. இது இந்தியா உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியினை ஈட்டுவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. படகு கட்டுதல், மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுதல், மீன் பதப்படுத்துதல் முதலானவற்றின் மூலம் முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கக்கூடிய உள்ளார்ந்த தொழில் வளங்கள் மண்டல மற்றும் தேசிய பொருளாதாரத்தை மேலும் பலவகைப்படுத்தி வலுப்படுத்துவதில் பங்கு வகிக்கின்றன.

நமது நாடு 8,118 கி.மீ. நீளமுள்ள கடற்கரையுடன் மேற்கு கடற்கரையில் 0.86 மில்லியன் சதுர கிலோ மீட்டரும், கிழக்கு கடற்கரையில் 0.56 மில்லியன் சதுர கிலோ மீட்டரும், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் 0.60 மில்லியன் சதுர கிலோமீட்டரும் உள்ளடக்கி மொத்தம் 2.02 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமை பொருளாதார மண்டலத்தைப் (EEZ) பெற்றுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 1,076 கி.மீ. கடற்கரையும், 0.19 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமை பொருளாதார மண்டலமும், 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படு நிலத்தொடரும் கொண்டு மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பு ஆகியவற்றில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது.

கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியிலும் பெரும்பங்கு வகிக்கின்றது. எனினும், கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தில் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்பட) பரந்த நிலப்பரப்பு உடையதாக இருப்பினும் அவற்றை முழுமையான உற்பத்திற்கு மேலும் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளன.

உள்நாட்டு மீன்வளத்தில் 3.7 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்பிலான நீர்த்தேக்கங்களும், பெரிய நீர்ப்பாசன மற்றும் நீண்ட பருவ கால குளங்கள், குறுகிய பருவ கால குளங்கள் மற்றும் குட்டைகள், உப்பங்கழிகள், கழிமுகங்கள் ஆகியவை மீன் பிடிப்பிற்கும், மீன் வளர்ப்பிற்கும் ஏற்புடையவையாக அமைந்துள்ளன. சுமார் 5,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவு, உள்நாட்டு நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டங்களின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 56,000 ஹெக்டேர் உவர் நீர்ப்பரப்பில் தற்போது சுமார் 4,155 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே உவர் நீர்வாழ் உயிரின உற்பத்திக்கென பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மீன்வள ஆதாரத்தை மேம்படுத்துவதற்கும், மீன்வளத்தைப் பாதுகாப்பதற்கும், மாநிலத்தில் மீன்பிடி தொழிலை தங்களுடைய உயர் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவ மக்களின் சமூக பொருளாதார நலத்தை உயர்த்துவதையும் முக்கிய கோட்பாடாகக் கொண்டு மீன்வளத் துறை 1907 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் செயல்பட்டு வருகிறது.

**நிர்வாக அமைப்பு**

மீன்வளத் துறையின் துறைத் தலைவராக உள்ள மீன் துறை இயக்குநர் தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். மீன்வளத் துறை இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர்களை தலைவர்களாகக் கொண்டுள்ள ஆறு மண்டலங்கள் உள்ளன. இவர்கள் மீன்வளத் துறை உதவி இயக்குநர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மீனவர் நலத் திட்டங்களைக் கண்காணித்து மேற்பார்வையிட்டு வருகின்றனர். தற்போது இந்திய ஆட்சிப் பணி தொகுதியைச் சேர்ந்த மூன்று கூடுதல் இயக்குநர்கள் சென்னை, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி (இருப்பு நாகர்கோயில்) ஆகிய மண்டலங்களில் சுனாமி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றனர்.





**மீன்வளத் துறையின் கொள்கை – நோக்கங்கள்**

முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு –

(1) அண்மைக்கடல் பகுதிகளில் அதிக மீன்பிடிப்பினை குறைக்க ஏதுவாக இதுவரை பயன்படுத்தப்படாமலுள்ள மீன்வளத்தினை மீனவர்கள் பயன்படுத்த ஊக்குவித்தல்

(2) கடற்கரைப் பகுதிகளில் மீன்வள ஆதாரத்தினைப் பாதுகாத்தல், மீன் இருப்பு அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் முதலானவை மூலமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.

(3) சுற்றுச்சூழலுக்கு உகந்த கடல்வாழ் உயிரின வளர்ப்பை அதிகரித்தல்.

(4) மீன்களை கரைசேர்த்தல் மற்றும் மீன் விற்பனைக்கான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

(5) மீனவ மக்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் அவர்களுடைய சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

(6) தற்போதைய நிலைக்கேற்ப நடைமுறையில் உள்ள மீன்வளச் சட்டங்களை மாற்றியமைத்தல்

**1. மீன்வள மேம்பாட்டு இயக்கம்**

தமிழகத்தில் மீன்வள மேம்பாட்டு இயக்கம் மீன் உற்பத்தியை பெருக்கவும், மீனவர்கள், மீன் வளர்ப்போர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மற்றும் மீன் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், கடலோர மற்றும் உள்நாட்டு ஏழை மீனவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடவும், பாரம்பரிய மீனவ மற்றும் மீன் வளர்ப்போரின் சமூக பொருளாதார நலன்களை மேம்படுத்திடவும், பாரம்பரிய மீனவ சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாத்திடவும், மேம்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில் சார்ந்த பாரம்பரிய மீனவ மக்களின் மீன் உற்பத்தியினைப் பெருக்கி உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கண்ட குறிக்கோள்களை அடைவதற்கு மீன்வள மேம்பாட்டு இயக்கத்தை 2002 ஆம் ஆண்டில்

ஏற்படுத்தியுள்ளது. இந்த மீன்வள மேம்பாட்டு இயக்கம் சிறந்த வழிமுறைகளைக் கண்டறிந்து கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிக அளவில் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மீன்வள மேம்பாட்டு இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

(1) நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை.

(2) குளம் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பை பிரபலமாக்குதல்.

(3) கடலோரப் பகுதிகளை நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்காக மேம்படுத்துதல்.

(4) கடலோர மீன்வளத்தை மேம்படுத்துதல்

(அ) மீன்வள இருப்பு அதிகப்படுத்துதல்

(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்

(5) மீன்பிடிப்பிற்குப் பின் உதவியும் விற்பனையும்

(அ) மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துதல்

(ஆ) மீன் சில்லறை விற்பனை கட்டமைப்பு வசதிகள் அமைத்தல்

(6) கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(அ) உயிர்காக்கும் மிதவைகள்/உயிர் பாதுகாக்கும் கவச உடைகள்

(ஆ) புவிநிலை அறிவிக்கும் கருவிகள்

(7) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி வசதிகளை வலுவாக்குதல்

இவ்வியக்கத்தின் மேற்குறித்த திட்டங்கள் படிப்படியாக ரூ. 6,107.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.





**2. கடல் மீன்வளம்**

**2.1. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்**

பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குவதற்காக மீனவர்களுக்கு நிதியுதவியினை விரிவாக்கும் நோக்கத்துடன் பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்துவதற்குரிய வெளிப்பொருத்தும் மோட்டார் இயந்திரங்களை வாங்குவதற்காக அரசு மானியத் தொகையினை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/–க்கு உயர்த்தியுள்ளது. 2004–05 ஆம் ஆண்டில் 1,800 வெளிப்பொருத்தும் மோட்டார் இயந்திரங்களை விநியோகிப்பதற்காக அரசு மாநில அரசின் 50 சதவீத பங்குத் தொகை ரூ.1.80 கோடி சேர்த்து மொத்த ரூ.3.60 கோடி தொகையினை ஒப்பளித்துள்ளது. இத்திட்டமானது 2005–06 ஆம் ஆண்டும் தொடரப்படும்.

**2.2. உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய கலால் வரியை திருப்பியளித்தல்**

விசைப்படகு உரிமையாளர்களின் துயரத்தினைக் குறைத்திடவும், விசைப்படகுகளின் இயக்கத்திற்கு ஏற்படும் செலவுத் தொகையினை குறைத்திடவும், உயர்வேக டீசல் எரியெண்ணெய் வாங்குவதற்கு செலுத்த வேண்டிய மத்திய கலால் வரியினை அரசானது மானிய வடிவில் திருப்பி அளிக்கிறது. தற்போது நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி மீனவர்களுக்கு டீசல் மானியத் தொகையாக ஒரு லிட்டருக்கு ரூ.1.50 (மாநில அரசின் தொகையாக ரூ.0.30–ம் மத்திய அரசின் தொகையாக ரூ.1.20–ம்) வழங்கப்படுகிறது. 2004–05 ஆம் ஆண்டு அரசானது மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.91.56 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.457.80 இலட்சத்தில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ஒப்பளித்துள்ளது. ஏறத்தாழ 5,000 மீனவர் குடும்பங்கள் பயன்பெறும். இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியினைப் பெற்று 2005–06 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**2.3. மீனவர்கள் பயன்படுத்தும் டீசல் எரியெண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளித்தல்**

தமிழகத்தில், இயந்திரமயாக்கப்பட்ட படகுகள் மற்றும் விசைப்படகுகள் ஆகியவற்றுடன் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் டீசல் எரியெண்ணெய் விலை உயர்வினால் தங்களது படகுகளை இயக்குவதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். அதனால் மீனவ சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு தமிழக

வரலாற்றிலேயே முதல் முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மீனவர்களால் வாங்கப்படும் உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான விற்பனை வரியினைச் செலுத்துவதிலிருந்து 100% விலக்கு அளித்துள்ளார். இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுக்காகவும், விசைப்படகுகளுக்காகவும் மீனவர்களால் வாங்கப்படும் டீசல் எரியெண்ணெயின் விலை ஒரு லிட்டருக்கு ரூ.5.33 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மாநில அரசுக்கு வருடாந்திர நிதிச் செலவினம் தோராயமாக ரூ.51.00 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் 20,200 மீனவ குடும்பங்கள் பயன்பெறுகின்றன. இத்திட்டம் 2005–06 ஆம் நிதியாண்டிலும் தொடரப்படும்.

### 2.4. அண்மைக்கடல் மீன்வள ஆதாரத்தினை இருப்பு செய்வதன் மூலம் அதிகரிக்கச் செய்தல்

#### (அ) மீன்வள இருப்பை அதிகப்படுத்துதல் (Sea Ranching)

அண்மைக்கடலில் அதிக அளவு மீன்பிடித்தல் மட்டுமின்றி கடல்நீரை மாசுபடுத்தும் நகர்ப்புற தொழிற்சாலைகள் மற்றும் வேளாண்மைக் கழிவுகள், மேலும் நில ஆக்கிரமிப்பு, நதிகளின் நீரோட்டத் தடுப்பு, சதுப்புநிலக் காடுகளின் அழிவு, வண்டல் படிதல் முதலானவற்றால் மீன்வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மனித நடவடிக்கைகளினால் மீன் இருப்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது.

எனவே, அண்மைக்கடலில் குறைந்துவரும் மீன்வள ஆதாரத்தைப் பெருக்கவும் அளவுக்கு அதிகமாக மீன்பிடித்தலினால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்கவும், வணிக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இறால் இனங்களை கடலில் இருப்பு செய்யும் பணி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2004–05 ஆம் ஆண்டில் 15 முதல் 20 நாட்கள் வளர்ச்சியடைந்த 5 இலட்சம் இறால் குஞ்சுகளை இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 12 இடங்களில் இருப்பு செய்ய அரசால் ரூ.128.40 இலட்சம் செலவிட ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மீனவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் சென்னையில் இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள “இமேஜ்ஹாலில்“ 16-12-2004 அன்று கடலோர மீன்வள இருப்பை அதிகப்படுத்துதல் (Sea Ranching) குறித்த ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு மீன்வள இருப்பினை அதிகப்படுத்தும் திட்டத்தினை பெரும் வெற்றியடையச் செய்ய மீனவ சமுதாயப் பிரதிநிதிகள், மத்திய நீர்வாழ் உயிரின ஆணையம் (Aquaculture Authority of India), மத்திய உவர் நீர் உயிரின வளர்ப்பு நிலையம் (Central Institute of Brackishwater Aquaculture), மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் (Central Marine Fisheries Research Institute) ஆகிய நிறுவனங்களிலிருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் மற்றும் தலைசிறந்த விஞ்ஞானிகள் ஆகியோர் ஒத்துழைப்பினை நல்கிட கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



#### (ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள்

செயற்கை மீன் உறைவிடங்கள் மறு சுழற்சி முறையிலான கடலடி மீன் உறைவிடங்களாகும். இவை சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கும் உதவியாக செயல்படுகின்றன. மீன்களின் இனப் பெருக்கத்திற்கும், பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடிக்கும் சிரமங்களையும் நேரங்களையும் குறைத்து மீன்பிடிப்பினை அதிக அளவில் மேற்கொள்ளவும், செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது கைவினை மூலம் கட்டமைப்பு செய்து கடலில் நிறுவப்படும் உறைவிடங்கள் பல்லாண்டுகளுக்கு செயல்பட்டு வரும். இத்திட்டத்தின் கீழ் மீன்வளத்தினைப் பெருக்குவதற்காக தூத்துக்குடி கடற்பகுதியில் ரூ.5.00 இலட்சம் செலவில் 2004 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் மீன் துறையால் ஒரு செயற்கை மீன் உறைவிடம் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடற்பகுதியில் 10 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவ ரூ.150.00 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 2.5. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்

#### (அ) சின்னமுட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் சின்னமுட்டம் கிராமத்தில் மத்திய மாநில அரசு நிதியுதவித் திட்டத்தில் 1994 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மீன்பிடித் துறைமுகத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடி விசைப்படகுகள் அதிக அளவில் பெருகிய காரணத்தினால் இம்மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

[2005 ஏப்ரல் 1

போதுமானதாக இல்லாததால், கூடுதலாக உட்கட்டமைப்பு வசதிகளை இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணியில் ஏற்படுத்தித் தர உத்தேசிக்கப்பட்டு, இதற்கென ரூ.19.10 கோடிக்கு உத்தேச திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு அது பெங்களூர் மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகளின் அவசியம் மற்றும் அத்தியாவசியம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ள குழு ஒன்றினை அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) இராமேஸ்வரம்**

இராமேஸ்வரத்தில் புதிதாக மீன்பிடித் துறைமுகம் அமைக்க ரூ.48.69 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டு அறிக்கை பெங்களூர் மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநரால் இறுதியாக்கம் செய்யப்பட்டு இத்திட்டத்திற்கான தொழில்நுட்பப் பொருளியலான சாத்தியக்கூறு அறிக்கையினை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கிட மாவட்டம் மற்றும் மாநில அளவிலான கடலோர மேலாண்மைக் குழுவால் இசைவு தெரிவித்து மத்திய கடலோர மேலாண்மைக் குழுவின் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கும் பொருட்டு கருத்துரு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

புது டெல்லியில் கடந்த 2004 நவம்பர் திங்களில் நடைபெற்ற தேசிய கடலோர மேலாண்மைக் குழுவின் கூட்டத்தில் இத்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெறும் பொருட்டு மீன் துறைமூலம் தயாரிக்கப்பட்ட சுற்றுப்புறத் தாக்கம் குறித்த மதிப்பீடு/சுற்றுப்புற பராமரிப்பு திட்ட ஆய்வு (Environmental Impact Assessment / Environmental Management Plan studies) (E.I.A./ E.M.P.) அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலாது எனவும் புதிதாக தேசிய பெருங்கடல் தொழில் நுட்பவியல் நிறுவனம் (N.I.O.T.) அல்லது தேசிய கடலியல் நிறுவனம் (N.I.O.) போன்ற ஆய்வு மையத்தின் மூலம் மீண்டும் E.I.A. மற்றும் E.M.P. ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. தற்போது சென்னையிலுள்ள N.I.O.T. ஆய்வு மையம் மூலம் E.I.A. மற்றும் E.M.P. ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 1]

**(இ) பழையார்**

பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் அதிக அளவில் விசைப்படகுகள் பெருகிவிட்ட காரணத்தினால் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான மீன்பிடித் துறைமுகத்தை இரண்டாம் கட்டமாக ரூ.10.60 கோடி செலவில் அமைக்க பெங்களூர் மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநரால் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை (Techno-Economic Feasibility Report) தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவுரையின்படி திட்ட மதிப்பீட்டு அறிக்கையினை நடப்பாண்டு விலை விவரத்தின் அடிப்படையில் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய அரசின் விவசாய அமைச்சகத்தின் அறிவுரையின்படி சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெற வேண்டிய இனங்களைத் தவிர்த்து மற்ற இனங்கள் மட்டும் இடம்பெறும் வகையில் திருத்திய திட்ட மதிப்பீட்டினை சென்னை மீன்பிடித் துறைமுகத் திட்ட வட்ட கண்காணிப்புப் பொறியாளர் தயாரித்து வருகிறார்.

**(ஈ) மல்லிப்பட்டினம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிக அளவில் விசைப்படகுகள் பெருகி விட்ட காரணத்தினால் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான மீன்பிடித் துறைமுகத்தை ரூ.7.5 கோடி செலவில் இரண்டாம் கட்டமாக அமைக்க ஏதுவாக இத்திட்டத்திற்கான தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை பெங்களூர் மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநரால் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவுரையின்படி திட்ட மதிப்பீட்டு அறிக்கையினை நடப்பாண்டு விலை விவரத்தின் அடிப்படையில் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(உ) பூம்புகார்**

பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ரூ.40 கோடிக்கு உத்தேச திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பூம்புகாரில் 2004–05 ஆம் ஆண்டில் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள சென்னையிலுள்ள N.I.O.T ஆய்வு மையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**(ஊ) குளச்சல்**

பெங்களூர் மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநர் கடந்த 1997 ஆம் ஆண்டு நேரில் ஆய்வு செய்து முன் ஆயத்தப்

[2005 ஏப்ரல் 1

பணிகள் மேற்கொண்டு மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ள முதன்மை பெருந் திட்டத்தில் (Master Plan) குளச்சலில் தற்பொழுதுள்ள துறைமுகத்துடன் கூடுதலாக மீன்பிடித் துறைமுகம் அமைக்க பரிந்துரைத்துள்ளார்.

அரசால் கேட்டுக்கொண்டபடி சென்னையிலுள்ள N.I.O.T. ஆய்வு மையத்தின் இயக்குநர் குளச்சல் பகுதியை நேரில் ஆய்வு செய்து, மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு உரிய நிதி வழங்கும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மேற்கூறிய நிறுவனத்திற்கு ரூ.25.00 இலட்சம் பூம்புகார் மற்றும் குளச்சல் பகுதிகளில் மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்டுள்ளது.

**(எ) தேங்காய்பட்டினம்**

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஏதுவாக மண் பரிசோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேங்காய்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்த தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை பெங்களூர் மத்திய கடலோர பொறியியல் இயக்குநரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மீன்பிடித் துறைமுகத்திற்கான அலை தடுப்புச் சுவரின் மாதிரி வடிவமைப்பு சென்னையிலுள்ள N.I.O.T. ஆய்வு மையத்தால் இறுதியாக்கம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ரூ.39.50 கோடிக்கு திட்ட மதிப்பீட்டு அறிக்கை திருத்தியமைக்கப்பட்டு அது பெங்களூர், மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநரின் தொழில்நுட்ப ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரிலுள்ள மத்திய மீன்வள கடலோர பொறியியல் நிறுவன இயக்குநர் அவர்களின் ஆலோசனைப்படி இத்திட்டத்திற்கான வேவ் ப்லூம் டெஸ்ட் (Wave Flume Test) பூண்டி நீரியல் மற்றும் நீரேற்று ஆய்வு மையம் மூலம் தயாரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(ஏ) முட்டம்**

முட்டம் பகுதியில் மாதிரி ஆய்வு மேற்கொள்ள சென்னையிலுள்ள N.I.O.T. ஆய்வு மையம் கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது சென்னையிலுள்ள N.I.O.T. ஆய்வு மையத்திடமிருந்து பெறப்பட்ட இடைக்கால அறிக்கை பரிசீலனையில் உள்ளது.



2005 ஏப்ரல் 1]

**(ஐ) சென்னை மற்றும் தூத்துக்குடி**

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உலக தரத்திற்கு இணையாக மேம்படுத்திடும் பொருட்டு ரூ.12.42 கோடி மாநிலங்களுக்கான ஏற்றுமதி உட்கட்டமைப்பு மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கான உதவி அளிக்கும் திட்டத்தின் (AISDE) கீழ் அரசு ஒப்பளித்துள்ளது.

**(ஒ) இராஜாக்காமங்கலம்துறை**

கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்காமங்கலம்துறை கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாதிரி ஆய்வுகள் மேற்கொள்வதற்கான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ளது.

**(ஔ) தொண்டி மற்றும் இராமேஸ்வரம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் ஜெட்டியைப் பழுதுபார்க்கும் பொருட்டு 2004–05 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொண்டி ஜெட்டியைப் பொறுத்தமட்டில் திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**(க) சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள்**

தமிழகத்தில் கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி, மீனவர்களின் உயிர், உடைமை போன்றவற்றுக்கு பெருத்த சேதத்தை விளைவித்துள்ளது. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களும் பகுதியாக சேதமடைந்துள்ளன. தமிழகத்திலுள்ள பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகம் / மீன் இறங்கு தளங்களான பழையார், சின்னமுட்டம், சென்னை, தொண்டி, நாகப்பட்டினம், ஆற்காட்டுத்துறை, கடலூர், முடசலோடை, தூத்துக்குடி, புன்னக்காயல் மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகியவற்றின் மராமத்து பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.5.635 கோடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கடுவையாறு, உப்பனாறு, அம்மணாறு மற்றும் வெட்டாறு ஆகிய 4 ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்தும் பொருட்டு ரூ.1.00 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

**(ங) தமிழ்நாட்டில் பத்து இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

தமிழகத்தில் பத்து இடங்களில் ரூ.13.23 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் அமைக்க இந்திய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. ஒப்புதல் அளிக்கப்பட்ட பத்து இடங்களில் ஐந்து இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வீரபாண்டியன்பட்டினம் கிராமத்தைத் தவிர மற்ற இடங்களில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.

**(ச) தமிழ்நாட்டில் புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

தமிழகத்தில் மத்திய அரசிடமிருந்து 50 சதவீத நிதியுதவி பெற்று கீழ்க்கண்ட 9 இடங்களில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் ரூ.15.28 கோடி செலவில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மாநில மற்றும் மத்திய அரசிடமிருந்து ஒப்பளிப்பு ஆணை கிடைக்கப் பெற்றதும் இத்திட்டத்தினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | கீழவைப்பார் | தூத்துக்குடி மாவட்டம் |
| (2) | தருவைக்குளம் | ” |
| (3) | கடலூர் பெரியகுப்பம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| (4) | பெரியமாங்கோடு | திருவள்ளூர் மாவட்டம் |
| (5) | அண்ணாமலைச்சேரி | ” |
| (6) | சின்ன ஏர்வாடி | இராமநாதபுரம் மாவட்டம் |
| | (கூடுதல் கரை இறக்கும் வசதிகள்) | |
| (7) | கீழக்கரை | ” |
| (8) | ஆர். புதுப்பட்டினம் | புதுக்கோட்டை மாவட்டம் |
| (9) | பொன்னகரம் | ” |

**(ஞ) தற்போது பயன்பாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்கு தளங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்**

தமிழகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்கு தளங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை 50 : 50 என்ற விகிதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு ரூ.99.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி ஆணை வழங்கியுள்ளது.



தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் மற்றும் இராமேஸ்வரம், கோட்டைப்பட்டினம் மற்றும் சின்னஏர்வாடி ஆகிய 3 மீன் இறங்கு தளங்களில் பழுது மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு தனது பங்குத் தொகையில் முதல் தவணையான ரூ.25.00 இலட்சமும் மாநில அரசு முதல் தவணையாக ரூ.25.00 இலட்சமும் சேர்த்து ரூ.50.00 இலட்சம் விடுவித்துள்ளது. இப்பணிகளுக்கென ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்ட பின், திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.6. மீனவர்களுக்கான கடல் பாதுகாப்புத் திட்டங்கள்**

**(அ) கடல் மீனவர்களுக்கு நிவாரணம்**

புயல், வெள்ளம், கடலின் நீரோட்டம் மற்றும் படகின் இயந்திரக் கோளாறுகள் போன்ற காரணங்களினால் மீன்பிடி விசைப்படகுகள், கடலில் திசைமாறி, சர்வதேச கடல் எல்லைக்கோட்டைக் கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்று விட நேரிடுகின்றன. இவ்வாறு சர்வதேச கடல் எல்லையைக் கடந்து செல்லும்போது மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். பொருள் ஈட்டும் நபர் இல்லாத நிலையில் மீனவர் குடும்பங்கள் வாழ்க்கை நடத்த இன்னலுறுகின்றன. அத்தகைய குடும்பங்களின் துயர் களைவதற்காக, அம்மீனவர் வீடு திரும்பும் வரை அவர்களது குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அயல்நாட்டினரால் பிடித்துச் செல்லப்படும் மீனவர்களின் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்கிட ஏதுவாக நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் நடப்பு நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஆ) இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு இறக்கும் மீனவர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித்தல்**

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் மீன்பிடித்து வருகின்றனர். விசைப்படகின் இயந்திரக் கோளாறு மற்றும் மோசமான

[2005 ஏப்ரல் 1

வானிலை போன்ற சில காரணங்களினால், தவறுதலாக மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற் பகுதிக்குள் சென்று விடுகின்றனர். இவ்வாறு சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். அதுபோன்ற சமயங்களில் இலங்கை கடற்படையினரால் சுட நேர்ந்து ஏழை மீனவர்கள் உயிரிழப்புக்கு உள்ளாகின்றனர். அதுபோன்ற சூழ்நிலைகளிலிருந்து அவர்களை உடனடியாக விடுவிக்க அத்தகைய நிகழ்வுகள் அனைத்தையும் இலங்கை அரசிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இலங்கை கடற்படையால் சுடப்பட்டு, இறக்க நேரிடும் தமிழக மீனவர்களின் குடும்பங்கட்கு ரூ. 1.00 இலட்சம் நிதியுதவியினை வழங்கும்பொருட்டு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொகையினை விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கையை கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுத்து வருகின்றனர்.

### 3. உள்நாட்டு மீன்வளம்

உள்நாட்டு மீன் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்திலும், ஆசிய மீன்வள மேம்பாட்டில் முக்கிய இடத்திலும் உள்ளது. நாட்டின் மீன் உணவு உண்பவர்களின் தேவையான, ஆண்டுக்கு சராசரி 11 கிலோ மீன்களுக்கு, தற்போது 10 கிலோ மீன்கள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில், உள்நாட்டு மீன்வளப் பகுதியில் 3.71 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள நீர்த்தேக்கங்கள் பருவகால குளங்கள் மற்றும் குட்டைகள் அடங்கும்.

மீன்வளத்திற்காக துறை மூலம் 45 நீர்த்தேக்கங்களிலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் 8 நீர்த்தேக்கங்களிலும் மீன் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. மேலும், 32,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசன குளங்களில் மீன் துறை மூலம் பெருரக கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் சுமார் 5,000 ஹெக்டேர் பரப்பில் ஊரக குளங்கள், குட்டைகளில், கூட்டு இன மீன் வளர்ப்பு தொழில்நுட்ப முறை மூலம் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.1. மீன் குஞ்சுகள் உற்பத்தி

உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கான தரமான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக் கெண்டை மீன்குஞ்சுகளை துறையின்



2005 ஏப்ரல் 1]

கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு உற்பத்தி மையங்கள் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தங்களுடைய தேவைகளுக்கான மீன் குஞ்சுகளை தமது கட்டுப்பாட்டில் உள்ள மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்கின்றது. துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சுகள் நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கு தேவையான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, வளர்த்தெடுக்கப்படுகின்றன. மேலும் தனியார் மீன் பண்ணைகளுக்குத் தேவைப்படும் விரலிகள் இம்மாநிலத்திலுள்ள 84 தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் மீன் குஞ்சு உற்பத்தி துவக்கப்படுகிறது. ஆனால், நீர்நிலைகளில் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் நீர்வரத்து பெறப்படுகின்றது. எனவே, இப்பிரச்சினையை சரி செய்திட மீன் குஞ்சுகளை வடகிழக்குப் பருவகாலம்வரை வளர்த்திட துறைக்கு கூண்டுகள் (Cages) வழங்கப்படும். இத்திட்டம் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி செய்வோர் வருவாய் ஈட்டும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

### 3.2. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

2004–2005 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டம் சோலையார் அணைப்பகுதியில் முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சம் செலவில் பொம்மீன் மீன் குஞ்சு பொரிப்பக வளாகம் ஒன்று கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடுகள், கோவை பொதுப் பணித் துறையினடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதே திட்டத்திற்கு இரண்டாவது கட்டமாக ரூ.40.00 இலட்சம் செலவின ஒப்பளிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 4. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில் 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைக்க வாய்ப்பு உள்ளது. இறால் வளர்ப்பிற்காக உச்ச நீதிமன்ற ஆணையின்படி, இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த நீர்வாழ் உயிரின ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு உதவிட மாநில அளவிலான குழுவும், மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இறால் பண்ணைகளுக்கு உரிமம் வழங்க மாநில அளவிலான குழு, மாவட்ட

அளவிலான குழுக்களால் பரிசீலிக்கப்பட்டு அதன் பரிந்துரைகளுடன் பெறப்படும் மீன் வளர்ப்போரின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து நீர்வாழ் உயிரின ஆணையத்திற்கு தனது பரிந்துரைகளுடன் அனுப்பி வைக்கும்.

இன்றைய தேதியில் சென்னை தவிர, தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்களில் 2,086 இறால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 852 இறால் பண்ணைகள் நீர்வாழ் உயிரின ஆணையத்தின் அனுமதி பெற்றுள்ளன. ஆணையத்தின் அனுமதி பெறாமல் செயல்பட்டுவரும் அனைத்து இறால் பண்ணைகளையும் வரன்முறைப்படுத்திடவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீன்வள மேம்பாட்டு இயக்கத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய கடல்பொருள் ஏற்றுமதிக் கழகம் (Marine Products Export Development Authority) போன்ற நிறுவனங்களின் உதவி கொண்டு ஒவ்வொரு ஆண்டும் குறைந்த அளவில் இருப்பு செய்து பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய இறால் வளர்ப்பு முறைகளைக் கையாண்டு 1,000 ஹெக்டேர் கடலோர உவர் நிலங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் (ஜூலை 2002 முதல்) சுமார் 3,100 ஹெக்டேர் நிலப்பரப்பில் சென்னையில் உள்ள நீர்வாழ் உயிரின ஆணைய அனுமதியுடன் இறால் வளர்ப்பு தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5. ஆராய்ச்சி**

**5.1. துறையின் நடவடிக்கைகள்**

மீன்வளத்தினை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இத்துறை, சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு இடங்களில் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளது. மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழு ஜூலை 2004-ல் இறுதி செய்த 19 திட்டங்களில் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறது. மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் மீன் துறை ஒருங்கிணைந்து செயல்படும். மீன் துறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கிய ஆராய்ச்சிப் பணிகள் வருமாறு—





(1) பெருரக கெண்டை மீன்களின் இனப்பெருக்கத்தை நீட்டித்தல்/பன்முறைப்படுத்துதல்;

(2) தனி வளர்ப்பு மற்றும் பல்வகை வளர்ப்பு மூலம் நன்னீர் இறால் வளர்ப்பு;

(3) சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீடு;

(4) கடல் மீன்வளர்ப்பு செயல்முறை விளக்கப் பண்ணை மற்றும்

(5) நன்னீர் மீன்/அலங்கார மீன் மற்றும் நன்னீர் இறால் ஆகிய வர்த்தக ரீதியில் முக்கியத்துவமான மீன்களுக்கு உரிய உணவு அளவை மதிப்பீடு செய்தல்.

அரசு, மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுமத்தை மூன்றாண்டு காலத்திற்கு நவம்பர் 2001-ல் திருத்தி அமைத்துள்ளது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற 27-வது ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆராய்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த 2 ஆண்டுகளுக்கான புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

**5.2. இதர ஆராய்ச்சித் திட்டங்கள்**

சுய உதவிக் குழு கோட்பாடு, மீன்வளம் உள்ளிட்ட அனைத்து வகையான தொழில்களிலும் புதிய உத்வேகம் பெற்று வருகிறது. மீன்வளம் சார்ந்த தொழில்களைப் பிரபலப்படுத்த தேவையான பயிற்சிகளை இத்துறை சுய உதவிக் குழுக்களுக்கு அளித்து வருகின்றது.

தற்போது பழவேற்காடு ஏரியின் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் வகையில் ரூ.25.125 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பல்நோக்குத் திட்டங்களை செயல்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது:

(1) கூண்டுகளில் நண்டுகளை கொழுக்க வைக்க பயிற்சி அளித்தல்.

(2) கூண்டுகளில் சிங்கி இறால் வளர்த்து கொழுக்க வைக்க பயிற்சி அளித்தல்.

(3) சூரிய ஒளி மூலம் மீன் உலர்த்துதல்.

தற்போது செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பல்நோக்கு மேம்படுத்தப்பட்ட திட்டங்கள் பழவேற்காடு மற்றும் அதனைச்

சுற்றியுள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் மீன் துறையினால் செயல்படுத்தப்படும். மீன் துறையால் இதற்கான இடம் மற்றும் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். இவ்வாறு மீன் துறையால் தேர்வு செய்யப்படும் மீனவர்களின் தொழில் நுட்ப மற்றும் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் கடல் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும்.

**6. பயிற்சி மற்றும் விரிவாக்கம்**

**6.1.** மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் (80:20) மீன் துறை பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் பழவேற்காட்டில் விழிப்புணர்வு மையம் ஒன்றும் தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய இரு இடங்களில் பயிற்சி மையம் அமைத்திடவும் ரூ.65.00 இலட்சத்தில் திட்டம் ஒன்று தயாரித்து அனுப்பப்பட்டு, அது இந்திய அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும் இப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**6.2.** இயந்திரப் படகு பராமரிக்கவும், இயக்கவும் மற்றும் நவீன மீன்பிடி கலன்களை இயக்கவும் மீனவ மாணவர்களுக்கு 10 மாத பயிற்சி ஒன்று மாநிலத்தில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் 50 முதல் 60 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர இளநிலை இயந்திர கம்மியர் பயிற்சியும் இந்தப் பயிற்சி மையங்களில் தரப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாதம் ரூ.200/– வழங்கப்படுகிறது.

**6.3.** மீன் துறையில் தகவல் இணைப்புக்குரிய தரவுகளை பலப்படுத்துவதற்காக நான்காண்டுத் திட்டம் ஒன்று ரூ.68.19 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு அத்திட்டத்தை அமல்படுத்த முதல் தவணையாக 2003–04 ஆம் ஆண்டில் ரூ.5.50 இலட்சம் இந்திய அரசால் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தவணை இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**7. மீன்வளத்தில் கூட்டுறவு**

31.3.2004 நிலவரப்படி, 4,15,448 உறுப்பினர்கள் கொண்ட 808 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 68,220 உறுப்பினர்களைக் கொண்ட 346 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் 5,176 உறுப்பினர்கள் கொண்ட 21 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 11 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும், ஒரு மாநில



மீனவ கூட்டுறவு இணையமும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திற்கான முக்கிய முகமைகளாக செயல்படுகின்றன.

**8. மீனவர் நலன்**

இம்மாநிலத்தில் உள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திடுவதை மீன்வளப் பணியின் முக்கிய பொருளாகக் கொண்டுள்ளது இந்த அரசு. கீழ்க்காணும் நலத் திட்டங்கள் தொடர்ந்து இந்த ஆண்டிலும் அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும்:

1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்
4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி

**8.1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்**

தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டு 1975–76 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1975–76 முதல் 2000–2001 முடிய 47,072 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 2001–2002 மற்றும் 2003–2004 ஆண்டுகளில் அரசால் கட்டி வழங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்ட 6,000 வீடுகளில் 3,088 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதி உதவியுடன் 2,000 வீடுகள் கட்டிட ரூ.740.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2004–2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு 50 சதவீதம் மாநில அரசு 50 சதவீதம் நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள், 100 ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் 5 சமூக நலக்கூடங்கள் ரூ.838.75 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்திட மத்திய அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன்படி முதல் தவணையாக ரூ.219.375 இலட்சம் மத்திய அரசு விடுவித்துள்ளது. மத்திய அரசு விடுவித்த தொகையுடன் மாநில அரசு தனது பங்கையும் சேர்த்து மொத்தம் ரூ.438.750 இலட்சங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[2005 ஏப்ரல் 1

இத்தொகையினை பணமாக்கி வீடுகள் கட்டி முடித்திட ஊரக வளர்ச்சித் துறைக்கு பட்டுவாடா செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை, திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த திருச்சினாங்குப்பம் பகுதியில் 1993–94 ஆம் ஆண்டில் சென்னை – எண்ணூர் நெடுஞ்சாலை அமைக்கும் பணியால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களின் மறுவாழ்விற்காக திருச்சினாங்குப்பம் பகுதியில் ரூ.237.00 இலட்சம் செலவில் 492 அடுக்குமாடி குடியிருப்புகள் அரசால் கட்டிக் கொடுத்திட முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி இரண்டு அடுக்குகள் கொண்ட 11 கட்டடத் தொகுதி குடியிருப்புகளில் 36 வீடுகள் வீதமும், 4 கட்டடத் தொகுதி குடியிருப்புகளில் 24 வீடுகள் வீதமும் கட்டிக் கொடுக்கப்பட்டன. மேற்படி 492 குடியிருப்புகளும் பயனாளிகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்த வீடுகள் யாவும் அந்தந்தப் பயனாளிகளால் பராமரிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். இந்தக் குடியிருப்புகள் யாவும் கடலுக்கு மிக அருகாமையில் கட்டப்பட்டதால் கடற்காற்றின் உப்புத்தன்மையால் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால், இக்குடியிருப்புகள் அனைத்தையும் பழுதுபார்த்திட ரூ.90.50 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீடுகளின் பழுதுப் பணிகள் துறையின்கீழ் இயங்கும் பொறியியல் பிரிவின் மூலமும் கழிவுநீர் அகற்றும் பாதைகளின் பழுதுகள் திருவொற்றியூர் நகராட்சியின் மூலமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

**8.2. தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

கடலோரப் பகுதிகளிலுள்ள கடல் மீனவர்களின் துயரத்தினை கடலில் மீன்பிடிக்க இயலாத மழை / புயல் வெள்ளக் காலங்களில் குறைத்திட அரசானது சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை தமிழக மீனவர்களுக்காகச் செயல்படுத்துகிறது.

மத்திய அரசின் விதிமுறை வழிகாட்டுதல்களின்படி இத்திட்டத்தின்கீழ் ஒரு வருடத்தில் 8 மாதங்களுக்கு மாதம் ரூ.75/– வீதம் மீனவ பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும். அவ்விதத்தில் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.600/– உடன் 50% பங்குத் தொகை அதாவது தலா ரூ.300/– வீதம் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையாக சேர்க்கப்படும். அவ்விதமாக மொத்தம் ரூ.1,200/–ஐ கடலில் மீன்பிடிக்க இயலாத மழை / புயல் வெள்ளக் காலமான நான்கு மாதங்களில் மீனவப் பயனாளிகளுக்குப் பட்டுவாடா செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் அரசானது மொத்தம் ரூ.1,600.21



2005 ஏப்ரல் 1]

இலட்சம் மீனவப் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக பட்டுவாடா செய்ய ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதன்படி 2004–05 ஆம் ஆண்டு 1,68,198 கடல் மீனவப் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், 2004–05 ஆம் ஆண்டில் 25,307 கடல் மீனவ மகளிருக்கு நிவாரணத் தொகையினை பட்டுவாடா செய்திட அரசானது ரூ.297.34 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டம் 2005–06 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**8.3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தாத் தொகையான ரூ.14/–ஐ மாநில மற்றும் மத்திய அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. எவ்வித சந்தாத் தொகையும் மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் இறக்க நேரிடும் / நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ.50,000/–மும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.25,000/–மும் வழங்கப்படுகிறது. 2004–05 ஆம் ஆண்டில் 3,66,057 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களும், 78,809 உள்நாட்டு மற்றும் கடல் மீனவ மகளிரும், 10.12.2004 முதல் 9.12.2005 முடிய உள்ள காலத்திற்கு ரூ.31.14 இலட்சம் காப்புறுதி சந்தாத் தொகை செலுத்தி புதுடெல்லியிலுள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டம் 2005–2006 ஆம் நிதி ஆண்டிலும் தொடரப்படும்.

**8.4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி**

மீனவர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு காரியத்திற்காக அரசு ரூ.5.00 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இறந்த மீனவரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்குகளை மேற்கொள்ள தலா ரூ.500/– வழங்கப்படும். இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**9. சுனாமி பேரழிவு – நிவாரண நடவடிக்கைகள்**

26.12.2004 அன்று இந்தோனேசிய கடற்பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் பெரும் சீற்றத்துடன் ஏற்பட்ட ஆழிப்பேரலை தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியைத் தாக்கியது. இந்த ஆழிப்பேரலையால் முன்னெப்போதும் இல்லாத அளவில் 13 கடலோர மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. சுனாமிப்பேரலை

மீனவர்களின் உயிருக்கும், அவர்களுடைய மீன்பிடி சாதனங்களுக்கும் கடும் சேதத்தை விளைவித்தது.

சுனாமியால் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 507 மீன்பிடி கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. 1,26,182 குடிசைகள் மற்றும் வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியதுடன் 8,010 உயிர்ச் சேதத்தையும் விளைவித்தது. மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையங்களால் நிறுவப்பட்ட டீசல் விற்பனை நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்கள், அலுவலக கட்டடங்கள் மற்றும் துறையின் 2 ரோந்துப் படகுகளும் கடும் சேதம் அடைந்தன.

மீனவர்களுக்கு ஏற்பட்ட துயரத்தைக் களைந்து, அவர்களுடைய மீன்பிடி தொழிலை மீண்டும் துவக்க பழுதடைந்த படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வலைகள் பழுதுபார்த்தல் / மாற்றியமைத்தல் ஆகியவற்றுக்காக அரசால் மீனவர்களுக்கு வழங்கிய நிவாரண உதவிகள் பின்வருமாறு:

(அ) இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு கருணைத்தொகை

(ஆ) வீடு இழந்த மக்களுக்கு தற்காலிக குடியிருப்புகள்

(இ) பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள்

(ஈ) பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாத்திரங்கள் மற்றும் பண்டங்கள்

(உ) சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள்

(ஊ) பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வாதார தொழிலான மீன்பிடித்தலை மீண்டும் தொடர்வதற்கு உதவும் வகையில் பகுதி சேதமடைந்த கட்டுமரங்கள் / வள்ளங்கள் மற்றும் நாட்டுப் படகுகளின் செவுள் வலைகள் போன்றவற்றைப் புதுப்பித்தல் / செப்பனிடுதல் போன்றவற்றிற்கு நிதி உதவி அளித்தல்

(எ) பகுதி சேதமடைந்த இயந்திரங்கள் மற்றும் விசைப் படகுகளைப் பழுதுபார்க்க உதவி

(ஏ) முழுவதுமாக பழுதடைந்த மரத்தாலான / கண்ணாடி இழை கட்டுமரங்கள், மரத்தாலான/கண்ணாடி இழை வள்ளங்கள் மற்றும் முழுவதுமாக பழுதடைந்த விசைப்படகுகள் ஆகியவற்றை மாற்ற உதவி



மேலும், அரசு, சுனாமியால் சேதமடைந்த கடலோரப் பகுதிகளில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களைப் பழுதுபார்ப்பதற்கு நிதி ஒப்பளிப்பை வழங்கியுள்ளது. இந்த நிவாரணத் தொகை மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**10. புதிய திட்டங்கள்**

**10.1.** மீன் துறையும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் சேர்ந்து தமிழ்நாட்டில் 53 நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பு செய்து வருகின்றது. ஆனால், இவற்றின் மூலம் இந்தியாவின் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியின் பங்கு ஒரு விழுக்காடு ஆகும். எனவே, மீன் உற்பத்தியை அதிகரிக்க கூண்டுகள் (cages) மூலம் மீன் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. கூண்டுகளில் மீன் வளர்ப்பு தொழில்நுட்ப முறை பல ஆண்டுகளாக உள்ளதால், இதனைக் கடைப்பிடித்து, இருக்கும் நீர்நிலைகளை சரியாகவும், குறைந்த செலவிலும் பராமரித்து, மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் நீர்த்தேக்கங்களில் கூண்டுகள் மூலம் மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணி 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.2.** 2005–2006–ல் துறை வசம் மொத்தம் உள்ள 13 ஹெக்டேர் பரப்பில், கருந்தட்டான்குடி, அகரப்பேட்டை, பூண்டி, மேட்டூர், செம்பரம்பாக்கம் மற்றும் பிளவக்கல் ஆகிய மீன் குஞ்சு உற்பத்தி வளர்ப்பிடங்களில் உள்ள பழுதடைந்த 1750 ச.மீ. பரப்புள்ள மீன் பண்ணைகளை ரூ.10.00 இலட்சம் செலவில் செப்பனிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.3.** நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மற்றும் திருமுல்லைவாசலில் 2005–2006 ஆம் ஆண்டு ரூ.30.00 இலட்சம் செலவில் முகத்துவாரத்தை தூர் வாருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.4.** பூண்டி நீர்த்தேக்கத்தில் தேக்கப்பட்டுள்ள நீர் முக்கியமாக சென்னை மாநகர குடிநீர் விநியோகத்திற்காக உள்ளதால், பூண்டியில் உள்ள துறை மீன் பண்ணை எப்போதும் இந்நீர்த்தேக்கத்தின் நீரினை சார்ந்திருக்க இயலாது. எனவே நிரந்தர அடிப்படையில் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைக்குத் தேவையான நீர் விநியோகத்திற்கென்று 2005–2006–ல் ரூ.6.00 இலட்சம் செலவில் ஒரு கிணறு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.5.** கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் உள்ள மீன் துறையின் விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் 1964 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்தப் பயிற்சி நிலையத்தால் மீனவ மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 2 பயிற்சிப் பிரிவாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பயிற்சி நிலையத்தின் கட்டடம் சேதமுற்ற நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்துள்ளது. ஆகவே, 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் இந்தக் கட்டடத்தைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.6.** மீன் இறங்கு தளங்கள் பெரும்பாலும் மிகவும் உட்பகுதியில் அமைந்துள்ளன. அணுகும் வசதி குறைபாட்டால் இவற்றைப் பராமரிக்கவும், மின் வசதி அளிக்கவும் பெரும் சிரமங்கள் உள்ளன. மீன் இறங்கு தளங்களில் மீனவர்கள் வசதிக்காக சூரிய சக்தியால் இயங்கும் விளக்குகள் பொருத்துவது சிறந்த மாற்று ஏற்பாடாகும். இந்தத் திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக மொத்த செலவு ரூ.10.00 இலட்சத்தில், தெரிவு செய்யப்பட்ட 20 மீன் இறங்கு தளங்களுக்கு சூரிய சக்தியால் இயங்கும் விளக்குகள், ஒவ்வொரு தளத்திற்கும் இரண்டு வீதம் 2005–2006 ஆம் ஆண்டில் அமைக்கப்படும். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சிக் கழகம் அளிக்கும் 50% மானியமும் பயன்படுத்தப்பட்டு இப்பணி நிறைவேற்றப்படும்.

**10.7.** தற்போது தூத்துக்குடி, குளச்சல், நாகப்பட்டினம் மற்றும் மண்டபம் ஆகிய 4 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த இடங்களில் விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. நவீன மீன்பிடிப்பு, படகு இயக்குதல் மற்றும் கடலாள், மீன் பதப்படுத்துதல், படகுக்கான டீசல் இயந்திரங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான பயிற்சியை இந்த நிலையங்கள் அளித்து வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலையங்களில் சுமார் 300 மீனவ மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவ்வாறு பயிற்சி அளிப்பதற்கான குறிப்புகள் தயாரிக்கவும், பாடக் குறிப்புகள், கேள்வித் தாள்கள் ஆகியவற்றை பெருமளவில் நகலெடுக்கவும் அதற்கான உபகரணங்கள் அவசியமாகின்றன. ஆகவே, மேற்கூறிய 4 பயிற்சி நிலையங்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.4.20 இலட்சம் செலவில் பயிற்சிக்கான உதவி உபகரணங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.8.** சென்னையில் இயங்கிவரும் பணியாளர் பயிற்சி நிலையத்தில் துறையின் அலுவலர்களுக்கு 6 வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், இந்நிலையத்தால் மகளிர் சுய உதவிக் குழு மீனவ மகளிருக்கு மீன் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துதல், மீன் கையாளுதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை சம்பந்தமான தொழில்நுட்ப பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நிலையத்தில்





தற்போதுள்ள தளவாடங்களைக் கொண்டு பயிற்சி முறைகளுக்கு பயன்தரத்தக்க வகையிலான தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆகையினால் 2005–2006 ஆம் ஆண்டில் கல்வி சம்பந்தப்பட்ட தளவாடங்கள், உபகரணங்கள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இப்பயிற்சி நிலையத்தில் ரூ.6.50 இலட்சம் செலவில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.9.** மீனவ மகளிருக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்காக சுய வேலை வாய்ப்பினை அதிகப்படுத்த 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3.36 இலட்சம் செலவில் வண்ண மீன் வளர்ப்பதில் அவர்களுக்கு பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1974 ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். இன்றுவரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

(i) தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து வர்த்தக அடிப்படையில் மீன்பிடித்து நீர்த்தேக்கங்களை நிர்வகித்தல்

(ii) நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யவும், மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்யவும் தரமான மீன் குஞ்சுகளை தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் உற்பத்தி செய்தல்

(iii) மண்டபம், தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை நிர்வகித்தல்

(iv) மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக் கரைகளில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கு நிலையங்கள் மூலம் மீனவர்களுக்கு டீசல் வழங்குதல்

(v) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொதுமக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல்

(vi) மீனவர்களுக்கு தரமான மீன் வலைகளைத் தயாரித்து விற்பனை செய்யும்பொருட்டு இராயபுரத்தில் மீன் வலை தயாரிப்பு நிலையம் நிர்வகித்தல்

(vii) சென்னை அருகே நீலாங்கரையில் உள்ள இறால் குஞ்சு பொரிப்பகத்தின் கட்டமைப்பு வசதிகளை நிர்வகித்தல் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்திற்கு "கடல் வாழ் உயிரின ஆதார மேம்பாட்டுத் திட்டத்தினை" நிறைவேற்றிட வசதி அளித்தல்

(viii) முத்து வளர்ப்புத் திட்டம் மற்றும் முத்துச் சிப்பி பொரிப்பகத்தினை நிர்வகித்தல்

(ix) காரங்காடு மாதிரி இறால் பண்ணை நிர்வகித்தல்

(x) வண்ண மீன் உற்பத்தி, விற்பனை செய்தல் மற்றும் வண்ண மீன் காட்சியகம் நிர்வகித்தல்

(xi) மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் விற்பனை செய்தல்

(xii) பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு மீனவர்களுக்கு உள்/வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்குதல்

**11.1. நீர்த்தேக்கங்கள்**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில், முறையாக மீன் குஞ்சு இருப்பு செய்யப்பட்டு, மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது.

(1) சாத்தனூர் (2) ஆழியார் (3) அமராவதி (4) திருமூர்த்தி (5) உப்பாறு (6) பாலாறு–பொறந்தலாறு (7) பெரும்பள்ளம்

கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டு (டிசம்பர் வரை) 243.87 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.51.70 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**11.2. மீன் குஞ்சு உற்பத்தி**

இக்கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் அணையிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு மையங்களையும், அமராவதி, திருமூர்த்தி, பாலாறு–பொறந்தலாறு, உப்பாறு ஆகிய இடங்களில் உள்ள





மீன் குஞ்சு வளர்ப்பு மையங்களையும் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் மீன் துறை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் தனி நபர்களுக்கும் விற்பனை செய்யப்படுவதோடு, கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பும் செய்யப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டு (டிசம்பர் வரை) 131.85 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**11.3. மீன் பதனிடுதல்**

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள பனிக்கட்டி/ மீன் பதப்படுத்தும் நிலையம் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**11.4. டீசல் வழங்கும் நிலையங்கள்**

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பழையாறு போன்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக் கரைகளில் 23 டீசல் வழங்கு நிலையங்களை மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி இயக்கி வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டு (டிசம்பர் வரை) மொத்தம் 18,525 கிலோ லிட்டர் டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூ.78.18 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

**11.5. மீன் விற்பனை**

இக்கழகம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன்களையும், பொரித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டு (டிசம்பர் வரை) 396.64 டன் மீன்கள் ரூ.201.90 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**11.6. மீன் வலை பின்னும் நிலையம்**

இராயபுரத்தில் செயல்பட்டுவரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 7.5 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2004–2005 ஆம் ஆண்டு (டிசம்பர் வரை) 23.10 டன் நைலான் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.55.11 இலட்சத்திற்கு மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 1

**11.7. நீலாங்கரை இறால் குஞ்சு பொரிப்பகம்**

நீலாங்கரை இறால் குஞ்சு பொரிப்பகம் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பொரிப்பகத்தின் ஒரு பகுதி கட்டமைப்பு வசதிகள், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்திற்கு "கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டத்திற்காக'' வழங்கப்பட்டுள்ளது. இப்பொரிப்பகம் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு 21–1–2004 முதல் குத்தகைக்கு விடப்பட்டு உள்ளது.

**11.8. முத்துச் சிப்பி மற்றும் வளர்ப்பு முத்து உற்பத்தி செய்தல்**

மண்டபத்தில் உள்ள முத்து வளர்ப்புத் திட்டம் மற்றும் முத்துச் சிப்பி பொரிப்பகம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

**11.9. காரங்காடு மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை**

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணை 13-8-2003 முதல் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**11.10. வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை**

தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. ஆழியார் நகரில் அலங்கார மீன் விற்பனையுடன் கூடிய மீன் காட்சியகம் செயல்பட்டு வருகிறது. சென்னையில் 2 வண்ண மீன் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் (டிசம்பர் வரை) வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்த வகையில், ரூ.9.21 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**11.11. மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் விற்பனை**

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் குறைந்த மதிப்புள்ள மீன்களை மதிப்புக்கூடிய மீன் பொருட்களாக மாற்றி விற்பனை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 1]

**11.12. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு வெளி/உட்பொருத்தும் இயந்திரம் மானிய விலையில் வழங்குதல்**

பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், வெளி/உட்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கி வருகிறது.

**12. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்கீழ் 6-11-1991–ல் பதிவு செய்யப்பட்டு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்விணையத்தில் தற்பொழுது 589 தொடக்க மீனவ கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட கூட்டுறவு இணையங்களும் உறுப்பினராகி, ரூ.89.095 இலட்சம் பங்குத் தொகை செலுத்தி உள்ளன. பாரம்பரிய மீனவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்குடன் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தை, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் செயல்படுத்தி வருகிறது.

**12.1. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்–பகுதி–1**

முதல் கட்டமாக பகுதி ஒன்று திட்டம் ரூ.1,699.047 இலட்சத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு கடலோர மாவட்டங்களில் 78 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1,361.35 இலட்சம் மதிப்புள்ள 2,108 மீன்பிடி இடு பொருட்கள் 4,234 மீனவர்களுக்கு 25% மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனைக்காக இத்திட்டத்தின் மூலம் 19 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் 118 உறுப்பினர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் 25% மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட 6 மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு கூட்டுறவு மேலாண்மை மற்றும் வெளி/உட்பொருத்தும் இயந்திரங்கள் பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி இணையத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் மீனவர்களுக்கு இணையத்தின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இத்திட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் மீனவ கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் மீன், இயந்திர உதிரி பாகங்கள் மற்றும் டீசல் விற்பனைக்காக பகுதி-1 திட்டத்தின்கீழ் 24 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இணையம் ரூ.19.50 இலட்சம் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக வழங்கியுள்ளது.

**12.2. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்–பகுதி–2**

பகுதி–2 திட்டத்தின் செயல்பாடு 1-4-1998 முதல் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 100 மீனவர் கிராமங்களில் ரூ.4,506.250 இலட்சம் மதிப்பில் 3,565 மீன்பிடி அலகுகள் வழங்கிட திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டிற்காக ரூ.800.620 இலட்சம் அரசு அனுமதித்ததன் பேரில் 57 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு ரூ.574.90 இலட்சம் மதிப்பில் 542 மீன்பிடி இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது ஆண்டில் 4 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 81 மீனவர்களுக்கு ரூ.41.24 இலட்சம் மதிப்பில் 46 இடுபொருட்கள் 25% மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தற்போது வட்டி விகிதத்தினை 10 விழுக்காடாகக் குறைத்துள்ளதால், நடப்பு ஆண்டில் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10% வட்டி விகிதத்தில் ரூ.431.48 இலட்சத்தில் மீன்பிடி சாதனங்கள் 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**12.3. பணிமனை**

இவ்விணையத்தின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தருவைக்குளம் மற்றும் கொம்புத்துறையிலும் இயந்திர உதிரிபாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான மசகு எண்ணெய் விற்பனைக்காக, ரூ.3.20 இலட்சம் முதலீட்டில் தொழிற்பட்டறைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**12.4. டீசல் விற்பனை மையம்**

மீனவர்கள் இணையத்தின் சேவை மூலம் "தரம் மற்றும் விலையில்" பயனடைவதை உறுதிசெய்யும் பொருட்டும், இணையத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடவும் கடலோர மாவட்டங்களில் டீசல்



விற்பனை நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டது. இணையத்தால் தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஆகிய இரண்டு இடங்களில் டீசல் விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டன. வேம்பார், அன்னகோயில், நாகூர், அன்னைவேளாங்கண்ணி, கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம், கீழக்கரை, தருவைக்குளம் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் டீசல் விற்பனை நிலையம் விரைவில் துவக்கப்படவுள்ளன. பாரம்பரிய மீனவர்களால் பயன்படுத்தப்படும் வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கான மண்ணெண்ணெய் விற்பனை செய்வதற்காக வீரபாண்டியன்பட்டினம் மற்றும் சின்னமுட்டத்தில் மண்ணெண்ணெய் நிலையம் துவக்கப்பட உள்ளது. மேலும் பல கடலோர மாவட்டங்களைச் சார்ந்த இடங்களில் டீசல்/மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**12.5. வெளி/உட்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை**

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் தகுதிவாய்ந்த மீனவர்களுக்கு வெளி/உட்பொருத்தும் இயந்திரங்கள் அரசு மானியத் திட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில், 92 வெளி/உட்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த மானியத் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**12.6. குளிர்காப்பு பெட்டிகள் வழங்குதல்**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2003–2004 ஆம் ஆண்டில், 297 நூறு லிட்டர் கொள்ளளவுள்ள குளிர்காப்புப் பெட்டிகள் 75% மானியத்தில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் 100 லிட்டர் மற்றும் 225 லிட்டர் கொள்ளளவு கொண்ட 428 குளிர் காப்புப் பெட்டிகள் 50 விழுக்காடு மானியத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பட்டுள்ளன.

இவ்வாறாக மீன்வளத் துறை மீன்வளப் பிரிவு வளர்ச்சிக்கும் மற்றும் மீனவ மக்களின் நலத்திற்கும் பல திட்டங்களைத் தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகிறது.

••••

D V21;3 l P05
P05 . 78.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185239
சென்னை-600 008

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.